தொடக்கநிலை அரசியல் விஞ்ஞானம்

(ELEMENTS OF POLITICAL SCIENCE)

— ஆல்பர்ட் ஜான்சன் —

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க. வெ.) வரிசை எண்—755

தொடக்கநிலை அரசியல் விஞ்ஞானம்

(புகுமுக வகுப்பிற்குரியது)

ஆசிரியர்
ஆல்பர்ட் ஜான்சன், எம். ஏ.,
விரிவுரையாளர், அரசியல் துறை,
மதுரைப் பல்கலைக்கழகம்.
மதுரை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition— July, 1977
Number of copies— 2,000

T. N. T. B. S. (C.P.) No. 755

© Government of Tamilnadu

ELEMENTS OF POLITICAL SCIENCE (P.U.C.)

Albert Johnson

Price Rs. 4-15

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

This book has been printed on concessional paper made available by the Government of India.

Printed by
BALMURSUNS PRINTERS
74, Sir Theagaraya Road, Pondy Bazaar,
Madras-600 017.

பதிப்புரை

தொடக்கநிலை அரசியல் விஞ்ஞானம் என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 755 ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 790 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு, கல்வி, சமூக நல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்'தின்கீழ் வெளியிடப்படுகிறது.

மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

பொருளடக்கம்

			பக்கம்
1.	அரசியலின் தன்மையும் விளக்கமும்	...	1
2.	அரசும் இதர கருத்துகளும்	...	18
3.	சமூக நிறுவனங்கள்	...	25
4.	அரசின் தோற்றம்	...	33
5.	அரசின் வளர்ச்சி	...	44
6.	இறைமை	...	51
7.	அரசின் குறிக்கோள்	...	66
8.	சட்டம்	...	88
9.	குடியுரிமை	...	98
10.	அரசாங்கம்	...	112
11.	மக்களாட்சி	...	128
12.	சர்வாதிகாரம்	...	131
13.	வாக்குரிமையும் தேர்தலும்	...	136
14.	அரசியற் கட்சிகள்	...	143
15.	இந்திய அரசியல் அமைப்பு	...	150
16.	பன்னாட்டு நிறுவனங்கள்	...	165
	மேற்கோள் நூற்பட்டியல்	...	180
	கலைச்சொற்கள்	...	181

1. அரசியலின் தன்மையும் விளக்கமும்

[அரசியலின் விளக்கம்—அரசியலின் தன்மையும் நோக்கமும்—பிற சமூக இயல்களுடனுள்ள தொடர்பு—அரசியலைக் கற்பதன் பயன்.]

தோற்றுவாய்

இன்று உலகெங்கிலுமுள்ள பல்கலைக்கழகங்களில் மிகத் தீவிரமாகக் கற்கப்படும், ஆய்வு நடத்தப்படும் இயல்களிலொன்று அரசியல் (Political Science). மனித வாழ்விற்கு அரசியலும் அரசாங்கமும் முக்கியமானவையாகவும், இன்றியமையாதவையாகவும் இருப்பதுதான் இதற்குக் காரணம். இங்ஙனம் முக்கியத்துவம் பெற்றுள்ள 'அரசியல்' என்பது என்ன? இவ்வினாவிற்கு ஒரு சில வார்த்தைகளில் விடை அளிப்பது கடினம். அரசியல் என்னும் இயலின் உள்ளடக்கம் என்ன, அந்த இயல் எதனை ஆராய்கின்றது என்று பரிசீலித்தோமானால் இந்த இயலிற்கு விளக்கத்தைக் காண இயலும். இதனுடன் இவ்வியலில் பயன்படுத்தப்படுபவையும், அன்றாடப் பேச்சு வழக்கில் நாம் பயன்படுத்துபவையுமான ஒரு சில பதங்கட்குப் பொருள் காணுதலும் அவசியமாகிறது.

அரசியல் என்பது என்ன ?

'அரசு', 'அரசாங்கம்', 'அரசியல்' என்ற மூன்று பதங்களும் சொல் வழக்கில் ஒரே பொருள்படப் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் அரசியல் என்னும் இயலில் இம் மூன்று பதங்கட்கும் நுட்பமான பொருளுண்டு. எனவே, அரசியலில் இப் பதங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பொருளுக்கும், நடைமுறையில் அவற்றிற்கு அளிக்கப்படும் பொருளுக்கும் வேற்றுமை உண்டு. இம் மூன்று பதங்கட்கும் பின்வரும் விளக்கம் அரசியலில் கொடுக்கப்பட்டுள்ளது.

'அரசு' என்ற சொல் ஒரு சுதந்திர நாட்டைக் குறிப்பதாகக் கொள்ளலாம். 'அரசாங்கம்' என்பது அந் நாட்டில் இயங்கும்

ஆட்சி முறையையும், நிர்வாக அமைப்பையும் குறிக்கின்றது. 'அரசியல்' என்ற பதத்திற்கு இரு விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன. முதலாவதாக, நடைமுறையில் அரசாங்கம் சம்பந்தப்பட்ட பலவற்றையும் குறிப்பதாக இச் சொல் பயன்படுத்தப்படுகின்றது. இரண்டாவதாக, அரசையும் அரசாங்கத்தையும் சம்பந்தப்பட்ட தத்துவங்கள், கோட்பாடுகள், உண்மைகள் ஆகியன அடங்கிய இயல் என்று குறிப்பிடவும் பயன்படுத்தப்படுகின்றது. இந்த விளக்கத்தின் அடிப்படையில்தான் நாம் அரசியலை ஆராய முற்படுகின்ரேம்.

அரசைப் பற்றிய இயல் அரசியல். அரசின் இயல்பும், அரசுகட்கிடையேயுள்ள உறவுகளும், அரசாங்கத்தின் இயல்பும், நடவடிக்கைகளும், அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இடையேயுள்ள உறவுகளும் அரசியலில் ஆராயப்படுகின்றன. அரசு, அரசாங்கம் ஆகியவை பற்றிய தத்துவங்களும் கோட்பாடுகளும் அரசியலில் முக்கிய இடம் வகிக்கின்றன. மேலும் அரசு, அரசியல் நிறுவனங்கள் ஆகியவை தோன்றிய விதம், வளர்ந்த முறை, அவற்றின் இன்றைய நிலை போன்றவையும் அரசியலில் ஆராயப்படுகின்றன. காலமாற்றத்திற்கேற்பவும், பரிணமத்தினுலும், தோன்றக்கூடிய இயக்கங்கள், கருத்துகள் ஆகியவற்றையும் அரசியல் ஆராய்கின்றது. தற்கால அரசியல் நிறுவனங்கள், அரசியல் கருத்துகள் ஆகியவற்றை விளக்குதல், ஒப்பிட்டுப் பார்த்தல், வகைப்படுத்துதல் போன்ற பணிகளையும் அரசியல் புரிகின்றது. எதிர்காலத்தில் அரசும், அதுசார்ந்த நிறுவனங்களும் எங்ஙனம் இருக்க வேண்டும் என்பதையும் அரசியல் அனுமானிக்கின்றது. மேற்கூறிய யாவற்றையும் உட்கொண்ட அரசியல் சமூக இயல்களிலொன்ருகும்.

அரசியல் ஒரு கலையா விஞ்ஞானமா?

அரசியல் ஒரு கலையா விஞ்ஞானமா என்பது சர்ச்சைக்குரியது. கலையென்று சிலராலும், விஞ்ஞானம் என்று சிலராலும் இது கருதப்படுகின்றது. ஆனுல் அரசியலில் கலையின் பண்புகளும் விஞ்ஞானத்தின் பண்புகளும் ஒருங்கே காணப்படுகின்றன. ஆகவே இதனைக் கலையென்ரே, விஞ்ஞானமென்ரே வரையறுத்துக் கூற இயலாது. நடைமுறையில் காணப்படும் அரசியல் கலைச் சார்புடையதெனினும், பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் கற்பிக்கப்படுவதும் ஆய்வு நடத்தப்படுவதுமான அரசியலில் விஞ்ஞானத்தின் பண்புகள் அதிக அளவில் காணப்படுகின்றன. இக் கூற்றை விளக்க வேண்டியது அவசியம்.

மனிதர் சம்பந்தப்பட்ட இயல்கள் மூவகைப்படும். அவை யாவன : இயற்பொருள் இயல் (Physical Science), உயிரியல் (Biological Science), சமூக இயல் (Social Science), பௌதிகம், இரசாயனம் போன்றவை இயற்பொருள் இயல்களாகும். விலங்கியல், தாவர இயல் போன்றவை உயிரியல்களாகும். அரசியல், பொருளியல், வரலாறு போன்றவை சமூக இயல்களாகும்.

இயற்பொருள் இயலிலும் உயிரியலிலும் காணக்கூடிய திட்ட வட்டமான முடிவுகளை அரசியலில் காணமுடியாது என்பது உண்மை. உதாரணமாக, நீர்வளியின் இரு பகுதிகளும், பிராண வாயுவின் ஒரு பகுதியும் இணைந்தால் கிடைக்கப் பெறுவது நீர் என்பது உலகின் எப்பகுதியிலும், எக்காலத்திலும் கண்டறியக் கூடிய உண்மையாகும். இதுபோன்ற திட்டவட்டமான, ஐயப் பாட்டிற்கு இடமற்ற முடிவை அரசியலில் காணமுடியாது. இக் குறைபாட்டிற்கு அரசியல் பொறுப்பன்று. சிந்திக்கவும், திட்டமிடவும், விருப்பு வெறுப்புக்காட்டவும் ஆற்றல் படைத்த மனிதர்கள் ஒரே தன்மையை உடையவரல்லர். இத்தகைய மனிதர்களைப்பற்றி ஆராயும் இயலான அரசியல் காணும் முடிவுகள் நிலையானவை யாகவும் பொதுவானவையாகவும் இருக்கமுடியாது. 'இச் சூழ் நிலையில் இதுதான் விளைவு' எனத் திட்டவட்டமாகக் கூறமுடியாது என்ற காரணத்தால் அரசியலை விஞ்ஞானமன்று எனக் கருதலாம். ஆனால், அரசியலில் பின்பற்றப்படும் வழிமுறைகள் விஞ்ஞான ரீதியிலானவை என்பதை மறுக்க முடியாது.

அரசியல் நிறுவனங்கட்கு முறையான விளக்கம் அளித்து, அவற்றை வகைப்படுத்தி, அந் நிறுவனங்களைக் கட்டுப்படுத்து பவை எவை என்று நிர்ணயம் செய்வதுதான் அரசியல் (Science of Politics) புரியும் பணி. அரசியல் நிறுவனங்கள் திறம் படச் செயல்படுவதற்கு அடிப்படையான கோட்பாடுகளையும் நடைமுறை விதிகளையும் நிர்ணயிப்பதுதான் அரசியல் என்னும் கலை (Art of Politics) புரியும் பணி. அரசியலுக்கு இன்றியமை யாத அடிப்படைக் கருத்துகளை நிர்ணயிப்பது அரசியல் தத்துவம் (Philosophy of Politics) அல்லது அரசியல் கோட்பாடு (Political Theory). நடைமுறை ரீதியில் ஒரு கலையாகவும் அது பயன் படுத்தும் முறைகளின் அடிப்படையில் விஞ்ஞானமாகவும் அரசியல் திகழ்கின்றது.

அரசியலின் நோக்கம் (Scope of Political Science)

அரசியல் மிக விரிவான இயலாகும். அரசுகளின் தோற்றத் தையும் வளர்ச்சியையும் அரசியல் ஆராய்கின்றது. அரசியல்

அமைப்புகள், அரசாங்க அமைப்புகள், அரசியல் முறைகள், சட்டத்தின் வகைகள் ஆகியவற்றிற்கு விளக்கமளித்து, அவற்றை ஆராய்ந்து, ஒப்பிட்டுப் பார்க்கும் பணியிலும் அரசியல் ஈடுபடுகின்றது. தனி நபர்கள் மீதும், சங்கங்கள், கழகங்கள் மீதும் அரசுகள் சுமத்தியுள்ள கட்டுப்பாடுகளையும், கல்வி, வாணிபம், சமூக உறவுகள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகளையும் அரசியல் ஆராய்கின்றது. சட்டமியற்றும் நிறுவனங்களையும், சட்டமியற்றப்படும் முறைகளையும், சட்டங்கள் செயல்படுத்தப் படும் முறைகளையும் இது பரிசீலிக்கின்றது. அரசியல் கட்சிகள், தன்னலக் குழுக்கள் ஆகியவற்றின் அமைப்பு, நடவடிக்கைகள் போன்றவையும் ஆராயப்படுகின்றன. பொதுமக்கட் கருத்து, பிரசாரம், செய்தித் தொடர்பு போன்றவற்றிற்கும் அரசியல் விளக்கமளிக்கின்றது. அரசியல், பொருளாதாரம், கலாசாரம், கோட்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் அரசுகளிடையே காணப்படும் உறவுகளையும் அரசியல் பரிசீலிக்கின்றது. பன்னாட்டுச் சட்டத்திற்கும், பன்னாட்டு நிறுவனங்கட்கும் பன்னாட்டு உறவில் உள்ள பங்கும் பரிசீலிக்கப்படுகின்றது. மேற்கூறியவை மட்டுமன்றி அரசு, அரசாங்கம், சட்டம், நடத்தைமுறை ஆகியவை பற்றிய பொதுப்படையான கருத்துகளும், கோட்பாடுகளும் அரசியலில் இடம் பெறுகின்றன.

ஒரு விரிவான இயலான அரசியலின் எல்லையை நிர்ணயிப்பது எளிதன்று. ஏனெனில், அரசியல் தனித்தியங்கும் இயலன்று. பிற சமூக இயல்களுடன் நெருங்கிய உறவுடையது அரசியல். அரசியலில் பின்பற்றப்படும் பரிசீலனை முறைகளும் ஆராய்ச்சி முறைகளும் பிற இயல்களினின்று கிடைக்கப் பெற்றவையாகும்.

அரசியல் பின்பற்றும் முறைகள்
(Methods of Political Science)

ஒரு முடிவைக் கண்டறிவதற்காகப் பயன்படுத்தப்படுவதுதான் முறை (Method) எனப்படுவது. பௌதிகம், இரசாயனம் போன்ற இயல்கள் ஆய்வுக்கூடங்களையும், கருவிகளையும் பயன்படுத்தி உண்மைகளைக் கண்டறிகின்றன. அரசியலைப் பொறுத்தமட்டில் உலகம்தான் அதன் ஆய்வுக்கூடம். மனிதர்தாம் அதன் கருவிகள். மனிதர் சம்பந்தப்பட்ட இயலான அரசியல் குறிப்பிட்ட ஏதாவதொரு முறையைப் பின்பற்றி உண்மையைக் கண்டறிய முடியாது. ஆகவேதான் பல முறைகள் பின்பற்றப்படுகின்றன. பின்வருபவை அரசியலில் பின்பற்றப்படும் முறைகளாகும். அவற்றில் பெரும்பாலானவை விஞ்ஞான ரீதியிலானவையாகும். இம் முறைகள் ஒவ்வொன்றுக்கும் அதற்குரிய முக்கியத்துவம் உண்டு.

1. பரிசோதனை முறை (Experimental Method)

அரசியலில் பின்பற்றப்படும் முறைகளில் குறிப்பிடத்தக்க வற்றில் ஒன்று பரிசோதனை முறை. ஆனால் இது இயற்பொருள் இயல்களில் பின்பற்றப்படும் ஆய்வுக்கூடப் பரிசோதனை முறைக்கு இணையாகாது. ஏனெனில், இயற்பொருள் இயல்களைப் பொறுத்த மட்டில் ஆய்வாளர் தாம் விரும்பும் சூழ்நிலைகளை எத்தனை முறை வேண்டுமாயினும் உருவாக்கி ஆய்வு நடத்தலாம். அரசியலில் இது சாத்தியமில்லை. மனிதர், மனித சமுதாயம், அரசு, அரசாங் கம் ஆகியவற்றைப் பொறுத்த வரையில் ஒரே சூழ்நிலையை மீண்டும் உருவாக்க முடியாது.

சிந்திக்கவும், தனது எண்ணங்களை வெளிக்காட்டவும், திறன் படைத்தவன் மனிதன். மனிதர் எல்லோரது எண்ணங்களும், கருத்துகளும் ஒரே மாதிரியானவை அல்ல. இவற்றை வெளிக் கொணரும் முறைகளும் மாறுபட்டவை. மாறுபட்ட மனிதரை மையமாகக் கொண்டு ஆய்வு நடத்தும் அரசியல் பின்பற்றும் பரிசோதனைமுறை, இயற்பொருள் இயல் பின்பற்றும் பரிசோதனை முறையினின்று மாறுபட்டுக் காண்பது இயற்கையே. உயிரற்ற இயற்பொருளின் தன்மையையும் பண்பையும் அளப்பது போல் மனிதரது எண்ணங்களையும், கருத்துகளையும் அளவிட இயலாது. இருப்பினும், அரசின்கீழ் உள்ள நிறுவனங்கள் பலவற்றிலும் பரிசோதனைமுறை பின்பற்றப்பட முடியும் என்று பேராசிரியர் மெரியம் (Prof. Merriam) கூறுகின்றார்.

விருப்பத்திற்கேற்ற சூழ்நிலைகளை உருவாக்கி ஆய்வு நடத்து வது அரசியலில் இயலாததெனினும் அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் ஒருவகைப் பரிசோதனை முறை நடந்த வண்ண முள்ளது எனலாம். அரசாங்கம் என்பதே ஒரு பரிசோதனை யாகும். இயற்றப்படும் ஒவ்வொரு சட்டமும், நிறுவப் படும் ஒவ்வொரு நிறுவனமும், பின்பற்றப்படும் ஒவ்வொரு கொள்கையும் உணர்ந்தோ உணராமலோ நடத்தப்படும் பரிசோதனையாகும் எனலாம். ஒரு சட்டத்தின் விளைவுகளின் அடிப் படையில்தான் மாற்றங்களும் சீர்திருத்தங்களும் தேவையா என்பது கணக்கிடப்படுகின்றது. ஒரு கொள்கையின் வெற்றியும் தோல்வியும் அளவிடப்படுவதும் இங்ஙனமே. அரசாங்கங்களையும் கொள்கைகளையும் பொறுத்தவரையில் முக்கியத்துவம் உடையது பரிசோதனை முறையாகும்.

2. கண்டறியும் முறை (Observational Method)

ஆய்வுக் கூடப் பரிசோதனை முறை அரசியலுக்கு உகந்ததன்று ஆதலால் கண்டறியும் முறை பின்பற்றப்படுகின்றது. அரசியல்

சார்புடைய நிகழ்ச்சியொன்று ஒரே சூழ்நிலையில் மீண்டும் நிகழ்ந்தால் அதனை அடிப்படையாகக் கொண்டு பொது விதி யொன்றை உருவாக்கலாம். உதாரணமாக, வறுமையாலும் வேலையில்லாத் திண்டாட்டத்தாலும் பாதிக்கப்பட்ட மக்களுடைய அரசாங்கம் திறனற்றதாக அமைந்து மக்கள் நலனில் அக்கறை யேதும் எடுக்காமல் தொடர்ந்தால் புரட்சி உருவாகும் என்ற உண்மை பல புரட்சிகளைக் கண்டறிவதால் கிடைக்கப் பெறு கின்றது.

கண்டறியும் முறையைப் பயன்படுத்தி அரசியல் நிறுவனங் களை ஆராயும்பொழுது அந் நிறுவனங்களின் தோற்றம், வரலாறு, வளர்ச்சி ஆகியவற்றையும் ஆராய வேண்டும். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ஒரு நிகழ்ச்சி ஒரு முறை மட்டும் நிகழ்ந்தால் அதனடிப்படையில் பொதுவான முடிவெடுக்கக் கூடாது.

3. வரலாற்று முறை (Historical Method)

ஒரு கருத்தின் தன்மையை, அல்லது ஒரு நிறுவனத்தின் தன்மையை அறிய வேண்டுமெனில் அதன் தோற்றத்தையும், வரலாற்றையும், வளர்ச்சியையும் ஆராய வேண்டும். அரசியல் கருத்துகள், நிறுவனங்கள் ஆகியவற்றின் வரலாற்றை அறியப் பயன்படுவதுதான் வரலாற்று முறை என்பது. அரசியல் நிறு வனங்கள் எங்ஙனமிருந்தன, அவை இன்றைய நிலையை எங்ஙனம் எய்தின என்பவற்றை அறிந்தால்தான் அவற்றின் இன்றைய தன்மையையும் எதிர்கால அமைப்பையும் விளக்க இயலும்.

வரலாற்றினின்று கிடைக்கப்பெறும் தகவல்களை அடிப்படை யாகக் கொண்டு பொதுப்படைகளைக் காண வரலாற்று முறை உதவுகின்றது. இப் பொதுப்படைகளை நிருபிக்கவும் இத் தகவல் களைப் பயன்படுத்தலாம். ஆனால் வரலாற்று முறையைச் சற்றுக் கவனத்துடன் பயன்படுத்த வேண்டும். வரலாற்றினின்று தகவல் களைத் தேர்வு செய்யும் பொழுதும் அவற்றை ஆராயும் பொழுதும் ஆய்வாளரின் தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகட்கு இடமளித்தல் கூடாது. வரலாற்றில் காணப்படும் யாவும் அரசியலுக்குத் தேவைப்படுபவை அல்ல. மேலும், வரலாற்றை மட்டும் அடிப் படையாகக் கொண்டு சில நிகழ்ச்சிகட்கும், நிறுவனங்கட்கும், கோட்பாடுகட்கும், கருத்துகட்கும் விளக்கமளிக்க முற்படுவது தவறு. மனிதனின் வாழ்க்கைநிலை, சூழ்நிலைகள் போன்றவற்றிற் கேற்ப அவனது கருத்துகளிலும் நிறுவனங்களிலும் அவ்வப் பொழுது மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆகவே, பண்டைய

பிரச்சினையொன்றின் அடிப்படையில் தற்காலப் பிரச்சினை யொன்றிற்கு விளக்கமளிக்க முடியாது. குறைபாடுகளும் நிபந்தனைகளும் உடைய வரலாற்று முறை இன்றியமையாதது என்பதை மறுக்கமுடியாது.

4. ஒப்பீட்டு முறை (Comparative Method)

அரசியல் சமுதாயங்களைப்பற்றியும், அரசாங்கங்களைப்பற்றியும், அதன் நிறுவனங்களைப்பற்றியும் அறிய உதவுவது ஒப்பீட்டுமுறை. பண்டைய கிரேக்க தத்துவ ஞானியான அரிஸ்டாட்டில் (Aristotle) தான் இம் முறையை முதன் முதலாகப் பயன்படுத்தியவர். பண்டைய, தற்கால அரசியல் நிறுவனங்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்து, அவற்றை ஆராய்ந்த பின்னர் ஒப்பிட்டுப் பார்த்து அதனின்று பொதுவான அரசியல் கொள்கைகளைப் பெறும் முறைதான் ஒப்பீட்டு முறை என்பது. ஒரே மாதிரியான அமைப்பையும், பண்புகளையும் கொண்ட இரண்டோ, அதற்கதிக மான அரசுகளையோ, அரசாங்கங்களையோ ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுதுதான் அவைபற்றிய உண்மைகள் புலப்படும். உதாரணமாக, இங்கிலாந்திலும் இந்தியாவிலும் காணப்படுவது பாராளுமன்ற முறையிலான அரசாங்க அமைப்பாக இருந்த போதிலும் இவை இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது தான் இவற்றிடையேயுள்ள மாறுபாடுகள் புலப்படுகின்றன. ஒப்பீட்டு முறையைப் பயன்படுத்தும்பொழுது மாறுபட்ட சூழ் நிலைகளையும் கருத்துகளையும் கவனத்தில் கொள்ளவேண்டியது அவசியம்.

5. தத்துவ முறை (Philosophical Method)

அரசியலில் பின்பற்றப்பட்டு வரும் முறைகளில் மிகப் பழமை யான முறை, தத்துவ முறை. அரசியலில் ஏராளமான தத்துவங் களும் கோட்பாடுகளும் காணப்படுகின்றன. பல அறிஞர்களின் சிந்தனைத் திறனில் இருந்து தோன்றியவைதாம் அரசியல் தத்துவங்களும் கோட்பாடுகளும். கற்பனை வடிவம் மட்டும் கொண்ட தத்துவங்களுக்கும் நடைமுறை அரசியலுக்கும் பொருத்தமில்லை என்றாலும் தத்துவங்கள் தேவைப்படுகின்றன. அரசு உயர்ந்த தன்மை கொண்டு இருக்க வேண்டும் என்றும், அதன் குறிக்கோள்கள் உயர்ந்தவையாக இருக்க வேண்டும் என்றும், அது சிறந்த பணிகளைப் புரிய வேண்டும் என்றும் அரசியல் தத்துவம் கூறுகின்றது. ஆனால் நடைமுறையில் இவற்றைக் காண்பது எளிது அல்ல. இருப்பினும், உயர்ந்த குறிக் கோள் இருப்பதில் தவறு இல்லை. இத் தத்துவ முறையைப் பின்

பற்றி அரசியல் கோட்பாடுகளையும் நிறுவனங்களையும் ஆராய்ந்தால் பயன் விளையும் என்பதில் சந்தேகம் இல்லை.

6. புள்ளியியல் முறை (Statistical Method)

இது அண்மையில் பிரபலமடைந்த முறையாகும். இதை விஞ்ஞான ரீதியிலான முறை என்றும் கூறலாம். ஆனால் அளவு எடுக்க முடிந்தவைக்கு மட்டுமே இந்த முறையைப் பயன்படுத்த முடியும். மக்கள் தொகையின் வளர்ச்சி, மக்களின் இடப்பெயர்ச்சி, வாக்களித்தல், பொதுமக்கள் கருத்து, மக்களின் பொருளாதார முறை போன்றவை சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்களைச் சேகரித்து, அளவிட்டு அவற்றிலிருந்து முடிவுகளைக் காண இந்த முறை பயன்படுகின்றது. இப்படிக் கிடைக்கும் முடிவுகள் நிருவாகத்திற்கும், அரசியல் சீர்திருத்தத்திற்கும், சமுதாயச் சீர்த்திருத்தத்திற்கும் பயன்படும். ஆனால் அரசு சம்பந்தப்பட்ட எல்லாவற்றிற்கும் இந்த முறை பயன்படாது.

7. உளவியல் முறை (Psychological Method)

நவீன முறைகளில் ஒன்று உளவியல் முறை. மனிதரின் நடத்தையின் காரணக் கூறுகளையும், சங்கங்கள், குழுக்கள் ஆகியவற்றில் கருத்து உருவாகும் பாணியையும் பொதுமக்கள் கருத்தையும், ஆராய்ந்து முடிவு எடுப்பதற்கு இந்த முறை பயன்படுகின்றது. அரசியல் கட்சிகளின் அடிப்படையை விளக்குவதற்கும் இந்த முறை உபயோகப்படுகின்றது.

8. சட்ட முறை (Juridical Method)

சட்டத்தை உருவாக்குவதற்கும், அதைச் செயற்படுத்துவதற்கும் அமைந்துள்ள நிறுவனம்தான் அரசு என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு அரசையும் அரசாங்கத்தையும் ஆராய முற்படும் முறைதான் சட்டமுறை என்பது. சட்ட பூர்வமான உரிமைகள், கடமைகள் ஆகியவற்றின் தொகுப்புத்தான் அரசியல் சமுதாயம் என்று இந்த முறையை ஆதரிப்பவர்கள் கூறுகின்றார்கள். சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அரசின் உறவுகளை இந்த முறை ஆராய்கின்றது. இந்த முறைக்கு அதிக முக்கியத்துவம் கிடையாது.

9. உயிரியல் முறை (Biological Method)

பத்தொன்பதாம் நூற்றுண்டில் தோன்றிய டார்வினின் பரிணமக் கோட்பாடு (Darwin's Theory of Evolution) அரசியல் ஆராய்ச்சியை மிகவும் பாதித்தது. இதன் விளைவாகத் தோன்றிய

உயிரியல் முறை, உயிர் உள்ள பிராணிக்கும் அரசுக்கும் ஒப்புமை காண முயல்கின்றது. மனிதனின் உடற் கூறுகளின் அடிப்படையில் அரசின் அமைப்பையும் பணிகளையும் இந்த முறை விளக்குகின்றது. மேலும், அரசின் வளர்ச்சியைப் பரிணும ரீதியில் இந்த முறை ஆராய்கின்றது. ஆனல் இந்த முறையைப் பயன்படுத்தி அளிக்கக்கூடிய விளக்கங்கள் ஏற்றுக்கொள்ளத் தக்கவை அல்ல, ஏனென்றல் உயிர் உள்ள பிராணிகளின் வளர்ச்சி, மாற்றம் ஆகியவை போல் அரசின் வளர்ச்சியும் மாற்றமும் ஏற்படுவது இல்லை.

10. நடத்தை சார்ந்த முறை (Behavioural Method)

இந்த முறையும் நவீன முறைகளில் ஒன்றுகும். தற்பொழுது மேலை நாடுகளில் இந்த முறைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றர்கள். ஆனல் அரசியல் சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் ஆராய்வதற்கு இந்த முறை பயன்படாது. பொதுமக்கள் கருத்து, தேர்தல், வாக்களிப்பு, தன்னலக் குழுக்கள், சட்ட மன்றங்கள், நீதி மன்றங்கள் ஆகியவற்றைப் பற்றி ஆராய்ச்சி நடத்த இந்த முறை சிறந்தது. இது விஞ்ஞான ரீதியில் ஆனது. ஒருவன் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியை ஆதரிப்பதற்குக் காரணம் என்ன? அவனுடைய அரசியல் ஈடுபாடு எத்தகையது? அரசியல் பற்றி அவன் கொண்டுள்ள கருத்துகள் அவனுக்கு எங்ஙனம் கிடைக்கப் பெற்றன? என்பன போன்ற வினக்களுக்கு விடை காண இந்த முறை பயன்படுகின்றது. நடத்தை சார்ந்த முறையைப் பயன்படுத்த உளவியல், சமூக இயல், புள்ளியியல் போன்றவற்றின் உதவி தேவைப்படுகின்றது.

மேற்கூறிய முறைகளைப் பின்பற்றித்தான் அரசியல் மூதறிஞர்களும், அரசியல் விஞ்ஞானிகளும் பல தத்துவங்களையும், கோட்பாடுகளையும், உண்மைகளையும் கண்டறிந்துள்ளனர். இவை எல்லாவற்றின் தொகுப்புத்தான் அரசியல் என்பது.

அரசியலின் உள்ளடக்கம்
(Contents or Areas of Political Science)

நடைமுறை அரசியல் நிலையற்றது. இதில் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கும். இதற்கேற்ப அரசியல் என்ற இயலிலும் மாற்றங்கள் நிகழ்கின்றன. காலத்திற்கேற்ப அரசியலின் உள்ளடக்கம் விரிவடைகின்றது. பண்டைக் காலத்தில் காணப்பட்ட நடைமுறை அரசியலும், அரசியற் சமுதாயமும்

எளிமையானவையாக சிக்கல் இன்றிக் காணப்பட்டன. இதனால் அன்று இருந்த அரசியலும் எளிமையானதாக இருந்தது. தற்காலத்தில் அரசியல் சம்பந்தப்படாத மனித நடவடிக்கைகள் ஏதும் இல்லை என்று கூறலாம். நேரடியாகவோ, மறை முகமாகவோ மனித வாழ்க்கையுடன் அரசியல் நிரந்தரத் தொடர்பு கொண்டு உள்ளது. இந்தப் பண்பு அரசியல் என்ற இயலிலும் காணப்படுகின்றது. அதாவது, நடைமுறை அரசிய லுக்கேற்ப அரசியல் என்ற இயலும் மிகப் பரந்ததாகக் காணப் படுகின்றது. இப் பரந்த இயலின் உள்ளடக்கத்தைப் பல பகுதி களாகப் பிரிக்கலாம். அவை பின்வருமாறு :

1. அரசியல் கோட்பாடு (Political Theory)

அரசியலின் மிக முக்கியமான பிரிவு அரசியல் கோட்பாடு. அறிஞர்களின் கருத்துகளும், அவற்றின் அடிப்படையில் உருவான கோட்பாடுகளும் இதில் அடங்கும். கோட்பாடு இல்லாத பகுதி அரசியலில் கிடையாது. கோட்பாட்டை அடிப் படையாகக் கொண்டு உண்மைகளை கண்டறிய முடியும். அரசியல் கோட்பாடும், அரசியல் தத்துவமும் ஒன்று அல்ல. காலத்திற் கேற்பக் கோட்பாடுகள் மாறுவது உண்டு. அங்ஙனம் மாறுபட் டாலும் அவற்றின் முக்கியத்துவம் குறைவது இல்லை. சில கோட் பாடுகள் தற்காலத்திற்கு உகந்தவை அல்ல என்று கருதப் பட்டாலும் அவை அடியோடு நிராகரிக்கப்பட மாட்டா.

2. அரசியல் தத்துவம் (Political Philosophy)

அறிஞர்களின் கற்பனையிலிருந்து தோன்றியதுதான் அரசியல் தத்துவம். ஓர் உயர்ந்த கருத்தைத்தான் நாம் தத்துவம் என்கிறோம். யாவும் உயர்ந்த பண்பையும், உயர்ந்த குறிக் கோளையும், குறைபாடு அற்ற அமைப்பையும் கொண்டு இருக்க வேண்டும் என்ற கற்பனை நோக்கினின்று உருவெடுப்பதுதான் தத்துவம். உதாரணமாக, பிளேட்டோ (Plato) என்ற பண்டைய கிரேக்கத் தத்துவ ஞானி ஓர் உயர்ந்த அரசையும், அரசியற் சமுதாயத்தையும் கற்பனைசெய்து அவை கொண்டிருக்கவேண்டிய நற்பண்புகளை விவரித்தார். வேறுபல ஞானிகளும் இதே பாணியில் தத்துவங்களை உருவாக்கி உள்ளனர். அரசியல் தத்துவத்திற்கு ஒரு குறை உண்டு. அது என்னவென்றால் இதை ஆதாரங்களின் அடிப்படையில், அல்லது சான்றுகளைக் கொண்டு நிரூபிக்கமுடியாது. இருப்பினும், அரசுகளுக்கும் அரசாங்கங்கட்கும் வழிகோலியாக அமைவதற்குத் தத்துவம் தேவைப்படுகின்றது.

3. அரசியலும் அரசாங்கமும் (Politics and Government)

இங்கு அரசியல் என்ற பதம் நடைமுறை நடவடிக்கைகளைக் குறிப்பிடுகின்றது. அரசாங்கம் என்பது ஆட்சி அமைப்பைக் குறிப்பிடுகின்றது. தற்பொழுது அரசாங்கம் என்பதற்குப் பதிலாக அரசியல் முறை (Political System) என்பதைப் பயன்படுத்தி ஆட்சி முறையைக் குறிப்பிடும் பழக்கம் பின்பற்றப்பட்டு வருகின்றது. ஒப்பீட்டு அரசியல் (Comparative Politics), ஒப்பீட்டு அரசாங்கம் (Comparative Government) ஆகிய இரண்டும் இரு பிரிவுகள் ஆகும். இவை யாவும் அரசியலையும் அரசாங்கத்தையும் ஆராயப் பயன்படுத்தப்படுகின்றன.

4. சட்டம் (Law)

சட்டம் அரசியலின் ஒரு பகுதியாகும். இங்குச் சட்டம் என்பது சாதாரணச் சட்டத்தைக் குறிப்பிடுவதில்லை. சட்டத்தின் பண்பு, தன்மை, அது உருவாக்கப்படும் முறை, செயல்படுத்தப்படும் முறை ஆகியவையும், அரசியல் அமைப்புச் சட்டம் (Constitutional Law), ஆட்சிமுறைச் சட்டம் (Administrative Law) போன்றவையும் சட்டத்தின் ஆட்சி (Rule of Law) என்ற கருத்தும் அரசியலில் ஆராயப்படுகின்றன.

5. பன்னாட்டு அரசியல் (International Politics)

அரசியலின் முக்கியமான பகுதிகளில் ஒன்று பன்னாட்டு அரசியல். தற்பொழுது உலக அரங்கில் அரசுகளிடையே காணப் படும் உறவிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. ஆகவே பன்னாட்டு அரசியல் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சியும் அறிவும் மிக மதிப்பு உடையவை. பன்னாட்டு உறவு (International Relations), பன்னாட்டு நிறுவனம் (International Organization), பன்னாட்டு ஆட்சி (International Administration), பன்னாட்டுச் சட்டம் (International Law) ஆகியவை பன்னாட்டு அரசியலின் பிரிவுகள் ஆகும். பன்னாட்டு அரசியலை ஆராய்வதற்குப் புவியியல், மக்கள் தொகை, பொருளாதாரம், வரலாறு, கலாசாரம், உளவியல் போன்றவை மிகவும் பயன்படுகின்றன.

6. பொதுத்துறை ஆட்சி இயல் (Public Administration)

அண்மைக் காலத்தில் முக்கியத்துவம் அடைந்த பிரிவுகளில் ஒன்று, பொதுத்துறை ஆட்சி இயல் ஆகும். இந்த இயல் அரசாங்கத்தின் ஒரு குறிப்பிட்ட உறுப்பான பணியாளர் தொகுதிக்கு முக்கியத்துவம் அளித்த போதிலும் அதன் இதர உறுப்புகளுடனும் இதற்குத் தொடர்பு உண்டு. ஆட்சி அமைப்பு,

ஆட்சியாளர், பணியாளர் உறவு, பொருளாதார நிர்வாகம், திட்டம், நிர்வாகச் சீரமைப்பு ஆகியவை சம்பந்தப்பட்ட கொள்கைகளையும், அவை பின்பற்றும் முறைகளையும் பொதுத் துறை ஆட்சி இயல் விளக்குகின்றது. அன்றாட நிர்வாகம் பற்றி அறிவதற்கு இன்றியமையாதது இவ்வியல்.

7. அரசியல் கட்சிகளும் தன்னலக் குழுக்களும் (Political Parties and Interest Groups) :

தற்கால அரசாங்கங்களில் மிக முக்கியப் பங்கு வகிப்பவை அரசியல் கட்சிகளும் தன்னலக் குழுக்களும் ஆகும். அரசியல் கட்சிகள் இல்லாவிடில் தற்கால அரசாங்கங்கள் அமைக்கப்படவும் செயல்படவும் முடியாது. அரசாங்கம் சட்டங்களை இயற்றும் பொழுது தமது செல்வாக்கைப் பயன்படுத்துபவை தன்னலக் குழுக்கள் ஆகும். அரசியல் கட்சிகளும் தன்னலக் குழுக்களும் முக்கியத்துவம் பெற்றிருப்பதன் காரணமாக இவற்றை அரசியலின் ஒரு பிரிவாகக் கொண்டு ஆராய்கின்றோம்.

8. பொதுமக்கட் கருத்து (Public Opinion)

தற்கால அரசாங்கங்களில் பொதுமக்கட் கருத்திற்கு உரிய மதிப்பு அளிக்கப்படுகின்றது. மக்கள் ஆட்சியைப் பொறுத்த மட்டில் பொதுமக்கள் கருத்தைப் புறக்கணித்துச் செயல்படுவது அழிவிற்கு வழி வகுக்கும். இதனின்று பொதுமக்கட் கருத்தின் முக்கியத்துவம் புலனாகும். பொதுமக்கட் கருத்து என்றால் என்ன? அது எங்ஙனம் உருவாகின்றது? அதன் செல்வாக்கின் அளவு என்ன? அச் செல்வாக்கு எங்ஙனம் பயன்படுத்தப்படுகின்றது? ஆகியவற்றை ஆராய்வது பொதுமக்கட் கருத்து என்ற பிரிவு. அரசியலின் இப் பிரிவும் அண்மையில் தோன்றியதாகும்.

9. உள்ளூர் அரசாங்கமும் ஆட்சியும் (Local Government and Administration)

கிராமப் பஞ்சாயத்துகள், நகரசபைகள், மாநகராட்சிகள் போன்றவற்றின் அமைப்பு, அதிகாரம், உறவு ஆகியவை இப் பிரிவில் ஆராயப்படுகின்றன. மக்களாட்சி முறை காணக்கூடிய நாடுகளில் உள்ளூர் அரசாங்கத்திற்கு நல்ல மதிப்பு அளிக்கப் படுகின்றது.

பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற மாமேதைகள் வாழ்ந்திருந்த காலத்தில் காணப்பட்ட அரசியல் மிகச் சுருக்க மாக இருந்தது. அன்று அரசும் அதன் பணிகளும் முறையே சுருங்கியதாகவும் குறுகியதாகவும் இருந்ததனால்தான் அரசியலும்

எளிமையாக இருந்தது. ஆனால், இன்று அரசின் அமைப்பிலும், அதிகாரங்களிலும், பணிகளிலும் ஏராளமான மாற்றங்கள் ஏற்பட்டு அவை மிகவும் விரிவடைந்து உள்ளன. இதனால்தான் அரசியலும் மிகப்பரந்த இயலாக மாறி உள்ளது. இதன் வளர்ச்சி எக் காரணத்தைக் கொண்டும் தடைப்பட்டுவிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பிற சமூக இயல்களுடன் அரசியலுக்குள்ள உறவு
(Relation of Political Science with other Social Sciences)

சமூக இயல்கள் யாவும் ஒன்றோடொன்று நெருங்கிய உறவு உடையவை. தற்காலத்தில் காணப்படும் சமூக இயல்கள் ஒவ் வொன்றும் பிறவற்றுடன் தொடர்பு இல்லாவிடில் சரிவர இயங்க முடியாது. எங்ஙனம் மனிதன் பிறருடைய உதவி இல்லாவிடில் வாழ முடியாது என்ற நிலையில் இருக்கின்றானோ, அதே நிலையில் தான் சமூக இயல்களும் உள்ளன. பிற சமூக இயல்களுடன் தொடர்பு அற்ற ஒரு சமூக இயல் பயன் உடையதாக இருக்க முடியாது. ஏனெனில், மனிதனின் வாழ்க்கையில் ஏதாவது ஒரு பிரச்சினை சம்பந்தப்பட்டதாகத்தான் ஒரு சமூக இயல் இருக்கும். அரசியலும் இதே பண்பு உடையது. எனவே நாம் பிற சமூக இயல்களுடன் அரசியல் என்னும் சமூக இயல் கொண்டுள்ள உறவினை ஆராய வேண்டியுள்ளது.

1. அரசியலும் வரலாறும் (Political Science and History)

வரலாற்றை அடிப்படையாகக் கொண்டுதான் அரசியலைக் கற்க வேண்டும் என்று சிலர் கூறுகின்றனர். ஆனால், அரசியலைக் கற்பதற்கு வரலாறு இன்றியமையாதது எனக் கருதக் கூடாது என்று சிலர் கூறுகின்றனர். அரசியல், வரலாறு ஆகியவற்றின் உறவுபற்றி மாறுபட்ட கருத்துகள் இருந்தபோதிலும் இந்த இரண்டு இயல்களும் ஒன்றுக்கொன்று இன்றியமையாதவை என்பது மறுக்க முடியாத உண்மை. அரசியலுக்குத் தேவை யான சான்றுகள் வரலாற்றினின்று கிடைக்கின்றன. கடந்த கால நிகழ்ச்சிகளின் தொகுப்புத்தான் வரலாறு என்பது. இத் தொகுப்பிலிருந்து தனக்குத் தேவையானவற்றை அரசியல் எடுக்கின்றது. உதாரணமாக, ஓர் அரசியல் கோட்பாட்டினைப் பற்றியோ நிறுவனத்தைப் பற்றியோ நன்கு அறியவேண்டும் என்றால் அதன் வரலாறும், அது தோன்றுவதற்குக் காரணமாய் இருந்தவையும், அது எந்தச் சூழ்நிலைகளில் தொடங்கி வளர்ச்சி யடைந்துள்ளது என்பதும் ஆராயப்படவேண்டும். அரசியலுக்கு

இத் தகவல்களை அளிப்பது வரலாறு. வரலாற்றுச் சான்றுகளின் உதவி இல்லாத அரசியல் நடைமுறைக்கு உகந்ததாக அமையாது.

அரசியலுக்கு வரலாறு எங்ஙனம் தேவைப்படுகின்றதோ அதே போல் வரலாற்றிற்கு அரசியலும் தேவைப்படுகின்றது. அரசியல் நிகழ்ச்சிகளும், இயக்கங்களும், கோட்பாடுகளும், நிறு வனங்களும் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டு எழுதப்படும் வரலாறு ஒரு கதையாக இருக்குமேயன்றி வரலாறாக இருக்காது. வரலாற் றிற்குச் சுவை ஊட்டுவது அரசியல் என்று திட்டவட்டமாகக் கூறலாம்.

2. அரசியலும் பொருளியலும் (Political Science and Economics)

அரசியலும் பொருளியலும் தனித்தனி இயல்களாக அண்மை யில்தான் பிரிந்தன. அரசியல் தத்துவத்திலிருந்து பொருளியலைப் பிரிக்க முடியாது என்று அரிஸ்டாட்டில் போன்ற மேதைகள் கருதினார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டில் அரசியற் பொரு ளியல் என்ற இயல் காணப்பட்டது. காலப்போக்கில் இது இரண்டு இயல்களாகப் பிரிந்தது. இப்படிப் பிரிந்த பிறகும் இவை இரண்டும் ஒன்றோடொன்று நெருங்கிய உறவு உடையவையாகக் காணப்படுகின்றன.

இன்றும் இவற்றிடையே நெருங்கிய தொடர்புள்ளது. பொருள், பொருளாதாரம் ஆகியவை சம்பந்தபட்ட பணிகள் அரசுக்கும் மனிதனுக்கும் முக்கியமானவை. பல அரசுகள் பொருளாதாரத் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அரசியலில் காணப்படும் பல கோட்பாடுகள் பொருளாதாரப் பின்னணியில் தோன்றியவையாகும். முதலாளித்துவம் தோன்று வதற்குக் காரணமான தனியுரிமைக் கோட்பாடும், சமதர்மக் கோட்பாடுகளும் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண் டவையாகும். மேலும், தற்கால அரசாங்கங்கள் பொருளாதாரம் சம்பந்தப்பட்ட பல்வேறு பணிகளில் ஈடுபட்டுள்ளன. மேற்கூறிய யாவும் அரசியலுக்கும் பொருளியலுக்கும் இடையேயுள்ள உறவை மேலும் உறுதிப்படுத்துகின்றன.

3. அரசியலும் சமூக இயலும் (Political Science and Sociology)

மனித சமுதாயம், மனிதருடைய சமூக வாழ்க்கை, சமுதா யத்தில் காணப்படும் உட்பிரிவுகள், அவற்றிடையேயுள்ள

உறவுகள், மனிதரின் நடத்தையின் காரணங்கள் ஆகியவற்றை ஆராயும் இயல்தான் சமூக இயல் என்பது. அரசியலும் சமூக இயலும் ஒன்றிற்கு ஒன்று உதவுகின்றன. அரசியல் நிறுவனங் களின் தோற்றம், பரிணமம் ஆகியவற்றை அறியச் சமூக இயல் உதவுகின்றது. மேலும், அரசாங்கத்தின் கொள்கைகளை வெற்றி கரமாகச் செயல்படுத்துவதற்கும் இந்த இயல் உதவுகின்றது. ஒரு கொள்கை, அல்லது திட்டம் வெற்றியடைய வேண்டுமென் ருல் மக்கள் அதை விரும்பி ஏற்றுக்கொள்ள வேண்டும். மனிதரின் மனநிலையையும் சமூகத்தின் உட்பிரிவுகளின் மனநிலையையும் அறியச் சமூக இயல் பயன்படுகின்றது. சமூக இயல் அண்மையில் தோன்றிய இயலாகும். தற்பொழுது அரசியலில், 'அரசியற் சமூக இயல்' என்ற பிரிவு ஒன்று தோன்றியுள்ளது.

4. அரசியலும் ஒழுக்கவியலும் (Political Science and Ethics)

ஒழுக்கவியல் மனிதரின் ஒழுக்கத்தையும், நடத்தையையும் ஆராய்கின்றது. மனிதரின் நல்வாழ்வுதான் அரசின் முக்கியக் குறிக்கோள். நல்ல நடத்தையும் நல்ல ஒழுக்கமும் இருந்தால் தான் நல்வாழ்வு காண முடியும். இதனுல்தான் ஒழுக்கப் பண்பிற்கு அரசியல் முக்கியத்துவம் அளிக்கின்றது. உதாரண மாக, அரசாங்கம் இயற்றும் சட்டங்கள் மனிதரின் ஒழுக்கப் பண்பு களைப் பிரதிபலிப்பவையாகவும் ஒழுக்கப் பண்பிற்குப் புறம் பானவை அல்லாமலும் இருக்க வேண்டும். ஆனுல் ஒழுக்க வியலில் காண்பவை எல்லாம் அரசியலுக்குப் பயன் உள்ளவை என்று கொள்ளக் கூடாது.

5. அரசியலும் புவியியலும் (Political Science and Geography)

மனிதன் வாழும் நிலப்பரப்பைப் பற்றியும் இயற்கைச் சூழ் நிலைகளைப் பற்றியும் ஆராய்வது புவியியல். மனிதனுடைய மன நிலையிலும் கருத்துகளிலும் மாற்றங்கள் ஏற்பட இயற்கைச் சூழ்நிலைகளும் அவன் வாழும் நிலப்பரப்பின் தன்மையும் காரணங்களாக உள்ளன. வெப்பமான பகுதியில் வாழ்பவர்கள் எதேச்சாதிகாரத்தை விரும்புவர் என்றும் குளிருள்ள பகுதிகளில் வசிப்பவர்கள் சுதந்திரத்தை விரும்புவர் என்றும் ஃபிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த மான்டெஸ்க்யூ என்ற அறிஞர் கூறுகின்றுர். இது சர்ச்சைக்குரிய கருத்து. இருப்பினும் கால நிலையும் வாழும் இடமும் மனிதரைப் பாதிப்பவை என்பதை மறுக்க முடியாது. இதனுல் அரசியல் சமுதாயத்திலும், அரசாங்கத்தின் அமைப் பிலும் மாறுபாடுகள் காணப்படும். தற்பொழுது இதனை விரிவாக ஆராய்வதற்கென்று 'அரசியல் புவியியல்' என்ற ஓர் உட்பிரிவு புவியியலில் தோன்றியுள்ளது.

6. அரசியலும் உளவியலும் (Political Science and Psychology)

இந்த இரு இயல்கட்கும் இடையில் உள்ள உறவு அண்மையில் தோன்றியது. மனிதரின் சிந்தனை, நடத்தை ஆகியவற்றின் காரணங்களை உளவியல் ஆராய்கின்றது. உளவியலில் பின்பற்றப் படும் பலமுறைகள் அரசியலிலும் பின்பற்றப்படுகின்றன. சமுதாயத்தின் கருத்து, நடத்தை ஆகியவற்றின் நிலையையும் தன்மையையும் சட்டம் இயற்றுபவர்களும் ஆட்சியாளர்களும் அறிந்திருந்தால் அதனால் அரசாங்கம் பயன் அடையும். இதற்குச் சமூக உளவியல் பயன்படுகின்றது. பல அரசாங்கங்கள் தமது மக்களின் மனநிலை அறிந்து செயல்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

7. அரசியலும் சட்டமும் (Political Science and Law)

அரசிற்கு மையமாகவுள்ளது சட்டமாகும். அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டுச் செயற்படுத்தப்படும் விதிகள்தாம் சட்டங்கள் என்பவை. பலவகைச் சட்டங்கள் இருந்தபோதிலும் பொதுச் சட்டம், அரசியல் அமைப்புச் சட்டம் ஆகிய இரண்டும்தாம் அரசியலுடன் நெருங்கிய நேரடித் தொடர்புடைய சட்டங்கள். அரசியலும் சட்டமும் ஒன்றிற்கொன்று இன்றியமையாதவை.

8. அரசியலும் மனிதவியலும் (Political Science and Anthropology)

மனிதரிடையே காணப்படும் இனங்கள், சாதிகள், மொழிகள், கலாசாரங்கள் ஆகியவற்றை ஆரம்பத்தினின்று ஆராயும் இயல் தான் மனித இயல். இந்த இயலின் வாயிலாகத் தற்காலத்தில் காணப்படும் மரபுகள், சமூக நிறுவனங்கள் போன்றவற்றின் பரிணாமத்தை அறிய முடியும். பொதுவான அரசியல் கோட்பாட்டினை உருவாக்குவதற்கும் இந்த இயல் பயன்படுகின்றது.

9. அரசியலும் புள்ளியியலும் (Political Science and Statistics)

அளவை முறையைப் பின்பற்றும் இயல் புள்ளியியல். தற்பொழுது அளவை முறையைப் பின்பற்றும் பழக்கம் சமூக இயல்களில் பெருகிவருகிறது. புள்ளியியல் என்பது அரசியல் முழுவதற்கும் பயன்படாவிடினும் அதன் ஓர் உட்பகுதியான பொதுத்துறை ஆட்சி இயலுக்குப் பயன்படுகின்றது. குறிப்பாகச் சொன்னால், அரசாங்கத்தின் திட்டங்கள் எவ்வளவு பயன் அளித்துள்ளன? மக்களின் வாழ்க்கைத்தரம் எந்த நிலையில் உள்ளது? என்பன போன்ற பலவற்றையும் ஆராய்வதற்குப் புள்ளியியல் பயன்படு

கின்றது. தற்காலத்தில் அரசியல் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்கும் இந்த இயல் உதவுகின்றது.

அரசியல் என்பது ஒரு எளிமையான இயல். ஏனெனில் தேவைப்படும் பொழுது தனது தேவைக்கேற்ப பிற இயல்களின் உதவியை இது நாடுகின்றது. வரலாறு, தத்துவம், ஒழுக்கவியல், சட்டம் ஆகிய இயல்களின் உதவியுடன் தான் அரசியல் உருவாயிற்று. சமூக இயல், சமூக உளவியல், மனிதவியல், புவியியல், புள்ளியியல் ஆகியவை அரசியலின் முழுவளர்ச்சிக்கு உதவுகின்றன. எங்ஙனம் மனிதன் பிறருடைய ஆதரவுடனும் ஒத்துழைப்புடனும் வாழ்கின்ருனே அதேபோல் அவனுடைய இயலான அரசியலும் பிற இயல்களின் உதவியுடன் வளர்கின்றது.

அரசியலின் பயன்

(Value of Political Science)

அரசியலைக் கற்பதினல் நல்ல குடிமுறைப் பயிற்சி கிடைக்கின்றது. மக்களாட்சியைக் கொண்டுள்ள அரசுகளில் வாழும் மக்களுக்குப் பொறுப்பு உணர்வும், உரிமை வேட்கையும், கடமை நோக்கும் புகட்ட உகந்தது அரசியல். தற்கால அரசியலைப் பற்றியும், அரசாங்கத்தைப் பற்றியும் அறிவதற்குப் பயன்படுவது அரசியல்.

பல்வேறு பணிகளைப் புரிவதற்குத் தகுதி உடையவர்களாக மாணவர்களை உருவாக்குவது அரசியல். அரசியல்வாதிகளாக மாற விரும்புகின்றவர்களும், ஆட்சியாளர்களாக பணிபுரிய விரும்புவோர்களும், சட்ட வல்லுநர்களாக விழைவோரும், போட்டித் தேர்வுகள் மூலமாகக் குடிமுறைப் பணியாளர்களாக வர விரும்புகின்றவர்களும், ஆசிரியர் பணிபுரிய விரும்புகின்றவர்களும் கற்க வேண்டிய இயல் அரசியல். மக்களாட்சியும், மக்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டுமென்ருல் மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். அவர்களுக்கு அந்த விழிப்புணர்வை அளிப்பது அரசியல்.

2. அரசும் இதர கருத்துகளும்

[மனிதன் ஓர் அரசியற் சமுதாய விலங்கு—அரசின் விளக்கமும் அதன் கூறுகளும்—அரசும் சமுதாயமும் (State and Society)—அரசும் அரசாங்கமும் (State and Government)—அரசும் சங்கமும் (State and Association).]

விலங்குகளும் பறவைகளும் இணையாக மட்டுமின்றி கூட்டமாகவும் வாழ்வதை நாம் காண்கின்றோம். இப்பண்பு மனிதனுக்கும் உண்டு. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னுலிருந்து இன்று வரையுள்ள மனித வரலாற்றை நாம் ஆராய்ந்தால் மனிதன் தனித்து வாழ்ந்திருந்தான் என்பதற்கான சான்றுகள் கிடைக்காது. தற்காப்புக்காகவும், உணவு தேடும் நோக்கத்திற்காகவும் பண்டைக்கால மனிதர்கள் கூட்டமாக வாழ்ந்தனர். இன்று மனிதர்கள் கூட்டமாக இணைந்து வாழ்வதற்கு தற்காப்பும், உணவும் மட்டுமன்றி வேறு பல காரணங்களும் உள்ளன. மனிதர்கள் ஒருமித்து வாழ்கின்றனர் என்பதினுல் அவர்கள் ஒற்றுமையாக வாழ்கின்றுர்கள் எனக் கருதக்கூடாது. இணைந்து வாழ்ந்தால்தான் வாழமுடியும் என்பதனுல் தான் அவர்கள் அங்ஙனம் வாழ்கின்றனர்.

பண்டைக்கால மனிதர்கள் நிரந்தரமாக ஓரிடத்தில் தங்காமல் விலங்குகளைப்போல் அலைந்து திரிந்து வாழ்ந்திருந்த காலத்தில், அவர்களிடையே கட்டுப்பாடோ, அல்லது அவர்களை கட்டுப்படுத்தும் நிறுவனங்களோ இருக்கவில்லை. தலைவன் என்று ஒருவன் இருந்த போதிலும் அவனது வலிமைக்கு அஞ்சித்தான் மக்கள் அவனுக்குக் கீழ் படிந்தனர். மனிதர்கள் ஓரிடத்தில் நிரந்தரமாக வாழ ஆரம்பித்த பின்னர் தான் சமுதாயம் என்பது தோன்றியது. உலகின் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு சமுதாயங்கள் இப்படித்தான் தோன்றின. காலப்போக்கில் இச் சமுதாயங்களிடையே பல வேற்றுமைகள் தோன்றின. இவ் வேற்றுமைகள் தோன்றுவதற்கு மனிதர் வாழ்ந்திருந்த நிலப்பரப்பின் தன்மை, அவர்கள் பின்பற்றிய கலாசாரம், பழக்க வழக்கங்கள், மொழி, சமயம், உறவுமுறை ஆகியவை காரணங்களாகும். இப்புராதன சமுதாயத்தில் மனிதனைக் கட்டுப்படுத்தும்

வலிமை சமுதாயத்தில் காணப்பட்ட பழக்க வழக்கங்களுக்கு மட்டுமே இருந்தது. இந்த சமுதாயத்தில் அரசு என்பது இருக்கவில்லை.

காலப்போக்கில் தோன்றியவைகள் தான் அரசும், அரசாங்கமும். இவற்றின் தோற்றத்திற்குப் பின் மனிதன் இவற்றிற்குக் கட்டுப்பட்டு வாழத் தொடங்கினான். தற்காலத்தில் மனிதர்கள் அவர்களுடைய அரசாங்கத்திற்கும், சமுதாயத்திற்கும் கீழ்ப் படிந்து, கட்டுப்பட்டு வாழ்கின்றார்கள். பழங்கால மனிதர்களிடம் சாதாரணமாகக் காணப்பட்ட சுயநலமும், வெறியும் இன்றுள்ள மனிதர்களுக்கும் உண்டு. என்றாலும் இத்தீய பண்புகள் சமுதாயத்தாலும், அரசாலும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. மனிதரைக் கட்டுப்படுத்தும் நிறுவனங்களில் முதன்மையானதாக இன்று காணப்படுவது அரசு. இத்தன்மையுடைய அரசு என்பது என்ன?

அரசின் விளக்கம்

அரசு (State) என்ற பதத்திற்கு பல பொருட்கள் உண்டு என்று முதல் அத்தியாயத்தின் துவக்கத்தில் கண்டோம். அரசு என்பதற்குப் பதிலாக அரசாங்கத்தையும், அரசாங்கம் என்பதற்குப் பதிலாக அரசையும் மாற்றிப் பயன்படுத்தும் பழக்கத்தையும் ஏற்கெனவே குறிப்பிட்டோம். அரசியல் என்ற இயலில் இக் குழப்பத்திற்கு இடமில்லை. ஆகவே அரசு என்ற பதத்தின் சரியான பொருளை நாம் இனி ஆராய்வோம்.

அரசு என்பது உருவமற்றது. இப்பதத்திற்குப் பல மாறுபட்ட விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இத்தகைய மாறுபாட்டிற்கு அரசியல் மூதறிஞர்கள் கொண்டிருந்த மாறுபட்ட கருத்துகள் தான் காரணம். அரசு என்பது இயற்கையானதும், தேவையானதும் ஆகும் என்று பண்டைய கிரேக்க மேதை அரிஸ்டாட்டில் கருதினார். மனிதனின் வளர்ச்சிக்கு அரசு இன்றியமையாதது எனக்கருதிய இவர், அரசுக்கு வெளியில் வாழ்ந்தவரை மனிதராகக் கருதவில்லை. அரிஸ்டாட்டில் குறிப்பிட்ட அரசு என்பது போலிஸ் (Polis) என்று அழைக்கப்பட்ட கிரேக்க நகர அரசாகும். மனிதனின் முழுவளர்ச்சிக்கு அரசு இன்றியமையாதது என்ற கருத்தை ரூசோ (Rousseau) இம்மானுவெல்கான்ட் (Immanuel Kant), ஹெகல் (Hegel), டி.எச். கிரீன் (T.H. Green), பெனார்ட் பொசாங்கே (Bernard Bosanquet) ஆகிய அறிஞர்களும் கொண்டிருந்தனர். அரசு என்பது பொது நலனுக்காக அமைந்த ஒரு பொதுக்கூட்டு நிறுவனம் என்று ஆல்தூசியஸ் (Althusius),

குரோஷியஸ் (Grotius) போன்றோர் கருதினர். அரசு என்பதை ஒரு தீமையாகக் கருதியவரும் உண்டு. இவர்களில் பிரௌதான் (Proudhon), குரோபோட்கின் (Kropotkin), ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். அரசு என்பது வலிமை முறையை (Power-system) குறிக்கின்றது என்பது மக்கியவல்லி (Machiavelli), ட்ரிட்ஷ்கே (Trietschke) ஆகியோர் கருத்து. பிறர் மீது ஆதிக்கம் செலுத்தி அவரைத்தமது நலனுக்காகப் பயன்படுத்துவதற்கென ஒரு வகுப்பினர் கொண்டிருந்த அமைப்புத்தான் அரசு என்பது. ஓப்பன்ஹைமர் (Oppen Heimer), கார்ல்மார்க்ஸ் (Karl Marx), ஆகியோரது கருத்து. இவ்வாறு அரசைப்பற்றி ஏராளமான கருத்துகள் அறிஞர்களிடையே நிலவுகின்றன.

இனிநாம் அரசைப் பற்றிய சில விளக்கங்களை ஆராய்வோம். ''மனித சமுதாயத்தில் குறிப்பிட்ட ஒரு பகுதி சீராக அமைக்கப் பட்டிருப்பின் அதனை அரசு எனலாம்'' என்று ஜான்ய பர்ஜஸ் (John W. Burgess), கூறுகின்றார். ''திட்டவட்டமான ஒரு நிலப்பரப்பில் அரசியல் ரீதியில் இணைக்கப்பட்டுள்ள மக்களை அரசு எனலாம்'' என்பது பிளண்ட்ஷிலி (Bluntschli) என்பவரின் கருத்து. ''திட்டவட்டமான ஒரு நிலப்பரப்பினுள் சட்டத்திற்காக இணைக்கப்பட்டுள்ள மக்களை அரசு'' என்று உட்ரோ வில்சன் (Woodrow Wilson) கூறுகின்றார். அரசுக்குள்ள பண்புகள் அனைத்தையும் முழுமையாக வளர்க்க மேற்கூறிய விளக்கங்கள் பயன்படாது. அரசிற்கு அளிக்கப்பட்டுள்ள விளக்கங்களில் சரியானது என்று கருதப்படுவது கார்னர் (Garner) என்பவர் அளித்த விளக்கமாகும். 'திட்டவட்டமான நிலப்பரப்பொன்றில், மக்கள் நிரந்தரமாகவும், சுதந்திரமாகவும் வாழ்ந்திருந்து, அவர் தம் அரசாங்கத்திற்கு அவர்களில் பெரும்பாலோர் இயல்பாகக் கீழ்படிவார்களானால் அந்த அமைப்பை அரசு எனலாம்'. என்று கார்னர் கூறுகின்றார். நாம் இவ் விளக்கத்தை ஆராய்ந்தால் அரசின் உட்கூறுகள் யாவும் புலப்படும். மக்கள், நிலப்பரப்பு, அரசாங்கம், சுதந்திரம் ஆகிய நான்கும் அரசின் உட்கூறுகள் ஆகும். இந்த நான்கில் ஏதாவதொன்று இல்லாவிட்டாலும் இந்த அமைப்பு அரசு ஆகாது. நாம் இனி இக் கூறுகள் ஒவ்வொன்றையும் தனித் தனியாகப் பரிசீலிப்போம்.

1. மக்கட்தொகை (Population)

அரசிற்கு அடிப்படையான தேவைகளில் ஒன்று மக்கட் தொகை. மக்கள் இல்லாவிடில் அரசும் இல்லை. இதனால் தான் மக்கள் வாழக்கூடிய நிலப்பரப்பை மட்டும் அரசின் பகுதியாக கருதுகின்றனர். ஓர் அரசில் எவ்வளவு மக்கள் இருக்கவேண்டும்

என்பது ஒரு பிரச்சினை. ஓர் நகர அரசில் வாழும் மக்களின் தொகை 5,040 ஆக இருப்பது நல்லது என்று பண்டைய கிரேக்க மேதை பிளேட்டோ கருதினார். இது பத்தாயிரத்துக்கு அதிகப்படக் கூடாது என்று ரூசோ (Rousseau) கருதினார். இப்படி மாறுபட்ட கருத்துகள் காணப்பட்ட போதிலும் ஒரு அரசின் மக்கட்தொகை இவ்வளவுதான் இருக்கவேண்டும் என்று திட்டவட்டமாக வரையறுத்துக் கூறமுடியாது. அரசின் எல்லைப்பரப்பிற்குள் காணப்படும் இயற்கை வளத்திற்கு மிகைப் படாமலும், நல்லாட்சி புரிவதற்கு உகந்ததாகவும் மக்கட்தொகை அளவோடு அமையவேண்டும். ஆனால் இது நடைமுறையில் காணக்கூடியது அல்ல. உதாரணமாக, தற்காலத்தில் அளவு கடந்த மக்கட்தொகையும், மிகக்குறைவான மக்கட்தொகையும் உள்ள நாடுகள் காணப்படுகின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகள், கனடா, சோவியத் யூனியன் ஆகிய நாடுகளில் நிறைய வளம் இருந்தபோதிலும் மக்கட்தொகை குறைவாகவேயுள்ளது. அதே வேளையில் இத்தாலி, எகிப்து, இந்தியா போன்ற நாடுகள் அளவு கடந்த மக்கட்தொகையின் வளர்ச்சியினால் பாதிக்கப்பட்டுள்ளன. கட்டுக்கடங்காமல் வளரும் மக்கட்தொகை பல பிரச்சினைகளை உருவாக்கும். மக்கட்தொகை குறைவாக இருந்தாலும் நல்ல தல்ல. ஒரு அரசின் நிலப்பரப்பில் காணப்படும் இயற்கை வளத் திற்கும், வசதிக்கும் ஒத்ததாக மக்கட்தொகை அமைவது நல்லது.

ஓர் அரசில் காணப்படும் மக்கள் எத்தன்மையைக் கொண்டிருக்க வேண்டும் என்பது மற்றொரு பிரச்னை. ஓர் அரசில் காணப்படும் மக்கள் எல்லோரும் அந்த அரசின் உறுப்பினர்கள் அல்ல. (ஓர் அரசில் வாழும் மக்கள் குடியுரிமை கொண்டிருந்தால் தான் அவர்களை அந்த அரசின் உறுப்பினர்களாகக் கருதப்படும்.) சாதாரணமாக, இரண்டு வகைப்பட்ட மக்களை ஓர் அரசில் காண முடியும். ஒருவகையினர் குடிமக்கள் என்றும், மற்றவர் அயல் நாட்டவர் என்றும் கருதப்படுவார்கள். குடிமக்களுக்கு மட்டும் தான் எல்லா உரிமைகளும் ஓர்அரசால் வழங்கப்படும்.

ஓர் அரசின் மக்கள் எல்லோரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர் களாகவோ ஒரே மொழியைப் பேசுபவர்களாகவோ ஒரே கலா சாரத்தைக் கொண்டவர்களாகவோ ஒரே சமயத்தைப் பின்பற்று வர்களாகவோ இருக்க வேண்டுமா வெவ்வேறு வகைப் பட்டவர்களாக இருக்கலாமாஎன்பது மற்றொருபிரச்சினை. தற்காலத் தில் ஒரே வகைப்பட்ட மக்கள் வாழும் அரசுகள் இல்லை. வேறு பாடுகள் ஒரு பிரச்சினையாக இன்று கருதப்படுவதும் இல்லை. நிரந் தரமாக ஓர் அரசின் எல்லைகளுக்குள் வாழ்கின்றவர்களைத் தாம்

அதன் மக்கள் என்று கூறலாமேயன்றி தமக்கென எந்த நாடும் இல்லாமல் அலைந்து திரிபவர்களை எந்த அரசின் குடிமக்கள் என்றும் கொள்ளமுடியாது.

2. நிலப்பரப்பு (Territory)

மக்கள் நிரந்தரமாக வாழக்கூடிய வசதிகள் உள்ள நிலப்பரப்பு அரசுக்குத் தேவைப்படுகின்றது. மக்கட்தொகையும் நிலப் பரப்பும் ஒன்றிற்கொன்று இன்றியமையாதவை. மக்கள் இல்லாத நிலப்பரப்பு அரசு என்று கருதப்படுவது இல்லை. நிலபரப்பு இல்லா விட்டால் மக்கள் வாழமுடியாது. ஒரு குறிப்பிட்ட மக்கள் தமக்கென ஒரு நிலப்பரப்பில் நிரந்தரமாக வாழ ஆரம்பித்த பிறகு தான் தனித்தன்மை உடையவர்களாக மாறுகின்றனர். உதாரண மாக இஸ்ரேல் (Israel) என்று அழைக்கப்படும் அரசின் நிலப்பரப் பில் நிரந்தரமாக வாழ ஆரம்பித்த பிறகுதான் யூதர்கள் (Jews) தமக்கென ஒரு அரசைப் பெற்றனர்.

நிலப்பரப்பை ஆராயும் போதும் பலபிரச்சினைகள் தெரிய வருகின்றன. முதலாவதாக, நிலப்பரப்பின் அளவுஎவ்வளவுஇருக்க வேண்டும் என்பது ஒருபிரச்னை. தற்காலத்தில் அளவிற் பெரிய தும், சிறியதும்ஆன பல அரசுகள் உள்ளன. இருபத்திரண்டு மில்லியன் சதுர கிலோ மீட்டர் பரப்புடைய சோவியத் யூனி யனும் அரசு தான்; அறுபத்தொன்பது சதுர கிலோ மீட்டர் பரப் புடைய சான் மாரினோ (San Marino) என்பதும் அரசு தான். எங்ஙனம் ஓர் அரசின் மக்கட்தொகையை நிர்ணயிக்கமுடியாதோ அதுபோல் நிலப்பரப்பின் அளவையும் நிர்ணயிக்க முடியாது. அதனுள் வாழும் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வளம் ஒரு நிலப்பரப்பில் இருக்க வேண்டும். அதிக நிலப்பரப்பு ஓர் அரசின் வலிமையை அதிகரிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. விரிவான நிலப்பரப்புடைய அரசில் ஆட்சி நடத்துவது பல பிரச்சினைகளை உருவாக்கும் என்ற கருத்து தற்காலத்தில் ஏற்றுக் கொள்ளப்படுவது இல்லை. ஏனென்றால் நிலப்பரப்பிற்கு ஏற்ற ஆட்சிமுறையை உருவாக்க இன்று வழிகள் உண்டு.

ஒரு நிலப்பரப்பில் உட்படுபவை எவை? நிலப்பரப்பு என்பது நிலத்தை மட்டும் குறிக்காது. நீர், நிலம், ஆகாயவெளி ஆகியவை நிலப்பரப்பில் உட்படும். ஓர் அரசின் எல்லைகளுக்குள் காணப்படும் நிலப்பரப்பின் கீழ் உள்ள பொருட்கள்யாவும், நதிகள், குளங்கள், ஏரிகள் ஆகியவையும் நிலப்பரப்பின் மேல் உள்ள ஆகாய வெளியும் ஓர் அரசிற்கு சொந்தமானவை. கடல், பெருங்கடலை ஒட்டியுள்ள அரசாக இருந்தால் கரை

யினின்று ஒரு குறிப்பிட்ட தூரத்திற்குள் காணப்படும் கடற்பகுதி அரசுக்குச் சொந்தமானது. இத்தூரத்தை நிர்ணயிப்பதில் எல்லா அரசுகளும் ஒரே கருத்தைப் பின்பற்றுவது இல்லை.

3. அரசாங்கம் (Government)

அரசியல் ரீதியில் ஒருங்கிணைக்கப்பட்ட சமுதாயம் தான் அரசு என்பது. அரசியல் சார்புடைய அமைப்பு ஒன்று இல்லா விட்டால் அரசு நிலைக்கமுடியாது. இந்த அமைப்பு தான் அரசாங்கம் எனப்படுவது. அரசிற்கு இன்றியமையாத மூன்றாவது தேவை அரசாங்கம். அரசின் கருத்துகளுக்கு வடிவம் அளித்து அவற்றைச் செயற்படுத்தப் பயன்படுவது தான் அரசாங்கம். எல்லா அரசுகளிலும் அரசாங்கங்கள் காணப்பட்ட போதிலும் இந்த அரசாங்கங்கள் எல்லாம் ஒரே மாதிரியானவை அல்ல. மேலும், அரசாங்கம் என்பது நிரந்தரமானது அல்ல. அரசாங்கம் மறைந்து விடும் என்று பொருள் அல்ல. ஒரு வகை அரசாங்கம் மறைந்து மற்றொரு வகை தோன்றலாம். உதாரணமாக சர்வாதி காரம் மாறி மக்களாட்சி தோன்றலாம். நிரந்தர தன்மையுடையது அரசு மட்டுமே.

4. இறைமை (Sovereignty)

அரசிற்குள்ள மிக முக்கியமான பண்பு இறைமை. இறைமை என்பதற்கு உயர்வலிமை என்று பொருள். ஓர் அரசின் இறைமை ஒரு நபரிடத்திலோ, அல்லது பலரிடமோ காணப்படலாம். இறைமை இருப்பதனால் தான் அரசாங்கம் முக்கியமான நிறுவனமாக கருதப்படுகின்றது.

இறைமை என்பது இரு வகைப்படும். உள்நாட்டு இறைமை, வெளி நாட்டு இறைமை என்பவை தான் இந்த இரு வகைகளும். ஓர் அரசின் எல்லைகளுக்குள் அரசை விட வலிமையுடைய நிறு வனம் ஏதும் இல்லை என்பதைத் தான் உள் நாட்டு இறைமை குறிப்பிடுகின்றது. ஒரு அரசு பிற அரசுகளுக்குச் சமமானது என்பதையும் ஒரு அரசு மற்றொரு அரசுக்கு கட்டுப்படுவது இல்லை என்பதையும் தான் வெளிநாட்டு இறைமை குறிப்பிடுகின்றது. இறைமை உட்பட்ட எல்லா பண்புகளையும் கொண்ட ஓர் அரசு ஏதாவது சில விஷயங்களில் மற்றொரு அரசிற்குக் கீழ் படிந்தால், அல்லது கட்டுப்பட்டால்] அதற்கு முழு இறைமை உண்டு எனக் கூற முடியாது.

மக்கட் தொகை, நிலப்பரப்பு, அரசாங்கம், இறைமை ஆகிய நான்கும் ஒருங்கே காணப்படும் அமைப்பு அரசு எனப்படுகின்றது. இவற்றில் ஏதாவதொன்று இல்லாவிட்டால் அரசு அமைய முடியாது. உதாரணமாக, 1947-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15-ம் நாள் வரை, இந்தியா அரசுத் தன்மையைப் பெறவில்லை. காரணம் அதற்கு அதுவரை இறைமை இல்லை. வெளிநாடான இங்கிலாந்துக்கு அது கீழ்ப்படிந்திருந்தது.

3. சமூக நிறுவனங்கள்

(Sccial Institutions)

[சமூக நிறுவனங்கள் (Social Institutions) பழக்க வழக்கங்களும் மரபுகளும் (Customs and Conventions)—குடும்பம் (Family)—சமூகம் (Community)—சாதி (Caste)—வகுப்பு (Class)—சங்கம் (Association)—அரசாங்கம் (Government)—நாட்டினப் பண்பும், நாடும் (Nationality and Nation).]

சமூக நிறுவனங்கள்

(Social Institutions)

ஓர் அரசின் தேவைகளுள் முக்கியமானது மக்கட்தொகை. ஓர் அரசில் வாழும் மக்கள் எத்தகையவராயிருத்தல் வேண்டும்? அவர்களது பண்பாடும், கலாச்சாரமும் பண்பட்டவையாக இருக்க வேண்டுமா? அம்மக்களிடையே வேற்றுமைகள் மிகுந்திருப்பதால் விளையும் நன்மை, தீமைகள் எவை? அவர்களிடையே காணப்படும் சமூக அமைப்புக்களும், நிறுவனங்களும் தேவை தானு? பின்வருபவை ஓர் சமுதாயத்தில் காணப்படும் குறிப்பிடத் தக்க பண்புகளும் அமைப்புகளும் ஆகும்.

1. பழக்க வழக்கங்களும், மரபுகளும் (Customs and Conventions)

சமுதாயத்தின் அங்கத்தினர்களான மக்களில் பெரும்பான்மையினர் பொதுவாக பின்பற்றும் விதிமுறைகள் தான் பழக்க வழக்கங்களும், மரபுகளும். எல்லா சமுதாயங்களிலும் இவை காணப்பட்ட போதிலும் எல்லா சமுதாயங்களின் பழக்க வழக்கங்களும், மரபுகளும் ஒரே மாதிரியானவை அல்ல. ஒரு சமுதாயத்தின் கலாசாரம், பண்பாடு, வரலாறு, உறவுமுறை ஆகியவற்றினின்று தோன்றுபவை தான் பழக்க வழக்கங்களும், மரபுகளும். காலத்திற்கேற்ப நிகழும் மாற்றங்களை ஒத்து பழக்க வழக்கங்களிலும் மரபுகளிலும் மாற்றங்கள் நிகழ்வது உண்டு. ஒரு சில பழக்க வழக்கங்களும், மரபுகளும் மறைந்து புதியன தோன்றலாம். மனிதன் இவற்றைப் புறக்கணித்து வாழ முடியாது. 'ஊருடன் ஒத்து வாழ்'

என்ற சொல்லுக்கேற்ப சமுதாயத்தின் அங்கத்தினர் எல்லோரும் அச் சமுதாயம் பின்பற்றும் பழக்க வழக்கங்களையும், மரபுகளையும் பின்பற்ற வேண்டும். இவற்றைப் பின்பற்றாத ஒருவனை சமுதாயம் புறக்கணிக்கும். இது மிகக் கடுமையான தண்டனை. ஏனென்றால், பிறருடைய உதவியும், ஒத்துழைப்பும் இல்லாவிடில் ஒருவன் வாழமுடியாது.

அரசைப்பொறுத்த வரையில் பழக்கவழக்கங்களுக்கும், மரபுகளுக்கும் சிறப்பான முக்கியத்துவம் உண்டு. மக்களின் நல்வாழ்வைக் குறிக்கோளாகக் கொண்ட அரசு அவர்களுடைய பண்பாடு, கலாசாரம், பழக்க வழக்கங்கள், மரபுகள் ஆகியவற்றிற்குத் தேவையான முக்கியத்துவம் அளிக்க வேண்டும். அரசால் இயற்றப்படும் சட்டங்களும், செயற்படுத்தப்படும் திட்டங்களும் மக்களின் பழக்கவழக்கங்கள், மரபுகள் ஆகியவற்றிற்குப் புறம்பானவையாகவோ அவற்றை அவமதிப்பவையாகவோ இருக்கக் கூடாது. முக்கியமான பல பழக்க வழக்கங்களும் மரபுகளும், சட்டங்களாக மாறுவதும் உண்டு.

ஓர் அரசின் கீழ் வாழும் மக்கள் எல்லோரும் ஒரே மாதிரியான பழக்க வழக்கங்களையும், மரபுகளையும் பின்பற்றுகிறவர்களாக இருக்க மாட்டார்கள். பெரும்பான்மையினர் கொண்டுள்ள பழக்க வழக்கங்களும், மரபுகளும் சிறுபான்மையினர் பின்பற்றுபவையிலிருந்து மாறுபட்டுக் காணக்கூடும். பெரும்பான்மையினருக்கு மட்டும் மதிப்பளித்து சிறுபான்மையினரைப் புறக்கணிக்கக் கூடாது. ஆகவே, ஒரு அரசின் சட்டங்களும், திட்டங்களும் எல்லா வகை மக்களுக்கும் உகந்தவையாக இருப்பது நல்லது.

சமுதாயத்தில் ஒற்றுமையுணர்வை வளர்க்க பழக்க வழக்கங்களும், மரபுகளும் பயன்படுகின்றன. ஒற்றுமை இல்லாத சமுதாயம் முன்னேற்றம் அடையாது. பொதுவான பழக்க வழக்கங்களையும், மரபுகளையும் பின்பற்றுதல் ஒற்றுமையையும், முன்னேற்றத்தையும் வளர்க்கப் பயன்படும்.

2. குடும்பம் (Family)

சமூகம் என்ற அமைப்பில் மனிதன் வாழ ஆரம்பித்தது அவனுடைய வளர்ச்சியின் முதல் கட்டம் ஆகும். சமூகம் தோன்றிய நாளிலிருந்து அதன் அடிப்படைக் கூறாக இருந்து வந்துள்ளது குடும்பம். இது ஒரு முக்கியமான அமைப்பு. மனிதனின் உடலும், உள்ளமும் உருவாக்கப்படுவதும், பேணப்படுவதும், வளர்க்கப்படுவதும் குடும்பத்தில் தான். நல்ல குடும்ப சூழ்நிலையில்

உருவாகி வளரும் மனிதன் பண்பு மிக்கவன் ஆகவும், ஆற்றல் உடையவனாகவும் விளங்குவான். மூத்தோர் நற்பழக்கங்களைக் கொண்டிருந்தால் அவரைப் பின்பற்றும் இளையோர் மிகுந்த பயன் அடைவர். கருத்துகளும், கொள்கைகளும், விருப்பு வெறுப்புக் களும் தோன்றுவது குடும்பத்தில் தான். குடும்பத்தில் தோன்றும் இவை காலப்போக்கில் பிறசூழ்நிலைகளுக்கும், சக்திகளுக்கும் உட்பட்டு உறுதி அடைகின்றன, அல்லது மாற்றமடைகின்றன.

அரசிற்கும், குடும்பத்திற்கும் நெருங்கிய தொடர்பு காணப்படு கின்றது. தற்பொழுது காணப்படும் பொது நல அரசுகள் குடும்ப நலனில் தீவிர அக்கறை காட்டுகின்றன. குடும்ப வாழ்வு நல்ல முறையில் அமைந்தால் தான் சமூக வாழ்வு பயன் அளிக்கும். ஆகவே திருமணம், விவாகரத்து, குழந்தைகளின் பராமரிப்பு, பெண்களின் பாதுகாப்பு போன்றவற்றிற்கு தற்காலஅரசு முக்கியத் துவம் அளிக்கின்றது. தற்கால சமுதாயமும், வருங்கால சமுதாய மும் சீராக, சிறப்புடையவையாக இருக்க வேண்டுமென்றால் சமு தாயத்தின் அடிப்படைப் பிரிவான குடும்பம் நல்ல முறையில் இயங்க வேண்டும்.

3. சமூகமும், சாதியும் (Community and Caste)

இன்று நாம் காணும் மனித சமுதாயம் பல்வேறு வேற்றுமை களைக் கொண்டது. இவ் வேற்றுமைகளில் பெரும்பான்மை யானவை சாதி, சமயம், மொழி ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றியவையாகும். மொழி என்பது இயற்கையாக தோன் றிற்று. சமயம் என்பது நம்பிக்கையின் அடிப்படையிலும், பற்றுதலின் அடிப்படையிலும் தோன்றியது. பணியின் அடிப் படையில் சாதி உருவாக்கப்பட்டது. இங்ஙனம் தோன்றிய மொழியும், சமயமும், சாதியும் மக்களிடையே வேற்றுமை களை உருவாக்கின. இந்தப் பாகுபாட்டுக்கேற்றபடி மாறுபட்ட பல பழக்கவழக்கங்களும், மரபுகளும் தோன்றின. இவ்வேற்று மைகள் காரணமாக மனித சமுதாயம் உலகின் பல பகுதிகளிலும் பல இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டது என்பதற்கு வரலாற்றில் பல சான்றுகள் காணப்படுகின்றன.

தற்பொழுது சாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்கும் பணியில் முனைந்துள்ள அரசுகளில் குறிப்பிடத்தக்கது இந்தியா.

வேற்றுமை மிக்க சமுதாயமும் தேவைப்படும் பொழுது ஒற்று மையாகச் செயல்படும். சாதாரணமாக, அயல் நாடுகளின்

தாக்குதல் ஏற்படும்பொழுது இப்பண்பு புலப்படும். இந்தியாவை சீனு தாக்கிய பொழுது இது தெளிவுபடுத்தப்பட்டது.

மேற்கூறிய பிரிவுகள் மட்டுமன்றி பொருளாதார நிலையின் அடிப்படையிலும் ஒரு சமுதாயத்தில் வேற்றுமை காணமுடியும். பண்டைக் காலத்தினின்றே மனிதன் உடைமையின் அடிப்படையில் வேற்றுமை படுத்தப்பட்டு வந்தான். உடைமை உடையவர் வலியவர் என்றும், இல்லாதோர் எளியவர் என்றும் கருத்து பரவலாகக் காணப்பட்டது. இங்கிலாந்தில் நடந்த தொழிற்புரட்சிக்குப்பின் மக்களை இருவர்க்கங்களாக பிரிக்கும் முறை வலுப்பெற்றது. முதலாளி வர்க்கம் என்றும், பாட்டாளி வர்க்கம் என்றும் இரு பிரிவுகளாக மக்கள் பிரிக்கப் பட்டனர்.

மேற்கூறிய பிரிவுகள் யாவையும் கொண்டது தான் மனித சமுதாயம்.

4. சங்கம் (Association)

இன்றுள்ள சமுதாயத்தில் சங்கம் முக்கிய இடம் வகிக்கின்றது. மக்களை அங்கத்தினராகக் கொண்ட அமைப்பு தான் சங்கம் என்பது. சங்கம் ஒன்றை உருவாக்குவதும், சங்கத்தில் அங்கத்தினர்களாக இருப்பதும் மனிதருக்குள்ள அடிப்படை உரிமைகளில் ஒன்று. பலவகைப்பட்ட சங்கங்கள் உள்ளன. தொழில், கலாச்சாரம், கல்வி போன்றவற்றின் அடிப்படையில் சங்கங்கள் அமைக்கப்படுவது வழக்கம். அரசியல் கட்சி, அரசாங்கம் என்பவையும் சங்கங்கள் தான். ஒரு மனிதன் எத்தனை சங்கத்தில் வேண்டுமென்ருலும் உறுப்பினராக இருக்கலாம். ஒருவன் ஒரு சங்கத்தில் உறுப்பினர் ஆவதும், ஆகாமல் இருப்பதும் அவனது விருப்பத்தைப் பொறுத்தது. அரசாங்கம் தவிர இதர சங்கங்களில் அங்கத்துவம் பெறுவதில் கண்டிப்பு கிடையாது. சில சங்கங்கள் பல அரசுகளின் எல்லைகளில் பரந்து காணப்படும். இவற்றைப் பன்னுட்டுத் தன்மையுடைய சங்கங்கள் எனலாம்.

ஒரு சங்கம் அமைக்கப்படுவதற்கு அரசு சில கட்டுப்பாடுகள் விதிக்கலாம். அரசிற்கும், சமுதாயத்திற்கும், உறுப்பினருக்கும் தீங்கு விளைவிக்காத வரையில் ஒரு சங்கம் செயல்படுவதை அனுமதிக்கப்படும். சமுதாய உணர்வும், கடமை உணர்ச்சியும், சகோதரத்துவ மனப்பான்மையும், ஒத்துழைக்கும் பண்பும் வளர்வதற்கு சங்கங்கள் உதவுகின்றன.

5. அரசாங்கம் (Government)

அரசாங்கம் என்பது அரசின் உறுப்புகளில் ஒன்று என்று ஏற்கனவே கண்டோம். அரசாங்கம் என்பது ஒருவகைச் சங்கம் என்றும் குறிப்பிட்டோம். மனிதனுக்கு இன்றியமையாத சங்கம் அரசாங்கம். சங்கங்களில் பலவகைகள் காணப்படுவது போல் அரசாங்களிலும் பல வகைகள் உண்டு.

மனிதனின் கருத்துகள் தோன்றுவதற்கும், அவன் பண்புள்ள குடிமகனாக வாழ்ந்து தனது கடமையைச் செய்வதற்கும் மேற்கூறிய சமுதாய அமைப்புக்கள் தேவைப்படுகின்றன. இவை முக்கியமானவை என்பதனால் தான் தற்கால அரசு இவற்றிற்கு மதிப்பு அளிக்கின்றது.

நாடும் நாட்டினமும்
(Nation and Nationality)

'நாட்டின் உணர்வு' (Nationalism) என்ற கருத்து அண்மையில் தோன்றியது. தேசிய அரசு தோன்றியதைத் தொடர்ந்து இந்தக் கருத்தும் தோன்றிற்று. நாட்டின் உணர்வு என்பது குறுகிய பாகுபாட்டிற்கு அப்பாற்பட்டது. ஒரு அரசின் நிலப்பரப்பு விரிவடைந்த பொழுது அதில் வாழ்ந்த மக்கள் முதலில் அவரை ஆண்ட அரசனுக்கும் பின்னர் அந்த அரசிற்கும் விசுவாசம் உள்ளவர் ஆயினர். எல்லோரும் ஒரு இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுதான் நாட்டின் உணர்வின் பொருள். ஒரே எல்லைப் பகுதியில் ஒரு மொழியைப் பேசி வாழும் மனிதரிடையே நாட்டின் உணர்வு தோன்றும். இது மட்டுமன்றி குருதித் தொடர்பு, பொதுவான சமயம், பொதுவான வரலாறு, பொதுவான பழக்க வழக்கங்கள் ஆகியவையும் நாட்டின் உணர்வைத் தோற்றுவிக்கும். ஆனால் இவை இல்லாமலும் நாட்டின உணர்வு தோன்றலாம். இதற்கு எடுத்துக்காட்டாக அமெரிக்க ஐக்கிய நாடுகள், சோவியத் யூனியன், சுவிட்சர்லாந்து ஆகியவற்றைக் கூறலாம். சோவியத் யூனியனை எடுத்துக் கொண்டோமென்றால் அங்கு 175 நாட்டினங்கள் ஒருமித்து வாழ்வதைக் காணமுடிகின்றது. ஒரு நாட்டினம் அரசியல் ஒருமைப்பாடு பெற்று சுதந்திரம் அடையும் பொழுது தனி அரசு தோன்றுகின்றது.

நடைமுறைச் சொல் வழக்கில் அரசு என்பதைக் குறிப்பிட 'நாடு' என்ற பதம் பயன்படுத்தப்படுகிறது. ஒரு நாடு தோன்றுவதற்கு பொது மொழி, பொருளாதார உறவுகள், பொது வரலாறு,

பொதுவான மரபுகள், நிலப் பரப்பின் தொடர்ச்சி ஆகியவை தேவைப்படுகின்றன.

தாம் ஒரே இனத்தைச் சேர்ந்தவர் என்ற உணர்வும், குருதித் தொடர்பும் மக்களிடையே ஒற்றுமையுணர்வை வளர்த்ததுண்டு. ஆனால் இவை இல்லாவிடில் ஒற்றுமை இருக்காது என்ற நிலை தற்பொழுது இல்லை. கலப்படமற்ற இனங்கள் இப்பொழுது காண்பதற்கில்லை. சமயம் மக்களை ஒன்றுகப் பிணைத்த காலம் மாறி பல சமயத்தினர் ஒற்றுமையுடன் வாழும் நிலை இப்பொழுது காணப்படுகின்றது. தற்கால அரசுகளில் பெரும்பாலானவை சமயச் சார்புடயவை அல்ல. பொது மொழியின் அடிப்படையில் ஒரு நாடு உருவெடுக்கின்றது என்று பல அறிஞர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இந்த கருத்திற்கும் மாறுபாடு தற்பொழுது காணப்படுகின்றது.

ஒரே நிலப்பரப்பில் வாழ்கின்ற காரணத்தால் மக்களிடையே ஒற்றுமை தோன்றலாம். இதிலிருந்து நாட்டுப் பற்றும் தோன்றும்.

அரசிற்கும் பிற அமைப்புகட்கும் இடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகள்

1. அரசும் சமுதாயமும் (State and Society)

அரசைச் சமுதாயத்திலிருந்து வேறுபடுத்திப் பார்ப்பதற்கு முன் சமுதாயம் என்றால் என்ன என்று ஆராய்வது நல்லது.

சமூகப்பண்பு என்பது மனிதனுக்கு இயற்கையாக உள்ளது. சமூக உறவுகளின் தொகுப்புத்தான் சமுதாயம் எனப்படுவது. இச் சமுதாயத்தில் காணப்படும் பல அமைப்புகளில் ஒன்று அரசு. தோற்றத்தில் அரசிற்கு முந்தியது சமுதாயம். ஆதிமனிதர்கள் கூட்டமாக வாழ்ந்தனர் என்று ஏற்கெனவே கண்டோம். அது ஒருவகைச் சமுதாயம்தான். ஆனால் அப்பொழுது அரசு என்ற அமைப்பு தோன்றியிருக்கவில்லை. காலப்போக்கில் தோன்றியது தான் அரசு.

அரசும், சமுதாயமும் புரியும் பணிகளை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால் இவை இரண்டிற்கும் இடையேயுள்ள வேற்றுமைகள் புலப்படும். சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஒழுங்கையும், அமைதியையும் நிலைநாட்டுவது தான் அரசின் முக்கிய பணி. ஆனால், சமுதாயம் என்பது பலபணிகளை புரி

கின்றது. பொருளாதாரம், நல்வாழ்வு, அறிவு வளர்ச்சிபோன்றவை சம்பந்தப்பட்ட பணிகளைச் சமுதாயம் புரிகின்றது. மனிதனின் முழு வளர்ச்சியில் ஈடுபாடு கொண்டுள்ளது சமுதாயம். இத்தகைய விரிவான பணிகள் அரசிற்குக்கிடையாது. அரசும், சமுதாயமும் செயல்படும் முறைகளிலும் வேற்றுமை காணப்படுகின்றது. அரசிற்கு வலிமையை அளிப்பது சட்டம். அரசின் கட்டளைகளை மீறினல் தண்டனை கிடைக்கும் என்ற அச்சத்தினுல் தான் மனிதன் அரசிற்குக்கீழ் படிகின்ருன். அரசு விரும்பினுல் ஒருவனைப் பணிய வைக்க முடியும். அச்சத்தின் விளைவாக யாரும் சமுதாயத்திற்குக் கீழ்படிவது இல்லை. சமுதாயத்துடன் இணைந்து வாழாவிட்டால் நல்லதல்ல என்ற கருத்துத்தான் மக்களை சமுதாயத்திற்குக் கீழ்படிய வைக்கிறது.

சமுதாயத்தில் காணப்படும் பண்புகளும், அமைப்புகளும் அரசால் உருவாக்கப்பட்டவையல்ல. அவை தாமாகத் தோன்றியவையாகும். இதற்கு எடுத்துக்காட்டாக குடும்பம், சமய நிறுவனங்கள், சங்கங்கள் ஆகியவற்றைக் கூறலாம். பழக்க வழக்கங்கள் எனப்படுபவை அரசால் உருவாக்கப்படுகின்றவையல்ல. இவற்றைப் பாதுகாக்கவும், மாற்றி அமைக்கவும் அரசிற்கு இயலும். சில துறைகளில் சமுதாயம் கொண்டுள்ள முக்கியத்துவம் அரசாங்கத்திற்குக் கிடையாது. உதாரணமாக நட்பு, பொறுமை போன்ற குணங்களைக் கட்டுப்படுத்த அரசால் இயலாது.

2. அரசும் அரசாங்கமும்

(State and Government)

லாஸ்கி (Laski), கோல் (Cole) போன்ற அறிஞர்கள் அரசும், அரசாங்கமும் ஒன்று எனக் கூறுகின்றனர். இக் கூற்று சர்ச்சைக் குரியது.

ஓர் அரசின் எல்லைகளுக்குள் வாழும் மனிதரில் ஏறத்தாழ எல்லோரும் அந்த அரசின் உறுப்பினர்களாக இருப்பார்கள். ஆனல், மக்கள் எல்லோரும் அரசாங்கத்தில் உறுப்பினர் அல்ல. ஒரு சிலர் மட்டுமே அரசாங்கத்தில் பங்குள்ளவராக இருப்பர். அரசு என்பது அரசாங்கத்தினின்று மாறுபட்டது. அரசின் நிறுவனம் தான் அரசாங்கம். அரசின் கருத்துகளையும், குறிக்கோள்களையும் சட்டங்களாகவும், திட்டங்களாகவும் மாற்றிச் செயற்படுத்தும் நிறுவனம் தான் அரசாங்கம். இப்பணியைப் புரிவதற்குத் தேவையான அதிகாரத்தையும், வலிமையையும்

அரசிடமிருந்து அரசாங்கம் பெறுகின்றது. அரசாங்கம் மாறலாம் ஆனால் அரசு மாறாது. அது நிலையானது.

3. அரசும் சங்கமும்
(State and Association)

சமுதாயத்தில் பலவகைச் சங்கங்கள் உள்ளன என்று ஏற்கெனவே கண்டோம். மனிதனின் தேவைகளுக்கேற்பத் தோன்றுபவை தான் சங்கங்கள். இச் சங்கங்களில் ஒன்று அரசாங்கம்.

ஒரு அரசில் ஒரு அரசாங்கம் மட்டுமே இருக்கும். ஆனால் பல சங்கங்கள் காணப்படலாம். அரசு என்பது ஒரு குறிப்பிட்ட நிலப் பரப்பினுள் செயற்படுவது. ஆனால் உலகம் முழுவதும் கிளைகளையும், பிரிவுகளையும் கொண்ட சங்கங்கள் உண்டு. அதாவது சங்கம் என்பதற்கு குறிப்பிட்ட எல்லைப்பரப்பு கிடையாது. அரசு என்பது ஒரு குறிப்பிட்ட குறிக்கோளைக் கொண்டது. மக்களுக்கு நல்லாட்சியையும், அதன் விளைவாக நல்வாழ்வும், அளிப்பதுதான் அரசின் குறிக்கோள். ஆனால் ஒரு சங்கம் குறிப்பிட்ட ஒரு கொள்கையுடையதாகவோ, அல்லது பல குறிக்கோள்களைக் கொண்டதாகவோ இருக்கலாம். அங்கத்தினரைப் பொறுத்த மட்டில் அரசிற்கும் சங்கத்திற்கும் இடையே பல வேற்றுமைகள் காணப்படுகின்றன. ஒருவன் ஒரு நிலப்பரப்பில் பிறந்தவுடன் அந்த நிலப்பரப்பில் காணப்படும் அரசின் அங்கம் ஆகின்றான். இந்த உரிமை தானாகக் கிடைக்கப் பெறுவது. ஒரு சங்கத்தின் அங்கத்துவம் விரும்பிப் பெறுவதாகும். உறுப்பினர் அல்லாத ஒருவன் ஓர் அரசில் தொடர்ந்து வாழமுடியாது. ஆனால் எந்த சங்கத்திலும் உறுப்பினர் ஆகாமல் ஒரு மனிதன் வாழமுடியும். தேவைப்படும் பொழுது ஒருவன் ஒரு சங்கத்திலிருந்து விலகிக் கொள்ளலாம்.

அரசிற்கும், சங்கத்திற்கும் இடையே காணப்படும் முக்கியமான வேற்றுமை இறைமையாகும். இறைமை என்பது அரசிற்குரியது என்று ஏற்கெனவே கண்டோம். சாதாரணச் சங்கத்தினின்று அரசை வேறுபடுத்திக் காட்டுவது இறைமையாகும். இறைமை இருப்பதினால் தான் வரம்பற்ற அதிகாரத்தை அரசு பயன்படுத்த முடிகின்றது. இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி சங்கங்களைக் கட்டுப்படுத்தும் உரிமையும் அரசிற்கு உண்டு. ஒரு சங்கத்தின் விதிகளை மீறும் அங்கத்தினருக்கு மிகப் பெரிய தண்டனையாக அளிக்கக் கூடியது அவர்களை அச் சங்கத்திலிருந்து நீக்குவதாகும். ஆனால் அரசு விரும்பினால் தன் விதிகளை மீறும் அங்கத்தினருடைய உயிரையும் பறிக்கலாம். மேற்கூறியவற்றிலிருந்து முதன்மையானது அரசு தான் என்பது தெரிய வருகின்றது.

4. அரசின் தோற்றம்

(Origin of State)

[அரசின் தோற்றம்—கோட்பாடுகள்: இறைவழித் தோற்றக் கோட்பாடு—சமூக ஒப்பந்தக் கோட்பாடு—தாய்வழி, தந்தை வழிக் கோட்பாடுகள்–வலிமைக் கோட்பாடு—இயற்கைக் கோட்பாடு—பரிணமைக் கோட்பாடு.]

அரசின் தோற்றம்

(Origin of State)

அரசியலை விஞ்ஞான ரீதியில் ஆராயத்துவங்கிய நாளிலிருந்து அரசு எங்ஙனம் தோன்றிற்று என்பதை அறியப் பல அறிஞர்கள் முயற்சிகளில் ஈடுபட்டு வந்துள்ளனர். மனித இயல் சம்பந்தப் பட்ட ஆதாரங்களும், வரலாற்றினின்று போதிய சான்றுகளும் கிடைக்கப் பெறாத காரணத்தால் இவர்கள் எடுத்த முடிவுகள் அனுமானங்களாகவே இருந்து வந்தன. அரசு இறைவனால் உருவாக்கப்பட்டதென்றும், சமூக ஒப்பந்தத்திலிருந்து தோன்றிய தென்றும், குடும்பத்திலிருந்து தோன்றியதென்றும், தனியார் உடைமையினின்று தோன்றியதென்றும், போரில் கண்ட வெற்றி யின் விளைவாகத் தோன்றியதென்றும் பலகோட்பாடுகள் உள்ளன. இக் கோட்பாடுகள் யாவும் தற்பொழுது தவறென நிரூபிக்கப்பட்டு விட்டபோதிலும், அவற்றை முற்றிலும் உதாசீனப்படுத்த முடியாது. ஏனெனில், அவை ஒவ்வொன்றிலும் அரசின் வலிமை அல்லது அதிகாரம் சம்பந்தப்பட்ட கருத்து காணப்படுகின்றது. இனி நாம் இக் கோட்பாடுகள் ஒவ்வொன்றையும் சிறிது ஆராய் வோம்.

1. இறைவழித் தோற்றக் கோட்பாடு (Divine Origin Theory)

அரசின் தோற்றத்தைக் குறித்து விளக்கமளிக்கும் கோட்பாடு களில் மிகப் பழமையானது இறைவழித் தோற்றக் கோட்பாடு ஆகும். இறைவனின் சந்ததியினர் எனக் கருதப்பட்ட பேரரசர் கள், அரசோச்சி வந்த பண்டைய கீழ்த்திசைப் பேரரசுகளில் இக்

கருத்து பரவலாகக் காணப்பட்டு வந்தது. இந்தியாவிலும் இக் கருத்து நிலவியது. எதேச்சதிகாரத்தைத் தாள முடியாமல் மக்கள் இறைவனை அணுகிய பொழுது அவர்களை ஆள 'மனு' என்பவனை இறைவன் அரசனாக நியமித்தான் என்று மகாபாரதத்தில் கூறப்பட்டுள்ளது.

அரசு இறைவனால் உருவாக்கப்பட்டது என்ற கருத்தைப் பண்டைய எபிரேயர்கள் (Hebrews) கொண்டிருந்தனர். மனிதன் பாவம் செய்ததற்குத் தண்டனையாக அவன்மீது இறைவனால் சுமத்தப்பட்டது தான் அரசு என்ற கருத்தைப் புராதன கிறிஸ்தவர்கள் கொண்டிருந்தனர். அரசு இறைவனால் தோற்றுவிக்கப்பட்டது என்ற கருத்து இடைக்காலத்திலும் (Middle Ages) நிலவியது. இக் கருத்து பிரபலமடைவதற்கு உதவியது. கிறிஸ்தவத்திருச் சபையாகும். பேரரசுக்கும் போப்பாண்டவருக்கும் இடையே எழுந்த பூசல்களின் போதும் இக்கோட்பாடு பயன்படுத்தப்பட்டது. தாம் இறைவனின் பிரதிநிதி என்ற கருத்தைப் போப்பாண்டவரும், பேரரசரும் கொண்டிருந்தனர். இடைக்காலத்தில் ஐரோப்பாவில் காணப்பட்ட அரசுகளுக்கும் போப்பாண்டவருக்குமிடையே தகராறுகள் எழுந்த பொழுதும் இக்கோட்பாடு பயன்படுத்தப்பட்டது. பதினாறும் நூற்றாண்டினின்று மக்கள் தமது உரிமைகளுக்காகக் குரலெழுப்பத் தொடங்கிய பொழுது இக்கோட்பாடு மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

அரசரின் இறையுரிமை (Divine Right of Kings) என்ற கருத்து பிரபலமடைந்தது பதினாறு, பதினேழாம் நூற்றாண்டுகளில் தான். அரசரை எதிர்ப்பதென்பது இறைவனை எதிர்ப்பதற்குச் சமமாகும் என்ற கருத்து சில பகுதிகளில் பிரபலப்படுத்தப்பட்டிருந்தது. இக்கோட்பாட்டின் ஆதரவாளர்களாக இங்கிலாந்தில் முதலாம் ஜேம்ஸ் மன்னர், சர் ராபர்ட் ஃபில்மர் ஆகியோரும், பிரான்சில் பூசே (Bousset) என்பவரும் திகழ்ந்தனர். இறையுரிமைக் கோட்பாட்டில் பின்வரும் கருத்துகள் வலியுறுத்தப்பட்டன: அரசன் தனது அதிகாரத்தை இறைவனிடமிருந்து பெறுகின்றார்; அரசுரிமை என்பது இறைவனால் உருவாக்கப்பட்டது; மன்னர்கள் மக்களுக்குப் பொறுப்புள்ளவரல்ல; அவர்கள் இறைவனுக்குத் தான் பொறுப்புள்ளவர்கள். மன்னரின் அதிகாரத்தை எதிர்ப்பது பாவம். மேற்காணும் கருத்துகள் அடங்கிய இக்கோட்பாடு இன்று பயன் அற்றது. இன்று இதை ஏற்பாரில்லை. மன்னராட்சியை மட்டும் ஆதரிக்கும் இக்கோட்பாடு மக்களாட்சி யுகத்திற்கு உகந்தது அல்ல.

2. சமூக ஒப்பந்தக் கோட்பாடு (Social Contract Theory) : மக்களின் இறைமைக் கோட்பாடு (Theory of Popular Sovereignty) இறையுரிமைக் கோட்பாட்டை வென்றது. மக்களால் வேண்டுமென்றே உருவாக்கப்பட்டதுதான் அரசு என்ற கருத்துத் தான் இம்மாற்றத்திற்குக் காரணம். அரசு ஒரு சமூக ஒப்பந்தத்தின் விளைவாகத் தோன்றியதென்று பல அறிஞர்கள் கருத்துத் தெரிவித்தனர். இவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் மூவர்—இங்கிலாந்தைச் சேர்ந்த தாமஸ் ஹாப்ஸ் (Thomas Hobbes), ஜான் லாக் (John Locke), பிரான்சைச் சேர்ந்த ரூசோ (J. J. Rousseau) ஆகியவர்களாகும்.

1. தாமஸ் ஹாப்ஸ் (Thomas Hobbes) : சமூக ஒப்பந்தக் கோட்பாட்டை விளக்கியுள்ள மூவரும் அரசு தோன்றுவதற்கு முன் இருந்த நிலையை விளக்கியுள்ளனர். இதனை இயற்கை நிலை (State of Nature) எனலாம். ஹாப்சின் கூற்றுப்படி அரசு தோன்றுவதற்கு முன்பிருந்த இயற்கை நிலையில் மனித வாழ்வு சீர்கேடான முறையில் இருந்தது. மனிதன் அச்சம் மிகுந்தவனாக வாழ்க்கை நடத்தி வந்தான். எத்தருணத்திலும் உயிரிழக்க நேரிடும் என்ற நிலையில் மக்கள் வாழ்ந்தனர். இதனைத் தவிர்த்து சீரான வாழ்க்கை அமைப்பதற்காக அவர்கள் ஒரு ஒப்பந்தத்தில் ஈடுபட்டனர். இந்த ஒப்பந்தத்தின்படி மக்கள் தமது இயற்கை உரிமைகள் யாவற்றையும் தம்மை ஆள்பவனொருவனுக்குத் தாமாகவே அர்ப்பணித்தனர். இதற்குக் கைமாறாக அவர்கள் எதிர்பார்த்தது பாதுகாப்புடைய வாழ்க்கை மட்டுமே. இந்த ஒப்பந்தத்தின்படி உருவாக்கப்பட்ட அரசனைப் பதவியினின்று நீக்க மக்களுக்கு உரிமை கிடையாது. அரசன் எப்படி வேண்டுமென்றாலும் ஆட்சி நடத்தலாம். அவனது செய்கைகளைக் குறித்து கேள்வி கேட்க யாருக்கும் உரிமை கிடையாது. தன் கோட்பாட்டின் மூலம் சர்வாதிகாரப் பண்புடைய அரசனை ஹாப்ஸ் உருவாக்கினார்.

2. ஜான் லாக் (John Locke) : அரசு தோன்றுவதற்கு முன்பிருந்த இயற்கை நிலையில் மக்களின் வாழ்க்கை ஓரளவு திருப்திகரமாகத்தான் இருந்தது என்பது லாக்கின் கருத்து. ஆறறிவும் நற்பண்புகளும் கொண்ட மக்கள் இயற்கை விதிகளின் உதவியுடன் வாழ்க்கை நடத்தினர். ஆனால் சச்சரவுகளும், உரிமைப் பிரச்சினைகளும், தகராறுகளும் எழும் பொழுது சமரசப்படுத்த நடுவர் இல்லாதிருந்தனர். இக்குறைபாட்டை அகற்றுவதற்காக மக்கள் ஏகோபித்துத் தாமாகவே

ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ள முடிவெடுத்தனர். மனிதனின் வாழ்க்கை, சுதந்திரம், உடைமை ஆகியவை சம்பந்தப்பட்ட உரிமைகளை விரிவுப்படுத்திப் பாதுகாப்பதற்கென ஒரு சமுதாயம் முதலில் உருவாக்கப்பட்டது. இப்புதிய சமுதாயத்தில் மக்கள் தமது உரிமைகள் எதையும் இழக்கவில்லை. பெரும்பான்மையினரின் முடிவுகட்குக் கட்டுப்படுவதாக மக்கள் எல்லோரும் ஒரு ஒப்பந்தத்தின் மூலம் வாக்குறுதி அளித்தனர். மற்றொரு ஒப்பந்தத்திற்கேற்ப எல்லோரையும் பிரதிநிதிகரிக்கும் சபையொன்று உருவாக்கப்பட்டது. இச்சபை மக்களின் விருப்பத்திற்கேற்பச் செயல்பட வேண்டுமென்று விதிக்கப்பட்டது. தேவைப்படும் பொழுது இச்சபையை அகற்ற மக்களுக்கு அதிகாரமிருந்தது. லாக் உருவாக்கியது வரையறுக்கப்பட்ட அரசாங்கம். இவருடைய கருத்துகள் பிரெஞ்சுப் புரட்சியையும், அமெரிக்க விடுதலைப் போரையும் வெகுவாகப் பாதித்தன.

3. ரூசோ (Rousseau): சமூக ஒப்பந்தக் கோட்பாட்டைப் பிரபலப் படுத்தியவருள் மூன்றுமவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ரூசோ என்பவராகும். அரசு தோன்றுவதற்கு முன் காணப்பட்ட இயற்கை நிலையில் மக்களுடைய வாழ்க்கை மிக இனிதாக இருந்தது என்று ரூசோ கருதினர். மனிதன் கட்டுபாடு ஏதுமின்றி, சுதந்திரமாக வாழ்க்கை நடத்தினன். யாவும் பொதுவாக இருந்தன. ஆனல் பொருளாதார முன்னேற்றத்தின் காரணமாக 'உடைமை' தோன்றியது. தனியார் உடைமை என்பது தோன்றியதைத் தொடர்ந்து பாகுபாடுகளும், ஏற்றத்தாழ்வுகளும் தோன்றி சமுதாயத்தில் அதுவரை காணப்பட்ட அமைதி சீர்குலைந்தது. மனிதன் பாதுகாப்பை இழந்தான். தற்காப்பிற்கென அவன் ஒரு ஒப்பந்தத்தில் ஈடுபட வேண்டிய நிலை எழுந்தது. இந்த ஒப்பந்தத்திற்கேற்ப ஒவ்வொருவரும் தமது இயற்கை உரிமைகளைப் பொதுச் சொத்தாக்கினர். ஆட்சி புரியும் அதிகாரத்தை மக்கள் பொதுக்கருத்து (General Will) என்பதற்குச் சமர்ப்பித்தனர். பொதுக் கருத்து என்பது எல்லோரையும் குறிப்பதாகும். பெரும்பான்மையினரின் கருத்து என்று இதைக் கருதமுடியாது. ஆட்சிபுரியும் அதிகாரத்தை ரூசோ சமுதாயத்தினிடம் ஒப்படைக்கின்ருர். அவர் உருவாக்கியது நேரடி மக்களாட்சி. பிரதிநிதித்துவ முறையிலான அரசாங்கத்தை அவர் வரவேற்கவில்லை. சட்டங்களை இயற்றுவது சமுதாயம். அவற்றைச் செயற்படுத்துவது அரசாங்கம் என்ற கருத்தை இவர் கொண்டிருந்தார்.

சமூக ஒப்பந்தத்தின் விளைவாக அரசு தோன்றவில்லையென்று திட்டவட்டமாகக் கூறலாம். ஏனெனில் இதை நிரூபிக்கச் சான்று கள் ஏதுமில்லை. அரசின் தோற்றத்தை விளக்க மேற்கூறிய மூவரின் கருத்துகளும் பயன்படா. ஆனால் இவர்களுடைய கோட்பாடுகளை முற்றிலும் உதாசீனப்படுத்தக் கூடாது. இம் மூவரது கோட்பாடுகளிலும் அரசியல் அதிகாரம் பற்றிய மூன்று தத்துவங்களைக் காணலாம். ஹாப்ஸ் சர்வாதிகாரத்தை ஆதரித் தார். பாராளுமன்ற முறையிலான பிரதிநிதித்துவ அரசாங்கத்தை லாக் விரும்பினார். நேரடி மக்களாட்சியை ரூசோ வற்புறுத்தினார்.

3. தாய் வழி, தந்தை வழிக் கோட்பாடுகள் (Matriarchal and Patriarchal Theories): குடும்பம் விரிவடைந்ததன் விளைவாகத் தான் அரசு தோன்றியது என்று கூறுபவை இக் கோட்பாடுகள். ஒரு குடும்பம் விரிவடைந்து பல குடும்பங்கள் தோன்றுகின்றன. குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்பொழுது உறவினால் இணைக்கப்பட்ட கிராமம் தோன்றுகின்றது. இக் கருத்தை அரிஸ்டாட்டில் என்ற மேதை சொன்னார். இக்கருத்தை விளக்கு பவையாக அமைந்துள்ளவைதான் தாய்வழிக் கோட்பாடும், தந்தை வழிக்கோட்பாடும்.

தாய்வழிக் கோட்பாடு: இக்கோட்பாட்டை உருவாக்கிய வர்களில் குறிப்பிடத் தக்கவர் என்று மெக்லென்னன் (J F. Mclennan), மார்கன் (L. H. Morgan), எட்வர்டு ஜெங்க்ஸ் (Edward Jenks) ஆகியோரைக் கூறலாம். இக்கோட் பாட்டின் கூற்றுப்படி, முதலில் தாய்வழிக் குடும்பம் தோன்று கின்றது. ஒரு பெண் பல ஆடவரைக் கணவராகக் கொள்ளும் பழக்கம் பண்டைய சமுதாயத்தில் காணப்பட்டது. இச்சமு தாயத்தில் கணவன் - மனைவி என்ற நிரந்தர உறவு முறை காணப்படவில்லை. குடும்பம் என்பதும் இருக்கவில்லை. தாய் வழி தான் ஒருவனது உறவு நிர்ணயிக்கப்பட்டதேயொழிய தந்தை வழியல்ல. ஒரு பெண்ணுக்குப் பிறக்கும் குழந்தைகள் எல்லோரும் அவளுடைய மரபைச் சேர்ந்தவராயினர். ஒரே மரபி னுள் திருமண உறவு இருக்கவில்லை. இதற்கு எடுத்துக்காட் டாக ஆஸ்திரேலியப் பழங்குடியினரின் வாழ்க்கையை ஜெங்க்ஸ் சுட்டிக்காட்டுகின்றார். மரபு முதலில் தோன்றியது. மரபினின்று குடும்பம் தோன்றியது. மனிதன் உழவுப்பணியை மேற்கொண்டு ஓரிடத்தில் நிரந்தரமாக வாழ ஆரம்பித்த பின்னர்தான் ஒரு தார முறையையும், பலதார முறையையும் பின்பற்றலானான். இதைத் தொடர்ந்து தந்தை வழியிலான குடும்பம் தோன்றியது. பல குடும்பங்களின் இணையமாக அரசு தோன்றியது.

2. ·தந்தை வழிக் கோட்பாடு: இக் கோட்பாட்டின் ஆதரவாளர் சர்ஹென்றிமெய்ன் (Sir Henry Maine) என்பவர். குடும்பம் விரிவடைந்ததன் விளைவாகஅரசு தோன்றிற்று என்ற கருத்தை இக் கோட்பாடு வலியுறுத்துகின்றது. சமுதாயத்தின் அடிப்படைக்கூறு குடும்பம். தந்தை வழிக் குடும்பத்தில் உறவு முறை தந்தையினின்று கணக்கிடப் படுகின்றது. ஒரு குடும்பத்தின் தலைவனை தந்தை அக் குடும்பத்தில் உள்ள எல்லோர் மீதும் தமது அதிகாரத்தைச் செலுத்துகின்றார். குடும்பத்தின் அங்கத்தினர் எல்லோரும் தலைவரது கட்டுப்பாட்டிற்குட்பட்டுத்தான் வாழ வேண்டும். குடும்பத்திலுள்ள யாவும் குடும்பத் தலைவனுக்குச் சொந்தமானவை யாகும். குடும்பத் தலைவன் இறந்த பின்னர் அவரது மூத்த புதல்வன் அவருடைய பதவிக்கும், அதிகாரத்திற்கும் வாரி சாகின்றான். புராதனக் குடும்பத்திலிருந்து பல குடும்பங்கள் உரு வெடுக்கின்றன. இக் குடும்பங்கள் யாவும் உறவின் அடிப் படையில் இணைகின்றன. இக்குடும்பங்கள் எல்லாவற்றிற்கும் புராதனக் குடும்பத்தின் தலைவனே தலைவனாகத் திகழ்கின்றான். பல குடும்பங்கள் இணைவதனால் மரபு (Tribe) தோன்றுகின்றது. ஒரு மரபைச் சேர்ந்தவர்கள் வேறு இடங்களில் குடியேறி வாழ ஆரம்பித்ததைத் தொடர்ந்து புதிய மரபுகள் தோன்றுகின்றன. குருதித் தொடர்பால் பிணைக்கப்பட்ட இம் மரபுகள் யாவும் தேவை எழும் பொழுது ஒரு தலைவனின் கீழ் ஒன்று படுகின்றன. இத் தலைவன் அம் மரபுகளின் அரசனாகின்றான். மேற் கூறியவற்றிற்கு எடுத்துக்காட்டாக எபிரேயர்கள் (Hebrews), கிரேக்கர்கள் (The Greeks), உரோமானியர்கள் (The Romans), ஆரியர்கள் (Aryans) ஆகியோரது வரலாற்றினின்று பல சான்றுகளை மெய்ன் சுட்டிக் காட்டுகின்றார்.

மேற்கூறிய கோட்பாடுகள் இரண்டும் அரசின் தோற்றத்தை விளக்க முற்படினும் அவை அளிக்கும் விளக்கங்கள் திருப்திகர மானவை அல்ல. தந்தை வழியையோ, அல்லது தாய் வழியையோ பின்பற்றித்தான் உலகில் காணப்படும் அரசுகள் யாவும் தோன்றின எனக்கூற இயலாது. பண்டைய சமுதாயத்தில் குடும்பம், குருதித் தொடர்பு ஆகியவை முக்கியத்துவம் உடையன வாக இருந்த போதிலும் இவற்றால் மட்டும் அரசு உருவெடுத்தது எனக் கூறுவது தவறு. ஆயினும், குருதித் தொடர்பு, அரசின் தோற்றத்திலும், வளர்ச்சியிலும், எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை இக்கோட்பாடுகள் எடுத்துக் காட்டுகின்றன.

4. வலிமைக்கோட்பாடு (Force Theory) :

வெற்றிகரமான போரின் விளைவாக அரசு தோன்றியது என்பது இக்கோட்பாட்டின் மையக் கருத்து. வலிவற்றோரைக் கீழடக்க வலியோர் போர் தொடுக்கும் வழக்கம் தொன்று தொட்டே காணப்படுவதாகும். ஒரு மரபு மற்றொரு மரபைத் தோற்கடிக்கும் போது வெற்றி பெற்ற மரபின் வலிமை அதிகரிக்கின்றது. காலப்போக்கில் பல மரபுகளை தோற்கடிக்கும் மரபு ஒரு பெரும் நிலப்பரப்பைத் தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருகின்றது. வெற்றி பெற்ற மரபின் தலைவன் அரசனாக மாறுகிறான். இவ்வாறு அரசு தோன்றுகிறது. மரபினின்று அரசும், அரசினின்று பேரரசும் தோன்றியது போரின் விளைவாகத்தான் என்று லீகாக் (S. Leacock) கூறுகின்றார். போரில் தனது மக்கட்கு வெற்றி கிடைக்கச்செய்யும் தலைவன் அம்மக்களின் அரசனாகின்றான். ஆட்சி புரிவதற்கு இவ்வரசன் தனது வலிமையைப் பயன்படுத்துகின்றான். சட்டமும், ஒழுங்கும் நிலைநாட்டப்பட்டு, அதிகாரத்திற்குக் கீழ்படியும் பழக்கத்தை மக்கள் பெறுகின்றார்கள்.

அரசின் தோற்றத்தை இக்கோட்பாடு ஓரளவு விளக்குகின்றதெனினும் வலிமையின் அடிப்படையில்தான் அரசு தோன்றிற்று என்று திட்டவட்டமாகக் கூற இயலாது. அரசு தோன்றுவதற்கு வலிமை ஒரு காரணமாக இருந்தது என்று தான் கூறலாம்.

5. இயற்கைக் கோட்பாடு (Natural Theory) :

மனிதனின் தேவைகளுக்கிணங்க அரசு உருவாக்கப் பட்டது என்று அரிஸ்டாட்டில் கூறுகின்றார். இவருடைய கருத்தை இயற்கைக் கோட்பாடு என்று கூறுவர். உடல்உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டு தான் மனிதனின் தேவைகள் எழுகின்றன. உணவு, உடை, தங்குமிடம், ஆண்-பெண் உறவு போன்றவற்றின் தேவை உடலுணர்வின் காரணமாக எழுகின்றது. மனிதனின் தேவைகள் யாவற்றையும் அவனே உருவாக்க முடியாது என்ற நிலைஎழும் பொழுது பிறருடைய உதவி தேவைப்படுகிறது. மனிதனின் தேவைக்கேற்ப பல தொழில்கள் துவங்கப்படுகின்றன. செய்பவற்றை நன்கு செய்ய வேண்டும் என்ற மனப்பாங்கு எழும் பொழுது வல்லுனர்கள் தோன்றுகின்றனர். காலப்போக்கில் சமுதாயம் என்பது பல தொழில்களைப் புரியும் நபர்களைக் கொண்டதாக மாறுகிறது.

சமுதாயம் என்பது பல குடும்பங்களின் தொகுப்பு என்று அரிஸ்டாட்டில் கருதுகிறார். ஆண்களுக்கும், பெண்களுக்கும்

இடையே தோன்றும் மலர்ச்சி தான் அரசு. இந்த அரசில் மட்டுமே மக்கள் நல்வாழ்வு பெற முடியும். மனிதருக்கு உணவு மட்டும் போதாது. அவர்களுடைய சமூகத் தேவைகளும், அரசியற் தேவைகளும், கலாச்சார தேவைகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டும். இதற்குப் பயன்படுவது அரசு.

அரசு உருவாவதற்குக் காரணமான சிலவற்றை மட்டுமே இக் கோட்பாடு காட்டுகின்றது. மேலும், அரசு உருவாக இவை எங்ஙனம் உதவின என்று இக்கோட்பாடு விளக்கவில்லை.

6. பரிணமக் கோட்பாடு (Evolutionary Theory)

அரசின் தோற்றத்தைக் குறித்து திருப்திகரமான விளக்கம் கிடைப்பது இக் கோட்பாட்டில் தான். இதனை வரலாற்றுக் கோட்பாடு (Historical Theory) என்றும் கூறுவர். பரிணமம் என்ற சொல் படிப்படியாக அடையும் வளர்ச்சியைக் குறிப்பிடுகின்றது. காலப் போக்கில், படிப்படியாக, பல காரணக் கூறுகளின் விளைவாகத் தோன்றியது தான் அரசு என்று இக் கோட்பாடு கூறுகின்றது. குருதித் தொடர்பு, சமயம், உடைமை, போர், இடப் பெயர்ச்சி, அரசியல் விழிப்புணர்வு ஆகியவற்றின் காரணமாக அரசு தோன்றியது என்று இக்கோட்பாடு கூறுகிறது.

குருதித் தொடர்பு (Kinship): குருதித் தொடர்பு சமுதாயத்தை உருவாக்குகின்றது. சமுதாயம் காலப் போக்கில் அரசை உருவாக்குகின்றது என்று மக்ஐவர் (Maciver) கூறுகின்றார். புராதன சமுதாயத்தில் மக்களை இணைத்தது குருதித் தொடர்பு. இது குடும்பத்திலிருந்து தோன்றிற்று. பல குடும்பங்களின் தொகுப்பாக வகுப்பு (Clan) தோன்றிற்று. பல வகுப்புக்கள் இணைந்து மரபு (Tribe) தோன்றியது. வகுப்புக்களிலும், மரபுகளிலும் காணப்பட்ட மக்கள் ஒரே மூதாதை யினரைக் கொண்டிருந்தனர். புராதனக் குடும்பத்தின் தலைவன் மரபின் தலைவனாகத் திகழ்ந்தான். இவனுக்கு போர், நீதி, சமயம் ஆகியவை சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் இருந்தன. பல மரபுகளின் இணையமாக அரசு தோன்றிற்று.

சமயம் (Religion): அரசு உருவாக வழி வகுத்ததென்று சமயத்தையும் குறிப்பிடலாம். சமூக உணர்வும், அரசும் தோன்ற இது உதவியது. புராதன சமயத்திற்கும், குருதித் தொடர்புக்கும் நெருங்கிய உறவு காணப்பட்டது. பழங்காலத்தில் மூதாதையினரைக்

கடவுளராக வழிபடும் பழக்கம் காணப்பட்டது. ஒரே மூதாதை யினரை வணங்கும் மக்களிடையே உறவும், ஒற்றுமையும் அதிகரித்தன. பண்டைக்கால சமுதாயத்தில் காணப்பட்ட சமயம் மனிதனின் வாழ்க்கை முழுவதையும் சம்பந்தப்பட்டதாக இருந்தது. பழக்க வழக்கங்களும், கருத்துகளும் சமயத்தை அடிப்படையாகக் கொண்டு தோன்றின. மூதாதையினரை மட்டும் அல்லாமல், இயற்கையையும் பண்டைகால மனிதன் வழிப்பட்டு வந்தான். பல சமுதாயங்களில் சமுதாயத் தலைவன் சமயத் தலைவனுகவும் திகழ்ந்தான். இதனுல் இவனுடைய வலிமை அதிகரித்தது. சமயச் சார்புடைய சட்டங்களின் உதவியினுல் மக்களைக் கட்டுப்படுத்துவது இவனுக்கு எளிதாயிற்று. எங்கெல் லாம் சமயத்தலைவனும், அரசனும் வெவ்வேறு நபர்களாகக் காணப்பட்டார்களோ அங்கெல்லாம் சமயத் தலைவனுக்குத்தான் முக்கியத்துவம் இருந்தது. இதற்கு எடுத்துக்காட்டாக பண்டைக் கால இந்தியாவைக் குறிப்பிடலாம்.

மக்களை அதிகாரத்திற்குக் கீழ்படியவைக்கவும், சட்டங்களுக் குப்பணிய வைக்கவும் சமயம் பயன்பட்டது. சமயமும் அரசியலும் ஒன்ருகக் கலந்திருந்த பொழுது மக்களை அடக்கி ஆளுவது எளிதாக இருந்தது. கட்டுப்பாடும், கீழ்படியும் பண்பும் தோன்று வதற்கு சமயம் மிகவும் உதவியது.

உடைமை (Property): மனிதனின் தேவைகளுக்கேற்ப அவ னுடைய சமுதாயத்தில் மாற்றங்களும், வளர்ச்சியும் ஏற்பட் டுள்ளன என்று வரலாறு கூறுகின்றது. புராதன மனிதனின் முக் கியத்தேவை உணவு. உழவுத் தொழிலை அறிந்திராத இவன் நாடோடியாக வேட்டையாடித் திரிந்தான். காலப் போக்கில் கால் நடைகளைப் பராமரித்து வாழலானுன் இவன் மேலும் முன்னேற்ற மடைந்த பொழுது ஓரிடத்தில் நிரந்தரமாகத் தங்கி உழவுத் தொழிலை மேற்கொண்டான். இந்த மூன்று கட்டங்களிலும் மனிதன் தனித்து வாழவில்லை. பிறருடன் இணைந்து கூட்டமாகத் தான் வாழ்ந்தான்.

ஓரிடத்தில் மனிதன் நிரந்தரமாக வாழ ஆரம்பித்த பிறகு தான் பல தொழில்கள் தோன்றின. தொழில்களின் அடிப்படை யில் சமுதாயத்தில் பல பிரிவுகள் தோன்றின. இக்கட்டத்தில் தான் ஆண்கள் முக்கியத்துவம் பெற்றனர். தந்தையின் கட்டுப் பாட்டிற்கு உட்பட்டு வாழும் பழக்கம் துவங்கியது. பல தொழில்கள் புரியத் தொடங்கியதன் விளைவாக உடைமைகளின் எண்ணிக்கை அதிகரித்தது. ஒருவனது தகுதியும், நிலையும் அவனுடைய

உடைமையின் அளவைக் கொண்டு நிர்ணயிக்கப்படலாயிற்று. அதிக உடைமை உடையவர் செல்வந்தர் எனக் கருதப்பட்டனர். இக்கட்டத்தில் உடைமைகளைப் பாதுகாக்கவும் மாற்றியளிக்கவும் தேவையான விதிகளும், சட்டங்களும் உருவாக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. செல்வந்தர் சமுதாயத்தில் முக்கியமானவர் எனக் கருதப்படலாயினர். அவர்களுடைய அதிகாரமும் அவர்களின் செல்வத்தின் வளர்ச்சிக்கு ஏற்ப வளரலாயிற்று. என்று மனிதன் உழவுத்தொழிலில் ஈடுபட ஆரம்பித்தானோ அன்றே அரசு என்பதன் பிறப்பும் நிகழ்ந்தது என்று கூறலாம்.

போரும், இடப்பெயர்ச்சியும் (War and Migration): குருதித் தொடர்பு, சமயம், உடைமை ஆகியவற்றின் பயனாகத் தோன்றிய சமுதாய அமைப்பில் போட்டிகள் அதிகம் இருக்கவில்லை. அந்த அமைப்பு எளிமையானதாக இருந்தது. உறவின் அடிப்படையில் அமைந்த புராதன சமுதாயத்தில் அன்னியருக்கு இடமிருக்கவில்லை. ஒத்துழைப்பின் அடிப்படையில் செயற்பட்ட அச்சமுதாயத்தில் தனியார் சுதந்திரம் காணப்படவில்லை. இந் நிலையை மாற்றியமைத்தது போர்.

அரசியல் ரீதியிலான சமுதாய அமைப்பை உருவாக்கியது போர் என்று கூறலாம். குருதித் தொடர்பு வலிமையிழந்த பொழுது அமைதியையும், ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் நிலை நாட்ட அதிகார வலிமை தேவைப்பட்டது. அதிகார வலிமையுடைய அரசன் எல்லோரையும் தன்கீழ் இணைத்து ஆட்சி புரியத் தொடங்கினான். தனது வலிமையின் காரணமாகத் தலைவன் ஆன ஒருவன் அவ்வலிமையைப் பயன்படுத்தி மக்களின் கீழ் படிதலைப் பெற்றான். காலப்போக்கில் இந்த வலிமை அவனுடைய அரசியல் இறைமையாக மாறியது. அதிகாரத்திற்குக் கீழ்படியும் இயல்பும் மக்களிடையே தோன்றியது. இத்தலைவன் அவ்வப்பொழுது தன்னுடைய வலிமையைக்காட்ட வேண்டிய நிலையும் இருந்தது. இந்த வாய்ப்பை அவனுக்கு போர் அளித்தது.

மக்கட்தொகையின் பெருக்கமும், இயற்கை வளத்தின் பற்றுக் குறையும் ஒரு பகுதியில் வாழ்ந்த மக்களை மற்றொரு பகுதியில் வாழ்ந்த மக்களுடன் தொடர்புகொள்ள வைத்தது. சில வேளைகளில் இத் தொடர்புகளின் காரணமாக போர் மூண்டது. வலிமையற்றோர், வலிமை உடையவரால் கீழ் அடக்கப்பட்டனர். இதனால் பல்வேறு மரபுகளையும், இனங்களையும் சேர்ந்த மக்கள் ஒரு தலைவனின் ஆதிக்கத்தின் கீழ் வாழ வேண்டிய நிலை உருவாகியது. போரின் பயனாக அரசு தோன்றியது,

இடப் பெயர்ச்சியின் காரணமாகவும் அரசு தோன்றியது. மக்கட்தொகையின் பெருக்கம், உணவு பற்றாக்குறை ஆகிய வற்றின் காரணமாகத்தான் மக்கள் ஒரு பகுதியை விட்டு மற்றொரு பகுதிக்குச் சென்று குடியேற வேண்டிய நிலை உருவாகியது. இங்ஙனம் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் சென்று குடியேறிய மக்கள் அங்கு வாழ்ந்திருந்த மக்களை போரில் கீழடக்கத் தமது சமயம், பழக்க வழக்கங்கள், அரசியல் நிறுவனங்கள் போன்றவற்றை நிலை நாட்டினர். இதற்கு எடுத்துக்காட்டாக இந்தியா, ஸ்பெயின், இங்கிலாந்து, அமெரிக்கா ஆகியவற்றைக் கூறலாம்.

அரசியல் விழிப்புணர்வு (Political Consciousness): அரசு தோன்றுவதற்கு வழி வகுத்த காரணிகளில் இறுதியானது. அரசியல் விழிப்புணர்வு, அரசியல் நிறுவனத்தின் மூலமாகத் தான் மனிதனின் சில அடிப்படையான தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும் என்ற கருத்தைத்தான் அரசியல் விழிப் புணர்வு என்கின்றோம். தற்பாதுகாப்பு, உடைமைகளின் பாது காப்பு, அன்னியரின் தாக்குதலினின்று பாதுகாப்பு, சமுதாய வளர்ச்சி, ஒழுக்க வளர்ச்சி, அறிவு வளர்ச்சி ஆகியவற்றைச் சரி வர அளிக்க அரசால் மட்டுமே இயலும் என்ற உணர்வுக்குத்தான் அரசியல் விழிப்புணர்வு என்பது.

அரசியல் விழிப்புணர்வு எப்போது தோன்றியது என்று திட்ட வட்டமாகக் கூறமுடியாது. ஆரம்பத்தில் ஒரு சிலருடைய உள்ளத் தில் தோன்றிய இந்த உணர்வு காலப்போக்கில் பலரிடையே பரவியிருக்க வேண்டும். அதிகாரம் அரசாங்கமாகவும், பழக்கம் சட்டமாகவும் மாறியுள்ளது. இதற்கேற்ப தலைவனுக்கு, அல்லது அதிகாரத்திற்கு கட்டுப்படும் பழக்கமும் தோன்றியது. அரசியல் விழிப்புணர்வு தோன்றியதைத் தொடர்ந்து அரசின் பணிகளும் விரிவடைந்தன. ஓர் அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டு வாழ்ந்தால் அதன் பணிகள் நல்வாழ்வை உருவாக்கும் என்ற கருத்து தோன்றிப் பரவியது.

இதுவரைகூறப்பட்ட விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்தால் அரசு எப்பொழுது தோன்றிற்று என்று கூற முடியாத நிலை புலப்படும். மேற்கூறிய காரணங்கள் ஒரே காலத்தில் செயல் படவில்லை. அவ்வப்போது அவை செயல்பட்டதன் பயனாகத்தான் அரசு தோன்றியது. மேலும், அரசு என்பது படிப்படியாக தோன் றியதேயன்றி திடீரென்றுத் தோன்றியது அல்ல. அரசின் பரிணாமம் உலகின் எல்லா பகுதிகளிலும் ஒரே மாதிரியாக நிகழவில்லை,

5. அரசின் வளர்ச்சி

(Development of the State)

முதன் முதலாகத் தோன்றிய அரசிற்கும், இன்று காணக் கூடிய அரசிற்கும் ஏராளமான வேற்றுமைகள் உள்ளன. ஆரம் பத்தினின்று இன்றுவரை அரசு பல மாறுதல்களை அடைந் துள்ளது. அரசில் ஏற்பட்ட வளர்ச்சி உலகின் எல்லா பகுதி களிலும் ஒரே மாதிரியாக இருந்தது எனக் கூறமுடியாது. வெவ் வேறு பகுதிகளில், வெவ்வேறு பாணியில் அரசுகள் வளர்ச்சி யுற்றன என்பதற்குச் சான்றுகள் காணப்படுகின்றன. வரலாற்றின் அடிப்படையில் பார்க்கும் பொழுது மரபு அரசு, கீழ்த்திசைப் பேரர சுகள், நகர அரசுகள், ரோமப்பேரரசு, நிலமானிய முறை அரசு, தற்கால அரசு என்று ஒன்றன்பின் ஒன்றாக அரசுகள் வளர்ச்சி யுற்றுள்ளதைக் காணலாம்.

1. மரபு அரசு (Tribal State)

மரபு அரசு என்பது அளவிற் சிறியதாக இருந்தது. இதற்கு ஒரு தலைவனும், அவனுக்கு உதவிபுரிய ஒரு ஆலோசனைக்குழுவும் காணப்பட்டன. சில மரபுஅரசுகள் ஓரிடத்தில் நிரந்தரமாகக் காணப்படவில்லை. இத்தகைய அரசின் முக்கியமானபணி அமைதி யைக் காப்பதும், போர் புரிவதும்தான். இந்த அரசில் பிறப்பு, சமயம் போன்றவற்றின் அடிப்படையில் ஒற்றுமை காணப் பட்டது. இந்த அரசில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை பழக்க வழக்கங்களினால் கட்டுப்படுத்தப்பட்டது. சில மரபு அரசுகளின் தலைவர்கள் எதேச்சதிகாரத்தை உடையவராகக் காணப் பட்டனர். சிலவற்றில் இவர்களது அதிகாரம் பொதுமக்கள் கருத் தாலோ அல்லது வீரர்களின் மன்றங்களாலோ கட்டுப்படுத்தப் பட்டது. சில மரபு அரசுகளின் தலைவர்கள் வாரிசுரிமையின் அடிப்படையில் பதவி வகித்தனர். சில மரபு அரசுகளில் தலைவர் கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். காலப்போக்கில் இத்தகைய அரசு மறைந்து வேறுவகை அரசு தோன்றியது.

2. கீழ்த்திசைப் பேரரசு (Oriental Empire)

நிலப்பரப்பை அடிப்படையாகக் கொண்ட அரசு என்று முதலில் அறியப்பட்டது கீழ்த்திசைப் பேரரசாகும். நைல்

(The Nile), யாக்ட்ஸி (Yangtze), சிந்து (The Sind), யூப்ரடீஸ் (Euphrates), டைக்ரீஸ் (Tigris) போன்ற நதிகள் பாய்ந்த செழிப்பான பள்ளத்தாக்குகளில் புராதன கலாச்சாரங்கள் தோன்றின. இப்பள்ளத்தாக்குகளில் வாழ்ந்த மனிதர்கள் செல்வச் சீருடன் வாழ்ந்தனர். இப்பேரரசுகள் தோன்றுவதற்கு முக்கிய காரணம் செல்வமே. சுமேரியா (Sumeria), அசீரியா (Assyria), பாரசீகம் (Persia), எகிப்து (Egypt), சீன (China) போன்ற பகுதிகளில் காணப்பட்ட பேரரசுகள் செல்வம் கொழித்த நகரங்களைச் சுற்றியே எழுப்பப்பட்டன. இப்பேரரசுகளில் போருக்கும், படைக்கருவிகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

மிகப்பரந்த நிலப்பரப்பைக் கொண்ட இப்பேரரசுகளில் வலிமை வாய்ந்த மத்திய நிறுவனம் காணப்படவில்லை. இவற்றின் உட்கூறுகளாக இருந்த மரபுகள் சுயாட்சி உரிமையுடையனவாக இருந்தன. பேரரசருக்குக் கப்பம் கட்டுவதும், போர் வீரர்களை அளிப்பதும் தான் இவற்றின் முக்கிய கடமைகளாக இருந்தன. அச்சத்தின் காரணமாகத் தான் இவை பேரரசருக்கு கீழ்படிந்தனர். மிகப்பரந்த நிலப்பரப்பைக் கொண்டிருந்த இப் பேரரசுகளில் போக்குவரத்து வசதிகள் பின்தங்கிய நிலையில் இருந்த காரணத்தால் தொலைவில் உள்ள மாநிலங்களுடன் உடனடித் தொடர்பு கொள்ள பேரரசருக்கு முடியவில்லை. இதனுல் புரட்சிகளும், கலகங்களும் ஆங்காங்கே தலைதூக்கின. நிலையற்ற தன்மை கொண்ட கீழ்த்திசைப் பேரரசில் ஒற்றுமை இருக்கவில்லை. தனியார் சுதந்திரம் இருக்கவில்லை. வலிமை வாய்ந்த பேரரசர் ஆண்ட காலத்தில் இப்பேரரசுகள் நிலைப்பெற்றன. வலிமையற்ற பேரரசர் பதவிக்கு வந்ததைத் தொடர்ந்து இவை சின்னுபின்னப் பட்டன.

3. நகர அரசுகள் (City-States)

கீழ்திசைப் பேரரசுக்கும், நகர அரசுக்கும் இடையே குறிப்பிடத்தக்க ஒரு வேற்றுமை காணப்பட்டது, கீழ்த்திசைப் பேரரசு உள்நாட்டில் நிறுவப்பட்டிருந்தது. கடலுக்கும், பெருங்கடலுக்கும் அப் பேரரசில் முக்கியத்துவம் இருக்கவில்லை. கடலும், பெருங் கடலும் எல்லையாகக் கருதப்பட்டனவேயன்றி அவற்றைப் போக்குவரத்துக்குப் பயன்படுத்தவில்லை.

கடலின் மீது ஆதிக்கம் செலுத்திஞல் அதன் மூலம் வலிமையையும், செல்வத்தையும் பெருக்க முடியும் என்பதை ஈஜியன் (Aegean) கடற்கரைப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் உணர்ந்திருந்

தனர். இப் பகுதிகளில் தான் கடல் சார்ந்த பேரரசு துவங்கியது. இங்கு தான் மிக உயர்ந்த கலாசாரங்களும் தோன்றின.

ஐரோப்பிய நாகரீகத்தில் முழு வளர்ச்சி காணப்பட்டது கிரேக்கத்தில்தான். இது நிகழ்ந்த காலம் கி.மு. 5,4 நூற்றாண்டு களில் ஆகும். மலைகளாலும், கடலாலும் பல பள்ளத்தாக்குகளாகப் பகுக்கப்பட்ட பகுதி கிரேக்கம். இந்த இயற்கை சூழ்நிலையில்தான் நகர அரசுகள் தோன்றி தனித்தன்மையுடயவையாக வளர்ந்தன.

நகர அரசுகள் அளவிற் சிறியவையாக இருந்தன. இவற்றில் வாழ்ந்த மக்கள் குடிமக்கள் என்றும், அடிமைகள் என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். குடிமக்களுக்கு மட்டுமே உரிமைகள் வழங்கப்பட்டன. ஏறத்தாழ நாற்பதாயிரம் குடி மக்கள் மட்டுமே ஒரு நகர அரசில் காணப்பட்டனர். அரசாங் கத்தின் பணிகளில் குடி மக்கள் தீவிர ஈடுபாடு கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. காரணமின்றி குடி மக்களுக்கு எதிராக அடக்குமுறை பயன்படுத்த முடியாது என்ற நிலை காணப்பட்டது. ஏதென்ஸ் (Athens) ஸ்பார்ட்டா (Sparta), கொரிந்த் (Corinth), ஆர்கோன் (Argon), தீப்ஸ் (Thebes) ஆகியவை குறிப்பிடத்தக்க நகர அரசுகள் ஆகும்.

அரசியலைப் பொறுத்த மட்டில் இந் நகர அரசுகளில் குறிப் பிடத்தக்க வளர்ச்சி காணப்பட்ட போதிலும், குறைபாடுகளும் இருந்தன. நகர அரசுகளில் பல்வேறு வகுப்புக்கள் தோன்றி ஒற்றுமையை அழித்தன. வெவ்வேறு நகர அரசுகளிடையே போட்டி மனப்பான்மை இருந்ததால் ஐக்கிய கிரேக்க அரசு உருவாக முடியவில்லை. அடிக்கடி போர் மூண்டதன் பயனாக நகர அரசுகள் வலிவிழந்து மறைந்தன.

4. ரோமப் பேரரசு (Roman World Empire) :

ரோமின் அரசியல் கிரேக்கத்தைப் போல் நகர அரசுகளி லிருந்து தோன்றியதாகும். ரோம அரசின் வளர்ச்சியை மூன்று கட்டங்களாகப் பிரிக்கலாம். ஆரம்பத்தில் காணப்பட்டது நகர அரசு. இதைத் தொடர்ந்து குடியரசு துவங்கியது. இதன் பின்னர் பேரரசு உருவெடுத்தது.

ஏறத்தாழ கி.மு. 510-ஆம் ஆண்டு வரையிலும் ரோம அரசு கிரேக்கத்தைப் போல் நகர அரசுகளின் அமைப்பாகத்தான் இருந்தது. இந் நகர அரசின் தலைவனை மன்னன் ஆட்சி புரியும் அதிகாரத்தையும், நீதி வழங்கும் அதிகாரத்தையும், சமயக் குருவின் அதிகாரத்தையும் கொண்டிருந்தான். 300

முதியோர்களைக் கொண்ட மன்றம் அரசனுக்கு ஆலோசனை வழங்கியது. உடைமையற்றோருக்கு உரிமையேதும் இருக்க வில்லை. பட்ரீசியர்கள் (Patricians) என்ற செல்வந்தர்கள், வலிமை பெற்றிருந்தனர். ஆனால் படிப்படியாகக் குடியுரிமையை எல்லோருக்கும் அளித்ததன் விளைவாகத்தான் ரோம அரசு நிலைத்து நிற்க முடிந்தது.

ரோமக் குடியரசு கி.மு. 510-ஆம் ஆண்டில் நிலை நாட்டப் பட்டது. இதனை மக்களின் குடியரசு எனக் கூற முடியாது. இக் குடியரசில் உயர்குடியினருக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப் பட்டது. எளியவர்கள் தமது உரிமைகட்காக வாதிட்டனர். உயர்குடியினருக்கும், எளியோருக்கும் இடையேயான இப் பூசல் இரண்டு நூற்றாண்டுகள் நீடித்தது. இறுதியில் எளியோர்கள் வெற்றி பெற்று, வகுப்பு பேதங்கள் மறைந்தன. அதிகாரப் பகிர்வு, நீதிபதிகளின் குறுகிய பதவிக் காலம், மக்களின் இறைமை, நீதிபதிகளின் போர் சம்பந்தப்பட்ட அதிகாரத்தின் குறுகிய வரம்பு ஆகிய நான்கு பண்புகளும் இக் குடியரசில் காணப்பட்டன.

அடுத்த கட்டமாக ரோம் அயல் பகுதிகளை வென்று தனது எல்லைகளை விரிவு படுத்தும் முயற்சி துவங்கியது. கி. மு. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியில் ரோம் ஒரு உலகப் பேரரசாக உரு வெடுத்தது. நல்ல முறையிலான மத்திய ஆட்சி அமைப்பை உரு வாக்கியதன் பயனாக இப்பேரரசு சின்னாபின்னப்படவில்லை. இப் பேரரசின் குறிப்பிடத்தக்க அம்சம் மையப்படுத்தப்பட்ட ஆட்சி அமைப்பும், அதிகாரமுமாகும். இதன் விளைவாகப் பேரரசன் எதேச்சதிகாரியாக மாறினான். மக்கள் மன்றங்கள், அவற்றின் முக்கியத்துவத்தை இழந்தன. பேரரசரின் ஆணைகள் சட்டங்க ளாயின. காலப்போக்கில் இவர் கடவுளாக வணங்கப் பட்டார். நான்காம் நூற்றாண்டின் துவக்கத்தில் கிறிஸ்தவ சமயம் பேரரசின் சமயமாக ஏற்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பேரரசர் இறை வனின் பிரதிநிதியாகக் கருதப்படலானார். பரந்த நிலப்பரப்பை யுடைய அரசில் நிலையான அரசாங்கம் அமைத்து வெற்றி கரமாக ஆட்சி புரிய முடியும் என்பதை ரோமப் பேரரசு உலகிற்கு எடுத்துக்காட்டியது. இப்பேரரசின் காலத்தில் தோன்றிய உலக ஒற்றுமைக்கருத்து பன்னாட்டு நிறுவனம், பன்னாட்டுச் சட்டம் போன்றவை பிற்காலத்தில் தோன்றுவதற்கு வழிவகுத்தது இறைமையுடைய அதிகார அமைப்பு, ஒற்றுமை, ஒரே மாதிரியான சட்டம், உலகஅமைதி ஆகியவை ரோமப் பேரரசால் உலகிற்கு வழங்கப்பட்டன.

5. நிலமானிய முறை அரசு (Feudal State)

நிலமானிய முறை அரசு எப்பொழுது தோன்றியதென்று திட்ட வட்டமாகக் கூற முடியாது. ரோமப்பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னுல் மேற்கு ஐரோப்பாவில் குழப்பமான சூழ்நிலை காணப் பட்டது. ரோமப் பேரரசை பல டியுடானிய (Teutonic) மரபுகள் பங்கு போட்டுக்கொண்டன. இம்மரபுகளுக்கு மத்திய நிறுவன அமைப்பு இருக்கவில்லை. இவற்றின் தலைவர்கள் மக்களால் தேர்ந் தெடுக்கப் பட்டனர். இம்மரபுகளில் சுதந்திர வேட்கையும், உரிமை உணர்வும் காணப்பட்டன. டியுடானியரின் அரசியல் முறையில் தனியார் சுதந்திரத்திற்கும், உரிமைக்கும், உள்ளூர் ஆட்சிக்கும் முக்கியத்துவம் அளிக்கப் பட்டது. இம்மரபுகள் ஆட்சி செலுத்தி வந்த பொழுது மேற்கு ஐரோப்பாவில் அரசு மறைந்தது. காலப்போக்கில் நிலமானிய முறை (Feudalism) தோன்றியது.

நிலமானிய முறையில் வகுப்புகளின் உறவிற்கு முக்கியத் யத்துவம் அளிக்கப்பட்டது. பதவி பரம்பரைச் சொத்தாக மாறியது. சமயம் உயர்நிலையிலிருந்தது. நிலம் முக்கிய சொத் தாகக் கருதப்பட்டது அரசியல் அதிகாரம் நிலத்தைச் சார்ந்த தாக அமைந்தது. நிலத்துடன் ஒருவன் கொண்டுள்ள உறவின் அடிப்படையில் அவனுடைய கடமைகளும், உரிமைகளும் நிர்ண யக்கப்பட்டன. நிலத்தின் மீதுள்ள உரிமையின் அடிப்படையில் கோர்வை வடிவிலான அதிகார அமைப்பு உருவாக்கப்பட்டது. நிலத்தின் உரிமையாளர்களான பிரபு வேளாண்மை செய்வதற் காக அதைப் பலருக்கும் பங்கிட்டு அளித்தார். இங்ஙனம் நிலத்தைப் பெற்ற குடியானவன் தன்னுடைய பிரபுவிற்குக் கட்டுப்பட்டு வாழ்க்கை நடத்தினுன். இவர்களிடையே நேரடி யுறவு காணப்பட்டது. எல்லாவற்றிருக்கும் உரிமையாளரான அரசருக்கும் மக்களுக்கும் இடையே நேரடித் தொடர்பு இருக்க வில்லை. நிலமானிய முறை அரசில் ஒற்றுமையும், சுதந்திரமும் காணப்படவில்லை. சட்டங்களுக்கு பதிலாக மரபு விதிகள் பயன் படுத்தப்பட்டன. மத்திய அரசாங்கம் வலிமையற்றதாக இருந்தது. போருக்கு நிலமானிய முறை முக்கியத்துவம் அளித்த போதிலும் குடியானவர்களின் வாழ்க்கை சீர் கெடவில்லை.

6. சமயச்சார்புடைய அரசு (Theocratic State)

ரோமப் பேரரசின் வீழ்ச்சி கிறிஸ்துவ சமயத்தைப் பாதிக்க வில்லை. ரோமப்பேரரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து அரசாங்கம் வலிவிழந்து நின்ற போது மக்களின் மீது மிகுந்த செல்வாக்கு

கொண்டிருந்த சமயத் தலைவர்கள் அரசின் பணிகள் பலவற்றையும் புரிந்தனர். இதைத் தொடர்ந்து கிறிஸ்தவத் திருச்சபை வலிமை மிக்கதாக வளர்ச்சியடையலாயிற்று. ஏராளமான உடைமைகள் இதன் சொத்தாயின. அமைதியும், ஒழுங்கும் நிலை நாட்டும் பணியை திருச்சபை புரியலாயிற்று. திருச்சபையின் தலைவரான போப் பாண்டவர் மன்னர்களை விடத் தாம் உயர்ந்தவர் எனக்கூறத் தொடங்கினர். சமயக் குருக்களுக்கென விசேடச் சட்டங்களும், நீதி மன்றங்களும் தோன்றின. இடைக்காலத்தில் (Middle Ages) திருச்சபை தான் அரசாக இருந்தது என்று ஃபிக்கிஸ் (Figgis) கூறுகின்றார். யாவற்றையும் விட திருச்சபை தான் உயர்வானது என்று கூற ஆரம்பித்ததைத்தொடர்ந்து திருச் சபைக்கும் அரசுக்கும் இடையே தகராறு எழுந்தது.

7. தேசீய அரசு அல்லது நாட்டின் அரசு (Nation State)

நிலமானிய முறையின் மறைவுக்கு பின் இந்த அரசு தோன்றியது. வரம்பற்ற பரம்பரை மன்னராட்சி இந்த அரசின் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இம்முறை அரசு ஐரோப்பாவில் பதினைந்தாம் நூற்றாண்டிலிருந்து பதினெட்டாம் நூற்றாண்டு வரை காணப்பட்டது. நாட்டின் உணர்வு தோன்றிய காரணத்தால் தான் இத்தகைய அரசு தோன்றியது. இந்த உணர்வைத் தூண்டி விட்டது சமயப்புரட்சி (Reformation) ஆகும். தேசியத்தை அடிப்படையாகக் கொண்ட அரசுகள் பதினாறும் நூற்றாண்டில் இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின் போன்ற பகுதிகளில் தோன்றியது. தொழில் வளர்ச்சி, வர்த்தகப் பெருக்கம், நகரங்களின் தோற்றமும் வளர்ச்சியும், வெடிமருந்தின் பிரயோகம் ஆகியவை காரணமாக நிலமானியப் பிரபுக்கள் வலிமையை இழந்தனர். அவ்வேளையில் மன்னர்களின் வலிமை பன்மடங்கு அதிகரித்தது. நிரந்தரப் படையும், தேசிய வரி விதிப்பு முறையும் தோன்றின. வலிமை வாய்ந்த இந்த அரசை மக்கள் வரவேற்ற போதிலும் அது அதிகநாள் நீடிக்கவில்லை.

8. தனிப்புரிமை அரசு அல்லது பாதுகாப்பு அரசு (Individualistic State)

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தனியுரிமைக் கோட்பாடு பிரபலமாயிற்று. சமத்துவம், பொது மக்களின் இறைமை, நாட்டின் உணர்வு ஆகியவை விரிவடைந்தன. மக்களாட்சிப் பண்புகளான இவை இங்கிலாந்தில் அமைதியான முறையில் படிப்படியாக வளர்ந்தன. பிரான்சைப் பொறுத்தவரையில் அங்கு இப் பண்புகள் வேரூன்றுவதற்கு ஒரு புரட்சி தேவைப்

பட்டது. பிற பகுதிகளில் மன்னர்கள் தாமாகவே இப் பண்புகளுக்கு இடமளித்தனர்.

தனியுரிமைக் கோட்பாட்டைப் பிரபலப்படுத்தியவர் ஜான் ஸ்டுவர்ட் மில் (John Stuart Mill) என்ற ஆங்கில அறிஞராவார். மக்களைப் பாதுகாக்கும் பணி மட்டும்தான் அரசிற்கு உள்ளது என்றும், அரசு மனிதனைக் கட்டுப்படுத்தக்கூடாது என்றும் இக் கோட்பாடு கூறுகின்றது. அரசு மக்களுக்கு பாதுகாப்பு மட்டும் அளித்தால் போதும் இக் கருத்தைக் கொண்ட அரசு ஒரு நூற்றண்டு காலம் செயற்பட்டது. அரசின் தலையீடு இல்லாமல் இருந்ததினல் தொழில், வாணிபம் ஆகியவை மிகுந்த வளர்ச்சியடைந்தன. ஆனல் இந்த அரசு விளைவித்த சமுதாயச் சீர்குலைவும், இன்னல்களும் இதை மறையச் செய்தன.

9. சோஷலிச அரசு (Socialist State)

இது பாதுகாப்பு அரசுக்கு நேர் எதிரானது. தனியுரிமைக் கோட்பாட்டின் தீய விளைவுகள் சோஷலிசக் கோட்பாட்டைத் தோற்றுவித்தன. அரசு மக்களைப் பாதுகாக்கும் பணிகளை மட்டுமன்றி அவர்களுடைய வாழ்க்கை நலனிலும் அக்கரை கொள்ள வேண்டும் என்று இக் கோட்பாடு கூறுகின்றது. சோஷலிசம் பல மாறுபட்ட பெயர்களையும் கொண்டுள்ளது. பொதுவாகச் சொன்னல் ஒரு சோஷலிச அரசு நாட்டிலுள்ள யாவற்றின் மீதும் தனது கட்டுப்பாட்டைச் செலுத்தும். குறிப்பிடத்தக்கயாவும் அரசின் பொதுச் சொத்தாக இருக்கும். பொருளாதாரத் திட்டங்கள் அரசால் உருவாக்கப்படும். வேற்றுமையற்ற சமுதாயத்தை உருவாக்குவது தான் இந்த அரசின் குறிக்கோள்.

10. பொதுநல அரசு (Welfare State)

தற்காலத்தில் காணப்படும் அரசுகளில் பெரும்பாலானவை பொதுநல அரசுகள் ஆகும். மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது மட்டுமன்றி அவர்களுடைய நலனிலும் அரசு கவனம் செலுத்த வேண்டும் என்பது தான் பொதுநல அரசின் குறிக்கோள். நபர்களுக்கும், உடைமைகளுக்கும் அரசு பாதுகாப்பு அளிக்க வேண்டும். மக்களுக்கு உரிமைகளை வழங்கி அவற்றைப் பாதுகாக்க வேண்டும். மக்களின் கடமைகளை அரசு நிர்ணயிக்க வேண்டும். கல்வி வசதியும், சுகாதார வசதிகளும், மருத்துவ வசதிகளும், போக்குவரத்து வசதிகளும், செய்தித் தொடர்பு வசதிகளும் அரசால் மக்களுக்கு அளிக்கப்பட வேண்டும். தொழில்வளம் பெருகவும், வாணிபம் முறையாக நடக்கவும் வசதிகள் அளிக்கப்பட வேண்டும். இக் குறிக்கோள்களை எய்துவதற்காகத் தற்கால அரசுகள் உகந்த சட்டங்களையும், திட்டங்களையும் உருவாக்கிச் செயற்படுத்துகின்றன.

6. இறைமை

(Sovereignty)

[இறைமை—கோட்பாட்டின் வளர்ச்சி—இறை, இறைமை ஆகியவற்றின் வகைகள்—பெயரளவிலான இறைமை—சட்ட பூர்வமான இறைமை—அரசியல் இறை - மக்கள் இறைமை—சட்டப்படியான இறையும், நிகழ் முறையிலான இறையும்—ஆஸ்டினின் இறைமைக் கோட்பாடு, அல்லது ஒருமுக இறைமைக் கோட்பாடு—பன்மை இறைமைக் கோட்பாடு— அதிகார வலிமை (Authority).]

இறைமை

(Sovereignty)

இறைமையின் தன்மை

அரசிற்குள்ள முக்கியப் பண்புகளில் குறிப்பிடத்தக்கது அதன் அதிகார வலிமை. ஒரு அரசின் அதிகார வலிமைக்கு இணையானது மற்றொரு அரசின் அதிகார வலிமை மட்டுமே. இந்த அதிகார வலிமையை நாம் இறைமை (Sovereignty)என்கின்றோம். அரசிற்குள்ள நான்கு பண்புகளில் ஒன்று இறைமை. மிக உயர்ந்ததும், சட்ட பூர்வமானதும் ஆன அதிகாரத்தைத் தான் இறைமை என்பது குறிப்பிடுகின்றது. இதற்கப்பாற்பட்ட அதிகாரம் வேறில்லை. இறைமை இருவகைப்படும். உள்நாட்டு இறைமை (Internal Sovereignty), வெளிநாட்டு இறைமை (External Sovereignty) என்பவை தான் இவ்விரு வகைகளும். ஒரு அரசின் எல்லைகட்குள் அவ்வரசு மட்டுமே உயர்வானது என்பதை உள்நாட்டு இறைமை குறிப்பிடுகின்றது. வேறு அரசுகளின் கட்டுப்பாட்டிற்கும், பன்னாட்டு நிறுவனங்களின் கட்டுப்பாட்டிற்கும் ஒரு அரசு உட்பட்டதல்ல என்பதை வெளிநாட்டு இறைமை குறிப்பிடுகின்றது.

எந்த அதிகாரமும் வரம்பற்றதாக இருக்க முடியாது. அது போல் இறைமையும் அளவற்றதல்ல. சூழ்நிலைகட்கும், அரசியல் சக்திகட்கும், ஏற்பத்தான் ஒரு அரசு தனது அதிகாரத்தைப் பயன்

படுத்த முடியுமேயன்றித் தன்னிச்சை போல் பயன்படுத்த முடியாது. பன்னாட்டு உறவைப் பொறுத்த மட்டில் ஒரு அரசு பன்னாட்டுச் சூழ்நிலைகட்கும், மரபுகட்கும், சட்டத்திற்கும், உடன்படிக்கைகட்கும் ஏற்பத்தான் செயல்பட முடியுமேயொழிய தனது விருப்பத்திற்கேற்பச் செயல்பட முடியாது. சிறிய நாடுகளைப் பொறுத்த மட்டில் நிலைமை இன்னும் மோசமானது எனலாம்.

உள்நாட்டு இறைமையைப் பற்றி அரசுகளிடையே கருத்து வேற்றுமை காணப்படுகின்றது. இறைமை பகுக்கப்பட முடியாதது என்பது கோட்பாடு. ஆனால் கூட்டாட்சியைப் பொறுத்த மட்டில் மத்திய, மாநில அரசுகளிடையே இது பகிர்ந்து கொள்ளப் படுகின்றது என்பது சில அறிஞர்களுடையே கருத்து. மேலும், மக்களின் இந்த பங்கீடு அதிகாரப் பங்கீடே ஒழிய, இறைமையின் பகுப்பு அல்ல என்பது வேறு சில அறிஞர்களின் கருத்து. இறைமை என்பதை அங்கீகரித்துள்ள நாடுகளில் மக்கள் தமது இறைமையை எப்பொழுது எத்தனை முறை பயன்படுத்த வேண்டும் என்பது பற்றிக் கருத்து வேற்றுமை உள்ளது.

இறைமை என்பது சட்ட ரீதியிலான ஒரு கோட்பாடு மட்டுமே. அதனால்தான் சட்டப்படி இறைமையை உடைய வரினின்று உண்மையில் இறைமையைப் பயன்படுத்துபவரைப் பிரித்துக் காணமுடிகின்றது. இருப்பினும், ஒரு உண்மையை நாம் மறுக்க முடியாது. எச்சக்திகளின் பிரயத்தனத்தால் ஒரு சட்டம் உருவாக்கப்பட்ட போதிலும் அச்சட்டத்தைப் பிரகடனம் செய்து, அதற்கு மதிப்பும், தகுதியும் அளித்து அதற்கு எல்லோரையும் கீழ்படியச் செய்யும் வலிமை அரசிற்கு மட்டுமே உள்ளது. இந்த வலிமைதான் இறைமை என்பது. ஆட்சியாளர்கள் இன்றிருப்பர், நாளை இரார். அரசாங்கங்கள் மறைந்து புதிய அரசாங்கங்கள் தோன்றலாம். ஆனால், இறைமை அழியாது. அரசு மறைந்தால் மட்டுமே இறைமை மறையும்.

நாட்டின் அரசு (Nation-State) தோன்றிய பொழுது இறைமை பற்றிய கருத்தும் தோன்றியது. இன்றைய இறைமைக் கோட்பாட்டைத் தோற்றுவித்தவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஜான் பொதான் (Jean Bodin) என்பவர். இறைமை என்பது சட்டங்கட்குக் கட்டுப்படாத நிரந்தரமான உயர் அதிகாரம் என்று இவர் விளக்கமளித்தார்.

இறைமையின் பண்புகள் (Characteristics of Sovereignty):— இறைமை என்பது நான்கு சிறப்புப் பண்புகளைக் கொண்டுள்ளது. முதலாவதாக, இறைமை வரம்பற்றது (Absolute).

அரசின் அதிகாரத்தை விட உயர்ந்த சட்டபூர்வமான அதிகாரம் அரசினுள்ளும், புறமும் வேறு கிடையாது. இப்பண்பு இறைமைக்கு இருப்பதனால் தான் அரசு அதன் எல்லைகளினுள் காணப்படும் மனிதர்களை விடவும், சங்கங்களை விடவும் உயர்ந்ததாகத் திகழ்கின்றது. இறைமை வரம்பற்றதாதலால் அதனைக் கொண்டுள்ள அரசின் சட்டமியற்றும் அதிகாரத்திற்கு அளவில்லை. அரசின் அதிகாரத்திற்கு எல்லையிருக்குமாயின் அது அரசால் தனக்கு விதிக்கப்பட்டதாக இருக்குமேயன்றி இயற்கையாக அமைந்ததாக இருக்காது.

இறைமையின் இரண்டாவது பண்பு யாவற்றையும் உள்ளடக்கும் தன்மை (universal). அரசின் அதிகார வரம்பிற்குட்படாத எதுவும் அரசின் எல்லைகளினுள் இருக்க முடியாது. அரசின் எல்லைகளினுள் வாழும் மக்கள் மீதும், செயல்படும் சங்கங்கள் மீதும் அரசின் அதிகாரம் செல்லுபடியாகும். அயல்நாட்டுப் பிரதிநிதிகள் மட்டும் இதற்கு விதிவிலக்கானவர். இச் சலுகையை ஒரு அரசு மறுக்கலாம், அல்லது ரத்து செய்யலாம்.

நிரந்தரத்தன்மை (Permanence) இறைமைக்குள்ள மூன்றுவது பண்பு ஆகும். அரசு நிரந்தரமானதினுல் அதன் இறைமையும் நிரந்தரமானது. அரசினின்று இறைமையைப் பிரிக்க முடியாது. இறைமையைப் பயன்படுத்துபவர் மாறலாம். ஆனல் இறைமை முடிவடையாது. ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு இறைமை மாறும். அரசை அழித்தால் தான் இறைமையை அழிக்க முடியும்.

இறைமைய்ய பகுக்க முடியாததென்பது (Indivisible) அதன் நான்காவது பண்பு. வலிமையைக் கூறு போட முடியாது. அங்ஙனம் செய்தால் அது வலிமை ஆகாது. இறைமையைப் பகுப்பதென்பது அதை அழிப்பதற்குச் சமம். இறைமையைப் பகுக்கலாம் என்ற கருத்தும் காணப்படுகின்றது. ஆனல் இக்கருத்தை நாம் ஏற்க முடியாது. ஏனென்றல் உயர் அதிகாரம் என்பது ஓர் இடத்தில் தான் இருக்க வேண்டுமேயன்றி அது பல இடங்களில் பிரிந்து காணப்பட்டால் அது உயர் அதிகாரமாகாது. இறைமை பகுக்கபட முடியும் எனக் கூறுபவர்கள் கூட்டாட்சியை எடுத்துக்காட்டாகக் கூறுகின்றனர். ஆனல் கூட்டாட்சியில் நாம் காண்பது அதிகாரத்தின் பகிர்ந்தளிப்பேயன்றி இறைமையின் பகிர்ந்தளிப்பல்ல.

இறைமையை மாற்றியளிக்க முடியாது (Inalienable). எங்ஙனம் ஒருவன் தன் உயிரை வேறொருவருக்கு மாற்றியளிக்க

முடியாதோ அதேபோல் இறைமையையும் மாற்றியளிக்க முடியாது. அரசின் உயிர் நாடியான இறைமையை அதனின்று பிரித்தால் அரசு மாண்டு போகும். மன்னராட்சியில் மன்னர் இறக்க நேரிட்டால் இறைமை அழிவதில்லை. அது அடுத்த மன்னரிடம் சென்றடைகின்றது. இதனின்று இறைமை மாற்றியளிக்கப் படக்கூடியது எனக் கூறமுடியாது. இறைமை மாறவில்லை. அதைப் பயன் படுத்தும் நபர்களில்தான் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இறைமை சிறப்புரிமை உடையது (Exclusive) இறைமை என்பது அரசுக்கு மட்டும் உரியது என்பதுதான் இதன் பொருள். எல்லோருக்கும், அல்லது பலருக்கு உரிமையானது சிறப்புரிமை ஆகாது. இறைமையைப் பயன்படுத்தும் உரிமை அரசிற்கு மட்டும் தான் உரியது.

இறைமைக் கோட்பாட்டின் வளர்ச்சி:— இன்றைய இறைமைக் கோட்பாடு பதினாறும் நூற்றாண்டில் தோன்றியது எனினும் பல நூற்றாண்டுகட்கு முன்னரே இதைப் பற்றிய கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இறைமைக் கொப்பான வலிமையைப் பற்றிப் பண்டைய கிரேக்க தத்துவ ஞானியான அரிஸ்டாட்டில் குறிப்பிட்டுள்ளார். பண்டைய ரோமாபுரியிலும் இது பற்றிய கருத்துகள் காணப்பட்டன. இடைக்காலத்தில் (Middle Ages) இறைமை பற்றிய கருத்துகள் உருவாவதற்கு உகந்த சூழ்நிலைகள் காணப்படவில்லை. நிலமானியப் பிரபுக்கட்கும் நாட்டின் அரசுகட்கும் இடையே எழுந்த போட்டியின் விளைவாகத் தான் இறைமைக் கோட்பாடு தோன்றி வலுப்பெற்றது.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஜான் பொதான் (Jean Bodon) என்ற அறிஞர்தான் தற்காலத்தில் முதன்முதலாக இறைமையின் தன்மையையும், பண்புகளையும் விளக்கியவர். இவரது விளக்கம், 1576-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இவரது நூலான 'குடியரசு' (Republic) என்பதில் காணப்படுகிறது. அதுநாள் வரை அரசரின் தனித்தன்மை எனக்கருதப்பட்ட இறைமையை பொதான் அதை அரசின் தன்மை என வலியுறுத்தினார். பதினேழாம் நூற்றாண்டில் பல அரசர்கள் தமது எதேச்சதிகாரத்திற்கு வலிவூட்ட இறைமையைப் பயன்படுத்தினர்.

பொதானுக்கு அடுத்தப்படியாக இறைமையைப் பற்றி எழுதியவர் டச்சு (Dutch) எழுத்தாளரான குரோஷ்யஸ் (Grotius) என்பவர். இறைமையின் வெளிநாட்டுப் பண்பை இவர் விளக்கினார். சட்டபூர்வமான இறைமைக்கு முழு வடிவம் அளித்தவர் இங்கிலாந்தைச் சேர்ந்த தாமஸ் ஹாப்ஸ் (Thomas Hobbes) என்பவராவார்.

இறைமை வரம்பற்றது, பகுக்க முடியாதது என்று இவர் கூறினர். இறைமை ஒருவரிடம் தான் இருக்கும் என்பது இவரின் கருத்து. அரசியல் இறைமை என்ற கருத்தை ஜான் லாக் (John Locke) என்ற மற்றொரு ஆங்கிலேய அறிஞர் தோற்றுவித்தார். உயர் அதிகாரம் அரசாங்கத்திடம் காணப்பட்ட போதிலும் இவ்வதி காரத்திற்கும் மேலான அதிகாரம் மக்களிடம் உள்ளது என்று லாக் கூறினர். அரசாங்கத்தின் அதிகாரமும், மக்களின் அதிகார மும் ஒரே வேளையில் பயன்படுத்தப்படுவதில்லை.

இறைமை பற்றிய கருத்துகளை உருவாக்கியவருள் மற்றொருவர் பிரான்சைச் சேர்ந்த ரூசோ (Rousseau) என்பவ ராவர். பொதுநல வேட்கையுடைய பொது உள்ளம் (General-Will) தான் இறைமையுடையது என்பது ரூசோவின் கருத்து. இங்கிலாந்தைச் சேர்ந்த பெந்தாம் (Bentham), ஆஸ்டின்(Austin) ஆகியோர் சட்டபூர்வமான இறைமை என்ற கருத்தை வளர்த் தனர். இறைமை பற்றிய கோட்பாடுகளில் அண்மையில் தோன்றியவை பன்மை இறைமைக் கோட்பாடு (Pluralism) என்பதாகும்.

விளக்கம்

இறைமை என்ற சொல் 'Sovereignty' என்ற ஆங்கிலப் பதத்தின் தமிழாக்கமாகும். இந்த ஆங்கிலப்பதம் 'Sovereign' என்ற பதத்தினின்று தோன்றியதாகும். இதற்கு அரசன் என்று பொருள். மன்னராட்சி பிரபலமடைந்திருந்த நாளில் இறைமைக் கோட்பாடு தோன்றியதால் அப்பொழுது 'இறை' என்பது அரச னையும், 'இறைமை' என்பது அவனின் அதிகாரத்தையும் குறிப் பிட்டன. மக்களாட்சியைப் பொறுத்தமட்டில் இவற்றிற்கு வேறு விளக்கங்கள் தேவை. தற்பொழுது 'இறை' என்பது இறைமை யுடையவரையும், 'இறைமை' என்பது வரம்பற்ற அதிகாரத் தையும் குறிப்பிடுகின்றன.

இறை, இறைமை ஆகியவற்றின் வகைகள் : இறைமை என்பது உயர் அதிகாரத்தைக் குறிப்பிட்ட போதிலும், அது பல வகைப்பட்டது. பல்வேறு அறிஞர்கள் இறைமை பற்றித் தோற்றுவித்த கருத்துகளின் அடிப்படையில் தான் இறைமையும், இறையும் பல வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

1. பெயரளவிலான இறை (Titular Sovereign)

பெயரளவில் மட்டும் அதிகாரத்தைக் கொண்டிருப்பவரைப் பெயரளவிலான இறை எனலாம். சாதாரணமாக, அதிகாரம் ஏது

மற்ற அரசரைக் குறிப்பிடுவதற்காக இப்பதம் பயன்படுத்தப்படு கின்றது. தற்கால அரசன் உயர் பதவியை அலங்கரிப்பவனாக மட்டும் திகழ்வானேயன்றி அதிகாரம் ஏதும் அவனுக்கு இருக்காது. இவன் பெயரில் உள்ள அதிகாரத்தைப் பிறர் பயன்படுத்துவர். இத்தகைய அரசன்தான் பெயரளவிலான இறை எனப்படு கின்றான். இதற்கு எடுத்துக்காட்டாக இங்கிலாந்தின் அரசியைக் குறிப்பிடலாம்.

2. சட்டப்பூர்வமான இறைமை (Legal Sovereignty)

சட்டம் இயற்றுவதற்குள்ள உயர் அதிகாரத்தை இது குறிப்பிடுகின்றது. அரசன் உத்திரவுகளைப் பிரகடனப்படுத்தும் உரிமை சட்டபூர்வமான இறைக்கு (Legal Sovereign) மட்டும்தான் உண்டு. சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட சட்ட பூர்வமான இறை யால் மட்டுமே சட்டங்களைப் பிரகடனப் படுத்தமுடியும். இச் சட்டங்களை மீறுபவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள். சட்டரீதி யான உரிமைகள் யாவும் இந்த இறையால் அளிக்கப்படுபவை யாகும். இதன் அதிகார வரம்பு எல்லையற்றது. இதனைக் கட்டுப் படுத்த யாருக்கும் வலிமை கிடையாது.

இந்தியாவின் சட்டப்பூர்வமான இறையென்று பாராளுமன்றத் தின் இரு அவைகளையும், குடியரசுத் தலைவரையும் இணைத்துக் கூறலாம். சட்ட பூர்வமான இறைமை அதிகார வரம்பற்றது எனக் கூறுதல் தவறு. எவ்வளவு அதிகாரம் இருப்பினும் சில கட்டுப் பாடுகளும் காணப்படுவது இயல்பு.

3. அரசியல் இறை (Political Sovereign)

சட்ட பூர்வமான இறையின் வணக்கத்திற்குரியது அரசியல் இறை என்று பேராசிரியர் டைசி (Prof. Dicey) கூறுகின்றார். அரசியல் இறை என்றால் எது என்று திட்டவட்டமாகக் கூற இய லாது. சிலர் இதை சமூகமென்றும், சிலர் மக்களென்றும், பொதுக் கருத்தென்று சிலரும், பொதுமக்கட் கருத்து என்று சிலரும் கூறுகின்றனர். இக் கூற்றுகள் ஒவ்வொன்றிலும் ஓரளவு உண்மை உள்ளது. ஆனால் இவ்விளக்கங்களை முழுமை யாக ஏற்க முடியாது. வாக்காளர்களை அரசியல் இறை என்றால் இவர்கள் மீது செல்வாக்குடையவர் உட்படமாட்டார்கள். பிறரது செல்வாக்கிற்கேற்பத் தான் வாக்காளர் முடிவெடுக்கின்றனர் என்பது உண்மை. பொதுமக்கள் எல்லோரையும் அரசியல் இறை என முடியாது. ஏனென்றால் அரசாங்கத்தை நிர்ணயம் செய்யும் உரிமை பொதுமக்கள் எல்லோருக்கும் கிடையாது. பொது மக்கட் கருத்து தெளிவற்றதாதலால் அதனை அரசியல் இறை என முடி

யாது. அரசியல் இறை என்பதற்குச் சரியான விளக்கம் அளிப்பது கடினம்.

4. பொதுமக்களின் இறைமை (Popular Sovereignty)

தற்கால மக்களாட்சிகட்கு அடிப்படையாக உள்ளது பொது மக்களின் இறைமையாகும். மக்களாட்சியைப் பொறுத்தமட்டில் அதிகாரம் இருப்பது பொதுமக்களிடம் தான். ஆனால் இவர்களை இறையென்று கூறுவது சரியாகாது. ஏனெனில் மக்கள் எல்லோரும் இறைமையுடையவரல்ல. வாக்குரிமை உடைய மக்களை மட்டும் இறை எனலாம். இங்கும் ஒருபிரச்சினை எழுகின்றது. ஒரு நாட்டில் வாழும் மக்கள் எல்லோருக்கும் வாக்குரிமை இருப்ப தில்லை. வாக்குரிமை உடையவர்களில் ஒரு பகுதியினர் மட்டுமே அதைப் பயன்படுத்துகின்றனர். வாக்காளர்களால் தேர்ந்தெடுக் கப்படும் பிரதிநிதிகள் தான் சட்டங்களை உருவாக்குகின்றனர். ஆனால் இப்பிரதிநிதிகள் தமது அரசியல் கட்சிகட்கும், தலைவர் கட்கும் கட்டுப்பட்டவர்கள். ஆகவே மக்களாட்சியில் எத் தருணத்தில் எவரிடம் அதிகாரம் உள்ளது எனக்கூற இயலாது. இதனால் பொதுமக்கள் இறைமை என்ற கூற்று பொய்ப்பிக்கப் படுகின்றது. பொதுமக்கள் இறைமை என்பது கற்பனை மட்டுமே. இதனால் மக்களுக்கு அதிகாரமேதுமில்லை எனக்கூறக் கூடாது.

5. சட்டப்படியான இறையும் (De Jure Sovereign) நிகழ் முறையிலான இறையும் (De Facto Sovereign)

அரசின் உத்தரவுகளைப் பிரகடனப்படுத்தும் அதிகாரம் படைத்தது தான் சட்டப்படியான இறை என்பது. ஆட்சி புரியும் சட்டப்பூர்வமான உரிமை இதற்குண்டு. புரட்சிகளின் விளை வாகவோ, அல்லது அயல்நாட்டுத் தாக்குதலின் விளைவாகவோ புதிய சக்தியொன்று தோன்றும் பொழுது சட்டப்படியான இறை அதன் வலிமையை இழக்கும். இதற்கு வரலாற்றில் பல சான்றுகள் உள்ளன. இங்கிலாத்தில் ஆலிவர் கிராம்வெல் (Oliver Cromwell), பிரான்சில் நெப்போலியன் போனபார்ட் (Napoleon Bonaparte) போன்றவர் சட்டப்படியான இறையை அகற்றி விட்டுத்தான் பதவிக்கு வந்தனர். இங்ஙனம் பதவிக்கு வருவோர் காலப்போக்கில் தம்மைச் சட்டப்படியான இறையாக மாற்றுவதுண்டு. இங்ஙனம் மாற்றம் ஏற்படாவிடில் சட்டப் படியான இறைக்கும் நிகழ் முறையிலான இறைக்கும் இடையே தகராறு எழ வாய்ப்பு உண்டு. இதைத் தவிப்பதற்காக நடை முறையிலான இறை சட்டப்படியான இறையை அகற்றி விட்டுத் தன்னைச் சட்டப்படியான இறையாக மாற்றிக் கொள்ளும். பலம்

அல்லது சதியின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றி, சட்டப்படியான இறையை அகற்றிவிட்டு, மக்களை தன் ஆணைக்குக் கீழ்ப் படியவைக்கும் நடைமுறை சக்திக்குப் பெயர்தான் நிகழ் முறையிலான இறை என்பது.

ஆஸ்டினின் இறைமைக் கோட்பாடு அல்லது ஒருமை இறைமைக் கோட்பாடு (Austin's Theory of Sovereignty or Monistic Theory of Sovereignty)

1832-ம் ஆண்டு வெளியிடப்பட்ட 'Lectures on Jurisprudence' என்ற தமது நூலில் ஜான் ஆஸ்டின் (John Austin) என்ற ஆங்கிலேய சட்ட வல்லுநர் இறைமையைப் பற்றிய தமது கோட்பாட்டை விளக்கினார். இவரது கோட்பாட்டை ஒருமைக் கோட்பாடென்றும், சட்டக்கோட்பாடென்றும் அழைப்பர். ஹாப்ஸ், பெந்தாம் ஆகியோரது கருத்துகளைத் தழுவியது தான் ஆஸ்டினின் கோட்பாடு. இவரது கோட்பாட்டில் சட்டத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

'பிற தலைவர்கட்குத் தலைவணங்காத நிலையான தலைவர் ஒருவருக்கு ஒரு சமுதாயத்தின் பெரும்பான்மையினர் வழக்கமாகக் கீழ்படிவார்களானால் அத்தலைவர் அச் சமுதாயத்தில் இறைமை உடையவர் எனக் கருதப்படுவார்; அத்தலைவருட்பட்ட அச்சமுதாயம் சுதந்திரமுடைய அரசியற் சமுதாயமாகும்,' என்று ஆஸ்டின் இறைமைக்கு விளக்கம் கொடுத்தார்.

ஆஸ்டினின் கோட்பாட்டை ஆராய்ந்தால் பல உண்மைகள் புலப்படும். முதலாவதாக, சுதந்திரமுடைய அரசியற் சமுதாயத்தின் முக்கிய பண்பு இறைமையாகும். இரண்டாவதாக, இறை என்பது திட்டவட்டமாகக் குறிப்பிடத்தக்க ஒரு நபரிடத்திலோ, அல்லது ஒரு சிலரிடத்திலோ காணப்படும். மூன்றாவதாக, இறையின் அதிகாரம் வரையறுக்கப்பட்டதல்ல; இறையைக் கட்டுப் படுத்த முடியாது. நான்காவதாக, இறைக்குக் கீழ்படிதல் வழக்கமாகும். எல்லோரும் இறைக்குக் கீழ்படிய வேண்டுமென்றில்லை. பெரும்பாலோர் கீழ் படிந்தால் போதுமானது. ஐந்தாவதாக, இறையின் அதிகாரத்தைப் பகுக்கமுடியாது. இறுதியாக, இறையின் உத்திரவுகள் யாவும் சட்டங்களாகும்.

திறனாய்வு

ஆஸ்டினின் இறைமைக் கோட்பாட்டைப் பல ஆசிரியர்கள் மிகக் கடுமையான திறனாய்விற்கு உட்படுத்தியுள்ளனர். இவர்

களில் மெய்ன் (Maine), கிளார்க் (Clark), சிட்ஜ்விக் (Sidgwick) ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

ஆஸ்டின் கூறுவது போன்ற வரம்பற்ற அதிகாரமுடைய அரசன் உலகின் எப்பகுதியிலும் இருந்ததில்லை என்று மெய்ன் சுட்டிக் காட்டுகின்றார். இதற்குச் சான்றாக அவர் சீக்கியர்களின் தலைவராக இருந்த மகாராஜா ரஞ்சித் சிங்கைக் குறிப்பிடுகின்றார். இவர் எதேச்சதிகாரம் உடையவராக இருந்த போதிலும் இவர் பிறப்பித்த உத்திரவுகள் எதுவும் சீக்கியரின் பழக்க வழக்கங்கட்கும், மரபு விதிகட்கும் புறம்பாக அமையவில்லை. இதே நிலை ஐரோப்பாவிலும் காணப்பட்டது எனக் கூறும் மெய்ன், இறைமை வரம்பற்றதாக இருந்ததில்லை என்கின்றார்.

ஆஸ்டினின் கருத்து மக்களாட்சிக்கு ஒவ்வாதது. மக்களாட்சியைப் பொறுத்தமட்டில் மக்களிடம் தான்இறைமை காணப் படுகின்றது. ஆனால் ஆஸ்டின் இதற்கு மாறான கருத்தை வெளியிட்டுள்ளார். ஆஸ்டினின் கோட்பாட்டில் மக்களின் இறைமைக்கு இடமில்லை. இறைமை குறிப்பிட்ட ஒருவரிடத்தில் இருக்கும் என்று ஆஸ்டின் கூறுவது ஏற்க முடியாததொன்றாகும்.

அரசாள்பவனின் உத்திரவுகள் தான் சட்டங்கள் என்று ஆஸ்டின் கூறுவதைப்பலர் கடுமையாகத் தாக்கியுள்ளனர். மரபுச் சட்டங்கள் மன்னனின் உத்தரவுகளினின்று தோன்றியவை அல்ல. எல்லா சட்டங்களையும் அரசரின் உத்தரவுகள் எனக் கூற முடியாது.

இறைமையைப் பகுக்கமுடியாது என்று ஆஸ்டின் கூறுகின்றார். இதனால் தான் இவரது கோட்பாடு ஒருமைக் கோட்பாடு என அழைக்கப்படுகின்றது. தற்கால அரசுகளில் அதிகாரங்கள் பலரிடம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள நிலையை நாம் காண்கின்றோம். இறைமையைப் பகுக்கமுடியும் என்று பன்மை இறைமைக் கோட்பாட்டின் ஆதரவாளர்கள் கூறுகின்றார்கள்.

சட்டபூர்வமான இறைமைக்கும், அரசியல் இறைமைக்கும் இடையேயுள்ள வேற்றுமையை ஆஸ்டின் கவனிக்கத் தவறி விட்டார். ஆகவே அவரது தற்கால அரசுகட்குப் பயன்படாது. ஆஸ்டின் கூறக்கூடிய இறைமை இன்றுள்ள அரசுகளில் காண முடியாது.

அரசாங்கத்தின் உறுப்புக்கள் அளவற்ற அதிகாரத்தை உடையவையாக இருக்கக்கூடாது. அப்படியிருந்தால் மக்கள்

பயனடைய மாட்டார். ஆஸ்டினின் கோட்பாடு பின்பற்றப் பட்டால் அது சட்டத்தின் எதேச்சதிகாரத்திற்கு வழிவகுக்கும்.

ஆஸ்டின் கூறுவது போன்ற வரம்பற்ற அதிகாரம் எந்த அரசுக்கும் கிடையாது. பழக்க வழக்கங்கள், மரபுச்சட்டங்கள், சமயம், பொதுமக்கட் கருத்து போன்றவற்றிற்குக் கட்டுப்பட்டுத் தான் அரசு செயல்பட முடியும் என்றநிலை தற்பொழுது காணப் படுகின்றது.

பன்மை இறைமைக் கோட்பாடு

(Pluralistic Theory of Sovereignty)

இறைமையின் ஒருமைக் கோட்பாட்டிற்கு எதிராகத் தோன் றியது தான் பன்மைக் கோட்பாடு. இன்றைய அரசியற் சமுதா யத்தின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு தோன்றியது தான் பன்மைக் கோட்பாடு. இக்கோட்பாட்டைப் பரப்பியவர் களில் குறிப்பிடத்தக்கவர்கள் என்று வான் கியர்கே (Von Gierke), மெய்ட்லன்ட் (Maitland), பார்க்கர் (Barker), லிண்ட்சே (Lindsay), லாஸ்கி (Laski), மக் ஐவர் (Mac Iver) ஆகியோரைக் கூறலாம்.

அதிகாரம் ஒருமைப் படுத்தப்பட்டுள்ளது என்ற கருத்தைப் பன்மைக் கோட்பாடு எதிர்க்கின்றது. அரசிற்கு மட்டுமே இறைமை உள்ளது என்ற கருத்தையும் இக்கோட்பாடு ஏற்க வில்லை.

மனிதனின் தேவைகட்கேற்பப் பல சங்கங்கள் சமுதாயத்தில் தோன்றிச் செயல்படுகின்றன. சமயம், சமுதாயம், பொருளா தாரம், அரசியல் ஆகியவற்றைச் சம்பந்தப் பட்டவை தான் இச் சங்கங்கள். இவை அரசால் உருவாக்கப்பட்டவை அல்ல. தானே தோன்றியவைதான் இச்சங்கங்கள். இவற்றிற்குள்ள அதிகாரங்கள் அரசினின்று இவற்றிற்குக் கிடைக்கப் பெற்றவை அல்ல. அரசிற்குள்ள சுயாட்சி உரிமை இச்சங்கங்கட்கும் உள்ளது.

இச்சங்கங்கள் ஒவ்வொன்றிற்கும் இறைமை உள்ளது. ஆகவே, பல சங்கங்களிலொன்றான அரசாங்கம் தனக்கு மட்டுமே இறைமை உள்ளது எனக் கூறுவது தவறு. அவை புரியும் பணி களின் தன்மைக்கேற்ப ஒவ்வொரு சங்கங்கட்கும் சுயாட்சி உரிமை அளிக்கப்பட வேண்டும் என்று பன்மைக் கோட்பாடு கூறுகின்றது. உள்நாட்டு இறைமை என்பதை விட்டு விடுதல் இறைமைக்கு

நன்மை தரும். அரசை அடியோடு ரத்து செய்ய வேண்டும் என்று பன்மைக் கோட்பாட்டின் ஆதரவாளர்கள் கருதவில்லை. அதன் அதிகாரத்தைக் குறைக்க வேண்டும் என்பது தான் இவர்களின் நோக்கம். பொதுநலக் கொள்கைக்கு முக்கியத்துவம் உடைய இந்நாளில் இறைமை என்ற கருத்திற்கு இடமில்லை. இறைமையுடைய அரசு என்ற ஒன்று இல்லை என்று பார்க்கரும், லின்ட் சேயும் கூறுகின்றனர்.

அரசு பாதுகாப்புப் பணியில் மட்டும் ஈடுபட்ட காலத்தில் இறைமைக்கு முக்கியத்துவம் இருந்தது. சமூகநலக் கொள்கை தோன்றிய பின் சமூக சேவைக்குத்தான் முக்கியத்துவம் உள்ளதே யன்றி அதிகார வலிமைக்கல்ல. பொது நலனைப் பேண அரசும் இதர சங்கங்களும் இணைந்து செயல்பட வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. மேலும், பன்னாட்டு அரங்கில் போட்டி மனப் பான்மை குறைந்து, ஒத்துழைப்பு மனப்பாங்கு தோன்றியுள்ளதனால் வெளிநாட்டு இறைமை கடைப்பிடிக்கப்பட்டால் அதனால் இடைஞ்சல் ஏற்படலாம்.

அரசிற்குத் தனிச் சிறப்புக் கிடையாது. இதர சங்கங்கட்குள்ள முக்கியத்துவம் மட்டுமே இதற்கும் உள்ளது. அரசினுள் காணப்படும் சங்கங்கட்கெதிராக அரசு செயல்படக்கூடாது. வலிமை அரசிற்குச் சிறப்புரிமையை அளிக்கவில்லை. எல்லா சங்கங்கட்கும் சமமான உரிமைகள் உள்ளன. ஆகவே இறைமையும் இச்சங்கங்களால் பகிர்ந்து கொள்ளப்படுகின்றது. இறைமை என்பது பகிர்ந்து கொள்ள முடியாதது அல்ல.

மதிப்பீடு

பன்மை கோட்பாட்டாளர்களின் கருத்துகளில் பல உண்மைகள் அடங்கியுள்ளன. சமுதாயத்தில் காணப்படும் பல சங்கங்கள் பல முக்கியமான பணிகளைப் புரிகின்றன என்பது மறுக்க முடியாத ஓர் உண்மையாகும். மனித வாழ்வை வளமடையச் செய்யும் பணியில் பல சங்கங்கள் இணைந்து செயல்படுகின்றன. அரசு பல கட்டுப்பாடுகட்குட்பட்டுத் தான் செயல்படுகின்றது. மக்களை மாக்கள் எனக் கருதிய நிலைமாறி அவர்கள் சமுதாயத்தின் அங்கத்தினர் என்ற உணர்வு எழுவதற்குப் பன்மைக் கோட்பாடு பெரிதும் உதவிற்று.

இக் கோட்பாட்டில் சில குறைகளும் உள்ளன. இக்கோட்பாடு முரண்பாடுகளைக் கொண்டுள்ளதைக் காணலாம். கோட்பாட்டளவில் அரசின் அதிகாரக் குறைப்பையும், அதிகாரப்

பகிர்வையும் ஆதரிக்கும் பன்மைவாதிகள் நடைமுறையில் அரசிற்கு அதிக அதிகாரம் அளிக்கின்றனர். சில பணிகளை அரசு மட்டுமே திறம்படப் புரிய முடியும் என்ற கருத்தையும் பன்மைவாதிகள் ஒத்துக் கொண்டனர். அரசு புரியும் பணிகளில் எப் பணியை அதனின்று அகற்ற வேண்டும் என்று இவர்கள் தெளிவு படுத்தவில்லை.

வர்க்க பேதமற்ற சமுதாயம் உருவாகும் வரை இறைமை அகற்றப்படமுடியாது என்று லாஸ்கி கூறுகின்றார். பொதுநலப் பணிகளும், திட்டங்களும் முக்கியத்துவம் பெற்றுள்ள இத்தருணத்தில் அரசின் கட்டுப்பாடும், அதிகாரமும் பெருகியுள்ளதேயன்றிக் குறையவில்லை.

அதிகார வலிமை

(Authority)

ஒரு அரசாங்கத்திற்குள்ள குறிப்பிடத்தக்க சிறப்புப் பண்பு அதிகார வலிமையாகும். எல்லாவகை அரசாங்கங்கட்கும் இச் சிறப்புப்பண்பு காணப்படுகின்றது. அரசாங்கம் அதன் பணிகளைப் புரியப் பயன்படுத்தும் வழிமுறைகளுடன் தொடர்புடையது தான் அதிகார வலிமை. மக்கள் தாமாகவே அரசாங்கத்திற்குக் கீழ் படியலாம் அல்லது அடக்கு முறையைப் பயன்படுத்தி மக்களைக் கீழ்படிய வைக்க அரசாங்கத்திற்கு இயலும். அதிகாரத்திற்குக் கீழ்படிதலும், அதிகார வலிமைக்குக் கட்டுப்படுதலும் இயல்பாகக் காணக்கூடிய மனிதபண்புகளாகும்.

அதிகார வலிமையின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கத்தின் தன்மையை நிர்ணயிக்க இயலும். ஒரு சிலருக்குப் பெரும்பான்மையோர் கட்டுப்பட்டு வாழக்கூடிய அரசாங்க அமைப்பில் காணப்படும் அதிகாரவலிமை பொறுப்பற்றது. இது எதேச்சதிகாரத் தன்மையுடையதாக இருக்கும். மாறாக, மக்களாட்சிப் பண்புடைய அரசாங்க அமைப்பில் பிரயோகிக்கப் படும் அதிகார வலிமை மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்றதாக இருக்கும். இது மக்களுக்குப் பொறுப்புடையதாக இருக்கும். இத்தகைய பண்புடையது மக்களாட்சி முறை அரசாங்கமாகும். மக்களாட்சி முறையிலான அரசாங்கத்தில் மக்களின் கருத்திற்கு மதிப்பளிக்கப்படும். அடக்குமுறைக்கும், எதேச்சதிகாரத்திற்கும் அங்கு இடமிருக்காது. எதேச்சதிகாரப் பண்புடைய அரசாங்க அமைப்பில் அடக்குமுறை பயன் படுத்தப்படும். எதிர்ப்புக்கள் ஒடுக்கப்படும். மக்களை அடக்கி, ஒடுக்குவதற்கு அதிகாரவலிமை

பயன்படுத்தப்படுமிடத்து சட்டத்திற்கு முக்கியத்துவமில்லை. ஆனால் மக்களின் விருப்பு, வெறுப்புக்களுக்கு மதிப்பளித்து அதிகார வலிமை பயன்படுத்தப்படுமிடத்து சட்டத்தின் ஆட்சி காணப்படும். சுருங்கச்சொன்னால், அதிகார வலிமை மக்களிட மிருந்து கிடைக்கப்பெற்றதாகவோ, அல்லாமலோ இருக்கலாம். மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற அதிகார வலிமை மக்களாட்சி யிலும், அல்லாதது எதேச்சதிகார முறையிலான அரசாங் கத்திலும் பயன்படுத்தப்படும்.

அதிகார வலிமை கிடைக்கப் பெறும் முறைகள் எவை? முறைப்படி, மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசாங்கத்திற்கு மக்களால் குறிப்பிட்ட காலத்திற்கு அளிக்கப்படும் அதிகார வலிமை மக்களாட்சிப் பண்புடையதாக இருக்கும். மக்களிட மிருந்து கிடைக்கப் பெறாத, ஆனால் மக்களின் மீது பயன்படுத்தப் படும் அதிகார வலிமை பலவகைப்படும்.

அதிகார வலிமை இறைவனிடமிருந்து கிடைக்கப் பெற்றது என்ற கருத்து மிகப் பழமையானது. அரசனை இறைவனின் வழித் தோன்றலாகக் கருதும் பழக்கம் பண்டைக் காலத்தினின்று இந் நூற்றாண்டு வரையிலும் காணப்பட்டதாகும். இதற்கு எடுத்துக் காட்டாகச் சிலவற்றைக் கூறலாம். சிறந்த ரோமப் பேரரசர்கள் கடவுளராக வணங்கப்பட்டனர். 1950-ஆம் ஆண்டு வரை திபெத்தில் ஆட்சி புரிந்து வந்த தலாய் லாமாவை (Dalai Lama) அவரது பிரஜைகள் புத்தரின் அவதாரமெனக்கருதினர். ஜப் பானியப் பேரரசர் கதிரவனின் வழித்தோன்றல் என்ற கருத்து 1946-ஆம் ஆண்டு வரையிலும் காணப்பட்டது. அரசனின் அதிகார வலிமை இறைவனிடமிருந்து கிடைக்கப்பெற்றதென்ற கருத்தை இங்கிலாந்தில் ஆண்ட மன்னனான முதலாம் ஜேம்ஸ் (James I) வலியுறுத்தினான். இதற்கொத்த கருத்து 1892 ஆம் ஆண்டு புறப்படுவிக்கப்பட்ட ரஷ்யப்பேரரசின் அடிப்படைச் சட்டத்திலும் காணப்பட்டது. தமது அதிகார வலிமை இறை வனிடமிருந்து கிடைக்கப்பெற்றது எனக்கூறி நடத்தப்படும் ஆட்சியில் பல குறைபாடுகள் உள்ளன. இத்தகைய ஆட்சியின் குறைபாடுகளை எடுத்துக்கூற இயலாது. மன்னருக்கு எதிர்ப்பு தெரிவிக்கவும் இயலாது. இத்தகைய ஆட்சி எதேச்சதிகாரத் தன்மையுடையதாக இருக்கும். இறைவனிடமிருந்து கிடைக்கப் பெற்றது என்ற வாதத்தின் அடிப்படையில் அதிகார வலிமை யைப் பயன்படுத்தி மக்களைக் கட்டுப்படுத்துவது இத்தகைய ஆட்சி.

வன்முறையை அடிப்படையாகக் கொண்டு அதிகார வலிமை பயன்படுத்தப்படுவது மற்றொரு வகை. வன்முறையின் விளைவாக அரசுகள் தோன்றின என்பதற்கு வரலாற்றில் பல சான்றுகள் உள்ளன. இங்ஙனம் உருவாகும் அரசுகளில் வாழும் மக்கள் ஆரம்பகாலத்தில் அவர்களை ஆளும் தலைவனுக்கு அஞ்சி கீழ் படிகின்றனர். காலப்போக்கில் அச்சம் மறைந்து இயல்பாகத் தலைவனுக்குக் கீழ்படியும் பண்பு தோன்றுகின்றது. தலைமைப் பதவி வாரிசுரிமையை அடிப்படையாகக் கொண்டதாக மாறும் பொழுது தலைவனின் அதிகார வலிமைக்குக்கட்டுப்படும் பழக்கம் ஒரு இயல்பாக மாறுகின்றது. வன்முறையை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய அதிகார வலிமை பரம்பரைச் சொத்தாக மாறுகின்றது.

அதிகார வலிமை என்பது அரசாங்கத்தின் மிக முக்கியமான பண்பு என்று ஆரம்பத்தில் குறிப்பிட்டோம். அதிகார வலிமை இருப்பதன் பயனாகத்தான் அரசாங்கம் அதன் குறிக்கோள்களை எய்த முடிகின்றது. அரசாங்கத்தின் குறிக்கோள்கள் வெற்றி கரமாகச் செயற்படுத்தப்பட வேண்டுமென்றால் மக்கள் அரசாங்கத் திற்குக் கீழ்படிய வேண்டும். மக்களின் நலனுக்காகச் செயற் படும் மக்களாட்சி அரசாங்கம் மக்களின் மனநிலைக்கேற்ப அதன் கொள்கைகளை உருவாக்கும். இத்தகைய அரசாங்கத்தின் அதி கார வலிமை வன்முறையை தனது பலனாகக் கொண்டிருக்காது. எதேச்சதிகாரத் தன்மையுடைய அரசாங்கத்தின் குறிக்கோள்கள் அதிகார வலிமையுடைய தலைவனின் மனநிலைக்கொப்ப அமை யுமேயொழிய மக்கள் மனநிலையைப் பிரதிபலிக்காது. இத்தகைய அரசாங்கத்தின் அதிகார வலிமைக்கு உறுதுணையாக அமைவது வன்முறையும், அடக்கு முறையுமாகும்.

அதிகார வலிமை மாறுபட்ட தன்மையையுடையது எனக் கண்டோம். அதிகார வலிமையைப் பயன்படுத்தி ஆட்சி புரியும் தலைவர்களை மக்கள் ஏற்பதற்குக் காரணமென்ன என்பதையும், தமது அதிகார வலிமை முறைப்படியானது என்பதற்குத் தலைவர்கள் கூறும் காரணங்களையும் இனி ஆராய்வோம்.

பழக்கத்தின் அடிப்படையில் அதிகார வலிமைக்குக் கட்டுப் படும் முறை இங்கிலாந்து போன்ற நாடுகளில் காணப்படுகின்றது. ஒரு தலைவனுக்குள்ள சிறப்புப் பண்புகள் காரணமாக அவன் அதிகார வலிமை பெறுவதுமுண்டு. இதற்கு எடுத்துக்காட்டாக உலகின் பல தலைவர்களை எடுத்துக் கூறலாம். தமது பேச்சாலும், எடுத்துக்காட்டாலும் மக்களை ஊக்குவிக்கும் திறன் படைத்த

தலைவர்களை மக்கள் ஏற்றுக் கொள்வதுண்டு. சுயநலன் கருதாத தலைவன் மக்களின் நம்பிக்கையையும், ஆதரவையும் அவர்கள் நலனுக்காகவே பயன்படுத்துவான். இதற்கு எடுத்துக்காட்டாக சர்ச்சில் (Churchill), ரூஸ்வெல்ட் (Roosevelt), மகாத்மா காந்தி ஆகியோரைக் கூறலாம். ஆனால் ஹிட்லர் (Hitler) போன்ற தலைவர்கள் தமது வலிமையை அதிகரிப்பதற்காகவே மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற ஆதரவைப் பயன்படுத்தியுள்ளனர். அதிகார வலிமை சட்டபூர்வமாகப் பயன்படுத்தப்படுவதுமுண்டு. தற்கால அரசாங்கங்களில் பெரும்பாலானவற்றில் அதிகார வலிமை சட்டபூர்வமாகத்தான் பயன்படுத்தப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

7. அரசின் குறிக்கோள்
(Aims of the state)

[அரசின் குறிக்கோள்— அரசின் பணிகள்: இன்றியமையாத பணிகள்—விருப்பம் சார்ந்த பணிகள்—தனியுரிமைத் தத்துவம்—கற்பனை நோக்கத்தத்துவம்—பயன்கருது கோட்பாடு—பொதுநலத் தத்துவம்—மார்க்சிசம் அல்லது பொதுவுடைமைத் தத்துவம்—அரசு வேண்டாக் கொள்கை தொழிற் குழுவாட்சிக் கொள்கை—ஃபேபியனிசம்— கில்டு சோஷலிசம்—ஜனநாயக சோஷலிசம்—ஃபாசிசம்— மகாத்மா காந்தியடிகளும் அரசும்.]

அரசின் குறிக்கோள்
(Aims of the State)

அரசு ஏன் தோன்றியது? அதன் குறிக்கோள் என்ன? அரசியல் என்ற இயல் தோன்றிய காலத்தினின்று இன்றுவரை இக் கேள்விகட்கு விடை காணப்பலரும் முயன்றுள்ளனர். இப்படிப் பலரும் அளித்துள்ள விடைகள் அவர்கள் வாழ்ந்த காலத்தில் காணப்பட்ட கோட்பாடுகளைப் பிரதிபலிக்கின்றன.

மனிதரை அங்கத்தினராகக் கொண்ட பிற சங்கங்களைப்போல் அரசும் பல பணிகளைப் புரிகின்றது. அப்பணிகள் என்னென்ன என்பது அந்தந்தக் காலத்துக் கோட்பாட்டைச் சார்ந்தவையாகத் தான் இருக்கும். மனித வரலாற்றைப் பலகட்டங்களாகப் பிரித்து ஆராய்ந்தோமென்றால் அக்கட்டங்கள் ஒவ்வொன்றிலும் காணப் பட்ட அரசுகள், அவை செயல்பட்ட காலத்தில் பிரபலமடைந் திருந்த கருத்துகள், கோட்பாடுகள் ஆகியவற்றிற்கேற்பத் தான் பணிகள் புரிந்தன என்பது தெளிவாகும்.

அரசின் கீழ்வாழும் மனிதரால் மட்டுமே சிறப்புற வாழவும், வளர்ச்சியடையவும் முடியும் என்ற கருத்து இருந்த காலத்தில் அரசு மிக முக்கியமானதாகக் கருதப்பட்டது. தனியுரிமைக் கோட் பாடு பிரபலமடைந்திருந்த காலத்தில் பாதுகாப்புப் பணிமட்டும் அரசு மேற்கொண்டால் போதும் என்று கருதப்பட்டது. சோஷ லிசக் கோட்பாடு தோன்றி, வளரத் தொடங்கிய நாளிலிருந்து

அரசின் குறிக்கோளிலும், அதன் பணிகளிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படலாயின. தற்கால அரசான பொதுநல அரசு தோன்றியதிலிருந்து அரசின் பணிகள் பன்மடங்கு பெருகி விட்டது.

அரசு எப்பணிகளைப் புரியவேண்டும் என்பது பற்றித் திட்ட வட்டமான விதிகளை உருவாக்க முடியாது. அரசுகள் வெவ்வேறு பணிகளைப் புரிகின்றன. எல்லா அரசுகளும் எல்லா பணிகளையும் மேற்கொள்வதில்லை என்பது குறிப்பிடத்தக்கது அரசு புரியும் பணிகளை வரிசைப்படுத்த முடியும் என்று பேராசிரியர் கார்னர் (Prof. Garner) கூறுகின்றார். அரசின் பணிகளை இவர் தேவை யானவை (Essential) என்றும், இயற்கையானவை ஆனால் தேவையற்றவை (Natural but unnecessary) என்றும் முற்றிலும் தேவையற்றவை (Neither natural nor essential) என்றும் வகைப் படுத்தியுள்ளார். வில்லோபி (Willoughby), கெட்டல் (gettel) ஆகியோர் இன்றியமையாதவை என்றும், விருப்பம் சார்ந்தவை (Optional) என்றும் இருவகைப் பணிகளைக் குறிப்பிடு கின்றனர். அடிப்படைப் பணிகளென்றும் (Fundamental) விருப்பம் சார்ந்த பணிகளென்றும் இருவகைகளை உட்ரோ வில்சன் (Wooddrow wilson) கூறுகின்றார். மேற்கூறியவற்றின் அடிப்படையில் நாம் அரசின் பணிகளை இரு பிரிவுகளாகப் பிரிக் கலாம். சில பணிகளை அரசு கண்டிப்பாகப் புரியவேண்டும். இதர பணிகளைப் புரிவதும், புரியாமலிருப்பதும் அரசின் விருப்பத் தைப் பொறுத்தது.

இன்றியமையாத பணிகள் (Essential Functions)

அரசு தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டுமென்றால் அது சில பணிகளைக் கண்டிப்பாக செய்தே ஆகவேண்டும். இவைதான் இன்றியமையாத பணிகள் எனப்படுபவை. பின்வருபவை தான் இத்தகைய பணிகள் என்று உட்ரோ வில்சன் கூறுகின்றார், அமை தியைக்காப்பது, மக்களையும் உடைமைகளையும் முறையே வன் முறையினின்றும், கொள்ளையினின்றும் காப்பது, கணவன் மனை விக்கிடையேயும், பெற்றோர் பிள்ளைகட்கிடையேயும் சட்டபூர்வ மான உறவுகளை நிர்ணயித்தல், உடைமை சம்பந்தப்பட்ட விதிகளை நிர்ணயித்தல், குற்றங்கட்கு விளக்கமளித்து அவற்றிற் குரிய தண்டனைகளை நிர்ணயித்தல், உரிமை வழக்குகளில் நீதி வழங்குதல், குடிமக்களின் அரசில் உரிமைகளையும், கடமை களையும் நிர்ணயித்தல், அயல் நாடுகளின் தாக்குதலினின்று மக்களையும், அரசையும் பாதுகாத்தல் ஆகியவைதான் அரசு புரிய வேண்டிய இன்றியமையாத பணிகள். அரசினுள் அமைதியைக்

காப்பதும், மக்களைக் காப்பதும் தான் இப்பணிகளில் முக்கிய மானவை.

விருப்பம் சார்ந்த பணிகள் (Optional or Ministrant Functions)

சமுதாய நலனையும், மக்களின் நலனையும் வளர்ப்பதற்குத் தேவையான இப்பணிகளை அரசு புரியவோ, அல்லது புரியாமலோ இருக்கலாம். ஆனால் தற்கால அரசுகளில் பல இப்பணிகளைத் தாமாகவே புரிகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. போக்கு வரத்து வசதிகளை உருவாக்கிப் பராமரித்தல், செய்தித் தொடர்பு வசதிகளை உருவாக்குதல், பாசனத்திற்குரிய வசதிகளை உரு வாக்குதல், நாணயமடித்தல், வங்கித்தொழில் நடத்துதல் போன்றவை விருப்பம் சார்ந்த பணிகளாகும். தனிநபர்களாலும் இப்பணிகள் புரியப்பட முடியுமெனினும் இவற்றைச் சரிவரப் புரிய அரசால் மட்டுமே இயலும். ஆகையால் தான் அரசு இப்பணி களைப் புரிகின்றது. வறுமையால் வாடுவோரையும், நோயால் அவதியுறுபவரையும் பராமரித்தல், ஆய்வுகட்குத் தேவையான வசதிகளை அளித்தல், நூலகங்கள், பூங்காக்கள் ஆகியவற்றை உருவாக்கிப் பராமரித்தல் ஆகிய பணிகள் அரசால் மட்டுமே சரிவரப்புரிய முடியும். தற்கால சோஷலிச அரசுகள் மேற்கூறிய பணிகள் மட்டுமன்றி இன்னும் பலபணிகளையும் புரிகின்றன.

இதுவரை நாம் அரசுகள் புரிய வேண்டிய பணிகளை ஆராய்ந் தோம். இனி நாம் இவை பற்றிய கோட்பாடுகளை ஆராய்வோம். அரசு பின்பற்றும் கோட்பாட்டைப் பொறுத்துத்தான் அதன் பணிகளும் அமையும். அரசின் குறிக்கோள் என்ன என்று பல கோட்பாடுகள் விளக்குகின்றன. அவற்றை நாம் சுருக்கமாக ஆராய்வோம்.

1. **தனியுரிமைத் தத்துவம் (Individualism)** : தனிநபருக்குத் தேவையுள்ளளவு சுதந்திரம் அளிக்கப் படவேண்டும் என்பது தான் இத்தத்துவத்தின் மையக்கருத்து. இத்தத்துவம் பதினெட் டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிற்று. மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது, உள் நாட்டில் அமைதியை நிலைநாட்டுவது, அயல்நாட்டுத் தாக்குதலினின்று மக்களைக் காத்தல் ஆகிய பணி களை மட்டும் அரசு புரிந்தால் போதும் என்று இக்கோட்பாடு கூறு கின்றது. தனிநபர்களுடைய அரசியல், சமூக பொருளாதார வாழ்க்கையில் அரசு தலையிடக்கூடாது. எவ்விதக் கட்டுப் பாடுமின்றி அவர்கள் வாழவேண்டும்.

அரசின் உதவியை மக்கள் நம்பியிருந்தால் அவர்கள் முன் னேற்றமடைய முடியாது. பொருளாதாரத்துறையில் அரசின்

தலையீடு இல்லாவிடில் அது நல்ல வளர்ச்சியை அடையமுடியும். வலிமையும், தகுதியும், ஆற்றலும் உடையவர் மட்டுமே வாழ முடியும் என்ற கருத்து இத்தத்துவத்தில் காணப்படுகின்றது. இத்தத்துவத்தைப் பிரபலபடுத்தியவர்களில் குறிப்பிடத் தக்கவர் என்று ஜான் ஸ்டூவர்டு மில் (John Stuart Mill), ஹெர்பர்ட் ஸ்பென்சர் (Herbert Spencer) ஆகியோரைக் கூறலாம்.

மதிப்பீடு

அரசு என்பது தேவைப்படுகின்ற தீயஅமைப்பு என்று தனியுரிமைத் தத்துவத்தின் ஆதரவாளர்கள் கூறுவதை ஏற்க முடியாது. நல்வாழ்விற்கு அரசு இன்றியமையாதது என்ற கருத்து தற்போது காணப்படுகின்றது. பொது முன்னேற்றத்திற்கும், தனிநபர்களின் முன்னேற்றத்திற்கும் அரசு தேவைப்படுகின்றது. தனியுரிமைத் தவத்துவத்தை ஆதரிப்போர் அரசின் சிறப்புப் பண்புகட்கு உகந்தளவு முக்கியத்துவம் அளிக்காது, அதன் குறைபாடுகளை மிகைப்படுத்தியுள்ளனர். தனது நலனை நிர்ணயிக்கும் திறன் மனிதனுக்கு உள்ளது என்ற கூற்று ஏற்க முடியாதது. மனிதர் எல்லோரும் ஒரே அளவு அறிவாற்றலும் திறனும் உடையவரல்ல. தமது நலனை நிர்ணயிக்கும் அறிவை எல்லா மக்களும் கொண்டிருக்க முடியாது. ஆகவே, மக்களது தேவைகளை நிர்ணயிக்க அரசு தேவைப்படுகின்றது. பொருளாதாரத் துறையில் தனியுரிமைத் தத்துவத்தைப் புகுத்துவதனுல் தீமை தான் விளையும். பொருளாதாரத் துறையில் கட்டுப்பாடற்ற உரிமை வழங்கப்பட்டால் அதன் பயனாக ஏகபோக உரிமையும், பொருள்களின் விலைகளில் அடிக்கடி ஏற்றத்தாழ்வும், தொழிலாளர் நலனில் அக்கறையின்மையும், வறுமையும் தான் தோன்றும். ஒரு சிலர் மட்டுமே வசதியுடையவராக வாழ முடியும்.

'தகுதியுடையோர் வாழ்வார்' என்ற உயிரியல் கூற்று மனிதனுக்கு உகந்ததல்ல. தகுதியுடையோர் அல்லது வலியோர் என்பது சிறந்தவரைக் குறிப்பிடாது. சூழ்நிலைகட்கொத்தவாறு தனது வாழ்க்கையை மாற்றியமைத்துக் கொள்ளும் அறிவாற்றல் படைத்த மனிதனை விலங்குகளுடன் ஒப்பிடுதல் தவறு. அரசு தவறுகள் இழைக்கின்றது என்ற காரணத்தால் அதனை உதாசீனப்படுத்தலாகாது. தவறுகள் நிகழ்ந்திருப்பின் அவற்றைத் திருத்தவும் அரசால் இயலும் என்பதை மறத்தலாகாது. சமுதாயத்தின் அங்கத்தினராக மனிதரைத் தனித்தனியாகப் பிரித்தாய்தல் சரியல்ல. மனிதர் இணைந்து வாழ முடியுமேயன்றித் தனித்தல்ல,

2. கற்பனை நோக்கத் தத்துவம் (Idealism): பிளேட்டோ (Plato), அரிஸ்டாட்டில் (Aristotle) ஆகியோரது கருத்துகளினின்று தோன்றியதுதான் இத்தத்துவம். அரசு இயற்கையானது என்று இத்தத்துவம் கூறுகின்றது. மனிதன் முழு வளர்ச்சி அடையவேண்டுமெனில் அரசு கண்டிப்பாகத் தேவைப்படுகின்றது. மக்களுக்குச் சிறந்த வாழ்வு அளிக்க அரசால் மட்டுமே இயலும். கற்பனை நோக்கத் தத்துவத்திற்கு விளக்கமளிந்தவருள் குறிப்பிடத்தக்கவர் என்று ஹெகல் (Hegel), கிரீன் (Green), பொசாங்கே (Bosanquet) ஆகியோரைக் கூறலாம்.

சமுதாயத்தின் மூலமாக மட்டுமே மனிதன் முழுவளர்ச்சியைப் பெற முடியும். அரசு என்பது உயர்ந்த பண்புடைய அமைப்பு. மனிதனின் நலனுக்காகச் செயல்படும் அரசு அவனது விருப்பு, வெறுப்புகளைப் பிரதிபலிக்கின்றது. அரசிற்குக் கீழ் படிவதால் தான் ஒருவன் சுதந்திரத்துடன் வாழமுடிகின்றது. விருப்பத்தின் அடிப்படையில் தான் அரசு அமைக்கப்படுகின்றதேயன்றி வலிமையின் அடிப்படையிலல்ல. அரசிற்குக் கீழ் படிந்தால் நலன்விளையும் என்பதால்தான் மனிதன் அரசிற்குக் கீழ்படிகின்றானேயன்றி அதன் அதிகார வலிமைக்கு அஞ்சியல்ல. மனிதன் சிறப்பாக வாழ்வதற்குத் தடையாக உள்ள யாவற்றையும் அகற்றுவதுதான் அரசின் முக்கியபணி என்று இத்தத்துவத்தை ஆதரிப்பவர் கூறுகின்றனர்.

மதிப்பீடு

கற்பனை நோக்கத் தத்துவம் மிகக் கடுமையான திறனாய்விற்குட்படுத்தப்பட்டுள்ளது. தனி நபர்களை அரசிற்கு அடிமைப் படுத்துவதன் மூலம் இக்கோட்பாடு தனியார் சுதந்திரத்தை அழித்து விடுகின்றது என்று கூறப்படுகின்றது. இக் கோட்பாட்டில் தனி நபர்கட்கு எவ்வகை முக்கியத்துவமும் கிடையாது. அரசிற்கும், சமூகத்திற்கும் இடையே எந்த வேறுபாட்டையும் இக் கோட்பாடு கூறவில்லை. இக்கோட்பாடு அரசிற்கு சர்வாதிகாரத் தன்மையளிக்கின்றது. அரசு எங்ஙனம் இருக்க வேண்டுமென்று கூறாமல் நடைமுறையில் காணப்படுவதை கற்பனை நோக்காக இக் கோட்பாடு கருதுகின்றது. உதாரணமாக, அரிஸ்டாட்டில் (Aristotle) அடிமைத்தனத்தையும், ஹெகல் (Hegel) போரையும் சிறந்ததெனக் கருதுதினர். இக்கோட்பாடு வன்முறையைத் தூண்டுகின்றது. அரசு என்பது ஒரு குறிக்கோளை எய்துவதற்கு உதவும் வழிமுறையேயன்றி ஒரு குறிக்கோள் அல்ல. இதனை கற்பனை நோக்கத் தத்துவம் ஏற்கவில்லை.

3. பயன்கருது கொள்கை (Utilitarianism) : இங்கிலாந்தில் தோன்றிய இக்கோட்பாட்டிற்கு வடிவம் அளித்தவர் ஜெரமி பெந்தாம் (Jeremy Bentham) என்ற ஆங்கிலேய அறிஞர் ஆவார். ஹெல்விஷியஸ் (Helvetius) என்ற பிரெஞ்சு அறிஞரின் கருத்துகளினின்று இக்கோட்பாட்டைத்தாம் உருவாக்கியதாக பெந்தாம் கூறுகிறார்.

பயனுள்ளது மட்டுமே நல்லது என்ற கருத்து இக்கோட்பாட்டிற்கு மையமானது. இன்பம், துன்பம் ஆகிய இரண்டிற்கும் கட்டுப்பாட்டுத்தான் மனிதன் வாழ்கின்றான். மனிதனின் செயல்களைக் கட்டுப்படுத்துபவையும் இவை தான். பயனுடைய யாவும் உபயோகமுடையவை. பயன்படுபவை என்ற காரணத்தால்தான் அரசாங்கமும் சட்டமும் தோன்றியுள்ளன. பயனுள்ளவை என்பதால் தான் மனிதன் இவற்றிற்குக் கீழ்ப்படிகின்றான். 'அதிக அளவு மக்களுக்கு அதிக அளவு நன்மை கிட்டவேண்டும்' என்பது தான் பெந்தாமின் கருத்து. பயன்தான் அரசின் குறிக்கோளேயன்றிச் சுதந்திரம் அல்ல.

மேற்கூறிய மூன்று கோட்பாடுகளும் அரசின் குறிக்கோள்களைப் பற்றிய தாராளப் போக்குக்குடைய (Liberal Theories) கோட்பாடுகளாகும். இனி நாம் சோஷலிசத்தை அல்லது சமத்துவத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள சில கோட்பாடுகளை ஆராய்வோம். தனியுரிமைக் கோட்பாட்டிற்கு நேர் முரணானவைதான் சோஷலிசக் கோட்பாடு. தனியுரிமைக் கோட்பாடு தீவிரமாகச் செயற்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து பல இன்னல்கள் விளைந்தன. இந்த இன்னல்களை அகற்ற வழிமுறை வகுப்பவையாகத்தான் சோஷலிசக் கோட்பாடுகள் தோன்றின. சோஷலிசக் கோட்பாடுகளிடையே வேற்றுமைகளும் காணப்படுகின்றன.

மதிப்பீடு

மனிதன் என்பவன் இன்பம், துன்பம் ஆகிய உணர்வுகள் மட்டுமன்றி வேறுபல உணர்வுகளையும் கொண்டுள்ளவன் என்பதைப் பயன் கருது கோட்பாடு ஏற்கவில்லை. மனிதன் தனது தேவைகளைச் சரிவர உணர்ந்தவன் என்ற கருத்தை ருசுப்பிக்க நடைமுறையில் சான்றுகள் இல்லை. மனிதர் யாவரும் சுயநலவாதிகள் என்ற கூற்று முழுமையாக ஏற்கத்தக்கதல்ல. 'அதிக அளவு மக்களுக்கு அதிக அளவு நன்மை' கிடைக்கச் செய்வது தான் அரசின்குறிக்கோள் என்று பெந்தாம் (Bentham) கூறியுள்

ளார். இது ஏற்க முடியாதது. ஏனெனில் நன்மை, அல்லது இன்பம் என்பது அளவிட முடியாதது.

இக் கோட்பாட்டில் பல குறைபாடுகள் காணப்பட்ட போதிலும், இதனால் பல நன்மைகளும் விளைந்தன. இங்கிலாந்தில் செயற்படுத்தப்பட்ட பல சீர்திருத்தங்கள் இக் கோட்பாட்டால் ஊக்குவிக்கப்பட்டவையாகும். பயன் கருது கோட்பாட்டினர் ஒடுக்கப்பட்டோரிடமும், ஏழைகளிடமும் பரிவு காட்டி சமூக முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்த பழைய பழக்க வழக்கங் களையும் நிறுவனங்களையும் எதிர்த்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

1. பொதுநலத் தத்துவம் அல்லது சோஷலிசம் (Socialism)

தனியுரிமைக் கோட்பாட்டிற்கு முக்கியத்துவம் அளித்ததன் பயனாக இரு விளைவுகள் நிகழ்ந்தன. முதலாவதாக, நாடு பொருளாதாரத் துறையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பெற்றது. இரண்டாவதாக, செல்வமும், சிறப்பும் ஒரு சிலருக்கும் வறுமையும், நலிவும் பலருக்கும் உரிமையாயின. ஏராளமான மக்களின் வாழ்க்கை சீர்கெட்டதைத் தொடர்ந்து தனியுரிமைக் கோட்பாட்டிற்கு நேர்மாறான கோட்பாடு ஒன்று தோன்றிற்று. மக்களின் துயரைத் துடைப்பதற்காகத்தான் பொது நலத் தத்துவம் தோன்றியது. பொதுநலத் தத்துவத்தில் பொருளா தாரத்திற்கு முக்கியத்துவம் காணப்பட்ட போதிலும் அரசியலிலும் இத்தத்துவத்திற்கு முக்கியத்துவம் உள்ளது.

பிறரைச் சுரண்டுவதற்குப் பயன்படுவதும், வீண் செலவினங் கட்குக் காரணமான போட்டியை ஊக்குவிப்பதுமான தனியார் உடைமையை அழித்து யாவருக்கும் தேவையுள்ளளவு சுதந் திரமும், சம வாய்ப்புக்களும் கிட்டுவதற்காகச் சமுதாயத்தை சீர் திருத்தியமைக்கும் திட்டம்தான் பொதுநலத் தத்துவம் என்பது. முன்னேறுவதற்கான வாய்ப்புக்கள் யாவருக்கும் அளிக்கப்படின் வருவாயில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகள் ஓரளவு குறையும். பொதுநலத் தத்துவம் வெற்றியடைய வேண்டுமெனில் அதனைச் செயற்படுத்துவதில் அரசு பெரும் பங்கு வகிக்க வேண்டும். இத் தத்துவத்தைப் பின்பற்றும் அரசு முற்றிலும் மாறுபட்ட தன்மை யுடையதாக இருக்கும். மக்களுக்கு பாதுகாப்பை மட்டும் அளித்து வந்த அரசு எல்லோர் நலனையும் பேணும் பொதுநல அரசாக மாறுகின்றது.

பொதுநலத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு பல கோட்பாடுகள் தோன்றியுள்ளன. இக் கோட்பாடுகளின் மையக்

கருத்துகளில் அதிக வேற்றுமை இல்லை. எனினும் இவை குறிப்பிடும் செயல் முறை விளக்கத்தில் மாறுபாடு காணப்படுகின்றது.

மதிப்பீடு

பொதுநலத் தத்துவம், அல்லது சோசலிசம் வரவேற்கத் தக்க கோட்பாடாகும். இக்கோட்பாட்டில் வன்முறைக்கு இடமில்லை என்பது குறிப்பிடத்தக்கது. முதலாளித்துவ முறையை அகற்ற இக்கோட்பாடு அமைதியான மக்களாட்சி முறைகளை வரவேற்கின்றது. முதலாளித்துவ முறை அகற்றப்பட்டு சோஷலிச சமுதாயம் உருவாக்கப்பட்ட பின்னர் எதேச்சதிகாரம் தோன்ற இக் கோட்பாடு வழி வகுக்கவில்லை என்பது இக் கோட்பாட்டை பொதுவுடைமைக் கோட்பாட்டினின்று வேறுபடுத்திக் காட்டுகின்றது.

2. மார்க்சிசம் அல்லது பொதுவுடைமைத் தத்துவம் (Marxism or Communism)

கார்ல் மார்க்ஸ் (Karl Marx, 1818-1883) என்றவரால் தோற்றுவிக்கப்பட்ட பொதுநலத் தத்துவம் பொதுவுடைமைத் தத்துவம் என்றழைக்கப்படுகிறது. 1848-ம் ஆண்டு வெளியிடப்பட்ட 'கம்யூனிஸ்ட் மானிபெஸ்டோ' (Communist Manifesto) வில் பொதுவுடைமைத் தத்துவத்தின் முக்கிய கருத்துகளை மார்க்ஸ் விவரித்துள்ளார். மனித வரலாற்றை ஆராய்ந்து அதற்கு விளக்கமளிப்பதற்கு ஹெகல் (Hegel) என்ற ஜெர்மானிய அறிஞர் பின்பற்றிய வாதஞ் செய்யும் முறை (Dialectic)யை மார்க்ஸ் கடைப்பிடித்துள்ளார். மனித வரலாற்றிற்கு மார்க்ஸ் அளித்துள்ள விளக்கத்தினின்றுதான் பொதுவுடைமைத் தத்துவம் தோன்றியது.

மனித வரலாற்றிற்குப்பின் வரும் விளக்கத்தை மார்க்ஸ் அளிக்கின்றார். புராதன சமுதாயத்தில் போட்டிகள் காணப்படவில்லை. காலப்போக்கில் ஏற்பட்ட முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் ஏற்ப மனிதனின் வாழ்க்கைத்தரத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்தன. மனிதனின் வளர்ச்சியைப் பல பொருளாதார வளர்ச்சிக் கட்டங்களாகப் பிரிக்கலாம். இக் கட்டங்கள் ஒவ்வொன்றிலும் மூலப்பொருட்களை கட்டுப் படுத்திய மனிதர்கள் பிறரைச்சுரண்டுபவராகவும், யாவற்றையும் கட்டுப்படுத்தக்கூடிய வலிமை உடையவராகவும் இருந்தனர். உதாரணமாக, நிலமானியமுறை காணப்பட்ட காலத்தில் நிலத்தைத் தமது உடைமையாகக் கொண்டிருந்த பிரபுக்கள் வலிமையுடையவராக இருந்தனர். தொழிற்புரட்சியைத் தொடர்ந்து தொழிற்சாலைமுறை

தோன்றியபொழுது மூலப்பொருட்களையும், தொழிற்சாலைகளையும் தமது உடைமையாகக் கொண்டிருந்த முதலாளிகள் வலிமை பெற்றனர். மனித வரலாற்றின் ஒவ்வொரு கட்டத்திலும் காணப் பட்ட அரசாங்க அமைப்பு அக்கட்டத்தில் சமுதாயத்தில் வலிமை யுடையவரின் கைபொம்மையாகத்தான் செயல்பட்டது.

பொதுவுடைமைத் தத்துவம் செயற்படுத்தப்படும் முறையை மார்க்ஸ் படிப்படியாக விவரித்துள்ளார்.

அ. இனப் போராட்டம் (Class war):— தனியார் உடைமை என்பது தோன்றியதைத் தொடர்ந்து சமுதாயத்தில் இரு வகுப் புகள் தோன்றின. உள்ளவர் (Haves) என்றும், இல்லாதவர் (Have - nots) என்றும் மக்கள் இரு வர்க்கங்களாக மாறினர். உள்ளவர் உடைமைகளின் உரிமையாளராகவும், இல்லாதவர் தமது தொழிற்திறனைக் கொண்டு வாழ்க்கை நடத்துபவராகவும் இருந்தனர். இவ்விரு வர்க்கத்தினரிடையே விரோத மனப் பான்மை வளர்ந்தது. முதலாளி, தொழிலாளி என்று இரு வர்க்கத்தினர் காணப்பட்ட இடமெல்லாம் இதே நிலைதான்.

ஆ. மிகை மதிப்பு (Surplus value):—தொழிலாளிக்கு நியாய மாகக் கிடைக்க வேண்டியதை முதலாளி அபகரித்துக் கொள் வதன் காரணமாகத்தான் முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையே விரோத மனப்பான்மை தோன்றிவளர்கிறது. தொழி லாளியின் உற்பத்தித் திறனல் தான் ஒருபொருளுக்கு மதிப்பு கிட்டுகின்றது. தொழிலாளியின் உழைப்பின் பயனாகக்கிடைக்கும் லாபத்தை முதலாளி தனதாக்கிக் கொள்கின்றான். இங்ஙனம் செய்வதற்கு அரசும் முதலாளிக்கு உதவுகின்றது. முதலாளி வர்க்கத்தின் கைபொம்மையான அரசு தொழிலாளர்களின் புரட்சி யினின்று முதலாளியைக் காக்கின்றது.

இ. சமுதாயப் புரட்சி (Social Revolution):— மேற்கூறிய நிலை நிரந்தரமாகத் தொடர முடியாது. காலப்போக்கில் உடைமை என்பது ஒரு சிலரது உரிமையாகின்றது. அண்டிப் பிழைப்பவரின் எண்ணிக்கை பன்மடங்காகப் பெருகுகின்றது. தொடர்ந்து இன்னலை அனுபவிக்க முடியாத பாட்டாளி வர்க்கத் தினர் ஒன்றுபடுகின்றனர். இதனைத் தொடர்ந்து புரட்சி எழுகின்றது இப் புரட்சியின் பயனாக முதலாளி வர்க்கம் ஒடுக்கப் பட்டு, மூலப்பொருட்கள் யாவும் பாட்டாளி வர்க்கத்தின் கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வரப்படும்.

ஈ. பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகார ஆட்சி (Dictatorship of the Proletariat) :— பாட்டாளி வர்க்கத்தின் புரட்சி தோன்றும் வரையிலும் வசதியுடன் வாழ்ந்து வந்த முதலாளி வர்க்கம் எளிதில் தனது உரிமைகளையும், சலுகைகளையும் விட்டுக் கொடுக்காது. வலுக்கட்டாயமாக இவ்வர்க்கத்தின் ஏக போக உரிமைகளும், சலுகைகளும், ஓர் ரத்தப்புரட்சியின் மூலம் அகற்றப்பட்டு பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகார ஆட்சி அமைக்கப்படுகிறது. முதலாளி வர்க்கம் பூண்டோடு களையப்படும் வரை இப்பாட்டாளி வர்க்கத்தின் இச்சர்வாதிகார ஆட்சி நீடித்து நிற்கும்.

உ. அரசின் மறைவு (Withering away of the State) :— முதலாளி வர்க்கம் அடியோடு அழிக்கப்பட்ட பின் அரசு தேவைப்படாது. முதலாளி வர்க்கத்தின் பாதுகாவலனை அரசு தானே மறையும். தமது உரிமைகளையும், கடமைகளையும் உணர்ந்த பாட்டாளி வர்க்கத்தைக் கட்டுப்படுத்த நிறுவனம் ஏதும் தேவைப்படாது.

ஊ. வர்க்க பேதமற்ற சமுதாயம் (Classless Society) :— வர்க்க பேதங்கள் மறைந்து, முதலாளி வர்க்கத்தின் கை பொம்மையான அரசும் மறைந்த பின்னர் ஒரு புதிய சமுதாயம் தோன்றும். 'ஒவ்வொருவரும் தமது திறனுக்கேற்ப உழைக்க வேண்டும்; ஒவ்வொருவரும் தமது தேவைக்கேற்ப ஊதியம் பெற வேண்டும்' என்ற கொள்கையுடையதாக இப்புதிய சமுதாயம் அமையும் இதுதான் பொதுவுடைமைச் சமுதாயம்.

மதிப்பீடு

கார்ல் மார்க்ஸ் (Karl Marx) உருவாக்கிய பொதுவுடைமைத் தத்துவம் பல குறைபாடுகளைக் கொண்டுள்ளது: மனித வரலாறென்பது வர்க்கப் போராட்டத்தைக் குறிப்பிடுகின்றதென்பது ஏற்க முடியாத கருத்து. முதலாளித்துவ முறை தொழிலாளர்களின் அவதியை அதிகரிக்கச் செய்யும் என்ற கூற்று நடைமுறையில் ருசுப்பிக்கப்படவில்லை. தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் நிகழ்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. முதலாளித்துவ முறை அகற்றப்பட்டால் அதன் விளைவாகப் பொதுவுடைமைச் சமுதாயம் தோன்றும் என்று திட்டவட்டமாகக் கூற முடியாது என்று பேராசிரியர் லாஸ்கி (Laski) கூறுகின்றார். பாட்டாளி வர்க்கத்தின் எதேச்சதிகாரம் வரவேற்கத் தக்கதல்ல. ஏனெனில், எல்லா எதேச்சதிகாரங்களும் தீமையையே விளைவிக்கும்.

கார்ல் மார்க்ஸ் பொருளாதாரம் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகட்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்துள்ளார். அரசு மறைந்து விடும் என்ற கூற்று ஏற்க முடியாதது. அரசு என்பது ஒரு வர்க்கத்தினருக்கு எதிரான அமைப்பு என்பது சரியல்ல. இக் கோட்பாடு வன்முறையை ஆதரிக்கின்றது. நல்வாழ்வு எய்த வேண்டுமெனில் வன்முறை பயன் படுத்தப்பட வேண்டுமென்றில்லை.

பொதுவுடைமைத் தத்துவத்தில் மேற்கூறிய குறைபாடுகள் காணப்பட்டப் போதிலும் அது பிரபலமடைந்துள்ள கோட்பாடு என்பதை மறக்க முடியாது.

3. அரசு வேண்டாக் கொள்கை (Anarchism)

அரசு வேண்டாக் கொள்கை மிக எளிமையான கொள்கையாகும். தீமையின் முழு உருவமான அரசு உடனடியாக அழிக்கப்படவேண்டுமென்பது இக் கொள்கையின் வாதம். இக்கொள்கை மிகப் பழமையான அரசியற் கொள்கைகளில் ஒன்றாகும். எனினும், பதினேழாம், பதினெட்டாம் நூற்றாண்டுகளில் பிரபலமடைந்த இயற்கை உரிமை வாதம் அரசு வேண்டாக் கொள்கையின் வளர்ச்சியை ஊக்குவித்தது. இக் கொள்கையைப் பரப்பியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் என்று வில்லியம் காட்வின் (William Godwin) என்ற ஆங்கிலேயரையும், ஜோசப் பிரவுதான் (Joseph Proudhon) என்ற பிரஞ்சுக்காரரையும், மைக்கெல் பகுனின் (Michael Bakunin), பீட்டர் குரொபோட்கின் (Peter Kropotkin), லியோ டால்ஸ்டாய் (Leo Tolstoy) ஆகிய ரஷ்யர்களையும் கூறலாம்.

மனிதனின் வளர்ச்சிக்கு அரசு தடையாக உள்ளது என்பது காட்வினின் கருத்து. தனது அதிகார வலிமையைப் பயன் படுத்தி அநீதியை வளர்க்கும் அரசு அகற்றபட வேண்டும் என்று இவர் கூறினர். அரசு வேண்டாக்கொள்கையின் தந்தை எனக் கருதப்படுவர் பிரவுதான். இவர் அரசை மிக வன்மையாகக் கண்டித்தார். சமுதாயத்தில் தீமைகள் காணப்படுவதற்கு அரசுதான் காரணம் என்று இவர் கருதினர். பகுத்தறிவிற்கும், நீதிக்கும் முரணானது அரசு. தனியார் உடைமை என்பது திருட்டுச் சொத்து. அந்த தனியார் உடைமைக்கு அரசு பாது காப்பளிக்கிறது. அரசு அகற்றப்பட்டு எல்லோருக்கும் உடைமை உரிமை வழங்கப்பட வேண்டுமென்று பிரவுதான் கூறினர்.

அரசு, உடைமை, சமயம் ஆகிய மூன்றும் மனிதனின் புராதனப் பண்பைப் பிரதிபலிப்பவையாதலால் இவை மூன்றும்

மறைய வேண்டும் என்று பகுனின் கூறினுர். அரசு என்பது இயற்கைக்கு மாருனது என்று குரோபோட்கின் கருதினுர். எதே சதிகாரம், அடக்குமுறை ஆகியவற்றின் கருவியான அரசு தேவையற்றது என்பது இவருடைய வாதம்.

இவர்களின் கருத்துப்படி அரசு வெறுக்கப்பட்ட ஒருநிறுவனம்; பிரதிநிதித்துவமுறை பயனற்றது. தனிநபர்களது தனித் தன்மை முக்கியத்துவம் உடையது. தனியார் உடைமை என்பது வரவேற்கத்தக்கதல்ல.

இக்கொள்கையைச் செயற்படுத்துவது பற்றி இரண்டு கருத் துகள் காணப்படுகின்றன. தூண்டுதல், பிரச்சாரம், விவாதம் ஆகிய அமைதியான முறைகளைப் பின்பற்றி இக்கொள்கையைச் செயற்படுத்த வேண்டுமென்பது ஒருகருத்து. சிலர் வன்முறையை ஆதரிக்கின்றனர்.

மதிப்பீடு

அரசு சுதந்திரத்தை அழிக்கின்றது என்பது தவருன கருத்து. மாருக, சுதந்திரத்தைக் காப்பதுதான் அரசின் முக்கிய பணி களிலொன்ருகும். அரசுவேண்டாக் கொள்கையை உருவாக்கிய வர்கள் மனிதனின் பண்பை முழுமையாக ஆராயவில்லை. மனிதன் சுயநல உணர்வு மட்டுமன்றி ஒத்துழைக்கும் மனப் பாங்கையும் கொண்டுள்ளான். அரசுவேண்டாக் கொள்கையினர் உருவாக்கமுனையும் சமுதாயம் எய்த முடியாத கனவாகும். இக் கோட்பாடு வன்முறையை ஆதரிக்கின்றது. இதுவரவேற்கத் தக்கதல்ல. வன்முறை வெறுப்பைத் தூண்டுமேயொழிய நல்லு ணர்வை வளர்க்காது.

4. தொழிற் குழுவாட்சிக் கொள்கை (Syndicalism)

தொழிற் சங்க இயக்கத்தின் விளைவாகப் பத்தொன்பதாம் நூற்ருண்டின் இறுதியில் ஃபிரான்சில் தோன்றியது இக்கொள்கை. அரசியற் கட்சிகளையும், அமைதியான வழி முறைகளையும் பின் பற்றினுல் தமது குறிக்கோளை அடைய முடியாது என்றுணர்ந்த பிரெஞ்சு தொழிற் சங்கத்தினர் தொழிற் குழுவாட்சிக் கொள்கை தோன்ற வழி வகுத்தனர். தொழிலாளர்களின் வாழ்க்கையை வளமுறச் செய்ய அரசால் இயலாது என இவர்கள் கருதினுர்கள். பொதுவுடைமைத் தத்துவமான வர்க்கப் போராட்டத்தை இவர்கள் வரவேற்றனர். தொழிலாளர்களின் வர்க்க உணர்ச்சிக்கு உரு அளிப்பது தொழிற் சங்கத்தின் பணியாகும். மனிதனின்

தேவைகளில் பொருளாதாரத் தேவைகள்தான் அடிப்படையானவையாதலால் மனிதரின் சங்கங்களுள் முக்கியமானது தொழிற் சங்கமாகும். அரசியற் கட்சிகள் என்பவை கருத்துகளைப் பிரதிநிதிகரிக்கின்றன. ஆனால் தொழிற் சங்கங்கள் தேவைகளைப் பிரதிநிதிகரிக்கின்றன. ஆதலால் இவைதான் முக்கியமானவை.

தொழிற் குழுவாட்சிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு நேரடி நடவடிக்கைகள்தான் உகந்தவை. வேலை நிறுத்தம், வேலையைப் புறக்கணித்தல், தொழிற் சங்க நடவடிக்கைகள், சீர் குலைவு செய்தல் ஆகியவைதான் இது மேற்கொள்ளும் நேரடி நடவடிக்கைகள். சமரசம் வரவேற்கத் தக்கதல்ல. தொழிலாளர் நலனுக்கெனச் சட்டமியற்றுதலை தொழிற் குழுவாட்சிக் கொள்கையைக் கொண்டோர் விரும்பவில்லை. மக்களாட்சி முறை அரசை முதலாளித்துவ வர்க்கத்தின் அரசியல் நிறுவனம் என இவர்கள் கருதினார்கள்.

தொழிற் குழுவாட்சியை அமைக்கத் தொழிலாளர்கள் நடத்தும் போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில் நடக்கும் பொது வேலை நிறுத்தம் அரசையும், வர்க்கப்பாகுபாட்டையும், தனியார் உடைமையையும் அகற்ற வழி வகுக்கும். இதன் பின் உருவாக்கப்படும் சமுதாயத்தில் தொழிற் சங்கங்களைக் கொண்ட பொருளாதாரக் கூட்டாட்சி அமைப்பு நிறுவப்படும்.

மதிப்பீடு

தொழிற் சங்கம் மட்டுமே அடிப்படையானதும், நிரந்தரமானதுமான அமைப்பு என்ற கருத்து தவறானது. குடும்பம் போன்ற அடிப்படை அமைப்புகளுக்கு இக்கோட்பாடு முக்கியத்துவம் அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. உற்பத்தியாளர்களின் நலனில் மட்டும் அக்கறை கொள்ளும் இக் கோட்பாடு நுகர்வோரைப் புறக்கணிக்கின்றது. இக்கோட்பாடு வலியுறுத்தும் வழிமுறைகள் ஏற்கக் கூடியனவையல்ல. தற்பொழுதுள்ள சமுதாயம் அழிக்கப்பட்டபின் எத்தகைய சமுதாயம் உருவாக்கப்படும் என்பதை இக்கோட்பாட்டை ஆதரிப்போர் தெளிவுபடுத்தவில்லை. அரசைப் பற்றி தவறான கருத்து இக்கோட்பாட்டில் காணப்படுகின்றது.

5. ஃபேபியனிசம் (Fabianism)

1884-ம் ஆண்டு இங்கிலாந்தில் நிறுவப்பட்ட ஃபேபியச் சங்கத்தின் (Fabian Society) கொள்கைகள்தான் ஃபேபியனிசம்

என்றழைக்கப்படுகின்றன. அன்ருடப் பிரச்சினைகளை விவாதிப்பதற்கென சில சிந்தனையாளர்களால் நிறுவப்பட்டதுதான் இச் சங்கம். கல்வித் தேர்ச்சியும், அறிவு முதிர்ச்சியும் பெற்றவர்களான ஜார்ஜ் பெர்னுட்ஷா(George Bernard Shaw), சிட்னி வெப் (Sidney Webb), பியரிட்ஸ் வெப் (Beatrice Webb), எச் ஜி. வெல்ஸ் (H. G. Wells), ஆனி பெசன்ட் (Annie Besant), கிரஹாம் வாலஸ் (Graham Wallas), ராம்சே மக்டொனுல்டு (Ramsay Mac Donald) ஆகியோர் இச்சங்கத்தில் உறுப்பினராக இருந்திருக்கின்றனர்.

ஃபேபியனிசத்தின் முக்கிய கொள்கைகளாவன: தற்கால சமுதாயம் பல குறைபாடுகளைக் கொண்டுள்ளது. இன்னல் அனுபவிப்பவர் பலர். வசதியை அனுபவிப்பவர் சிலர் என்ற நிலை காணப்படுகின்றது. அரசியற் சுதந்திரம் காணப்பட்ட போதிலும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் மலிந்து விட்டன. இச் சீர்கேடான முறை மாற வேண்டுமெனில் யாவும் சீர்திருத்தியமைக்கப்படவேண்டும்.

மக்களாட்சி முறையைப் பின்பற்றிப் புதிய சமுதாயம் உருவாக்கப்படவேண்டும். புதிய சமுதாயத்தில் எல்லோருக்கும் சம வாய்ப்புக்கள் அளிக்கப்படும். சிறப்புச் சலுகைகள் ரத்து செய்யப்படும். சிலரது அதிகார வலிமை ரத்து செய்யப்படும். பொருளாதாரம் சம்பந்தப்பட்ட யாவும் கூட்டுடைமையாக்கப்பட்டு மக்களின் பொதுக் கட்டுப்பாட்டின் கீழ் விடப்படும்.

மேற்கூறிய மாற்றம் உடனடியாக நிகழாது. முதல் சோஷலிசக் கருத்துகள் பரப்பப்படவேண்டும். இக்கருத்துகளில் நம்பிக்கையுள்ளவர்கள் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். சோஷலிசத்தை ஆதரிக்கும் பொதுமக்கட் கருத்து உருவாக்கப்படவேண்டும். சுருங்கச் சொன்னுல், மக்களாட்சி முறையைப பயன்படுத்திச் சோஷலிச சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.

இத் தத்துவத்தை கூட்டுடைமைத் தத்துவம் (Collectivism) என்றும் அழைப்பதுண்டு. இத்தத்துவமும் பொதுவுடைமைத் தத்துவமும் ஒரே குறிக்கோளைக் கொண்டவை எனினும் அவைகள் பின்பற்றும் வழி முறைகள் மாறுபட்டவை. அமைதியான முறையில் சோஷலிசத்தைக் கொண்டு வரவேண்டும் என்று ஃபேபியனிசம் கூறுகின்றது: வன்முறையைப் பயன்படுத்திச் சோஷலிச சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்று பொதுவுடைமைத் தத்துவம் கூறுகின்றது.

மதிப்பீடு

ஃபேபியனிசம் பிரபலமடையவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. அறிஞர்கள் மட்டுமே இக்கோட்பாட்டை அறிந்திருந் தனர். நடைமுறையில் பல முன்னேற்ற நடவடிக்கைகள் எடுக்க படுவதற்கு இக்கோட்பாடு உதவியுள்ளது. இங்கிலாந்தில் செயற் படுத்தப்பட்ட பல சமூக நலத்திட்டங்கட்கு இக்கோட்பாடு வித் திட்டது. படிப்படியாக மக்களாட்சி முறைகளினூடே சோஷ லிசத்தைச் செயற்படுத்த முற்படும் இந்தியாவிற்கு ஃபேபியனிசம் உகந்தது எனலாம்.

6. கில்டு சோஷலிசம் (Guild Socialism)

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் எஸ். ஜி. ஹாப்சன் (S. G. Hobson), ஜி. டி. எச். கோல் (G. D. H. Cole) போன்ற ஆங்கில அறிஞர்கள் சிலரால் உருவாக்கப்பட்டது கில்டு சோஷ லிசம் என்ற இக்கோட்பாடு. ஊதியமுறை ரத்து செய்யப்பட வேண்டுமென்றும், தொழில்களில் தொழிலாளர்கட்கு தன்னாட்சி உரிமை இருக்க வேண்டுமென்றும் இக்கோட்பாடு கூறுகின்றது.

தற்கால சமுதாயத்தில் வறுமையும், ஏற்றத்தாழ்வுகளும், பாதுகாப்பின்மையும் காணப்படுகின்றன. பாராளுமன்றமுறை தவறானது. பணிகளின் அடிப்படையில் பிரதிநிதிகள் தேர்ந் தெடுக்கப்பட வேண்டுமேயன்றி இன்றுள்ளது போல் மக்கட் தொகையின் அடிப்படையிலல்ல. சமுதாயத்தில் காணப்படும் பல சங்கங்களுள் ஒன்றான அரசாங்கத்தின் அதிகாரம் அளவோடு இருக்கவேண்டும்.

பொருளாதாரத் துறையைப் பொறுத்தமட்டில் ஊதியமுறை காரணமாக அதில் குறைபாடுகள் காணப்படுகின்றன. ஊதியத் திற்காக உழைக்கும் தொழிலாளிக்கு உற்பத்தி முறையின்மீதும், அவன் உற்பத்தி செய்யும் பொருட்டுகள் மீதும் எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லை. தொழில்களை நிர்வகிக்கும் உரிமை தொழிலாளர்கட்கு அளிக்கப்பட்டால்தான் பொருளாதாரச் சுதந்திரம் கிட்டும்.

கில்டு சோஷலிச சமுதாயம் பின்வரும் அமைப்பைக் கொண் டிருக்கும். ஒவ்வொரு தொழிலும் அதற்குரிய கழகம் ஒன்றினால் நிர்வகிக்கப்படும். பொருட்களின் விலைகளை நிர்ணயிப்பதில் நுகர்வோரின் சங்கங்களும், உற்பத்தியாளர்களின் சங்கங்களும் ஒத்துழைக்கும். பொதுப்படையான பணிகளைப் புரிவதற்கென ஒரு பாராளுமன்றம் காணப்படும். கூட்டுடைமை முறையையும்,

மக்களாட்சி முறையையும் பின்பற்றித்தான் இப்புதிய சமுதாயம் உருவாக்கப்படும். இக்கோட்பாடு தற்பொழுது மறைந்து விட்டது.

மதிப்பீடு

இக்கோட்பாடு வரவேற்கத்தக்கது. அரசை வேண்டாததென இக்கோட்பாடு ஒதுக்கவில்லை. இக்கோட்பாட்டில் அரசின் பணிகள் வரையறுக்கப்படுகின்றன.

இக்கோட்பாட்டிலும் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. தற்கால சமுதாயத்திற்கு இக்கோட்பாடு உகந்ததல்ல. இடைக் கால தொழிற் குழுக்கள் இக்காலத்திற்கு ஒத்தவையல்ல. தொழிற் சாலைகள் தொழிலாளிகளால் கட்டுப்படுத்தப்பட வேண்டுமென்பது நடைமுறையில் காணமுடியாதது. பிற நடவடிக்கைகளினின்று பொருளாதார நடவடிக்கைகளைப் பிரிப்பது இயலாதது. கில்டு சோஷலிஸ்டுகள் உருவாக்க முனையும் அரசு நடைமுறையில் செயல்பட முடியாதது. பணிகளின் அடிப்படையிலான மக்க ளாட்சியும் செயற்படுத்த முடியாதது.

7. ஜனநாயக சோஷலிசம் (Democratic Socialism)

மக்களாட்சி முறைகளைப் பின்பற்றிச் சோஷலிசத்தைச் செயற்படுத்த முடியும் என்பது இன்று உலகின் பல பகுதிகளிலும் நிரூபிக்கப்பட்டு வருகின்றது. புரட்சியால்தான் சோஷலி சத்தைச் செயற்படுத்த முடியும் என்ற கருத்திற்குத் தற்பொழுது வரவேற்பு கிடையாது. சமூகச் சீர்திருத்தத்தையும், பொருளாதார முன்னேற்றத்தையும் மக்களாட்சி முறையைப் பின்பற்றிக் கொண்டு வரமுடியும் என்ற கருத்து பிரான்ஸ், இத்தாலி, மேற்கு ஜெர்மனி, ஸ்விட்சர்லாந்து, ஹாலண்ட், நார்வே, ஸ்வீடன், டென்மார்க் ஆகிய நாடுகளில் உள்ள அரசியற் கட்சிகள் கொண் டுள்ளன. இங்கிலாந்தின் தொழிற்கட்சியும் இக்கருத்தைக் கொண்டுள்ளது. இனப்போராட்டம், புரட்சி, முதலாளித்து வத்தை அழித்தல், தனியார் உடைமையை ரத்து செய்தல் ஆகிய கருத்துகளை இக்கட்சிகள் கொண்டுள்ளவை அல்ல. அமைதியான முறையில், மக்களாட்சிப் பண்புகளைப் பயன்படுத்தி படிப்படியாகச் சீர்திருத்தத்தைக் கொண்டு வருவது தான் இக் கட்சிகளின் குறிக்கோள். இக்குறிக்கோள் நமது நாட்டிலும் காணப்படுகின்றது. எந்த அரசில் மக்களாட்சி முறைகளைப் பின்பற்றி சமுதாயத்தில் சீர்திருத்தம், தொழிலாளர் முன்னேற்றம் ஆகியவை கொண்டு வர முயற்சிகள் எடுக்கப்படுகின்றனவோ

அங்கு ஜனநாயக சோஷலிச முறை பின்பற்றப்படுகின்றன எனக் கூறலாம்.

முதல் உலகப் போருக்குப் பின் இரு முக்கியமான கோட்பாடுகள் உலகில் தோன்றின. இக்கோட்பாடுகளிலொன்று மேற்றிசையிலும், மற்றொன்று கீழ் திசையிலும் தோன்றியது. மேற்றிசையில் தோன்றிய கோட்பாடு மறைந்து விட்ட போதிலும் அதன் தீய விளைவுகளை உலகு இன்றும் மறக்கவில்லை. கீழ்த்திசையில் தோன்றிய கோட்பாடு தற்பொழுது படிப் படியாக உலகின் பல்வேறு பகுதிகளிலும் பரவத் தொடங்கியுள்ளது.

மதிப்பீடு

ஜனநாயக சோஷலிசம் வரவேற்கத்தக்கதெனினும் இக் கோட்பாடு பல தீய விளைவுகளைத் தோற்றுவிக்கும் என்று கூறப்படுகின்றது. எதேச்சதிகாரத்தன்மையும், அரசின் பணித் துறையின் சர்வாதிகாரமும் தோன்றக்கூடும். ஊழலும், விரோத மனப்பான்மையும் மலிந்து விடும். ஏராளமான பணிகளைப் புரியும் அரசு அவற்றைத் திறம்படச் செய்யாது. பணிகளைப் புரிதலில் காலதாமதமேற்படும். அரசு பொறுப்பற்றதாகப் பணி புரியும் நிலையும் எழக்கூடும். தனியார் துவக்க உணர்வு நலிவுறும். மேலும், சோஷலிசம் என்பது மனிதனின் இயற்கைப் பண்பிற்குப் புறம்பானது.

மேற்கூறிய குறைபாடுகள் இருந்த போதிலும் தற்பொழுது உலகின் பல்வேறு பகுதிகளிலும் இக்கோட்பாடு செயற் படுத்தப் பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. குறைபாடுகளை அகற்ற அரசு முயற்சிகள் எடுத்தால் இக்கோட்பாடு வெற்றி யடையும்.

அ. ஃபாசிசம் (Fascism):— தனியுரிமைத் தத்துவம், முதலாளித்துவம், சோஷலிசம், பொதுவுடைமைத் தத்துவம் ஆகியவற்றிற்கு எதிராகத் தோன்றியதுதான் ஃபாசிசம் என்ற கொள்கை. முதல் உலகப் போருக்குப் பின் இக்கொள்கை இத்தாலியில் தோன்றிற்று. இதனை உருவாக்கக் காரணமாக இருந்தவர் பெனிட்டோ முசோலினி (Benito Mussolini) என்ற இத்தாலியத் தலைவர். முதல் உலகப் போரின் முடிவில் இத்தாலிய அரசியலரங்கில் காணப்பட்ட குழப்பமான சூழ்நிலையும், பொருளாதாரச் சீர்குலைவும்தான் ஃபாசிசம் தோன்றவழி வகுத்தன எனலாம்.

ஃபாசிசம் ஒரு கொள்கையல்ல. வன்முறையின் உதவியுடன் அதிகாரத்தைக் கைப்பற்றிப் பயன்படுத்துவதற்கான ஒரு வழி முறைதான் பாசிசம் என்று கூறலாம். 'செயல்தான் எனது திட்டமேயன்றிப் பேச்சல்ல' என்பது முசோலினியின் கொள்கை. ஃபாசிஸ்டிகள் தேவைக்கேற்பத் தமது தத்துவத்தை உருவாக்கினர். போர் உணர்வு, கட்டுப்பாடு, இரக்கமின்மை, செயல் ஆகியவற்றிற்கு ஃபாசிசம் முக்கியத்துவம் அளித்தது. முசோலினியின் தீர்மானங்கட்கேற்ப ஃபாசிசத்தத்துவமும் மாறுபட்டது. மக்கள் தலைவருக்குக் கீழ்ப்படிந்து அவர் உத்தரவுகட்குக் கட்டுப்பட வேண்டும். அரசு உயர்ந்தது எனக்கருதப்பட்டது. அரசிற்குக் கீழானவன்தான் மனிதன். நாடு என்பதற்கு ஃபாசிஸ்டுகள் மிக உயர்ந்த இடத்தை அளித்தனர். நாட்டிற்குப் பணிபுரிவது மக்களின் புனித கடமை எனக்கருதப்பட்டது. தனிநபர்கட்கு முக்கியத்துவம் கிடையாது. அவர்கள் எல்லாவற்றிற்கும் அரசை நம்பித்தான் வாழவேண்டும். நாட்டிற்காக யாவற்றையும் அர்ப்பணிக்க அவர்கள் தயாராக இருக்க வேண்டும்.

ஃபாசிசம் அரசின் வலிமைக்குத்தான் முக்கியத்துவம் அளித்ததேயன்றி தனிநபர்களின் சுதந்திரத்திற்கல்ல. சுதந்திரம் என்பது உரிமையல்ல. அது ஒரு கடமையாகும். சட்டத்திற்குக் கட்டுப்படுவதுதான் சுதந்திரம். ஃபாசிஸ்டுகள் எதேச்சதிகாரத் தன்மையுடைய வலிமை வாய்ந்த அரசில் நம்பிக்கை கொண்டிருந்தனர். இத்தகைய அரசில் மக்களின் கடமைகட்குத் தான் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. ஃபாசிசம் மக்களாட்சியை வெறுத்தது. மக்களாட்சி என்பதை அழுகும் பிணம் என்று அவர்கள் கருதினார்கள். மக்கள் ஆட்சி புரியும் தகுதி அற்றவர்கள். ஆளும் தகுதி ஒருசிலருக்கு மட்டுமே உள்ளது. அரசாங்கத்தைத் திறனாய்வு செய்யும் உரிமை மக்களுக்குக் கிடையாது. ஃபாசிசத்தில் விவாதத்திற்கு இடமில்லை. வன்முறைக்குத் தான் இது முக்கியத்துவம் அளித்தது.

ஃபாசிசமும், பாசிஸ்டு கட்சியும், முசோலினியும் அழிவதற்குத் தேவையான யாவும் இத்தத்துவத்தில் காணப்பட்டன. இவை அழிவதற்குமுன் இத்தாலியச் சமுதாயத்தின் சீர்குலைவிற்கு இவை வழிவகுத்தன.

மதிப்பீடு

ஃபாசிசம் என்பது சோஷலிசச் சீர்திருத்தங்கட்கெதிரான முதலாளி வர்க்கத்தின் எதிர்ப்பு இயக்கமாகும். இக்கோட்பாடு வன்முறையையும், போரையும் ஆதரிக்கின்றது. வன்முறையைப்

பயன்படுத்தி உருவாக்கப்படும் சமுதாயம் நிலைக்காது. இக் கோட்பாடு வலியுறுத்தும் எதேச்சதிகார அரசு ஏற்கத்தக்கதல்ல. அறிவாற்றலுக்கு இக்கோட்பாட்டில் இடமில்லை என்பது ஒரு குறை. சூழ்நிலைகட்கேற்பப் பல இடங்களினின்றும் பொறுக்கி எடுக்கப்பட்ட கருத்துகளின் தொகுப்புத்தான் ஃபாசிசம் என்று பேராசிரியர் சபைன் (Prof. G. H. Sabine) கூறுகின்றார்.

ஆ. நாசிசம் (Nazism) :— பாசிசத்தினின்று அதிகம் மாறு பட்டதல்ல நாசிசம். நாசிசத்தைச் சீரான கோட்பாடு எனக் கருத முடியாது. தேவைக் கேற்ப இதிலும் மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணமிருந்தன. நாசிசம் வளர்வதற்குக் காரணமாக இருந் தவர் ஹிட்லர் (Hitler) ஆவார்.

நாசிசம் அரசிற்கு அதிக முக்கியத்துவம் அளித்தது. தனி நபருக்கு எந்த முக்கியத்துவமும் கிடையாது. ஒருவன் தன்னை முழுமையாக அரசிற்கு அர்ப்பணிக்க வேண்டும். சுய நிர்ணய உரிமையும், சுதந்திரமும் தனி நபருக்குக் கிடையாது. அரசிற்குக் கீழ்படிவதுதான் ஒருவனின் கடமை. நாட்டின் வளர்ச்சிக் கெனத் தனது முழு அதிகாரத்தையும் பயன்படுத்துவதுதான் அரசின் பணி.

நாசிசம் பிரசாரத்திற்கு முக்கியத்துவம் அளித்தது. வலிமையே உரிமை எனக் கருதப்பட்டது. மக்களின் இன உணர் விற்கு நாசிசம் முக்கியத்துவம் அளித்தது. கலப்பட மற்ற ஜெர் மானிய இனத்தை உருவாக்குவதை ஹிட்லரின் குறிக்கோளாக இருந்தது. நாசிசம் சமயத்தை அடியோடு நிராகரித்தது. கலப் பட மற்ற இனத்தை உருவாக்குவதுதான் பெண்களின் பணி என்று கருதப்பட்டது. யாவும் அரசால் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பது நாசிசக் கொள்கை.

ஹிட்லரால் உருவாக்கப்பட்ட கொள்கையான நாசிசம் அவரது மனநிலைக்கும், கருத்துகட்கும் ஏற்ப வளர்ச்சியுற்றது. எதேச்சதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டிருந்த இக் கொள்கை வெற்றியடையவில்லை. ஜெர்மனியின் அழிவிற்கும், பல லட்சம் மக்கள் உயிரிழப்பதற்கும் இக்கொள்கை வழிவகுத்தது. ஹிட்லருடன் இக் கொள்கையும் மறைந்தது.

மதிப்பீடு

ஃபாசிசத்திற்கு அளிக்கப்பட்ட மதிப்பீடு நாசிசத்திற்கும் பொருத்தமானது. இக்கோட்பாட்டில் நாட்டிற்குத்தான் முக்கி

யத்துவம் அளிக்கப்படுகின்றதேயன்றி நபர்கட்கல்ல. மக்களாட்சிப் பண்புகட்கும், மக்களின் இறைமைக்கும் இக் கோட்பாட்டில் இடமில்லை. எதேச்சதிகாரத் தன்மையுடைய அரசை உருவாக்க இக்கோட்பாடு விழைகின்றது. பன்னாட்டு நல்லுறவிற்கும் இக்கோட்பாட்டில் இடமில்லை. நாசிசக் கோட்பாடு தலைவனுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது. வர்க்க பேதத்தைத் தூண்டிவிடும் இக்கோட்பாடு வரவேற்கத்தக்கதல்ல.

காந்திசம்

(Gandhism)

மகாத்மா காந்தியும் அரசும்

(Mahatma Gandhi and the State)

காந்தியடிகள் ஒரு அரசியல் வாதியுமல்ல, அரசியல் விற்பன்னருமல்ல. அவர் எக்கோட்பாட்டையும் உருவாக்கவில்லை. ஒரு மனிதாபியாகத்தான் அவர் திகழ்ந்தார். தனது கருத்துகளும் முடிவுகளும் இறுதியானவை அல்ல என்று அவரே குறிப்பிட்டுள்ளார். இவரது கருத்துகள் வாய்மையையும், அகிம்சையையும் அடிப்படையாகக் கொண்டவையாகும். காந்தியடிகளின் கருத்துகள் நெகிழும் தன்மையுடையவை. உகந்தவற்றை வரவேற்கும் மனப்பாங்கை அவர் கொண்டிருந்தார். வாழ்க்கை எத்தகையதாக இருக்க வேண்டுமென்பது குறித்துத் திட்டவட்டமான கருத்துகளை அவர் உடையவராகக் காணப்பட்டார். ரஸ்கின் (Ruskin), தேரோ (Thoreau), டால்ஸ்டாய் (Tolstoy) ஆகிய அறிஞர்களின் கருத்துகள் காந்தியடிகளை மிகவும் கவர்ந்தன. வேதங்கள், கீதை, விவிலியம், கொரான், ஜெனட் அவெஸ்தா (Zend Avesta) ஆகிய சமய நூல்களை அவர் கற்றிருந்தார். உகந்தவற்றைப் பலவற்றினின்று எடுத்து நடைமுறைக்கு பொருந்தக் கூடிய கருத்துகளை காந்தியடிகள் உருவாக்கினர்.

காந்தியடிகளின் கருத்துகளுக்கு அடிப்படையானவை வாய்மையும், அகிம்சையும் ஆகும். வன்முறை இருக்குமிடத்தில் வாய்மை இருக்காது என்று அவர் குறிப்பிட்டார். அகிம்சை என்பதற்கு காந்தியடிகள் மிகப்பரந்த விளக்கமளித்தார். எண்ணத்தாலும், சொல்லாலும், செயலாலும் பிறருக்குத் தீங்கிழைக்கக் கூடாது. இவை மட்டுமன்றி பாசம், கனிவு, பணிவு ஆகியவையும் அகிம்சையில் அடங்கும். இப்பண்புகளைக் கொண்ட அகிம்சை வெல்லும் என்பதைக் காந்தியடிகள் நிருபித்தார். ஏகாதிபத்திய அரசைப் பணிய வைத்து இந்தியாவிற்கு

விடுதலை கிடைக்கச் செய்தது அவர் கடைப்பிடித்த அகிம்சையாகும்.

தவருன வழிமுறைகள் தவருன முடிவுகளைத்தான் கொடுக்கும் என்று காந்தியடிகள் கூறினர். குறிக்கோளைவிட, அதை அடையக்கடைப்பிடிக்கப்படும் வழிமுறைகள் நல்வழிமுறைகளாக இருப்பது மிக முக்கியம் என்ருர். ஒழுக்கப் பண்பிற்கு அரசியலிலும் இடமுண்டு எனக்காட்டியவர் காந்தியடிகள். மனசாட்சிக்கு பொருந்தாதது அரசியல் ரீதியாகவோ, அல்லது நாட்டுப்பற்றின் அடிப்படையிலோ சரியானதாகாது என வலியுறுத்தினர்.

தீமையையும், வன்முறையையும் எதிர்ப்பதற்கு 'சத்தியாக்கிரகம்' என்ற அமைதியான போராட்டத்தைக் காந்தியடிகள் உருவாக்கினர்கள். அநீதி, விரோதம், பொய் ஆகியவற்றை அன்பாலும், நம்மை நாமே சுத்திகரிப்பதன் மூலமும் எதிர்க்க வேண்டும் என்ருர். நம்மைத் தாக்குபவனை நாம் தாக்காமலிருந்தால் அவனது உள்ளத்தின் அடித்தளத்தில் உறங்கும் மனிதாபிமான உணர்வை எழுப்ப நம்மால் இயலும். ஒத்துழையாமை, பணிபுரியாமலிருத்தல், அரசிற்கு கீழ்படியாமலிருத்தல், தாமாகவே ஓரிடத்தினின்று வெளியேறுதல், உண்ணு நோன்பு, வேலை நிறுத்தம் ஆகியவை சத்தியாகிரகத்தின் கருவிகளாகும். இவற்றில் வலிமைக்கு இடமேயில்லை.

காந்தியடிகள் உருவாக்க விரும்பிய சமுதாயம்

'அகிம்சையின் அடிப்படையிலான சமுதாயத்தின் அரசாங்கம் எத்தன்மையைக் கொண்டிருக்கும் என்பதை நான் வேண்டுமென்றே கூறவில்லை. அச் சமுதாயத்தின் அமைப்பு இன்று நாம் காண்பதினின்று மாறுபட்டதாகத்தான் இருக்கும். இதன் அரசாங்கம் எத்தகையதாக இருக்கும் என்று கூற என்னல் இயலாது' என்று காந்தியடிகள் கூறினர்கள்.

அவர் உருவாக்க எண்ணிய சமுதாயத்தில் அரசு இருக்காது; அரசு தேவையானது என்று அவர் கருதவில்லை. வன்முறையை அடிப்படையாகக் கொண்ட அரசு தனியார் சுதந்திரத்தையும், தனித்தன்மையயும் அழிக்கின்றது என்ற காரணத்தால் அவர் அரசை வரவேற்கவில்லை. அகிம்சையை அடிப்படையாகக் கொண்ட சமுதாயத்திற்கு அரசு தேவையில்லை.

இனப்பிரிவுகளும், அரசும் இல்லாத இச்சமுதாயத்தின் உட்பிரிவுகளாக கிராமச்சமுதாயங்கள் காணப்படும். இவை தன்

னிறைவும், சுயாட்சி உரிமையும் உடையனவாக இருக்கும். ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பஞ்சாயத்து காணப்படும். கிராமங்கள் அனைத்தும் கூட்டாட்சியில் உறுப்பினராகக் காணப்படும். இக் கூட்டாட்சியில் காவல்துறையும் படையும் இருக்கமாட்டா. அளவிற்பெரிய நகரங்களும், நீதிமன்றங்களும், சிறைச்சாலைகளும் பெரிய தொழிற்சாலைகளும் இருக்காது. எளிமையான கிராமப்புற வாழ்க்கைக் காணப்படும். அதிகாரக் குவிப்பு இருக்காது. இச்சமுதாயத்தில் ஒத்துழைப்பு மிகுந்திருக்கும். இச்சமுதாயத்தை அவர் 'ராம ராஜ்யம்' என்று அழைத்தார்.

இப் பண்புகளுடைய சமுதாயத்தை எளிதில் அடைய முடியாது என்பதையும் காந்திபடிகள் உணர்ந்திருந்தார்கள். எனவேதான் அரசின் அதிகாரம் உடனடியாக ரத்து செய்யப் பட வேண்டும் என்று அவர் கூறவில்லை.

8. சட்டம்

(Law)

[சட்டம்—சட்ட மூலங்கள்—சட்டத்தின் பிரிவுகள்—சட்டமும் ஒழுக்கப் பண்பும்—பன்னாட்டுச் சட்டம்.]

சட்டம்

சட்டத்தின் தன்மை

அரசின் இறைமைக்கு வடிவம் அளிப்பது சட்டம். அரசின் தன்மையே சட்டத்தில்தான் அடங்கியுள்ளது. இறைவனின் சட்டங்கள், இயற்கைச் சட்டங்கள், பொருளாதாரச் சட்டங்கள், சமூகச் சட்டங்கள் என்று பலவகைப்பட்ட சட்டங்கள் இருப் பினும் இங்கு நாம் குறிப்பிடுவது மனிதரின் உறவுகளை நிர்ணயிப் பதற்கும், அவ்வுறவுகளின் அடிப்படையில் எழக்கூடிய பிரச்சினை கட்குப் பரிகாரம் காணப்பயன்படுத்துவதற்கும் உதவக்கூடிய சட் டங்களை மட்டும்தான். சட்டம் இல்லாத சமுதாயம் கிடையாது. சட்டமன்றங்களும், சட்டங்களும், ஆட்சியாளர்களும், காவல் துறையினரும், நீதிமன்றங்களும் இல்லாவிடில் இன்றைய சமுதா யத்தில் எழக்கூடிய பல பிரச்சினைகட்குப் பரிகாரம் காணமுடியாது. சட்டத்தை மட்டும் நம்பி அரசாங்கம் இருக்கவில்லையெனினும் சட்டமின்றி அரசாங்கம் இருக்க முடியாது. ஆட்சி புரிதல் என்பது கட்டுப்படுத்துதலைத்தான் குறிப்பிடுகின்றது. ஆட்சி புரிவதற்கு விதிகளும் அவற்றின்பின் அதிகார வலிமையும் காணப்பட வேண்டும். மக்களுக்கு நீதியை அளிப்பதுதான் மக்களாட்சியின் குறிக்கோள் என்றால் அது கிடைக்க உதவுவது சட்டம். மனிதன் எதைச் செய்யலாம், எதைச் செய்யக்கூடாது என்பதையும் சட்டம் நிர்ணயிக்கின்றது.

சட்டத்திற்கும் சில தன்மைகள் உண்டு. சட்டம் அரசின் விருப்பத்தைக் குறிக்கின்றது. இது அரசால் செயற்படுத்தப்படு கின்றது. மனிதரின் நடவடிக்கைகளை மட்டும் சம்பந்தப்பட்டது சட்டம், அவருடைய எண்ணங்களையும், பண்புகளையும் சம்பந்தப்

பட்டதல்ல. அரசு சட்டத்தைச் செயற்படுத்தும்பொழுது எப்பாகு பாட்டையும் விதிப்பதில்லை. தனியார் நலனையும், பொது நலனையும் பேணுவதுதான் சட்டத்தின் குறிக்கோள். ஆகவே சட்டத்தை மீறுபவர் தண்டிக்கப்படுவர்.

சட்டத்தை ஆராய பயன்படும் முறைகள்

சட்டத்தை ஆராய்வதற்குப் பல முறைகள் பயன்படுத்தப் படுகின்றன. பகுத்தாய்வு முறையைப் (Analytical Method) பின் பற்றுபவர்கள் நடைமுறையிலிருக்கும் சட்டங்களை ஆராய்ந்து மூலக்கூறுகள், செயற்படுத்தப்படும் முறை போன்றவற்றின் அடிப் படையில் அவற்றை விளக்குகின்றனர். பொதான் (Bodin), ஹாப்ஸ் (Hobbes), பெந்தாம் (Bentham), ஆஸ்டின் (Austin) ஆகியோர் பகுத்தாய்வு முறையைப்பின் பற்றுபவர்கள். அரசின் உத்தரவுதான் சட்டம் என்பது இவர்களுடைய கருத்து. சட்டத்தை செயல்படுத்துவதற்கு அரசு தன் அதிகார வலிமை யைப் பயன்படுத்துகின்றது. இதுதான் சட்டத்திற்குள்ள வலிமை. இதனால்தான் சட்டத்தை இறையின் கட்டளை என்று ஆஸ்டின் கூறுகின்றார். பகுத்தாய்வு முறையைப் பின்பற்று பவர்கள் இறைமையுடைய அரசியல் நிறுவனத்தால் இயற்றப் பட்டவற்றை மட்டுமே சட்டங்கள் எனமதிக்கின்றனர்.

அடுத்தது வரலாற்றுமுறை (Historical Method) ஹியூகோ (Hugo), சவினி (Savigny), புக்டா (Puchta), மெய்ன் (Maine), மெய்ட்லன்ட் (Maitland), பொல்லாக் (Pollock) ஆகியோர் இம் முறையைப் பின்பற்றுபவர்கள். வேண்டுமென்றே அரசால் தோற்றுவிக்கப் பட்டதல்ல சட்டம். சமுதாயத்தில் செயல்படும் சில சக்திகளின் விளைவாகத் தோன்றியதுதான் இது. சட்டத்திற்கும் அரசிற்கும் தொடர்பு கிடையாது. சட்டத்தை அங்கீகரித்து அதனைச் செயற்படுத்துவது தான் அரசின்பணி. பழக்கத்தினாலும் கருத்தொருமிப்பினாலும் தான் மக்கள் சட்டத்திற்கு கீழ்படி கின்றார்களேயன்றி வலிமைக்கு அஞ்சியல்ல. மரபுகளால் வலுப் படுத்தப்பட்ட சட்டம் மட்டுமே சரியான சட்டமாக இருக்க முடியும். பெரும்பான்மை மக்கள் அதனை ஏற்பதனால் தான் சட்டம் என்பது சட்டமாக உள்ளதேயன்றி அது இறையின் கட்டளை என்பதினால் அல்ல.

தத்தவமுறை. (Philosophical Method) யைப் பின்பற்றிச் சட்டத்தை ஆராய்பவர்களில் கோலர் (Kohler) என்பவர் குறிப்பிடத்தக்கவர். சட்டம் சரியானதா என்பதையும், மனித சமுதாயம் அதன் உயர்ந்த குறிக்கோளை எய்துவதற்கு சட்டம்

எவ்வளவு உதவுகின்றது என்பதையும் இம்முறை ஆராய்கின்றது. சமுதாய வாழ்வின் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு தான் சட்டத்தை மதிப்பிட முடியும். கலாச்சாரத்தின் விளைவு தான் சட்டம் என்றும், முன்னேற்றத்திற்குத் தேவைப்படுவது சட்டம் தான் என்றும் கருதப்படுகின்றது. சமுதாயத்தில் நீதி காணவேண்டும் என்பது தான் சமுதாயத்தின் குறிக்கோள். இக் குறிக்கோளை எய்துவதற்குப் பயன்படுவது சட்டம். அரசை விட உயர்வானது சட்டம் என்று கருதுபவர்களும் உள்ளனர். சமுதாயத்தின் குறிக்கோளுக்கு ஒத்ததாகச் சட்டம் இருக்க வேண்டும்.

சட்டத்திற்கும் சமுதாய அமைப்புகட்கும் இடையேயுள்ள உறவுகளை சமூக இயல் முறை (Sociological Method) ஆராய்கின்றது. யூஜென் எர்லிக் (Eugen Ehrlick) என்பவர் இம் முறையை வலியுறுத்தினர். பொதுவாக ஏற்கப்படும் சட்டம்தான் உண்மையான சட்டம். சமூக இயல் முறையைப் பின்பற்றுபவர்கள் பழக்க வழக்கங்களையும் சட்டங்களாக மதிக்கின்றனர். சட்டமும் சமுதாயமும் ஒன்றெனக் கருதுவது தான் இம்முறையில் காணப் படும் குறிப்பிடத்தக்க குறைபாடு. சட்டம் என்பது இவ்வளவு பரந்ததல்ல.

சட்டத்தை ஆராய்வதற்கென விஞ்ஞானமுறை (Scientific Method) யை ஹான்ஸ் கெல்சன் (Hans Kelsen) என்பவர் உருவாக்கினர். சட்டம் என்பது சட்டளை என்று கெல்சன் கூறுகின்றார். இக்கட்டளை இறையின் கட்டளை அல்ல. சில அடிப்படை விதிகளினின்று தான் சட்டம் தோன்றுகின்றது. கெல்சனின் கருத்துகள் முழுமையாக ஏற்கப்படவில்லை. செயல் முறை (Functional Method) யைப் பின்பற்றிச் சட்டத்தை ஆராயும் முயற்சியை ரோஸ்கோ பவுண்ட் (Roscoe Pound) என்ற அமெரிக்கர் தோற்றுவித்தார். அரசின் நடவடிக்கைகட்கு இம்முறையில் முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது.

இது வரை சட்டத்தை ஆராயப் பயன்படுத்தும் முறைகளை ஆராய்ந்தோம். சட்டத்தை ஆராய்வதில் பல பிரச்சினைகள் இருப்பினும் சட்டம் முக்கியத்துவம் உடையது என்பதை மறுக்க முடியாது.

சட்டத்தின் மையக்கருத்து கட்டுப்பாடு. நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதுதான் கட்டுப்பாடு என்று பொருளல்ல. நடவடிக்கைகளை விரிவுபடுத்தவும், அவற்றை வரையறுக்கவும் கட்டுப் பாடு பயன்படுகின்றது. சட்டம்தான் மக்களுக்கு உரிமைகளை

அளிக்கின்றது. பேச்சு, எழுத்து, வழிபாடு போன்றவற்றைப் பாதுகாப்பதன் மூலம் சட்டம் மனிதரின் சுதந்திரங்களை விரிவு படுத்துகின்றது. கொலை, கொள்ளை போன்ற குற்றங்கட்கு தண்டனையளிப்பதன் மூலமும், சில வகைப் பேச்சு, எழுத்து வழிபாடு ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் சட்டம் மனிதரின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துகின்றது.

மனிதருக்கிடையேயும், மனிதக் கூட்டங்கட்கிடையேயும், மனிதருக்கும் அரசுக்குமிடையேயும், அரசுகட்கிடையேயும் காணப்படும் உறவுகளை சட்டம் கட்டுபடுத்துகின்றது. மனித வாழ்க்கை முழுவதையும் சம்பந்தப்பட்டதல்ல சட்டம்.

சட்டத்தை உருவாக்கவும், அதனைச் சீர்படுத்தவும் மனித சமுதாயத்தின் ஒழுக்க விதிகள் பயன்படுகின்றன. ஒரு சமுதாயத்தின் பெரும்பான்மையினர் பின்பற்றும் பொதுவான ஒழுக்க விதிகள் அச்சமுதாயத்தின் நடத்தை முறைகளை உருவாக்குகின்றன. சட்டங்கள் உருவாவதற்கும் இவை பயன்படுகின்றன. மனிதன் தனக்குத்தானே சட்டபூர்வமாக அளித்துக் கொள்ளும் ஒழுக்க விதிகள்தான் சட்டங்கள் என்பவை. ஒரு ஒழுக்க முறையை மீறுவதன்மூலம் சட்டத்தை மீற நேரிட்டால் அரசு தலையிட்டு தண்டனை அளிக்கின்றது.

சட்ட மூலங்கள் (Sources of Law)

ஆறு சட்ட மூலங்களினின்று சட்டங்கள் தோன்றுகின்றன என்று ஹாலண்ட் (Holland) என்ற ஆசிரியர் கருத்துத் தெரிவித்துள்ளார். அவை பின்வருமாறு :

1. பழக்க வழக்கங்கள் (Customs and Usages):—பொதுவான பழக்க வழக்கங்களினின்று தோன்றிய சில விதிகள் பண்டைய சமுதாயத்தில் மனிதரின் நடத்தையைக் கட்டுப்படுத்தின. ஒழுங்கிற்கும், அமைதிக்கும் உகந்தவை என்பதால் இவை சமுதாயத்தால் பின்பற்றப்பட்டன. இவ் விதிகள் சமுதாயத்தின் தேவைகட்கேற்ப அவ்வப்பொழுது தோன்றிவை. ஓர் எளிய சமுதாயத்தில் பொது நலனைக் காக்க இவ் விதிகள் போதுமானவையாகக் காணப்பட்டன. சமுதாயம் விரிவடைந்தபொழுது இவை பயன்படவில்லை.

காலப்போக்கில் சில பழக்கவழக்கங்கள் அரசால் அங்கீகரிக்கப்பட்டு சட்டங்களாயின. எல்லா பழக்க வழக்கங்களும் சட்டங்களாக மாறவில்லை. சில பழக்க வழக்கங்கள் காலத்திற்கு ஒவ்வாதது என்று கருதப்பட்டால் அவற்றை அகற்றுவதற்கென அரசு

சட்டமியற்றலாம். இதற்கு எடுத்துக்காட்டாக நம் நாட்டில் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தைக் கூறலாம்.

2. சமயம் (Religion):— புராதனச் சமுதாயங்களில் சமயமும் பழக்கவழக்கங்களும் இரண்டறக் கலந்திருந்தன. இதனால் சட்டத்தின் வளர்ச்சியிலும் சமயம் முக்கியபங்கு வகித்தது. அரசன் சமயக்குருவாகவும் செயல்பட்டான் என்பதனின்று சமயத்திற்கும், அரசிற்கும் இடையேயுள்ள உறவு புலப்படும். அரசனின் ஆணைகளை மீறினால் இறைவனின் கோபத்திற்கு ஆளாக நேரிடும் என்ற அச்சத்தால் மக்கள் அவ்வாணைகட்குக் கீழ்படிந்தனர். பண்டைய ரோமாபுரியில் காணப்பட்ட சட்டங்கள் சமயவிதிகளேயன்றி வேறல்ல இன்றும் சமயவிதிகளைச் சட்டங்களாகக் கொண்டுள்ள அரசுகள் காணப்படுகின்றன. முஸ்லீம் நாடுகளில் பெரும்பாலான சட்டங்கள் சமயவிதிகளே.

3. நீதிபதிகளின் தீர்ப்புரைகள் (Adjudication or judicial Decisions):—சமுதாயத்தின் அமைப்பு விரிவுபட்ட பொழுது பழக்க வழக்கங்கள் குறித்துக் கருத்து வேற்றுமைகள் எழுந்தன. ஒரு மரபின் பழக்க வழக்கங்கள் மற்றொன்றின் பழக்க வழக்கங்கட்கு ஒவ்வாததாயின. பழக்க வழக்கங்களை அடிப்படையாகக் கொண்டு வழக்குகட்குத் தீர்ப்பு வழங்க முடியாமலாயிற்று. இதனால் வழக்குகளைச் சமுதாயத்தில் உள்ள முதியோர்கள் அல்லது அறிஞர்களின் முடிவிற்கு விடும் பழக்கம் தோன்றியது. இவர்கள் அளித்த முடிவுகள் யாவராலும் ஏற்கப்பட்டன. இவர்கள் அளித்த தீர்ப்புகள் எதிர்காலத்திற்கு வழிகாட்டிகளாக அமைந்தன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரே மாதிரி வழக்குகட்குத் தீர்ப்பளித்தல் எளிதாயிற்று. இங்ஙனம் அளிக்கப்பட்ட தீர்ப்புகள் சட்டங்களின் பகுதிகளாயின. இன்றும் இந்நிலை காணப்படுகின்றது. உதாரணமாக, அமெரிக்கத் தலைமை நீதிமன்றம் அதற்குள்ள நீதிப்புனராய்வு செய்யும் அதிகாரத்தைப் பயன்படுத்தி அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்தை விரிவுப் படுத்தியுள்ளது. ஒரு நீதிபதி சட்டமொன்றிற்கு விளக்கமளிக்கும் பொழுது அறிந்தோ, அறியாமலோ புதிய சட்டங்களைத் தோற்றுவிக்கின்றார்.

4. சட்ட வல்லுநர்களின் கருத்துரைகள் (Commentaries): புகழ் பெற்ற சட்டவல்லுநர்களின் கருத்துகளில் முக்கியமான சட்ட விதிகள் காணப்படலாம். இவற்றை நீதிமன்றங்கள் ஏற்றுக் கொள்வதுண்டு. இங்ஙனம் நீதிமன்றத்தால் ஏற்கப்படும் கருத்

துரைகள் சட்டங்களாகக் கருதப்படுகின்றன. உதாரணமாக இங்கிலாந்தில் கோல் (Cole), ஹேல் (Hale), லிட்டில்டன் (Littleton), பிளாக்ஸ்டன் (Blackstone) போன்றோரின் கருத்துரைகளும், அமெரிக்காவில் ஸ்டோரி (Storey), கென்ட் (Kent) ஆகியோரின் கருத்துரைகளும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகத் திகழ்கின்றன.

5. இயற்கை நீதி ஒப்புரவு (Equity):— நீதியின் அடிப்படைத் தத்துவங்களைத்தான் நீதி ஒப்புரவு குறிப்பிடுகின்றது. சட்டத்தால் நீதி வழங்க முடியாமற்போனால் இதைப் பயன்படுத்தி நீதி அளிக்கப்படுகின்றது. காலப்போக்கில் ஏற்படும் மாற்றங்கட்கொப்ப எல்லா சட்டங்களிலும் மாற்றங்கள் ஏற்படுவதும் அல்லது அவை மாற்றியமைக்கப்படுவதும் இயலாதது. ஆகவே புதிய சூழ்நிலைக்கேற்றவாறு பழைய சட்டத்திற்கு விளக்கமளித்து நீதி வழங்க இயற்கை நீதி ஒப்புரவு பயன்படுகின்றது. திட்டவட்டமான சட்டம் இல்லாவிடில் நீதிபதிகள் தமது அறிவுக் கூர்மையையும், நியாயத்தையும் அடிப்படையாகக் கொண்டு நீதி வழங்குவர். நெகிழாத் தன்மையுடைய சட்டங்களைச் சூழ்நிலைகட்கேற்ப நெகிழ வைக்க இயற்கை நீதி ஒப்புரவு பயன்படுகின்றது. இயற்கை நீதி ஒப்புரவு என்பது பண்டைய ரோமர்களது காலத்தினின்று காணப்பட்டு வருகின்றது. இங்கிலாந்தில் பல சட்டங்கள் இதன் அடிப்படையில் தோன்றியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

6. சட்டமியற்றப் படுதல் (Legislation):— இன்றுள்ள அரசுகளில் காணப்படும் சட்டங்களிற் பெரும்பாலானவை இயற்றப்பட்ட சட்டங்களாகும். சட்டங்களை இயற்றும் பணியை மட்டும் புரிவதற்கென்று சட்ட மன்றங்கள் எல்லா அரசுகளிலும் அமைக்கப்பட்டுள்ளன. சட்டமன்றங்களால் இயற்றப்படும் சட்டங்கள் மட்டுமன்றி, நாட்டுத்தலைவரால் பிறப்பிக்கப்படும் ஆணைகளும் சட்டத்தின் வலிமையை உடையனவாகும். அரசின் அதிகார வரம்பும், அதன் பணிகளும் அதிகரித்ததைத் தொடர்ந்து அது இயற்றும் சட்டங்களின் எண்ணிக்கையும் பன்மடங்கு பெருகியுள்ளது.

சட்டத்தின் வகைகள்
(Kinds of Law)

சட்டங்கள் பலவகைப்படும். இயற்றப்படும் முறைகள், அவை நிர்ணயிக்கும் உறவுகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சட்டங்களை வகைப்படுத்தலாம்:

1. முனிசிபல் சட்டம் (Municipal Law): —அரசினுள் காணப்படும் நபர்களையும், சங்கங்களையும் சம்பந்தப்பட்டதுதான் முனிசிபல் சட்டம் என்பது. நபர்களிடையேயும், நபர்கட்கும், அரசுக்கும் இடையேயும் உள்ள உறவுகளை நிர்ணயிக்கும் இச்சட்டம் அரசால் உருவாக்கப்படுகின்றது. முனிசிபல் சட்டத்தை பொதுச் சட்டம் (Public Law) என்றும், தனியார் சட்டம் (Private Law) என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். அரசிற்கும் நபர்கட்கும் இடையேயுள்ள உறவுகளை நிர்ணயிப்பது பொதுச் சட்டம். நபர்களிடையேயுள்ள உறவுகளை நிர்ணயிப்பது தனியார் சட்டம்.

2. அரசியலமைப்புச் சட்டம் (Constitutional Law) :— அரசு, அரசாங்கம் ஆகியவற்றின் அமைப்பையும், தன்மையையும், அதிகாரத்தையும், அதிகாரப் பரப்பையும் நிர்ணயிக்கும் சட்டம் தான் அரசியலமைப்புச் சட்டம் என்பது. இச்சட்டம் தானாகத் தோன்றலாம் அல்லது ஒரு சபையால் உருவாக்கப்படலாம். இது எழுதப்பட்டதாகவோ அல்லது எழுதப்படாததாகவோ இருக்கும். தானே தோன்றும் அரசியலமைப்பில் பழக்க வழக்க விதிகளும், மரபுச் சட்டங்களும் அதிகமாகக் காணப்படும். இத்தகைய அரசியலமைப்புச் சட்டம் எழுதப்படாததாக இருக்கும். இதற்கு எடுத்துக்காட்டாக இங்கிலாந்தின் அரசியலமைப்புச் சட்டத்தைத் கூறலாம்.

3. படிவச் சட்டம்(Statute Law):—சட்டமன்றத்தால் உருவாக்கப்படும் சட்டம்தான் படிவச் சட்டம் என்பது. இன்று காணப்படும் சட்டங்களில் பெரும்பாலானவை இவ்வகைச் சட்டங்கள் தான்.

4. ஆணைகள் (Ordinances):— நாட்டுத்தலைவர் பிறப்பிக்கும் உத்தரவுகள் தான் ஆணைகள் என்பவை. ஏதாவது ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காகப் பிறப்பிக்கப்படுவதுதான் ஆட்சித் துறையின் அல்லது நாட்டுத்தலைவரின் ஆணை எனப்படுவது.

5. வழக்கினின்று உருவாகும் சட்டம்(Case Law):-இவ்வகைச் சட்டம் இங்கிலாந்தில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. நீதிபதிகளால் உருவாக்கப் படுபவைதான் இவ்வகைச் சட்டங்கள். நீதிபதியொருவர் சட்டங்கட்கு விளக்கமளிக்கும் பொழுது தம்மையறியாமலே புதிய சட்டமொன்றை உருவாக்குகிறார் அல்லது சட்டம் போதாது என்று அவர் கருதும்பொழுது பழக்க வழக்கங்கள், முன்னுள் தீர்ப்புகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தீர்ப்பு வழங்கும் பொழுது வேண்டுமென்றே சட்டத்தை

உருவாக்கலாம். அங்ஙனம் உருவாக்கப்படும் சட்டம்தான் வழக்கினின்று உருவாகும் சட்டம் எனப்படுவது.

6. ஆட்சிமுறைச் சட்டம் (Administrative Law):—அரசாங்கத்தின் பணியாளர்களின் அதிகார வரம்பையும், அவர்களது நடவடிக்கைகட்கெதிராகக் கிடைக்கக்கூடிய பரிகாரத்தையும் விளக்குவதுதான் ஆட்சி முறைச் சட்டம் என்பது. இவ்வகைச்சட்டம் முதலில் தோன்றியது பிரான்சில் ஆகும். அரசாங்கத்தின் பணியாளர்கட்கென்று தனிச்சட்டமும், பொது மக்களுக்கெனத் தனிச் சட்டமும் ஆட்சிமுறைச் சட்டத்தைப்பின் பற்றும் நாட்டில் காணப்படும்.

7. பன்னாட்டுச் சட்டம் (International Law): —அரசுகளின் உறவுகளை நிர்ணயிக்கப் பயன்படும் சட்டம் தான் பன்னாட்டுச் சட்டம் என்பது. பிற சட்டங்களினின்று மாறுபட்டது இச்சட்டம். வேறொரு பகுதியில் இதனை விரிவாக ஆராய்வோம்.

8. பொதுச் சட்டம் (Common Law):— சட்டத்தின் வகைகளில் முக்கியமானது பொதுச் சட்டம். சட்டம் உயர்வானது. சட்டத்தின் முன் யாவரும் சமம் என்ற கருத்துகள் பொதுச்சட்டத்திற்கு மையமான கருத்துகள். நீதிபதிகளின் தீர்ப்புரைகளினின்று தோன்றுவது தான் பொதுச் சட்டம். பழைய சட்டத்தைப் புதிய சூழ்நிலைகட்கேற்றதாக்குவதற்கு பொதுச் சட்டம் பயன்படுகின்றது.

மேற்கூறியவை மட்டுமன்றி இன்னும் பல உட்பிரிவுகளையும் சட்டத்தில் காணமுடியுமென்றாலும், மேற்கூறியவைதான் சட்டத்தின் முக்கிய வகைகள் ஆகும்.

சட்டமும் ஒழுக்கப்பண்பும்

(Law and Morality)

பண்டைக்கால சமுதாயத்தில் சட்டமும் ஒழுக்கப் பண்பும் ஒன்றெனக் கருதப்பட்டன. உதாரணமாக, பண்டைய இந்தியாவில் 'தர்மம்' என்பது சட்டத்தையும் ஒழுக்கப் பண்பையும் குறிப்பிட்டது. ஆனால் காலப்போக்கில் அரசின் வளர்ச்சிக்கொப்பவும், மாற்றத்திற்கொப்பவும் சட்டம் என்பது ஒழுக்கப்பண்பினின்று தனியாகப் பிரிக்கப்பட்டது. சட்டத்திற்கும் ஒழுக்கப்பண்பிற்குமிடையே பல வேற்றுமைகள் தோன்றின.

சட்டம் என்பது மனிதனின் நடவடிக்கைகளையும், செயல்களையும், உறவுகளையும் கட்டுப்படுத்துகின்றது. மனிதனின் எண்ணங்களைக் கட்டுப்படுத்த சட்டத்தால் இயலாது. மனசாட்சி என்பது சட்டத்திற்கு உட்பட்டதல்ல.

மனிதனின் எண்ணங்களையும், சிந்தனைகளையும், நடவடிக்கைகளையும் தழுவியது ஒழுக்கப்பண்பு. சட்டத்திற்கு புறம்பானவை அல்ல எனக்கருதப்படும் நடவடிக்கைகள் ஒழுக்கப் பண்பிற்குப் புறம்பானவை எனக் கருதப்படலாம். உதாரணமாக, நன்றி மறத்தல் என்பது சட்டப்படி குற்றமல்ல. ஆனால் அது ஒழுக்கப்பண்பிற்கு முரணானது.

அரசின் சட்டங்களை மீறுபவர்களுக்குப் பலவகை தண்டனைகள் அளிக்கப்படலாம். தண்டனைகளின் தன்மை குற்றத்தின் தன்மையைப் பொறுத்திருக்கும். அரசின் அதிகார வலிமைக்கு அஞ்சித்தான் ஒருவன் சட்டத்திற்குக் கீழ்படிகின்றான். ஒருவனை ஒழுக்கப் பண்பிற்குப் பணிய வைப்பது அவனது மனச்சாட்சியாகும். சமுதாயத்திற்குப் பொதுவான ஒழுக்கப் பண்பைப் பின்பற்றாவிட்டால் சமுதாயம் ஒருவனை ஒதுக்கித் தள்ளிவிட முடியும். சட்டம் என்பது தெளிவானது. ஒழுக்கப் பண்பு இத்தன்மை உடையதல்ல.

ஒழுக்கப் பண்பிற்கும், சட்டத்திற்குமிடையே பல வேற்றுமைகள் காணப்படினும் இவை இரண்டிற்குமிடையே நெருங்கிய தொடர்புகளும் காணப்படுகின்றன. பழக்க வழக்கங்கள், அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில்தான் இவ்விரண்டும் தோன்றுகின்றன. மக்களின் ஒழுக்கப்பண்பிற்குப் புறம்பான சட்டங்களைச் செயற்படுத்துவது கடினமாதலால் ஒழுக்கப் பண்புகளைப் புறக்கணித்து விட்டுச் சட்டமியற்ற முடியாது.

பன்னாட்டுச் சட்டம்

(International Law)

பன்னாட்டு உறவிற்கு தற்பொழுது அதிக முக்கியத்துவம் பெற்று வருகிறது. எங்ஙனம் ஒரு மனிதன் தனித்து வாழமுடியாதோ அதேபோல் ஒரு அரசும் தனித்துச் செயற்பட முடியாது. அரசுகளிடையே உறவுகள் வளர்வது அவற்றின் வளர்ச்சிக்குத் தேவை. அரசுகளிடையே காணப்படும் உறவுகளை நிர்ணயிக்கும் விதிகள் அடங்கியதுதான் பன்னாட்டுச் சட்டம் என்பது.

எச்சபையாலும் உருவாக்கப் பட்டதல்ல பன்னாட்டுச் சட்டம். படிப்படியாக வளர்ந்ததுதான் இச்சட்டம். தேவை கட்கேற்பவும், சூழ்நிலைகட்கேற்பவும், தோன்றியவைதான் பன்னாட்டுச்சட்ட விதிகள்.

பன்னாட்டுச் சட்டத்தின் மூலங்கள் என்று மரபு விதிகளையும் (Customs), உடன்படிக்கைகளையும் (Treaties) கூறலாம். பல அரசுகள் பொதுவாகப் பின்பற்றும் மரபுவிதிகளும், அரசுகள் தம்மிடையே செய்து கொள்ளும் ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும் பன்னாட்டுச் சட்டத்தில் இடம்பெறுகின்றன. தவிர, அறிஞர் பலரின் கருத்துரைகளும் (Commentaries) பன்னாட்டுச் சட்டத்தின் மூலங்களாக மாறுகின்றன.

பன்னாட்டுச் சட்டம் என்பது சட்டமல்ல என்று கூறுவோரும் உண்டு. இதற்கு அவர்கள் பல காரணங்களை சுட்டிக் காட்டுகின்றனர். பன்னாட்டுச் சட்டம் என்பது இறைமையுடைய நிறுவனத்தால் உருவாக்கப்பட்டதல்ல. இது சட்டபூர்வமாகத் தோன்றவில்லை; இச்சட்டத்தைச் செயற்படுத்த எந்த நிறுவனத்திற்கும் வலிமை கிடையாது; இச்சட்டத்தை மீறும் அரசுகளைத் தண்டிக்கும் வலிமையுடைய நிறுவனம் ஏதுமில்லை; அரசுகள் தாமாக இச் சட்டத்திற்குக் கட்டுப்படலாமேயன்றி இவற்றைக் கட்டுப் படுத்த முடியாது.

பன்னாட்டுச் சட்டம் என்பது சட்டம்தான் என்று கருதுபவர்கள் அதற்கு ஆதாரமாகப் பின்வரும் காரணங்கள் எடுத்துக் காட்டுகின்றனர். இறையின் கட்டளை மட்டுமே சட்டமாகக் கருதப் படமுடியும் என்பது தவறான கருத்து; பழக்க வழக்கங்களும், மரபு விதிகளும் சட்டங்களாகக் கருதப்படுவதுண்டு; அடிக்கடி மீறப் படுகிறதென்ற காரணத்தால் பன்னாட்டுச் சட்டத்தை சட்டமெனக் கருதாதிருப்பது தவறு. அரசின் சட்டமும் அடிக்கடி மீறப்படுகின்றது. இதனால் அதனை சட்டமல்ல என்று கூறுவது கிடையாது. பன்னாட்டு சட்டத்தைச் செயற்படுத்தும் வலிமையுடைய நீதிமன்றங்கள் இல்லை என்ற வாதம் ஏற்கத்தக்கதல்ல. பன்னாட்டுச் சட்டத்தின் விதிகளைப் பல நீதிமன்றங்கள் செயற்படுத்துகின்றன. இச்சட்டத்தை மீறும் அரசுகட்கெதிராக சில நடவடிக்கைகளும் எடுக்க முடியும். மேலும் பன்னாட்டு மக்களின் கருத்து (International Public Opinion), அச்சட்டம் நாடுகளால் மீறப்படாமலிருக்க, ஒருவலிமை மிக்க சக்தியாக அமைந்துள்ளது. எனவே சட்டத்தை, சட்டத்திற்குள்ள முக்கிய சிறப்புத் தன்மைகளை பெற்றிருப்பதினால், அதை 'சட்டம்' என்று அழைப்பதில் தவறில்லை.

9. குடியுரிமை
(Citizenship)

[குடியுரிமை—சுதந்திரம்—சுதந்திரத்தின் வகைகள்—சுதந்திரமும் சட்டமும்- சுதந்திரத்தின் தேவைகள்—சமத்துவம்—சமத்துவத்தின் வகைகள்—சமத்துவமும் சுதந்திரமும்—சமத்துவமும் கூட்டுடைமைத் தத்துவமும்—இந்திய அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகளும் கடமைகளும்.]

குடியுரிமை
(Citizenship)

மக்களின் நலனைப் பேணுவதற்கென அமைந்துள்ளது தான் அரசு. இந்த அரசின் அங்கத்தினராகத் திகழ்பவர்கள் தான் குடிமக்கள். ஓர் அரசில் குடிமக்கள், அயல்நாட்டவர் என இரு வகைப்பட்ட மக்கள் காணப்படுவர். இவ்விருவகையினரில் குடிமக்கட்கு மட்டும் தான் எல்லா உரிமைகளும் அளிக்கப்படும். தற்கால அரசுகளில் பெரும்பாலானவை மக்களாட்சி முறையைக் கொண்டுள்ளன. இவ்வரசுகளில் மக்களாட்சி பண்புகட்கு ஒப்ப மக்கள் எல்லோருக்கும் உரிமைகள் வழங்கப்படுகின்றன. மக்களாட்சி முறையைக் கொண்ட ஒருசில அரசுகளில் மக்கள் எல்லோருக்கும் உரிமைகள் யாவும் அளிக்கப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எவனொருவன் ஒரு அரசின் அங்கமாக வாழ்ந்து, அவ்வரசால் அளிக்கப்படும் அரசியல் உரிமைகளை அனுபவித்து, தன் கடமைகளைப் புரிகின்றானோ அவன்தான் குடியுரிமை கொண்ட குடிமகன்.

குடியுரிமையைப் பெறுவதற்கு இருவழிகள் உள்ளன. பெரும்பாலோர் இயற்கையாகவே ஓர் அரசின் குடிமக்களாக இருப்பர். ஓர் அரசின் எல்லைகளினுள் பிறப்பதனாலோ, அல்லது அங்கு வாழும் மக்களுடன் குருதித் தொடர்பு கொள்வதாலோ ஒருவன் குடிமகனாக மாறமுடியும். இரண்டாவதாக, ஓர் அரசின் அங்கத்துவத்தை விரும்பிப் பெறுவதன்மூலம் ஒருவன் குடிமகனாக முடியும்.

இத்தகைய குடியுரிமையைப்பெற விரும்புபவர் அரசு நிர்ணயிக்கும் கட்டுப்பாடுகட்கு இணங்கவேண்டும்.

குடியுரிமை உள்ளவன் வாக்குரிமையையும், தேர்தலில் போட்டியிடும் உரிமையையும் பெறுகின்றான். சுருங்கச்சொன்னால், தனது அரசாங்கத்தை நிர்ணயம் செய்யும் அதிகாரத்தை ஒரு குடிமகன் பெறுகின்றான்.

குடியுரிமை என்பது உரிமைகளை மட்டும் கொண்டதல்ல. குடிமகனுக்குப் பல கடமைகளும் உள்ளன. சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக ஒவ்வொரு குடிமகனும் தன்னால் இயன்றளவு பொதுப் பணிகளில் ஈடுபடவேண்டும். இத்தகைய ஈடுபாடு இல்லாவிடில் குடியுரிமை அர்த்தமற்றதாகி விடும். அறிவற்ற, ஆர்வமற்ற மக்களைக் கொண்ட சமுதாயம் முன்னேறுவது கடினம். மக்கள் விழிப்புணர்வற்றுக் காணப்பட்டால் அதிகாரிகளும், ஆட்சியாளர்களும் உற்சாகமற்றவர்களாகவும், ஊழலுக்குட்பட்டவர்களாகவும் மாற வாய்ப்புண்டு. நிரந்தர விழிப்புணர்வுதான் குடியுரிமையைப் பாதுகாக்கும்.

நாட்டுப்பற்றை விட முக்கியத்துவம் உடையது குடியுரிமை. நாட்டுப்பற்று வரம்புகட்குட்பட்டது. குடியுரிமைக்கு வரம்பு கிடையாது. சமுதாயப்பற்றை வளர்ப்பதற்கு உகந்தது குடியுரிமை. பரந்த மனப்பான்மை தோன்றவும் இது வழி வகுக்கும். குடியுரிமையை நல்ல முறையில் பேணப் பல வழிகள் உள்ளன. இவற்றில் முக்கியமானது கல்வி. ஒருவனைக் குடியுரிமைக்குத் தகுதியுடையவனுக்குவதற்கேற்ற கல்வி அவனுக்களிக்கப்பட வேண்டும் என்று பேராசிரியர் லாஸ்கி (Prof. Laski) கூறுவது உண்மையான ஒரு கருத்தேயாகும்.

பொறுப்புணர்வும், கடமையுணர்வும், விழிப்புணர்வும் கொண்ட குடிமக்களைக் கொண்ட அரசு சிறந்த அரசாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

சுதந்திரம்
(Liberty)

மனித வரலாற்றில் முக்கியத்துவமுடையதாகத் திகழ்ந்துள்ள கருத்து 'சுதந்திரம்' என்பதாகும். சுதந்திரம் பலரை ஊக்குவித்ததுண்டு. இதற்காக உயிரிழந்தவரின் எண்ணிக்கை கணக்கிலடங்காது. சுதந்திரம் என்றால் என்ன? சிந்திப்பதற்கும் சிந்தனைக்கேற்பச் செயல்படுவதற்கும் உள்ள சூழ்நிலை தான்

சுதந்திரம் என்பது. இவ்விளக்கத்தை முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியாது. எல்லோரும் தமது இச்சைப்படி தாம் விரும்பும் பொழுதெல்லாம் செயற்பட முனைந்தால் அதனால் குழப்பம்தான் விளையும். சொல்லாலும், எழுத்தாலும், செயலாலும் தனது கருத்தைத் தெரிவிக்க மனிதன் விரும்புகின்றான். இதற்கு தடைகள் இருக்கக் கூடாது. ஆனால் எல்லோருக்கும் சுதந்திரம் கிடைக்க வேண்டுமென்றால் சில கட்டுப்பாடுகள் இருக்கவேண்டும். கட்டுப்பாடற்ற சுதந்திரம் நல்லதல்ல. அளவற்ற சுதந்திரம் அராஜகத்தை உருவாக்கும். சில நடத்தை விதிகளை ஒவ்வொருவரும் பின்பற்றினால்தான் சமுதாயத்தில் சுமுக உறவும், அமைதியும் காணப்படும். ஒருவரது சுதந்திரம் மற்றொருவரது சுதந்திரத்திற்கு இடையூறாக இருக்கக் கூடாது. இதனால்தான் கட்டுப்பாடுகள் தேவைப்படுகின்றன. ஆனால் இக்கட்டுப்பாடுகள் அளவற்றவையாக இருக்கக் கூடாது. கட்டுப்பாடுகள் அதிகரித்தால் சுதந்திரம் பாதிக்கப்படும். இக்கட்டுப்பாடுகள் சட்டபூர்வமானவையாகவும், சமுதாயத்தால் ஏற்கப்பட்டவையாகவும் இருக்க வேண்டும். இவை மனிதரின் துவக்க உணர்வை பாதிக்கக்கூடாது.

சுதந்திரத்தின் வகைகள்

சுதந்திரம் பல வகைப்படும். பின்வருபவை குறிப்பிடத் தக்க சுதந்திரங்களாகும். பொதுவாக எல்லா அரசுகளிலும் காணப்படுபவைதான் பின்வரும் சுதந்திரங்கள்:

1. இயற்கைச் சுதந்திரம் (Natural Liberty)

எல்லாவிதக் கட்டுப்பாடும் இல்லாத நிலையைத் தான் இயற்கைச் சுதந்திரம் குறிப்பிடுகின்றது. அரசு தோன்றுவதற்கு முன் மனிதன் இச்சுதந்திரத்தைக் கொண்டிருந்தான் என்று கூறப்படுகின்றது. விருப்பம் போல் செயற்படும் உரிமையைத் தான் இயற்கைச் சுதந்திரம் என்கின்றோம். எந்தவிதக்குறுக்கீடும், தலையீடும் இல்லாமல் சிந்திக்கவும், செயல்படவும் ஒவ்வொரு நபரும் விரும்புகின்றான். இது தான் இயற்கைச் சுதந்திரம்.

2. உரிமைச் சுதந்திரம் (Civil Liberty)

இது சட்டபூர்வமான சுதந்திரமாகும். மக்களுக்கென்று அரசு உருவாக்கிப் பாதுகாக்கும் உரிமைகள் அடங்கியது தான் உரிமைச் சுதந்திரம். சட்டத்தால் விதிக்கப்படும் வரம்புகட்குள் மக்கள் செயல்பட வேண்டும். இச்சுதந்திரம் தனியார் தலையீட்டிலிருந்தும், அரசாங்கத்தின் தலையீட்டிலிருந்தும் பாதுகாப்பு

அளிக்கும். இச்சுதந்திரம் மக்கள் எல்லோருக்கும் சமமாகக் கிடைக்கப் பெறுவதாகும். உரிமைச் சுதந்திரம் இல்லாவிடில் வேறெந்தச் சுதந்திரத்தாலும் பயனில்லை. அடிப்படை உரிமைகள் பலவற்றின் தொகுப்புத் தான் உரிமைச் சுதந்திரம் எனப்படுவது.

3. அரசியற் சுதந்திரம் (Political Liberty)

அரசின் அலுவல்களில் பங்கெடுப்பதற்கு மக்களுக்கு அளிக்கப்படும் வாய்ப்பை குறிப்பது தான் அரசியல் சுதந்திரம் என்பது. வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கான உரிமை, தேர்தலில் போட்டியிடும் உரிமை, பொதுப்பணிகளை மேற்கொள்ளும் உரிமை, மனுக்கொடுக்கும் உரிமை ஆகிய உரிமைகள் அடங்கியது தான் அரசியற் சுதந்திரம் எனப்படுவது. அரசாங்கத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான உரிமைதான் அரசியற் சுதந்திரம் என்று லீகாக் (Leacock) கூறுகின்றார். அரசியற் சுதந்திரம் பயனுடையதாக வேண்டுமென்றால் இரண்டு நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்என்று லாஸ்கி (Laski) கூறுகின்றார். மக்கள் கல்வியறிவு உடையவராக இருக்க வேண்டும். கலப்படமற்ற செய்திகள் மக்களுக்கு அளிக்கப்பட வேண்டும். இவையிரண்டும் இருந்தால்தான் அரசியல் சுதந்திரம் அர்த்தமுள்ளதாக அமையும்.

4. பொருளாதாரச் சுதந்திரம் (Economic Liberty)

உரிமைச்சுதந்திரமும், அரசியற் சுதந்திரமும் இருந்தால் மட்டும் போதாது. பொருளாதாரம் சம்பந்தப்பட்ட சுதந்திரமும் மக்களுக்கு அளிக்கப்பட வேண்டும். தன் வாழ்க்கைக்குத் தேவையான பொருளாதார நிலைகளின் மீது தனக்குப் போதிய கட்டுப்பாடு இருக்க வேண்டும். தேவைக்கேற்ற வசதிகள் யாவருக்கும் கிடைக்க வேண்டும். தொழிலாளர்கட்குச் சுயநிர்ணய உரிமை அளிக்கப்பட வேண்டும். பொருளாதார ஏற்றத் தாழ்வுகளும், பட்டினியும், வேலையில்லாத் திண்டாட்டமும் தலைவிரித்தாடும் சமுதாயத்தில் உரிமைச் சுதந்திரமும், அரசியற் சுதந்திரமும் அர்த்தமற்றவையாக அமைந்துவிடும்.

5. தேசியச் சுதந்திரம் (National Liberty)

தேசியச் சுதந்திரமும் நாட்டின் சுதந்திரமும் ஒன்றே. ஓர் அரசின் நடவடிக்கைகளில் மற்றொரு அரசின் தலையீடு இருக்கக் கூடாது. இச்சுதந்திரத்தைக் கொண்ட நாட்டு மக்களால் மட்டுமே இதர சுதந்திரங்களை நன்கு அனுபவிக்க முடியும்.

சுதந்திரமும் சட்டமும்
(Law and Liberty)

சீரான அரசியல் முறையும், அதற்கு அதிகார வலிமையும் இருந்தால்தான் பிறரது தலையீடும் இடையூறும் இல்லாமல் சுதந்திரத்தை அனுபவிக்க முடியும். இந்த அமைப்பைத்தான் நாம் அரசு என்கின்றோம். அரசு தனது அதிகாரத்தைச் சட்டத்தின் வாயிலாகப் பயன்படுத்துகின்றது. அரசிற்கு இறைமையுள்ளதனால் அதன் சட்டங்கள் எல்லோரையும் கட்டுப்படுத்தக்கூடிய தன்மையைக் கொண்டுள்ளன.

சட்டம் என்பது கட்டுப்படுத்தும் தன்மை உடையதாதலால் அது சுதந்திரத்திற்கு நேர் முரணானது என்ற கருத்தைச் சிலர் கொண்டுள்ளனர். ஆகவே அரசின் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும் என்று இவர்கள் வாதிடுகின்றனர். அரசை அடியோடு அழித்து விட்டால் மனிதனின் வளர்ச்சி தடைப்படாது என்ற கருத்தைக் கூறுபவரும் உள்ளனர்.

சட்டம் இல்லாவிடில் சுதந்திரம் இருக்க முடியாது. சுதந்திரம் பராமரிக்கப்பட வேண்டுமென்றால் கட்டுப்பாடு தேவை. கட்டுப்பாடு இருப்பதனால்தான் சுதந்திரம் காணப்படுகின்றது என்று பேராசிரியர் வில்லோபி (Prof. Willoughby) கூறுகின்றார். ஒருவன் தனது சுதந்திரத்தைப் பயன் படுத்துவதன் விளைவாகப் பிறருக்கு இன்னல் விளையக்கூடாது. ஒருவனின் சுதந்திரம் மற்றொருவனின் சுதந்திரத்தைப் பாதிக்கக் கூடாது. இதற்குத்தான் கட்டுப்பாடுகள் தேவைப்படுகின்றன. இக்கட்டுப்பாடுகளை அரசு தனது சட்டங்கள் மூலமாகச் செயற்படுத்துகின்றது. சட்டபூர்வமான சுதந்திரத்தை அளிக்க அரசால் மட்டுமே இயலும். தனியாரின் சுதந்திரத்திற்கு அரசு சட்டத்தின் மூலம் பாதுகாப்பு அளிக்கின்றது. சட்டம் இல்லாவிடில் இப்பாதுகாப்பு இராது. ஆகவே சட்டமும் சுதந்திரமும் ஒன்றிற்கொன்று இன்றியமையாதனவை.

எல்லா அரசுகளின் சட்டங்களும் சுதந்திரத்தைக் காப்பவை எனக் கூறமுடியாது. சுதந்திரத்திற்குத் தேவையான சூழ்நிலைகளைப் பல அரசுகளும் அளித்துள்ள போதிலும், சுதந்திரத்திற்கு நேர் முரணான சட்டங்களைக் கொண்டுள்ள அரசுகளும் உள்ளன. அளவிற்கதிகமான கட்டுப்பாடுகளைச் சட்டம் சுமத்தினால் சுதந்திரம் பாதிக்கப்படும். சுதந்திரத்தைக் காப்பதற்குத் தேவையான அளவு கட்டுப்பாடுகள் மட்டும் காணப்பட வேண்டும். மேலும், சட்

டத்தைச் செயற்படுத்துவதில் அரசு பாரபட்சத்துடன் செயல்படக் கூடாது. சட்டத்திற்குக் கீழ்படிதல் எல்லோருக்கும் நல்லது என்று மக்கள் உணர்ந்திருத்தல் சுதந்திரத்தைக் காக்கப் பயன் படும்.

சுதந்திரத்தின் தேவைகள்
(Conditions of Liberty)

சுதந்திரம் காக்கப்படுவதற்குப் பின் வருபவை தேவைப் படுகின்றன:

1. அடிப்படை உரிமைகள் (Fundamental Rights)

சுதந்திரத்தின் அடிப்படையான உரிமைகள் மக்களுக்கு அளிக்கப்படவேண்டும். இவற்றை அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டிருத்தல் சாலச்சிறந்தது. ஏனெனில் அரசின் அதிகார வரம்பைக் குறிப்பிடும் அரசியலமைப்புச் சட்டம் இவ்வுரிமை கட்குத் தக்க பாதுகாப்பு அளிக்க வல்லது. உரிமைகள் உடைய மக்கள் தான் சுதந்திரத்தை உடையவராக இருப்பர். ஆகவே அடிப்படை உரிமைகள் மக்களுக்கு அளிக்கப்பட்டு காக்கப்பட் டால் அம்மக்களுக்குச் சுதந்திரம் கிட்டும் எனக் கூறலாம்.

2. நீதித்துறையை ஆட்சித் துறையினின்று பிரித்தல் (Separation of Judiciary from the Executive)

அரசாங்கத்தின் உறுப்புக்களான நீதித்துறை சட்டத்தை விளக்கும் பணியையும், ஆட்சித்துறை சட்டத்தை செயல்படுத்தும் பணியையும் புரிகின்றன. நீதித்துறையின் நடவடிக்கைகளில் தலையீடு இருந்தால் நீதி கிட்டாது. எல்லோருக்கும் சம வாய்ப்புக் களும், உரிமைகளும் இருக்க வேண்டுமெனில் நீதித்துறை சுதந் திரமாக செயற்பட வேண்டும். மேலும், நீதி வழங்குவதற்குத் தடையும் தாமதமும் ஏற்படக் கூடாது. இரண்டு துறையும் ஒரு வரிடமிருந்தால் சுதந்திரம் பறிபோய்விடும். எனவே இரண்டை யும் தனித்தனியாகப் பிரிக்க வேண்டியது மிகவும் அவசியம்.

3. சட்டத்தின் ஆட்சி (Rule of Law)

சட்டத்தின் ஆட்சி என்ற கொள்கை கடைபிடிக்கப் பட்டால் சுதந்திரம் காக்கப்படும். சட்டத்தின் முன் யாவரும் சமம், சட்டம் எல்லோருக்கும் பொதுவானது என்பதுதான் சட்டத்தின் ஆட்சியின் பொருள். விசேடச் சலுகைகளைப் பெறும் நபர்களைக் கொண்ட சமுதாயத்தில் சுதந்திரம் உள்ளது எனக்கூற முடியாது.

பலரது சுதந்திரம் சிலரது விருப்பு, வெறுப்புகட்டுப்பட்டது என்ற நிலை இருக்கக் கூடாது. அரசின் நடவடிக்கைகள் பாரபட்சமற்றவையாக இருக்க வேண்டும்.

4. பொருளாதார நீதி (Economic Justice)

பொருளாதாரம் சம்பந்தப்பட்ட ஏற்றத்தாழ்வுகள் மலிந்த சமுதாயத்தை சுதந்திரமுடைய சமுதாயம் எனக்கருத முடியாது. மக்கள் எல்லோரும் சுதந்திரமுடையவராக இருக்க வேண்டுமென்றால் அவர்களிடையே ஏற்றத்தாழ்வுகள் அதிகம் காணக் கூடாது. சமவாய்ப்புகளும், வசதிகளும் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும். இதற்காகத்தான் தற்கால அரசுகள் சமூகநலத் திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்துகின்றன.

5. பேச்சுரிமையும் எழுத்துரிமையும் (Freedom of Speech and Expression)

மக்கள் தமது கருத்துகளை சுதந்திரமாகத் தெரிவிப்பதற்கான உரிமையைக் கொண்டிருக்க வேண்டும். மக்களுக்கு கிடைக்கும் தகவல்களும், செய்திகளும், கலப்படமற்றவையாகவும், உண்மையானவையுமாக இருக்க வேண்டும். எண்ணியதை வெளியிடும் உரிமையும் இருக்க வேண்டும்.

6. நிரந்தர விழிப்புணர்வு (Eternal Vigilance)

மக்கள் விழிப்புணர்வுடையவராக இருந்தால் அவர்களின் சுதந்திரம் காக்கப்படும். தமது சுதந்திரத்திற்காகப் போராடவும் அவர்கள் தயங்கக் கூடாது. தகாத முறையில் பயன்படுத்தும் அதிகாரத்தை எதிர்க்க மக்கள் துணிவுடையவராக இருக்க வேண்டும்.

அரசியலமைப்பு முறையும் சுதந்திரமும்
(Constitutionalism and Liberty)

தற்காலத்தில் பிரபலமடைந்துள்ளது அரசியலமைப்பு முறை. அரசியலமைப்பு முறை இல்லாத நாடு இல்லையென்றே கூறலாம். மக்களாட்சியின் அடிப்படை அரசியலமைப்பு முறையில்தான் காணப்படுகின்றது. ஓர் அரசின் அடிப்படைச் சட்டம்தான் அரசியலமைப்பு என்பது.

அரசாங்கத்தின் அதிகாரங்கள் யாவும் அரசியலமைப்பில் கொடுக்கப்பட்டிருக்கும். அரசாங்கத்தின் அதிகார வரம்பையும் அரசியலமைப்பு நிர்ணயிக்கும். அரசாங்கத்தின் அதிகாரத்திற்கு

வரம்பு நிர்ணயிக்கப்படுவதனல் எதேச்சதிகாரம் தடுக்கப்படுகின்றது. எதேச்சதிகாரம் சுதந்திரத்தை அழித்துவிடும். ஆகவே, அரசாங்கத்தின் அதிகாரத்தை நிர்ணயம் செய்யும் அரசியலமைப்பு சுதந்திரத்தை மக்களுக்கு அளிக்கப் பயன்படுகின்றது. அளவற்ற அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதோடன்றி சுதந்திரத்தைக் காப்பதற்கான வழிமுறைகளையும் அரசியலமைப்பு குறிப்பிடும்.

அரசியலமைப்பை அடிப்படையாகக் கொண்ட அரசில் சுதந்திரம் காணப்படுவதற்குரிய சாத்தியக் கூறுகள் அதிகம் காணப்படும்.

சமத்துவம்
(Equality)

மக்களாட்சிப் பண்புடன் நெருங்கிய உறவுடையது சமத்துவம் என்ற கருத்து. மனிதரது திறமையைப் பொறுத்தவரையில் அவர்களிடையே ஏராளமான வேற்றுமைகள் காணப்படுகின்றன. இதற்குச் சூழ்நிலைகளும், வாய்ப்புக்களும் தான் காரணம் என்று கூறலாம். ஆனால் மக்களாட்சி முறையைப் பின்பற்றினுல் இக்குறைகளை ஓரளவு நிவர்த்தி செய்ய முடியும். எல்லோரும், எல்லா வகையிலும் சமத்துவம் உடையவராக இருக்க வேண்டுமென்பது மக்களாட்சியின் குறிக்கோளல்ல. சட்டத்தின் முன்பும் வாக்குரிமையிலும், வாய்ப்புகளிலும் சமத்துவம் நிலவ வேண்டுமென்பது தான் மக்களாட்சியின் குறிக்கோள்.

இயற்கையாகவே மக்களிடையே ஏற்றத் தாழ்வுகள் காணப்படுகின்றன என்பது மறுக்க முடியாத உண்மை. உடல் வலிமை, அறிவு, ஆற்றல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பார்த்தோமென்றுல் மக்களிடையே சமத்துவம் காணமுடியாது. ஆகவே இங்கு சமத்துவம் என்பது அரசியற் சமத்துவத்தையும், பொருளாதார சமத்துவத்தையும் தான் குறிப்பிடுகின்றது.

ஒரு சிலர் மட்டும் சிறப்புச் சலுகைகளைப் பெற்று வாழ்ந்த பொழுது சாதாரண உரிமைகள் கூட மறுக்கப்பட்ட பாமர மக்கள் சமத்துவம் வேண்டுமெனக் குரலெழுப்பினர். அந்த நிலையில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன. அரசியலில் எல்லோருக்கும் சம வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். சாதி, மொழி, இனம், நிறம், பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் மக்களிடையே

வேற்றுமை காண்பிக்கக் கூடாது. மக்களிடையே காணப்படும் பாகுபாடுகளை அகற்றி, எல்லோருக்கும் உரிமைகளையும், சம வாய்ப்புக்களையும் அளித்து, அரசாங்கத்தை அணுகும் சூழ் நிலையை உருவாக்கியுள்ள சமுதாயம் சமத்துவத்தை உடையது எனப்படலாம்.

சமத்துவத்தின் வகைகள்

1. உரிமைச் சமத்துவம் (Civil Equality)

குடிமக்கள் எல்லோரும் சமஉரிமைகள் உடையவர் என்பதைத் தான் உரிமைச் சமத்துவம் குறிப்பிடுகின்றது. குடியுரிமைகள் வழங்கப்படுவதில் பாகுபாடு இருக்கக்கூடாது. சட்டத்தின் முன் யாவரும் சமம் என்ற நிலையும், சட்டத்தின் ஆட்சியும் உரிமைச் சமத்துவத்தின் அடிப்படையாகும்.

2. அரசியற் சமத்துவம் (Political Equality)

அரசாங்கத்தை அணுகுவதற்கு எல்லோருக்கும் சம உரிமை காணப்பட்டால் அதனை அரசியல் சமத்துவம் எனலாம். அரசாங்கத்தின் அமைப்பை நிர்ணயிக்கும் உரிமையும், பொதுப் பதவிகள் வகிக்கும் உரிமையும் எல்லோருக்கும் சமமாக அளிக்கப்பட வேண்டும். அதாவது, மக்களாட்சிப் பண்புகள் செவ்வனே செயல் படுத்தப்பட வேண்டும்.

3. பொருளாதாரச் சமத்துவம் (Economic Equality)

பொருளாதாரச் சமத்துவம் இல்லாவிடில் அரசியல் சமத்துவம் அர்த்தமற்றதாகிவிடும். உடைமை ஒரு சிலரது கட்டுப்பாட்டிற்குள் இருந்தால் அதனால் மக்கள் முழுப்பயனும் அடைய முடியாது. தேவைக்கேற்ற பொருளாதார வசதிகள் யாவருக்கும் அளிக்கப்பட வேண்டும். பொருளாதாரம் சம்பந்தப்பட்ட உரிமைகளும் எல்லோருக்கும் அளிக்கப்பட வேண்டும்.

4. சமுதாயச் சமத்துவம் (Social Equality)

சாதி, சமயம், இனம், குலம், மொழி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட வேற்றுமைகள் காணப்படக் கூடாது. இத்தகைய வேற்றுமைகள் உடைய சமுதாயம் சமத்துவம் அற்ற சமுதாயமாகும். ஆகவே, இவ்வேற்றுமைகள் காணப்பட்டால் அவற்றை அகற்றும் பணிகளில் அரசு ஈடுபடவேண்டும்.

சமத்துவமும் சுதந்திரமும்
(Equality and Liberty)

சுதந்திரமும் சமத்துவமும் ஒன்றிற்கொன்று நேர் முரண்பாடுடையவை என்று டிடோக்கெவில் (De Tocqueville) ஆக்டன் பிரபு (Lord Acton) ஆகியோரின் கருத்தாகும். இவர்கள் கட்டுப்பாடற்ற சுதந்திரத்தை ஆதரித்தனர்.

சுதந்திரம் என்பது தன்னிச்சைப்படி செயற்படுவதற்கான உரிமையல்ல. சமுதாயத்தின் நலன் பேணப்பட வேண்டுமெனில் சில கட்டுப்பாடுகள் தேவை. எல்லோருக்கும் சுதந்திரம் கிடைக்க வேண்டுமெனில் தனியார் சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட வேண்டும். வலியோரைக் கட்டுப்படுத்தினுல் தான் வலிவற்றோருக்கு சுதந்திரம் கிட்டும். செல்வந்தரைக் கட்டுப்படுத்தினுல்தான் ஏழைகட்குச் சுதந்திரம் கிடைக்க முடியும். ஒருவன் வாழ்வதற்குப் பிறரது உதவியை நாடி நிற்கும் நிலை மாறவேண்டும். ஆகவே, சுதந்திரம் இருந்தால்தான் சமத்துவம் காணப்படும்.

சமத்துவம் இருக்குமிடத்தில்தான் சுதந்திரத்தையும் காண முடியும். ஏற்றத் தாழ்வுகளை அதிக அளவில் கொண்டுள்ள சமுதாயத்தில் உரிமைச் சுதந்திரமும், அரசியற் சுதந்திரமும் காணப்பட்டாலும் அவை பயனுடையவையாக இருக்காது. அதனுல் சமத்துவமும், சுதந்திரமும் ஒன்றிற்கொன்று தொடர்புள்ளவையாகும்.

சமத்துவமும் கூட்டுடைமைத் தத்துவமும்
(Equality and Collectivism)

எல்லோருக்கும் சம வாய்ப்புக்களும், வசதிகளும் கிட்டக்கூடிய சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்பதுதான் கூட்டுடைமைத் தத்துவத்தின் குறிக்கோள். இத்தகைய சமுதாயத்தை உருவாக்கும் பணியின் முதற்கட்டமாக இன்றைய சமுதாயத்தில் ஒரு சிலருக்கு மட்டுமுள்ள சலுகைகளும், உரிமைகளும், அதிகாரமும் அகற்றப்படவேண்டும். வர்க்க பேதமற்ற சமுதாயம் உருவாக்கப் படவேண்டும். மூலப்பொருட்கள் கூட்டுடைமையாக்கப்பட வேண்டும். இதுதான் கூட்டுடைமைத் தத்துவத்தின் அடிப்படைக் கொள்கையாகும்.

கூட்டுடைமைத் தத்துவத்தில் கூறப்படும் சமத்துவத்திற்கும் நாம் இதுவரை ஆராய்ந்த சமத்துவத்திற்கும் பல வேற்றுமைகள்

உள்ளன. யாவும் பொதுவுடைமையாக்கப்பட வேண்டுமென்பது சமத்துவத்தின் குறிக்கோள் அல்ல. தேவைக்கேற்றளவு உடைமையும், வாய்ப்புக்களும் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டுமென்பது தான் சமத்துவத்தின் வாதம். யாவும் பொதுவுடைமையாக்கப்பட வேண்டும் என்ற கருத்திற்கு இங்கு இடமில்லை. சம வாய்ப்பும், உரிமையும், தேவைக்கேற்ற உடைமையும் இருக்கும் பொழுது மனிதன் சுதந்திரத்தையும் பெறுகின்றான். யாவும் பொதுவுடைமையாக்கப்பட்டால் மனிதன் அவனுடைய தனித்தன்மையையும், சுயநிர்ணய உரிமையையும் இழந்து விடுவான். இச்சூழ்நிலையில் அவனுக்குப்பிற உரிமைகள் முழுமையாக இருக்க முடியாது. அதனால் சமத்துவமும், கூட்டுடைமைத் தத்துவமும் ஒன்றிற்கொன்று பொருந்துபவை அல்ல.

இந்திய அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகளும் கடமைகளும் (Fundamental Rights and Duties in the Constitution of India)

குடியுரிமைக்கும், சுதந்திரத்திற்கும், சமத்துவத்திற்கும் ஏற்ற விரிவான அடிப்படை உரிமைகள் இந்திய அரசியலமைப்பில் இடம் பெற்றுள்ளன. இவ்வளவு விரிவான அடிப்படை உரிமைகள் வேறெந்த அரசியலமைப்பிலும் காணப்படவில்லை. நமது அரசியலமைப்பில் கொடுக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை ஏழு வகைகளாகப் பிரிக்கலாம். நமது அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் மட்டுமன்றி 10 அடிப்படைக் கடமைகளும் இடம் பெற்றுள்ளன. அடிப்படைக் கடமைகளைக் குறிப்பிடும் ஒரு சில அரசியலமைப்புகளில் ஒன்று இந்திய அரசியலமைப்பு.

அடிப்படை உரிமைகள்

1. சமத்துவ உரிமை (Right to Equality)

ஐந்து அம்சங்களைக் கொண்டது சமத்துவ உரிமை. எல்லோரும் சட்டத்தின் முன் சமம் என்பதையும், சட்டம் எல்லோருக்கும் சமப் பாதுகாப்பு அளிக்கும் என்பதையும் இந்த உரிமை உறுதிப்படுத்துகின்றது. சமயம், இனம், சாதி, பால், பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் மக்களை வேற்றுமைப்படுத்தக் கூடாது என்று விதிக்கப்பட்டுள்ளது. அரசின் கீழ் எப்பதவி வகிப்பதற்கும் குடிமக்கட்கு சம வாய்ப்பு அளிக்கப்படுகின்றது. தீண்டாமை அகற்றப்படுவதற்கும், சிறப்புப் பட்டங்கள் ரத்து செய்யப்படுவதற்கும் இவ்வுரிமை வழி வகுக்கின்றது.

2. குறிப்பிட்ட சுதந்திரங்கட்கான உரிமை (Right to particular Freedoms)

ஏழு வகைப்பட்ட சுதந்திரங்களையும், மூன்று பாதுகாப்புக்களையும் இந்த உரிமை அளிக்கின்றது. பேச்சுரிமை, எழுத்துரிமை, ஆயுதமின்றி அமைதியாகக் கூடுவதற்குள்ள உரிமை, சங்கங்களும் கழகங்களும் அமைத்துக் கொள்வதற்குள்ள உரிமை, இந்திய எல்லைக்குள் எங்கு வேண்டுமென்றாலும் குடியேறுவதற்குள்ள உரிமை, நாட்டின் எப்பகுதிக்கும் தடையின்றிச் செல்வதற்கான உரிமை, உடைமை உரிமை, பணிகளும், தொழில்களும் புரிவதற்குள்ள உரிமை என்று ஏழு வகைப்பட்ட உரிமைகள் அளிக்கப்பட்டுள்ளன.

சட்டத்தை மீறுவதற்குத்தான் தண்டனை அளிக்கப்பட வேண்டுமென்றும், சட்டப்படித்தான் தண்டனையளிக்க வேண்டுமென்றும், சட்டப்படியன்றி ஒருவரைக் கைது செய்யக்கூடாது, காவலில் வைக்கக்கூடாதென்றும் நமது அரசியலமைப்பு கூறுகின்றது.

3. தகாத நடவடிக்கைகட்குப் பயன்படுத்துவதைத் தடுக்கும் உரிமை (Right against Exploitation)

கொத்தடிமை முறை, பெண்களை விபச்சாரம் போன்ற தீய பணிகட்குப் பயன்படுத்துதல் ஆகியவற்றை தடுப்பதற்கென இவ்வுரிமை வழங்கப்பட்டுள்ளது. பதினான்கு வயதிற்குக் குறைந்த சிறுவரை ஆபத்துள்ள பணிகளில் ஈடுபடச்செய்யக்கூடாதென்றும் விதிக்கப்பட்டுள்ளது.

4. சமயச் சுதந்திர உரிமை (Right to Freedom of Religion)

பொது அமைதி, பண்பாடு, உடல்நலன் ஆகியவற்றிற்குக் கட்டுப்பட்டு யார் வேண்டுமென்றாலும் சமயச்சுதந்திரத்தைப் பயன்படுத்தலாம். சமயச்சார்புடைய நிறுவனங்களை அமைக்கும் உரிமையும் அளிக்கப்பட்டுள்ளது. சமயத்திற்கென உள்ள செலவினங்கள் மீது அரசு வரி விதிக்கக்கூடாது என்றும் விதிக்கப்பட்டுள்ளது. அரசின் நிதியுதவியுடன் நடத்தப்படும் கல்வி நிலையங்களில் சமயக்கல்வி புகட்டக்கூடாது.

5. கலாச்சாரத்திற்கும், கல்விக்குமான உரிமைகள் (Cultural and Educational Rights)

அவர்களது மொழி, கலாசாரம் ஆகியவற்றைக் காப்பதற்குச் சிறுபான்மையினருக்கு உரிமை அளிக்கப்பட்டுள்ளது. இவர்கள் கல்விக் கூடங்களையும் நிறுவலாம்,

6. உடைமை உரிமை (Right to Property)

சட்டத்தின் படியின்றி ஒருவரது உடைமை அவரிடமிருந்து பறிக்கக் கூடாது. உரிய இழப்பீடு கொடுத்த பின்தான் தனியார் உடைமையைப் பொதுத் தேவைகட்காக அரசு எடுக்க முடியும். உடைமையைக் கொண்டிருத்தல் தனியாரின் உரிமையாகும்.

7. சட்டப்படியான பரிகாரம் காணும் உரிமை (Right to Constitutional Remedies)

அரசியலமைப்பில் கொகுக்கப்பட்டுள்ள நீதிப் பேராணைகளை (writs) பயன்படுத்தி மக்கள் தமது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளலாம். ஒருவருக்கு உரிமைகள் மறுக்கப்பட்டாலும், குறைக்கப்பட்டாலும் அவர் பரிகாரம் காண நீதிமன்றத்தை அணுகலாம்.

நமது அரசியலமைப்பில் உரிமைகள் மட்டுமன்றி அவற்றைப் பாதுகாத்துக் கொள்வதற்கென வழி முறைகளும் கொடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. அரசியலமைப்பில் கொடுக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் ஒவ்வொன்றிற்கும் சில கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன என்பது முக்கியமானது. இந்த அடிப்படை உரிமைகளைப் பொறுத்தமட்டில் அரசுக்கும், தனிநபர்கட்கும் சில தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

நெருக்கடி நிலேயின் போது இந்த அடிப்படை உரிமைகளில் சிலவற்றையோ, அல்லது எல்லாவற்றையுமோ ரத்து செய்யும் அதிகாரம் இந்தியக் குடியரசுத் தலேவருக்கு அரசியலமைப்பால் அளிக்கப்பட்டுள்ளது.

அடிப்படைக் கடமைகள்
(Fundamental Duties)

அடிப்படை உரிமைகள் இடம் பெற்றுள்ள அரசியலமைப்புகளின் எண்ணிக்கை மிகக் குறைவு. 1976-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 42-வது அரசியலமைப்புத் திருத்தம் பத்து அடிப்படை கடமைகளைக் குறிப்பிடுகின்றன. அவை பின்வருமாறு :

1. அரசியலமைப்பிற்குக் கட்டுப்படுதலும், அரசியலமைப்பின் கோட்பாடுகட்கும், தேசீயக் கொடிக்கும், தேசீய கீதத்திற்கும் மதிப்பளிப்பது கடமையாகும்.

2. நமது விடுதலேப் போராட்டத்தை ஊக்குவித்த உயர்ந்த லட்சியங்களை போற்றிப் பின்பற்றுதல் கடமையாகும்.

3. இந்தியாவின் இறைமையையும், ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் போற்றிப் பேணுதல் கடமையாகும்.

4. தேவைப்படும்பொழுது நாட்டிற்குப் பணிபுரிதலும், நாட்டைக் காப்பதும் கடமையாகும்.

5. சமயம், மொழி, பிராந்தியம், வகுப்பு போன்ற வேற்றுமைகட்கப்பாற்பட்டு எல்லா மக்களிடையேயும் சுமுக மான உறவையும், சகோதர உணர்வையும் வளர்த்தல் கடமை யாகும். பெண்களின் மதிப்பிற்குக் குந்தகம் விளைவிக்கக் கூடிய பழக்கங்களைக் கைவிடுதல் கடமையாகும்.

6. வளமுடைய நமது கூட்டு கலாசாரத்தை மதித்துப் பாது காத்தல் கடமையாகும்.

7. வனங்கள், ஏரிகள், நதிகள், வன விலங்குகள் ஆகிய வற்றையும், நாட்டின் இயற்கை வனப்பையும் பாதுகாத்துப் பேணுதலும், உயிர் பிராணிகளிடம் கருணையுடன் நடந்து கொள் வதும் கடமையாகும்.

8. விஞ்ஞான உணர்வு, மனிதாபிமானம், ஆய்வுமனப் பாங்கு, புரைமைப்புணர்வு ஆகியவற்றை வளர்த்தல் கடமை யாகும்.

9. பொது உடைமையைப் பாதுகாத்தலும், வன்முறையைப் புறக்கணித்தலும் கடமையாகும்.

10. நாடு எப்போதும் முன்னேற்றப்பாதையில் செல்வதற் கென தனியார் நடவடிக்கைகளிலும், கூட்டு முயற்சிகளிலும் சிறப்புற ஈடுபட வேண்டும்.

10. அரசாங்கம்
(Government)

[அரசியலமைப்பின் விளக்கம் — அரசியலமைப்பை வகைப் படுத்தல்—அரசாங்கத்தின் வகைகள்—தற்கால அரசுகள்—தற்கால அரசாங்கங்கள்—தற்கால அரசாங்கங்களின் அமைப்பு—அதிகாரப் பிரிவினை.]

முன்னுரை

அரசாங்கம் என்றால் என்ன என்பதை நாம் ஏற்கனவே ஆராய்ந்தோம். அரசின் உயிர்நாடி போன்றது அரசாங்கம். அரசு செயல்படுவதற்கு அரசாங்கம் இன்றியமையாதது. அரசின் குறிக்கோள்களையும், கொள்கைகளையும் செயல்படுத்தும் நிறுவனம் தான் அரசாங்கம் எனப்படுவது. இத்தன்மையுடைய அரசாங்கத்தின் அடிப்படை தான் அரசியலமைப்பு என்பது. ஒரு அரசியலமைப்பின் தன்மையைப் பொறுத்துத்தான் அரசாங்கத்தின் தன்மையும் அமையும்.

அரசியலமைப்பின் விளக்கம்

மக்களின் முக்கியமான சலுகைகளையும் அரசாங்கத்தின் முக்கியமான உரிமைகளையும் நிர்ணயிக்கும் எழுதப்பட்ட, அல்லது எழுதப்படாத அடிப்படைச் சட்டங்களின் தொகுப்புத்தான் அரசியலமைப்பு என்று மக்கின்டோஷ் (Mac Intosh) என்பவர் கூறுகின்றார். அரசாங்கத்தின் அமைப்பை நிர்ணயிப்பது தான் அரசியலமைப்பு என்று லூயிஸ் (Lewis) கூறுகின்றார். 'அரசாங்கத்தின் அமைப்பையும், அதன் உறுப்புகட்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய முறையையும், இவ்வதிகாரங்கள் எக்கோட்பாடுகளுக்கேற்பப் பயன்படுத்தப்பட வேண்டுமென்பதையும் நிர்ணயிக்கும் எழுதப்பட்ட, அல்லது எழுதப்படாத சட்டங்கள், விதிகள் ஆகியவற்றின் தொகுப்புத் தான் அரசியலமைப்பு' என்று கில்கிறைஸ்ட் (Gilchrist) கூறுகின்றார். மேற்கூறியவை மட்டுமன்றி இன்னும் ஏராளமான விளக்கங்கள் அரசியலமைப்பிற்கு அளிக்கப்பட்டுள்ளன. அரசியலமைப்பிற்கு அளிக்கப்பட்

டுள்ள விளக்கங்களை ஆராயும் பொழுது அரசியலமைப்பின் சில பண்புகள் புலப்படுகின்றன.

அரசியல் அமைப்பு அரசின் அமைப்பையும், அரசாங்கத்தின் அமைப்பையும், அதிகாரங்களையும் நிர்ணயிக்கின்றது; இது எழுதப்பட்டதாகவோ, அல்லது எழுதப்படாததாகவோ இருக்கலாம்; இது திட்டமிட்டு உருவாக்கப்பட்டதாகவோ, அல்லது தானாக தோன்றியதாகவோ இருக்கலாம்; இதனை ஒரு படிவத்திலோ, அல்லது பல படிவங்களிலோ காணலாம்.

அரசியலமைப்புகளை வகைப்படுத்தல் (Classification of Constitutions)

உலகிலுள்ள அரசியலமைப்புகள் யாவும் ஒரே மாதிரியானவை அல்ல. அரசியலமைப்பை வகைப்படுத்தும் பழக்கம் பண்டைய கிரேக்க மேதைகளான பிளேட்டோ, அரிஸ்டாட்டில் ஆகியோரது காலத்திலிருந்தே தோன்றியது. பண்டைய வகைப்படுத்தல் தற்காலத்திற்கு உகந்ததல்ல. தற்காலத்தில் அரசியலமைப்புகளிலும், அரசாங்கங்களிலும் காணப்படும் சில பண்புகளை அடிப்படையாகக் கொண்டு அரசியலமைப்புகள் வகைப்படுத்தப்படுகின்றன.

1. எழுதப்பட்ட அரசியலமைப்பு (Written Constitution)

திட்டமிட்டு உருவாக்கப்படும், அல்லது இயற்றப்படும் அரசியலமைப்பு எழுதப்பட்டதாக இருக்கும். இத்தகைய அரசியலமைப்பு ஒரு படிவத்திலோ, அல்லது சில படிவங்களிலோ காணப்படலாம். அரசாங்கத்தின் அமைப்பு, அதன் உறுப்புக்களின் அதிகாரங்கள், மக்களின் உரிமைகள் ஆகியவை எழுதப்பட்டிருந்தால் அந்த அரசியலமைப்பு எழுதப்பட்டதெனக் கருதப்படும். இத்தகைய அரசியலமைப்பிற்கு ஏராளமான உதாரணங்கள் உள்ளன. இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் அரசியலமைப்புகள் இவ்வகையைச் சார்ந்தவை.

எழுதப்பட்ட அரசியலமைப்பின் நிறைகளும் குறைகளும்

எழுதப்பட்ட அரசியலமைப்பு தெளிவுடையதாக இருக்கும். இத்தகைய அரசியலமைப்பின் மக்களின் உரிமைகள் சிறப்பாகப் பாதுகாக்கப்படும். எழுதப்பட்ட அரசியலமைப்பு நிரந்தரத் தன்மையுடையதாக இருக்கும்.

சாதாரணமாக, எழுதப்பட்ட அரசியலமைப்பு நெகிழாத் தன்மையுடையதாக இருக்கும் என்பதனுல் வளர்ச்சி பாதிக்கப் படும். இதனுல் புரட்சிகள் தோன்றக்கூடும். எழுதப்பட்ட அர சியலமைப்பு அது உருவாக்கப்பட்ட காலத்தில் காணப்பட்ட கருத்துகளுக்கு முக்கியத்துவம் அளித்திருக்கும்.

2. எழுதப்படாத அரசியலமைப்பு (Unwritten Constitution)

பழக்க வழக்கங்களையும், மரபுகளையும் அடிப்படையாகக் கொண்ட அரசியலமைப்பு எழுதப்படாதது. இத்தகைய அரசிய லமைப்பு பரிணுமத்தின் மூலமாகத் தோன்றுவதேயன்றித் திட்ட மிட்டு உருவாக்கப்படுவதல்ல. எழுதப்படாத அரசியலமைப் பிற்கு இங்கிலாந்தின் அரசியலமைப்பு மட்டுமே எடுத்துக்காட் டாக உள்ளது. அரசியலமைப்பின் பெரும்பாலான பகுதிகள் எழு தப்படாமலிருந்தால் அவ்வரசியலமைப்பு எழுதப்படாததெனக் கருதப்படுகின்றது.

எந்த அரசியலமைப்பும் முற்றிலும் எழுதப்பட்டதாகவோ அல்லது எழுதப்படாததாகவோ இருக்காது என்பதை மனதிற் கொள்ள வேண்டும். எழுதப்பட்ட அரசியலமைப்பிலும் காலப் போக்கில் மரபுகள் தோன்றுகின்றன. அதேபோல் எழுதப் படாத அரசியலமைப்பில் எழுதப்பட்ட சில அம்சங்களும் காணப்பெறும்.

எழுதப்படாத அரசியலமைப்பின் நிறைகளும் குறைகளும்

எழுதப்படாத அரசியலமைப்பு என்பது கிடையாது என்று அறிஞர்கள் கூறுகின்றனர். இருப்பினும், அரசியலமைப்புக்களை எழுதப்பட்டவையென்றும், எழுதப்படாதவையென்றும் பகுப்பது பழக்கமாக உள்ளது.

எழுதப்படாத அரசியலமைப்பு நெகிழும் தன்மையும், காலத்திற்கேற்றவாறு மாறும் பண்பையும் கொண்டிருக்கும். இதனுல் புரட்சிகள் தவிர்க்கப்படும்.

எழுதப்படாத அரசியலமைப்பு நிரந்தரத் தன்மை உடைய தாக இருக்காது. இத்தகைய அரசியலமைப்பு நீதித்துறையின் கைபொம்மையாக மாற வாய்ப்பு உண்டு. எழுதப்படாத அரசிய லமைப்பு மக்களாட்சிக்கு உகந்ததல்ல என்றும் கூறப்படு கின்றது.

3. நெகிழும் அரசியலமைப்பு (Flexible Constitution)

சாதாரணச் சட்டமியற்றும் முறையைப்பின் பற்றி எளிதில் திருத்தியமைக்கப்படக் கூடிய அரசியலமைப்பு நெகிழும் அரசியலமைப்பு எனப்படுகின்றது. நெகிழும் அரசியலமைப்பைப் பொறுத்தவரையில் அரசியலமைப்புச் சட்டமும், சாதாரணச் சட்டமும் சமமானவை. நெகிழும் அரசியலமைப்பு காலத்திற்கும், தேவைக்கும் ஏற்ப வளைந்து கொடுக்கும் பண்பைக் கொண்டிருக்கும். இவ்வகை அரசியலமைப்பிற்கு எடுத்துக் காட்டாக இங்கிலாந்தின் அரசியலமைப்பைக் கூறலாம். சாதாரணமாக, எழுதப்படாத அரசியலமைப்பு நெகிழும் தன்மையைக் கொண்டிருக்கும். ஆனால் எழுதப்பட்ட அரசியலமைப்புகள் யாவும் நெகிழாதவை அல்ல.

நிறைகளும் குறைகளும்

நெகிழும் அரசியல்மைப்பு எளிதில் திருத்தகூடியதாதலால் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற முடிகின்றது. மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப இந்த அரசியலமைப்பு மாறக்கூடிய பண்பைக் கொண்டுள்ளது. ஆகவே புரட்சிகள் எழாமல் காத்துக் கொள்ள முடிகின்றது.

இத்தகைய அரசியலமைப்பில் குறைகளும் காணப்படுகின்றன. இது நிரந்தரத்தன்மையை உடையதல்ல. ஆட்சி புரியும் கட்சியின் கைப்பொம்மையாக அரசியலமைப்பு மாறுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. மேலும், மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க இத்தகைய அரசியலமைப்பால் இயலாது என்று கூறப்படுகின்றது.

4. நெகிழா அரசியலமைப்பு (Rigid Constitution)

எளிதில் திருத்தியமைக்கப்பட முடியாத அரசியலமைப்பு நெகிழா அரசியலமைப்பு எனப்படுகிறது. நெகிழா அரசியலமைப்பைப் பொறுத்தவரையில் அரசியலமைப்புச் சட்டம் சாதாரண சட்டத்தினின்று உயர்ந்ததாகத்தான் இருக்கும். சாதாரண சட்டத்தைத் திருத்துவது போல் அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்த முடியாது. எழுதப்பட்ட அரசியலமைப்பு சாதாரணமாக நெகிழா அரசியலமைப்பாக இருக்கும்.

நிறைகளும் குறைகளும்

நெகிழாத அரசியலமைப்பின் சிறப்புப் பண்புகள் நெகிழும் அரசியலமைப்பின் குறைகளாகக் காணப்படுகின்றன. நெகிழாத அரசியலமைப்பு நிரந்தரத் தன்மையைக் கொண்டுள்ளது.

கட்சியின் விருப்பு, வெறுப்புக்களுக்கேற்ப இந்த அரசியலமைப்பு மாற முடியாது. மேலும், இந்த அரசியலமைப்பில் மக்களின் அடிப்படை உரிமைகள் சரிவரப் பாதுகாக்கப்படும். சிறுபான்மை யினரின் நலன்கள் பாதுகாக்கப்படும்.

நெகிழாத அரசியலமைப்பில் குறைகளும் காணப்படுகின்றன. உடனடியாகத் தேவைப்படும் பொழுது இத்தகைய அரசியல மைப்பில் எளிதில் மாற்றங்கள் கொண்டுவர இயலாது. மேலும், சூழ்நிலைகளுக்கேற்ப மாற்றங்கள் நிகழ முடியாது. ஆகவே புரட்சி எழுவதற்கு வாய்ப்புகள் அதிகரிக்கும்.

அரசாங்கத்தின் வகைகள்
(Forms of Government)

அரசாங்கங்கள் பல வகைப்படும். எல்லா அரசாங்கங்களும் ஒரே மாதிரியான அமைப்பையும், தன்மையையும் கொண்டவை அல்ல. அரசாங்கம் எப்படி ஆட்சி புரிகின்றது. அதன் அமைப்பு எத்தகையது, அதன் அதிகாரங்கள் எவை, மக்களுக்கும் அதற்கும் உள்ள தொடர்பென்ன என்பவற்றின் அடிப்படையில் அரசாங்கங்களை நாம் வகைப்படுத்தலாம்.

அரசு தோன்றிய பொழுது அரசாங்கமும் தோன்றிற்று. ஆரம்ப காலத்தில் காணப்பட்ட அரசாங்கங்கட்கும் தற்கால அர சாங்கங்கட்டும் பல வேற்றுமைகள் உண்டு. பண்டைக்காலத்தில் காணப்பட்ட அரசாங்கங்களில் சில இன்றும் காணப்பட்ட போதிலும் அவற்றில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் தென்படு கின்றன. பொதுவாக அரசாங்கங்களைக் கீழ் காணும் முறையில் வகைப்படுத்தலாம்.

1. மன்னராட்சி (Monarchy)

மிகப்பழமையான அரசாங்க முறை மன்னராட்சி என்பது. மக்களாட்சி முறை தோன்றியதைத் தொடர்ந்து இத்தகைய ஆட்சி மறையலாயிற்று. உலகின் சில பகுதிகளில் இன்றும் மன்னராட்சி காணப்பட்ட போதிலும் பண்டைக்கால மன்ன ராட்சியை ஒத்ததல்ல இது. மன்னராட்சியில் அதிகாரம் யாவும் ஒருவனிடம் காணப்படும். மன்னன் தானகவோ, அல்லது அமைச்சர்களின் உதவியுடனே ஆட்சி புரிவான். மன்னராட்சி பல வகைப்படும்.

பரம்பரை மன்னராட்சி (Hereditary Monarchy) என்பது சாதாரணமாகக் காணக்கூடியது. ஒரு மன்னனின் மறைவுக்குப்

பின்னர் அவருடைய மூத்த ஆண்மகவு அரியாசன உரிமையை பெறுவதுதான் பரம்பரை மன்னராட்சி என்பது. அரசுரிமை சட்டத்தாலோ, அல்லது அரசியலமைப்பாலோ, அல்லது மரபு விதிகளாலோ இவ்வாரிசுரிமை நிர்ணயிக்கப்பட்டிருக்கும். தேர்ந் தெடுக்கப்படும் மன்னராட்சி (Elective Monarchy) தற்பொழுது மலேசியாவில் மட்டும் காணப்படுகிறது. பண்டைய ரோமப் பேர ரசர்களும், போலந்தின் மன்னர்களும், இடைக்கால மன்னர்கள் சிலரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இத்தகைய மன்னராட்சி காலப்போக்கில் பரம்பரை மன்னராட்சியாக மாறிற்று. வரம்பற்ற மன்னராட்சி (Absolute Monarchy) முறையில் மன்னர் எதேச் சதிகாரம் உடையவனாகத் திகழ்வான். மன்னனின் சித்தம் சட்டம் எனப்படும். மன்னனைக் கட்டுப்படுத்த யாராலும் முடியாத நிலை காணப்படும். வரம்பற்ற மன்னராட்சி நடத்திய மன்னர்களில் குறிப்பிடத்தக்கவர் என்று பிரான்ஸ் நாட்டு மன்ன னாகத் திகழ்ந்த பதினான்காம் லூயி (Louis XIV)யைக் குறிப் பிடலாம். நானே அரசு,என்று இவன் பறைசாட்டிக் கொண்டான். மக்களாட்சி முறை தோன்றியதைத் தொடர்ந்து வரம்பற்ற மன்னராட்சி நலிவுற்றது. வரையறுக்கப்பட்ட மன்னராட்சி (Limited or Constitutional Monarchy) என்பது அரசியலமைப்பால் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்ட ஆட்சியாகும். இத்தகைய ஆட்சியில் மக்களாட்சிப் பண்புகள் காணப்படும். தற்காலத்தில் இத்தகைய மன்னராட்சி இங்கிலாந்திலும், ஜப்பானிலும், சில ஐரோப்பிய நாடுகளிலும் காணப்படுகின்றது.

2. உயர் குடியினராட்சி (Aristocracy)

சிறந்த குடிமக்களால் நடத்தப்படும் ஆட்சிதான் உயர் குடி யினராட்சி என்று கிரேக்க தத்துவ ஞானிகள் விளக்கம் அளித் தனர். ஒருசிலரால் அதிகாரம் பொது நலனுக்காக பயன்படுத் தப்படும் அரசாங்க அமைப்புத்தான் உயர் குடியினராட்சி என்று கார்னர் (Garner) கூறுகின்றார். இத்தகைய ஆட்சி நடக்கு மிடத்தில் ஒரு குறிப்பிட்ட இனமோ, அல்லது இனங்களோ அதி காரத்தைப் பயன்படுத்தும். கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் இத் தகைய ஆட்சி பிரபலமடைந்திருந்தது.

3. சிறுகுழு ஆட்சி (Oligarchy)

உயர் குடியினராட்சிக்கு நேர் எதிரான பண்பைக் கொண்டது சிறுகுழு ஆட்சி. மக்கள் நலனை மனதிற்கொண்டு மக்களுக்காக உயர்குடியினர் நடத்தும் ஆட்சி வரவேற்கத்தக்கது என்று அரிஸ் டாட்டில் கூறுகின்றார். ஆனால் தமது நலனுக்காக ஒருசில செல்வந்தர் நடத்தும் ஆட்சியை இவர் வரவேற்கவில்லை.

இத்தகைய ஆட்சியில் சுயநலனுக்குத்தான் முக்கியத்துவம் அளிக்கப்படும் மக்கள் நலன் முற்றிலும் புறக்கணிக்கப்படும். இத்தகைய ஆட்சி தற்பொழுது காண்பதற்கில்லை.

மேற்கூறிய மூன்றும் கடந்த காலத்தில் காணப்பட்ட ஆட்சி முறைகளாகும். இவற்றில் மன்னராட்சி மட்டும் ஏராளமான மாறுதல்களுடன் தற்பொழுது செயல்பட்டு வருகின்றது.

தற்கால அரசாங்கங்கள்
(Modern Governments)

அரசியலமைப்பு சார்ந்த அரசாங்கம் (Constitutional Government)

தற்கால அரசாங்கங்கள் யாவும் அரசியலமைப்புகளை அடிப்படையாகக் கொண்டவையாகும். அரசியலமைப்பை அடிப்படையாகக் கொண்ட அரசாங்கம் மக்களாட்சிக்கு உகந்தது. ஏனெனில் அரசியலமைப்பு அதிகாரத்தை வரையறுப்பதால் மக்களாட்சி பாதுகாப்பைப் பெறுகின்றது.

அரசியலமைப்பை அடிப்படையாகக் கொண்ட அரசாங்கம் சட்டங்களின் மூலமாக ஆட்சி நடத்தும். இந்த அரசாங்கம் இயற்றும் சட்டங்கள் மக்களின் கருத்துகளின் பிரதிபலிப்பாகவும், அவர்கள் தேவைக்கேற்றவையாகவும் அமையும். இத்தகைய அரசாங்கத்தில் எதேச்சதிகாரத்திற்கு வாய்ப்பு இருக்காது.

ஒரு அரசியலமைப்பு அரசாங்கத்தின் அமைப்பை மட்டுமன்றி அரசின் அமைப்பையும், தன்மையையும் நிர்ணயிக்கின்றது. அரசின் தன்மையையும், அரசாங்கத்தின் அதிகாரங்கள் குவிக்கப்பட்டுள்ளனவா, அல்லது பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளதா என்பதைக் கொண்டு ஒருமுக ஆட்சி முறை அரசு என்றும் கூட்டாட்சி முறை அரசு என்றும் அரசுகளை இரண்டாகப் பிரிக்கலாம்.

1. ஒருமுக ஆட்சி அரசு (Unitary State)

முழு அதிகாரத்தைக் கொண்ட ஒரு மத்திய அரசாங்கத்தைக் கொண்ட அரசுதான் ஒருமுக ஆட்சி அரசு என்பது. இத்தகைய அரசு நிர்வாக வசதிக்கென நாட்டை பல மாநிலங்களாகவும், மாவட்டங்களாகவும், உள்ளாட்சிப் பகுதிகளாகவும் பிரிக்கப் படலாம். இந்த ஆட்சிப் பகுதிகளை உருவாக்கும் அதிகாரமுடைய மத்திய அரசாங்கம் விரும்பினால் இவற்றை அழிக்கவும் செய்யலாம். ஆட்சிப் பகுதிகளின் அதிகாரங்கள் யாவும் மத்திய அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப் பெற்றவையாக

இருக்கும். ஒரு முக ஆட்சி அரசில் சட்டமியற்றும் நிறுவனம் ஒன்று மட்டுமே காணப்படும். இதில் ஒரே கோர்வையான நீதித் துறை அமைப்பும் ஒரே முகமான சட்டங்களும் ஆட்சி முறையும் இருக்கும்.

தீர்மானங்களும், முடிவுகளும் ஓரிடத்தில் எடுக்கப்படுவதால் இத்தகைய அரசு திறமை மிக்கதாக இருக்கும். மேலும் இதன் அமைப்பு எளிமையானதாக இருக்கும். இத்தகைய அரசில் அதிகார இரட்டிப்பிற்கு வழியிருக்காது. இதனால் செலவு குறையும். அளவிற் சிறிய நிலப்பரப்பிற்கு இத்தகைய அரசு உகந்தது.

மையத்தில் மட்டும் தீர்மானங்களும், முடிவுகளும் எடுக்கப் படுவதனால் உள்ளூர் ஆட்சிப் பகுதிகட்கு முக்கியத்துவம் அதிக மிருக்காது. அதிகாரக் குவிப்பின் காரணமாக மத்திய அரசாங் கத்தின் வலிமை பன்மடங்கு அதிகரிக்கும். உள்ளூர் பிரச்சினை கட்கு உடனடியாகப் பரிகாரம் காண முடியாமற் போக வாய்ப்புண்டு.

இத்தகைய அரசு தற்பொழுது இங்கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான், இத்தாலி ஆகிய நாடுகளில் காணப்படுகின்றது.

2. கூட்டாட்சி அரசு (Federation)

தற்காலத்தில் முக்கியத்துவம் உடையதாகத் திகழ்வது கூட்டாட்சி அரசு. பல அரசுகள் ஒன்றாக இணைவதன் விளைவாகத் தோன்றுவதுதான் கூட்டாட்சி அரசு. அரசுகள் இங்ஙனம் இணைவதற்கு இரு வழிகள் உள்ளன. முதலாவதாக, தாம் ஒன்றாக இணைந்தால் தமது வலிமையும், பொருளாதார முன்னேற் றமும் அதிகரிக்கும் என்று கருதி அண்மையிலுள்ள பல சுதந்திர அரசுகள் ஒரு அரசியலமைப்பின் அடிப்படையில் இணைந்து ஒரு கூட்டாட்சி அரசைத் தோற்றுவிக்கலாம். இந்த முறையில் உருவானது தான் அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஆஸ்திரேலியா ஆகிய கூட்டாட்சி அரசுகள். இரண்டாவதாக, ஒருமுக ஆட்சி அரசின் ஆட்சிப் பகுதிகள் தமக்குச் சுயாட்சி உரிமை வேண்டும் என்று கோருவதன் விளைவாகவும் கூட்டாட்சி அரசு தோன்ற லாம். இங்ஙனம் தோன்றியது தான் கானடா.

கூட்டாட்சி முறையில், மத்திய அரசாங்கம் என்றும், மாநில அரசாங்கங்கள் என்றும் இருவகை அரசாங்கங்கள் காணப்படும். இவற்றின் அதிகார வரம்பு, எழுதப்பட்ட அரசியலமைப்பால் நிர்ணயிக்கப்படும். இந்த அரசியலமைப்பு நெகிழாத தன்மை உடையதாக இருக்க வேண்டும். மத்திய அரசாங்கமும், மாநில

அரசாங்கங்களும் விரும்பினால்தான் இந்த அரசியலமைப்பை திருத்த முடியும். இந்த அரசியலமைப்பு மிகவும் உயர்ந்த தன்மை உடையதாக இருக்கும். இந்த அரசியலமைப்பை பாதுகாக்கும் பணி ஒரு உயர்நீதி மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டும்.

நாட்டின் ஒற்றுமையும், மாநில உரிமைகளும் ஒரே வேளையில் பாதுகாக்கப்படுவதற்கு உகந்தது கூட்டாட்சி. கூட்டாட்சியின் உறுப்பினராகக் காணப்படும் அரசுகள் தமது தனித் தன்மையை இழப்பதில்லை. வலிமை வாய்ந்த அண்டை நாடுகளிலிருந்து ஒரு நாட்டைக் காப்பதற்கு உகந்தது கூட்டாட்சி முறை. பல அரசுகள் இதில் இணைவதால் இதன் வலிமை பன்மடங்கு அதிகரிக்கின்றது. பொருளாதாரத்தைப் பொறுத்த மட்டில் இந்த வகை ஆட்சி லாபகரமானது. பற்றுக் குறையை சரிக்கட்டுவதற்கு கூட்டாட்சியில் சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. படைகளைத் திரட்டுவதும், பராமரிப்பதும் ஒரு அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுவதால், செலவு குறைகின்றது. உள்ளூர் சம்பந்தப் பட்ட பணிகளில் மாநில அரசாங்கங்களுக்கு முழு அதிகாரம் இருப்பதனால் உள்ளூர் ஆட்சி வளர்ச்சி அடைகின்றது. பரந்த நிலப்பரப்புடைய பல இனம், மொழி, சமயம் ஆகியவற்றைச் சார்ந்த மக்களைக் கொண்ட அரசுகட்கு கூட்டாட்சி முறை உகந்தது.

உறுதியான அயல் நாட்டுக் கொள்கை பின்பற்ற முடியாமற் போக கூட்டாட்சியில் வாய்ப்பு உண்டு. மாநில அரசாங்கங்கள் இயற்றும் சட்டங்களும், உருவாக்கும் விதிகளும், அயல் நாட்டு உறவில் பாதகமான சூழ்நிலையை தோற்றுவிக்கலாம். இதற்கு விளக்கமாக பின்வரும் நிகழ்ச்சியைக் கூறலாம். இங்கிலாந்தும், பிரான்சும், கூட்டாக பெரும் முதலீடு செய்து உற்பத்தி செய்த கண்கார்டு (Concorde) என்ற பயணிகள் விமானம் அதிகம் ஒலி எழுப்புகிறது என்ற காரணத்தால் நியூயார்க் விமான நிலையத்தில் இறங்குவதற்கு அம் மாநில அரசாங்கம் அனுமதி அளிக்கவில்லை. இதனால் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும், பிரான்சுக்கும் இடையே உள்ள நல்லுறவு பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலை தோன்றியது. கூட்டாட்சியில் சட்டங்களின் இரட்டிப்பும், நிர்வாகத்தின் இரட்டிப்பும் ஏற்படுகிறது. இதனால் செலவு அதிகரிக்கும். அதிகார வரம்பு பற்றிய கருத்து வேற்றுமைகள் மாநிலங்களுக்கும் மத்திய அரசாங்கங்களுக்கும் இடையே எழ வாய்ப்புக்கள் உண்டு. கூட்டாட்சி தகர்ந்து விடுமோ என்ற அச்சம் எப்போதும் காணப்படலாம். இதன் அரசியலமைப்பு, நெகிழாத தன்மை உடையதாதலால் முன்னேற்றம் பாதிக்கப்படலாம்.

மேற்கூறிய குறைபாடுகள் இருந்த போதிலும் கூட்டாட்சியின் நன்மைகள் இக்குறைபாடுகளை மறைத்து விடுகின்றன. இன்று விரும்பி வரவேற்கப்படும் அமைப்பு கூட்டாட்சி. வேற்றுமையில் ஒற்றுமை காண்பது வேறெந்த ஆட்சியிலும் காண முடியாதது. மேலும் இன்று சின்னுபின்னப்பட்டுக் கிடக்கும் உலக மக்களை அகில உலக அரசாங்கம் ஒன்றின் கீழ் இணைக்கும் முயற்சியின் முதற் கட்டமாக கூட்டாட்சியைக் கருதலாம்.

நற்கால அரசாங்கங்களின் அமைப்பு
(Structure of Modern Governments)

தற்கால அரசாங்கங்கள் யாவும் மூன்று உறுப்புகளைக் கொண்டுள்ளன. ஆட்சித்துறை, சட்ட மன்றம், நீதித்துறை ஆகிய மூன்றும் தான் இவ்வுறுப்புகள். இந்த உறுப்புகள் எல்லா அரசாங்கங்களிலும் காணப்பட்ட போதிலும், அவற்றின் அமைப்பில் வேற்றுமைகள் உள்ளன. இம்மூன்று உறுப்புகளும் புரியும் பணிகளை ஆராய்ந்தால், அவற்றின் இன்றியமையாத தன்மை புலப்படும்.

ஆட்சித்துறை (Executive)

அரசாங்கத்தின் மூன்று உறுப்புகளில் ஒன்று ஆட்சித்துறை. சட்டமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்களை செயல்படுத்தி ஆட்சி புரிவதுதான் இத்துறையின் பணி. மேலும் அயல் நாட்டுக் கொள்கை, உள் நாட்டுக் கொள்கை, பொருளாதாரக் கொள்கை ஆகியவையும் ஆட்சித் துறையால் உருவாக்கப் படுகின்றன. இதனுல் சட்டம் இயற்றும்பணியிலும் ஆட்சித்துறை சம்பந்தப் பட வேண்டிய நிலை உருவாகின்றது. அரசாங்கத்தின் பணியாளர்களை நியமிப்பதும், விலக்குவதும், அவர்களுடைய

பணியை மேற்பார்வை செய்வதும் படைத்துறைக்கு தலைமை அளிப்பதும், குற்றங்களுக்கு தண்டனை பெற்றவருக்கு மன்னிப்பு அளிப்பதும், ஆட்சித்துறை புரியும் இதர பணிகளாகும். மேற் கூறியவை மட்டுமன்றி, தற்பொழுது மிக முக்கியமான பணி ஒன்றையும் ஆட்சித்துறை புரிகின்றது. அது என்னவென்றால், சட்ட மன்றத்தால் இயற்றப்படும் சட்டங்கள் செயற்படுத்த தேவையான உபவிதிகளை உருவாக்குவது. சட்டப்படி பார்த்தால், ஆட்சி புரிவது மட்டுமே ஆட்சித் துறையின் பணி என்ற போதிலும், நடைமுறையில், அரசாங்கம் சம்பந்தப்பட்ட எல்லாப் பணிகளையும் இத்துறை புரிகிறது. இந்தியா, பிரிட்டன் போன்ற பாராளுமன்ற முறை அரசாங்கமுடைய நாடுகளில், அமைச்சர்

வையும், நாட்டின் தலைவரும் ஆட்சித் துறையினராக இருக்கின்றனர்; அமெரிக்காவைப் போன்ற குடியரசுத் தலைவர் முறை அரசாங்கத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சித் துறையினராக இருக்கிருர்.

சட்ட மன்றம் (Legislature)

மக்களாட்சி என்பது சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஆட்சி. இதற்குத் தேவையான சட்டங்களை இயற்றுவது சட்ட மன்றம். தற்பொழுது காணப்படும் சட்ட மன்றங்கள், சட்டமியற்றும் பணி மட்டுமன்றி, இதர பல பணிகளையும் புரிகின்றன. அரசியலமைப்பைத் திருத்துதல், வரி விதிப்பு, கடன் திரட்டுதல், நிதி ஒதுக்கீடு, நிர்வாக மேற்பார்வை அயல் நாட்டுக் கொள்கையை ஆமோதித்தல், இலாகாக்களை, உருவாக்குதல் போன்ற பல பணிகளிலும் சட்ட மன்றம் ஈடுபடுகின்றது. இவை மட்டுமன்றி சில குறிப்பிட்ட விஷயங்களில் நீதி விசாரணை நடத்தி நீதி வழங்கும் சட்டமன்றங்களும் உள்ளன. இச்சட்ட மன்றத்தை இந்தியாவில் 'பார்லிமெண்ட்' (Parliament) என்றும் அமெரிக்காவில் 'காங்கிரஸ்' (Congress) என்றும் அழைக்கப்படுகிறது.

நீதித்துறை (Judiciary)

அரசாங்கத்தின் மிக முக்கியமான உறுப்பு நீதித்துறை. சட்டத்திற்குகேற்ப மக்களுக்குப் பாதுகாப்பும், நீதியும் அளிப்பது நீதித்துறையின் பணியாகும். நீதித்துறையின் அலுவல்களில் பிற துறைகளின் தலையீடு இருந்தால் இத்துறை அதன் பணிகளைச் சரிவரப் புரியமுடியாது. நீதித் துறையின் தனித்தன்மை பாதுகாக்கப்பட வேண்டியது மிக அவசியம். இதற்கான வழிமுறைகளை அரசியலமைப்பு குறிப்பிடுவது வழக்கம். இந்தியாவிலும், அமெரிக்காவிலும் நீதித்துறையின் தலைமை மன்றத்தை 'உச்ச நீதி மன்றம்' (Supreme Court) என்றழைக்கப்படுகிறது.

மேற்கூறிய மூன்றும் தான் ஒரு அரசாங்கத்தில் காணப்படும் முக்கிய உறுப்புக்கள். இம்மூன்று உறுப்புக்களும் எல்லாஅரசாங்கங்களிலும் காணப்பட்ட போதிலும் அவற்றின் அமைப்பில் மாறுபாடுகள் உள்ளன. ஆட்சித் துறை பாராளுமன்ற முறையிலானதாகவோ, அல்லது குடியரசுத் தலைவர் முறையைச் சேர்ந்ததாகவோ இருக்கலாம். ஆட்சித் துறைப் பொறுப்பு ஒருவரிடமோ, அல்லது ஒரு குழுவிடமோ ஒப்படைக்கப்படலாம். ஆட்சித் துறைத் தலைவர் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படலாம், அல்லது மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படலாம், அல்லது

நியமிக்கப்படலாம், அல்லது பரம்பரை அடிப்படையில் பதவி வகிக்கலாம்.

சட்டமன்றம் ஒரு அவையையுடையதாகவோ, அல்லது இரு அவைகளைக் கொண்டதாகவோ இருக்கலாம். சட்ட மன்றத்தின் மேலவை நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினரைக் கொண்டதாகவோ, அல்லது மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினரைக் கொண்டதாகவோ, அல்லது நியமனம் செய்யப்பட்டவரைக் கொண்டதாகவோ, அல்லது பரம்பறை அங் கத்தினரைக் கொண்டதாகவோ அமையலாம். ஆனல் கீழவை யின் அமைப்பைப் பொறுத்தவரையில் அதன் அங்கத்தினர் களைக் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு மாறுபட்ட தொகுதி முறைகளைப் பின்பற்றப்படுகிறது.

நீதித்துறையைப் பொறுத்தமட்டில் இரு பண்புகள் காணப் படுகின்றன. சட்டத்தின் ஆட்சியைப் பின் பற்றும் நாடுகள் என்றும், ஆட்சிமுறை சட்டத்தைக் கொண்ட நாடுகள் என்றும் இருவகை காணப்படுகின்றன.

பாராளுமன்ற முறை அரசாங்கமும், குடியரசுத் தலைவர் முறை அரசாங்கமும் (Parliamentary and Presidential Forms of Government)

அரசாங்கத்தின் உறுப்புகளிடையே காணப்படும் உறவை அடிப்படையாகக்கொண்டு அரசாங்கங்களை பாராளுமன்ற முறை யிலானவை என்றும், குடியரசுத் தலைவர் முறையிலானவை என்றும், இருவகைகளாகப் பிரிக்கலாம்.

பாராளுமன்ற முறை அரசாங்கம் (Parliamentary form of Government)

பாராளுமன்ற முறை அரசாங்கத்தை அமைச்சர் குழு முறை அரசாங்கம் என்றும் அழைக்கலாம். இந்தமுறை அரசாங்கத்தில் ஆட்சித்துறைக்கும் சட்ட மன்றத்திற்கும் இடையே நெருங்கிய உறவு காணப்படும். இத்தகைய அரசாங்கத்தில் இருவகைப் பட்ட ஆட்சித் துறைகள் காணப்படும். அதிகாரமற்ற பெயரள விலான ஆட்சிதுறை (Nominal Executive) என்பது ஒன்று. உண் மையான ஆட்சித்துறை(Real Executive)என்பது மற்றொன்று. பெய ரளவிலான ஆட்சித்துறை நாட்டின் தலைமைப் பதவியைவகிக்கும். நாட்டுத்தலைவரைக் குறிப்பிடும். உண்மையான ஆட்சித்துறை என்பது சட்டமன்றத்திற்குப் பொறுப்புள்ள அமைச்சரவையைக் குறிப்பிடும். பாராளுமன்ற முறை அரசாங்கத்தை உண்மையில்

இயக்குவது தலைமை அமைச்சரின் தலைமையின் கீழுள்ள அமைச்சர் குழுவதலால் இது அமைச்சர் குழு முறை அரசாங்கம் (Cabinet form of Government) என்றும் அழைக்கப்படுகின்றது.

பாராளுமன்ற முறை அரசாங்கம் சட்டமன்றத்தினின்று உருவெடுக்கின்றது. சட்டமன்றத்தின் கீழவையில் காணும் உறுப்பினர்களில் பெரும்பாலோருடைய ஆதரவை உடையவர் தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டு அவரது தலைமையின் கீழ் இந்த அரசாங்கம் உருவாகிச் செயல்படுகின்றது. சாதாரணமாக, அரசியற் கட்சிக்குப் பாராளுமன்றத்திலுள்ள பெரும்பான்மையின் அடிப்படையில் தான் இந்த அரசாங்கம் அமைக்கப்படுகின்றது. எக்கட்சிக்கும் பொரும்பான்மை காணப்படாவிடில் பல கட்சிகளைக் கொண்ட கூட்டு அரசாங்கம் (Coalition Government) தான் நிறுவப்பட முடியும். பாராளுமன்ற அங்கத்தினரில் (கீழ்ச்சபை) பொரும்பான்மையோரின் ஆதரவு நீடிக்கும் வரையிலும்தான் இந்த அரசாங்கம் பதவியில் நீடிக்க முடியும். ஆகவே இந்த அரசாங்கம் பாராளுமன்றத்திற்கு முழுப்பொறுப்புடையது.

பாராளுமன்ற முறை அரசாங்கத்திலுள்ள உண்மையான ஆட்சித் துறையான அமைச்சர் குழுவின் அங்கத்தினர்கள் பாராளுமன்றத்தின் உறுப்பினராகவும் இருப்பர். இவர்கள் ஆட்சித்துறை சம்பந்தப்பட்ட பணிகளையும், சட்ட மன்றத்திற்கு (தமது கட்சிக்கு) வழிகாட்டும் பணியையும் புரிவர். இவர்களில் முக்கியமானவர் தலைமை அமைச்சர். பாராளுமன்றத்தின் ஆதரவுடைய தலைமை அமைச்சர் அளவற்ற அதிகாரத்தைக் கொண்டிருப்பார். தேர்தல் ஒன்று தான் இவரை அச்சுறுத்த முடியும். பாராளுமன்றம் வலிமை வாய்ந்தது என்பது தற்பொழுது கோட்பாட்டளவில் மட்டுமே காணப்படுகின்றது. நடைமுறையில் அதிகாரம் உடையது அமைச்சர் குழுவும் தலைமை அமைச்சருமாகும்.

மதிப்பீடு

பாராளுமன்ற முறை அரசாங்கத்தில் ஆட்சித் துறையும் சட்டமன்றமும் இணைந்து செயல்படுவதனல் சுமூகமான சூழ்நிலை உருவாகின்றது. மேலும் இவ்விரண்டின் ஒத்துழைப்பின் பயனாக அரசாங்கத்தின் திறன் அதிகரிக்கின்றது. சட்ட மன்றத்திற்கு தேவையான தலைமையை அமைச்சர் குழு அளிக்கின்றது. ஆட்சித்துறை பாராளுமன்றத்திற்குப் பொறுப்புடையதாக செயல்படுவது இந்த முறை அரசாங்கத்தின் சிறப்பாகும். காலத்திற்கும், சூழ்நிலைகட்கும் ஏற்றவாறு மாற இத்தகைய அரசாங்கத்திற்கு முடிகின்றது.

பாராளுமன்ற முறை அரசாங்கம் அதிகாரப் பிரிவினைக்குப் புறம்பானது என்று சுட்டிக் காட்டப்படுகின்றது. இது கட்சி அரசியலை அடிப்படையாகக் கொண்ட அரசாங்கம் என்று கூறப் படுகின்றது. அமைச்சர் குழு நிரந்தரப் பதவிக்காலத்தை உடையதல்ல என்பதனுல் நெடுங்காலத்திட்டங்கள் உருவாக்க முடியாது. கட்சிப் பெரும்பான்மையின் அடிப்படையிலும், கட்சிக் கட்டுப்பாட்டின் காரணமாகவும் அமைச்சர் குழு எதேச் சதிகாரத் தன்மையுடையதாகச் செயல்பட வாய்ப்பு உண்டு.

குடியரசுத்தலைவர் முறை அரசாங்கம் (Presidential form of Government)

ஆட்சித் துறையும், சட்டமன்றமும் வெவ்வேருகத் தனித் தியங்கும் பண்பைக் கொண்டதுதான் குடியரசுத் தலைவர் முறை அரசாங்கம் என்பது. குடியரசுத் தலைவர் முறை அரசாங் கத்தில் ஆட்சித்துறைப் பொறுப்பு ஒருவரிடம் காணப் படும். இவர் அரசாங்கத்தின் தலைவராகவும் நாட்டுத் தலைவரா கவும் இருப்பார். இம்முறை அரசாங்கம் அமெரிக்க ஐக்கிய நாடு களில் செயல்படுகின்றது.

குடியரசுத்தலைவர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கென மக்களால் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ருர். விசேட வழிமுறை களைப் பின்பற்றித்தான் இவரைப் பதவியினின்று அகற்ற முடியும். இவர் யாருக்கும் பொறுப்புடையவரல்ல. சட்டமன்றம் நம்பிக்கை யில்லாத் தீர்மானம் மூலம் இவரை பதவியிலிருந்து வெளியேற்ற முடியாது. இவரைக் கட்டுப்படுத்த அரசியலமைப்பால் மட்டுமே இயலும். சட்ட மன்றத்தின் உறுப்பினரல்லாத இவர் அதன் சாதாரணக் கூட்டங்களைக் கூட்ட முடியாது. அதனைக் கலைக் கவும் இவருக்கு அதிகாரமில்லை. சட்டத்தை இயற்றுவதில் குடியரசுத் தலைவருக்கு நேரடிப்பங்கில்லை எனலாம்.

குடியரசுத் தலைவர்முறை அரசாங்கம் நிலையானது. இது கட்சிப் பெரும்பான்மைக்கு உட்பட்டதல்ல. குடியரசுத் தலைவர் மக்களின் பிரதிநிதி என்ற முறையில் செயல்படுகின்ருர். அரசாங் கத்தின் ஒவ்வொரு உறுப்பும் இதர உறுப்புகளின் தேவையற்ற தலையீடு இன்றி தனித் தன்மையுடன் செயல்பட முடிகின்றது. அரசாங்கத்தின் அதிகாரம் அரசியலமைப்பால் வரையறுக்கப் பட்டுள்ள படியால் சிறந்த அரசாங்கம் செயல்பட முடிகின்றது. நெருக்கடி நிலை எழும்பொழுது இவ்வகை அரசாங்கம் திறம்படச் செயல்பட முடிகின்றது.

அதிகாரப் பிரிவினைக்கு ஒத்த முறையில் இந்த வகை அரசாங்கம் அமைவதனால் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப் படுகின்றன. ஆட்சித்துறை நிரந்தரப் பதவிக் காலத்தைக் கொண்டுள்ள காரணத்தால் நிலையான அரசாங்கம் செயல்பட முடிகின்றது. ஆட்சித் துறையின் அதிகாரம் ஒரு சிலரால் மட்டுமே பயன்படுத்தப்படுவதால் திட்டங்கள் காலதாமதமின்றிச் செயல்படுத்தப் படுகின்றன. மேலும், நெருக்கடி காலத்திற்கு உகந்தது இத்தகைய அரசாங்கம்.

இத்தகைய அரசாங்கத்தில் குறைபாடுகளும் காணப்படுகின்றன. ஆட்சித் துறை சட்ட மன்றத்திற்குப் பொறுப்புடையது அல்ல என்பதனால் அது எதேச்சதிகாரத் தன்மையுடையதாகச் செயல்பட வாய்ப்பு உண்டு. ஆட்சித்துறைக்கும் சட்டமன்றத்திற்கும் இடையே அடிக்கடி கருத்து வேற்றுமை எழலாம். இத்தகைய அரசாங்கம் எளிதில் நெகிழக்கூடியது அல்ல.

அதிகாரப் பிரிவினை

(Separation of Powers)

அரசாங்கத்தின் அதிகாரங்களை மூன்றாகப் பிரிக்கலாம்—சட்டமியற்றும் அதிகாரம் (Legislative), சட்டத்தை இயல் படுத்தும் அதிகாரம் (Executive), அதற்கு விளக்கம் கொடுத்து மீறுவோரை தண்டிக்கும் அதிகாரம் (Judicial) இம்மூன்று அதிகாரங்களும் ஒருவரிடமோ அல்லது ஒரு சிலரிடமோ குவிக்கப்படக் கூடாது என்பது அதிகாரப் பிரிவினையின் மையக் கருத்து. மக்களின் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டுமென்றால் அரசாங்கத்தின் மூன்று அதிகாரங்களும் வெவ்வேறாகப் பிரிக்கப் பட்டு வெவ்வேறு நபர்களால், அல்லது அமைப்புகளால் பயன் படுத்தப்பட வேண்டும். இக்கருத்தை பல மேதைகள் வெளியிட்டுள்ளனர். எனினும் இதற்கு முழு விளக்கமளித்து பிரபலபடுத்தியவர் மான்டெஸ்க்யு (Montesquieu) என்ற பிரெஞ்சு அறிஞர் ஆவார். அதிகாரங்கள் பிரிக்கப்படாவிடில் எதேச்சதிகாரம் விளையும் என்று இவர் வலியுறுத்தினார்.

பாராளுமன்ற முறை அரசாங்கத்தில் முழு அதிகாரப் பிரிவினையைக் காண இயலாது. பாராளுமன்ற முறை அரசாங்கத்தில் ஆட்சித்துறையும், சட்ட மன்றமும் இரண்டறக் கலந்து செயல் படுகின்றன. நீதித்துறை சம்பந்தப்பட்ட அதிகாரங்களையும் இத் துறைகள் ஓரளவு கொண்டுள்ளன.

அதிகாரப் பிரிவினையையும், 'தட்டுப்பாடுகளும், சமன்படுத்துதலும்'(Checks and Balances) என்பதையும் இணைத்துக் குடியரசுத் தலைவர் முறை அரசாங்கத்தில் செயற்படுத்தியுள்ளனர். அதிகாரப் பிரிவினைக்கேற்ப அரசாங்கத்தின் மூன்று உறுப்புகளும் தனித்தனியே இயங்குகின்றன என்ற போதிலும் ஒரு உறுப்பு மற்றொன்றைக் கட்டுப்படுத்துவதற்கும், அவற்றின் அதிகாரங்கள் ஓரளவு சமன்படுத்துவதற்கும் வழி வகுக்கப்பட்டுள்ளது. இதனால் அரசாங்கத்தின் எந்த உறுப்பும் எதேச்சதிகார முறையில் செயல்படமுடியாது என்ற நிலை காணப்படுகின்றது.

அதிகாரப் பிரிவினைக்கோட்பாடு வரம்பற்ற மன்னராட்சி காணப்பட்ட பதினெட்டாம் நூற்றுண்டில் தோன்றி வலுப்பெற்றது. அக்காலத்திற்கு இக்கோட்பாடு உகந்ததாக இருந்தது. ஆனால் தற்பொழுது மக்களாட்சி நடைபெற்று வருகின்றது. ஒத்துழைப்பின் அடிப்படையில்தான் மக்களாட்சி செயல்படமுடியுமேயன்றி பாகுபாட்டின் அடிப்படையிலல்ல. மேலும், மக்களின் சுதந்திரத்தைக் காப்பதற்கென பலவழிகள் அரசியலமைப்புகளில் காணப்படுகின்றன. இது மட்டுமன்றி அரசாங்கத்தை நிர்ணயிக்கும் பொறுப்பும், உரிமையும் மக்களிடத்தில் காணப்படும். இன்று அதிகாரப்பிரிவினை தேவையற்றகோட்பாடாக மாறிவிட்டது. தவிர, மக்களின் அரசியல், பொருளாதார, சமூக வாழ்க்கையில் அரசாங்கம் தீவிரமாக தலையிட வேண்டும் என்ற நோக்குடைய பொதுநலஅரசுக் கோட்பாட்டிற்கு இக்கோட்பாடு முரணானது.

மேற்கூறிய குறைபாடுகள் இருப்பினும் மக்களின் உரிமைகள் காப்பாற்றப்பட அதிகாரம் ஒரு சில இடங்களில் குவிக்கப்படாமல் அதைப்பிரிவினை செய்யவேண்டியதின் அவசியத்தை இக்கோட்பாடு வலியுறுத்துவதுதான் இதன் சிறப்பு.

11. மக்களாட்சி

(Democracy)

மக்களாட்சி என்பது என்ன? மக்களின் ஆட்சிதான் மக்களாட்சி என்பது சரியான விளக்கமல்ல. ஏனெனில் மக்கள் எல்லோரும் ஆட்சி புரிகின்றார்களா? அவர்கள் எங்ஙனம் ஆட்சி புரிகின்றார்கள் என்பதற்குச் சரியான விளக்கம் அளிக்க முடியாது. ஒரு நாட்டிலுள்ள பெரும்பாலோரது கட்டுப்பாட்டிற்குட்பட்ட ஆட்சியை மக்களாட்சி எனலாம்.

மக்களுடைய அரசாங்கம், மக்களால் மக்களுக்காக நடத்தப் படின் அதனை மக்களாட்சி எனலாம் என்று ஆப்ரகாம் லிங்கன் (Abraham Lincoln) கூறினர். இவ்விளக்கத்தைப் பரிசீலித்தால் மக்களாட்சி பற்றிய சில உண்மைகள் புலப்படும். மக்களுடைய அரசாங்கம் என்பது மக்களால் உருவாக்கப்பட்ட அரசாங்கம் என்பது பொருள். தேர்தல்களின் போது தமது வாக்குரிமையைப் பயன்படுத்தித்தான் மக்கள் ஓர் அரசாங்கத்தை தேர்ந்தெடுக்கின்றார்கள். தேர்தல்களில் எல்லோரும் வாக்களிப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மக்களால் நடத்தப்படும் அரசாங்கம் என்பது உண்மைக்குப் புறம்பான கூற்று. மக்கள் நேரடியாக ஆட்சி நடத்துவதென்பது இயலாத காரியம். மக்கள் தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து சட்ட மன்றங்கட்கு அனுப்புகின்றனர். இப்பிரதிநிதிகள் அவர்களது கட்சியைப் பின்பற்றியோ, அல்லது தலைவர்களைப் பின்பற்றியோ, அல்லது அமைச்சர்களைப் பின் பற்றியோ செயல்படுகின்றனர். மக்களுக்காக நடத்தப்படும் அரசாங்கம் என்றால் மக்களின் நலனுக்காக நடத்தப்படும் அரசாங்கம் என்று பொருள்.

மக்களாட்சி என்ற பதத்திற்குப் பல விளக்கங்கள் அளிக்கப் பட்டுள்ளன. மக்களாட்சி என்பது ஓர் அரசாங்க முறையையும், அரசின் அமைப்பையும் குறிப்பிடுகின்றது என்று கிட்டிங்ஸ் (Giddings) கூறுகின்றார். மக்களாட்சி என்பது ஓர் சமுதாயத் தத்துவம் என்று எஃப். ஜி. வில்சன் (F. G. Wilson) கூறுகின்றார். நாட்டு மக்களிற் பெரும்பாலோர் ஆட்சி புரியும் அதிகாரத்தைக்

கொண்டுள்ள அரசாங்க முறைதான் மக்களாட்சி என்று டைசி, (Dicey) விளக்குகிறார்.

மக்களாட்சி முறையைப் பண்டைய கிரேக்கர்கள் அறிந்திருந்தனர் எனினும் நாம் இன்று அறியும் மக்களாட்சி முறை பத்தொன்பதாம் நூற்றாண்டில் தான் தோன்றிற்று. மக்களாட்சி முறைக்குச் சில அடிப்படைத் தேவைகள் உள்ளன. அரசாங்கத்தின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டு, எழுதப்பட்ட அரசியலமைப்பு மக்களாட்சிக்குத் தேவை. குடிமக்கள் எல்லோரும் அரசாங்கத்தை அமைப்பதில் பங்குடையவர்களாக இருக்க வேண்டும். கல்வியறிவு, விழிப்புணர்ச்சி, ஆகியவற்றை மக்கள் பெற்றிருக்க வேண்டும்.

மக்களாட்சியின் வகைகள்

(Kinds of Democracy)

1. நேரடி மக்களாட்சி (Direct Democracy)

பண்டைக் காலத்தில் கிரேக்கத்திலும், ரோமிலும் காணப்பட்ட நகர அரசுகளில் நேரடி மக்களாட்சி செயல்பட்டது. மிக்க் குறைந்த மக்கட் தொகையையுடைய அரசுகளில் மட்டுமே நேரடி மக்களாட்சி செயல்பட முடியும். மக்கள் நேரடியாக ஆட்சி நடத்தும் முறைதான் நேரடி மக்களாட்சி என்பது. இம்முறையிலான ஆட்சி தற்பொழுது சுவிட்ஜர்லாந்தில்தான் ஓரளவு காணப்படுகிறது. நேரடி மக்களாட்சியின் சில பண்புகளை ஒரு சில அரசுகள் இன்றும் பின்பற்றுகின்றன. மக்கள் மன்றம், துவக்க உரிமை, விருப்ப வாக்கெடுப்பு ஆகியவைதான் இப்பண்புகள்.

2. மறைமுக அல்லது பிரதிநிதித்துவ மக்களாட்சி (Indirect or Representative Democracy)

அளவிற் பெரியதும், அதிகமக்களைக் கொண்டதுமான அரசிற்குகந்தது மறைமுக மக்களாட்சியாகும். இத்தகைய ஆட்சியில் மக்கள் தமது பிரதிநிதிகளின் மூலம் ஆட்சி புரிகின்றனர். மக்களுடைய இறைமை அவர்களுடைய பிரதிநிதிகளால் பயன்படுத்தப்படுகின்றது. இத்தகைய ஆட்சி மக்களின் கட்டுப்பாட்டிற்குட்பட்டது. மறைமுக மக்களாட்சியில் அரசியற் கட்சிகள் பெரும் பங்கு வகிக்கின்றன.

மக்களாட்சியின் நிறைகள் (Merits of Democracy)

இது திறமையுடைய அரசாங்கம். எப்பிரச்சினைக்கும் இதனால் பரிகாரம் காண இயலும். மக்களின் பங்கும் மக்களுடன் தொடர்பும் இந்த அரசாங்கத்திற்கு உள்ளதுதான் இதற்குக் காரணம். மக்களாட்சி மக்களின் பொறுப்புணர்ச்சியை வளர்கின்றது. மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு இந்த ஆட்சி உகந்தது. மக்களுக்கு அரசியலறிவு புகட்டவும் இந்த ஆட்சி பயன் படுகின்றது. நாட்டுப்பற்றை வளர்க்க இந்த ஆட்சி முறை சிறந்ததாகும். மக்களாட்சியில் நிலையான அரசாங்கம் அமைக்க முடிகின்றது. இந்த ஆட்சியில் அதிகாரக்குவிப்பிற்கு வழி இல்லாததால் எதேச்சதிகாரம் உருவாக முடியாது. அமைதியும் முன்னேற்றமும் காண இவ்வாட்சியால் முடிகின்றது.

மக்களாட்சியின் குறைகள் (Demerits of Democracy)

மக்களாட்சி என்பது அறிவிலிகளின் ஆட்சி எனப்படுகின்றது. பெரும்பான்மை மக்கள் அரசியலறிவும், தேர்ச்சியும் உடைய வரல்ல. இவர்களுடைய முடிவுகள் சரியானவையாக இருக்காது. பெரும்பான்மையோரின் ஆட்சிதான் மக்களாட்சி என்பது தவறு. ஏனெனில் தேர்தலின்போது வாக்குரிமை உடைய மக்கள் எல்லோரும் அதைப்பயன் படுத்துவது கிடையாது. தேர்ந் தெடுக்கப்படும் பிரதிநிதிகள் பெரும்பான்மையோரின் பிரதிநிதிகள் எனமுடியாது. மக்களாட்சி முறையில் கட்சி அரசியலுக்குத் தான் முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றதேயன்றித் தனிநபரின் கருத்துக்கல்ல. இவ்வாட்சி முறையில் ஆட்சிக்கு வருவோர்கள் நிர்வாகத்தில் பயிற்சியும் அறிவும் இல்லாத கற்றுக்குட்டிகளாக இருக்கக்கூடும்.

இக்குறைகள் காணப்பட்டாலும், மக்களாட்சி முறைக்கு, மாற்றாக இருக்கக்கூடிய ஆட்சிமுறைகள் இதைவிட ஆபத்துக் களும் அபாயங்களும் நிறைந்ததாகக் காணப்படுகிறது. எனவே இன்று இருக்கக்கூடிய ஆட்சி முறைகளில் சிறந்தது மக்களாட்சி முறையேயாகும்.

12. சர்வாதிகாரம்

(Dictatorship)

[சர்வாதிகாரம்—அதன் சிறப்புப் பண்புகள்—திறனாய்வு.]

சர்வாதிகாரம் என்பது மக்களாட்சிக்கு நேர் எதிரானது. சட்டத்திற்குப் புறம்பான அதிகாரத்தைக் கொண்டு நாட்டுத் தலைவர் நடத்தும் ஆட்சிதான் சர்வாதிகாரம் என்பது என்று ஃபோர்டு (Ford) குறிப்பிடுகின்றார்.

பண்டைய கிரேக்க நகர அரசுகளிலும், ரோமிலும் இத்தகைய ஆட்சி காணப்பட்டது. கிரேக்கத்தில் சின்சினாட்டசும் (Cincinnatus), ரோமில் ஜூலியஸ் சீசர் (Julius Caesar), அகஸ்டஸ் சீசர் (Augustus Caesar) போன்றோரும் சர்வாதிகாரிகளாகத் திகழ்ந்தனர். இங்கிலாந்தில் சிறிது காலம் ஆட்சிபுரிந்த ஆலிவர் கிராம்வெல் (Oliver Cromwell), பிரெஞ்சுப் புரட்சிக்குப்பின் பிரான்சை ஆண்ட நெப்போலியன் போனபார்ட் (Napoleon Bonaparte) ஆகியோரும் சர்வாதிகாரிகளே. இருபதாம் நூற்றாண்டில் உலகின் பல பகுதிகளிலும் சர்வாதிகார ஆட்சி தோன்றியது. இத்தாலி, ஸ்பெயின், போர்ச்சுக்கல், ஜெர்மனி, ஆஸ்திரியா, யூகோஸ்லேவியா, சோவியத் யூனியன், துருக்கி ஆகியவற்றில் தோன்றிய சர்வாதிகார ஆட்சிகள் குறிப்பிடத்தக்கவை. ஆனால் ஜெர்மனியிலும், இத்தாலியிலும் தோன்றிய சர்வாதிகார ஆட்சிக்கு இணையான சர்வாதிகார ஆட்சி உலகின் வேறெந்தப் பகுதியிலும் தோன்றவில்லை.

சர்வாதிகாரம் மூன்று வகைப்படும். முதலாவதாக, ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெய்ன், போர்ச்சுகல் ஆகிய நாடுகளில் காணப்பட்டது போன்ற பாசிசச் சர்வாதிகாரம் (Fascist Dictatorship) இரண்டாவதாக, ஆப்பிரிக்காவிலுள்ள யுகான்டா (Uganda) என்ற நாட்டில் காணப்படுவது போன்ற படைத்தலைவரின் சர்வாதிகாரம் (Military Dictatorship) மூன்றாவதாக, சோவியத் யூனியன், சீனக் குடியரசு ஆகியவற்றில் காணப்படுவது போன்ற அரசியற் கட்சிச் சர்வாதிகாரம் (Party Dictatorship).

சர்வாதிகாரம் என்பது என்ன? பரம்பரையை அடிப்படையாகக் கொள்ளாமல் வலிமையின் அடிப்படையிலோ அல்லது ஒப்புதலின் அடிப்படையிலோ ஒருவன் ஆட்சிப் பொறுப்பைக் கொண்டிருப்பதுதான் சர்வாதிகாரம் என்பது. சர்வாதிகாரியின் அதிகாரம் அளவற்றது. சர்வாதிகாரி தனது அதிகாரத்தைத் தன்னிச்சைப்படிச் செயற்படுத்துகின்றான். இவன் யாருக்கும் கட்டுப்பட்டவனல்ல.

ஒரு தனி மனிதனது சர்வாதிகாரம் கீழ்க்கண்ட பண்புகளைக் கொண்டிருக்கும். இது ஒரு நபரின் ஆட்சி. வலிமைதான் இதன் அடிப்படை. இந்த ஆட்சி யாருக்கும் பொறுப்புடையதல்ல. இதன் அதிகாரத்திற்கு வரம்பு கிடையாது. இது ஆணைகளைக் கொண்டு நடத்தப்படும் ஆட்சியேயன்றி சட்டத்தினால் அல்ல. இது நிர்ணயிக்கப்பட்ட பதவிக் காலத்தைக் கொண்டதல்ல. கட்சியின் சர்வாதிகாரத்திற்கும் இப்பண்புகளில் பல பொருந்தும். கட்சியின் சர்வாதிகாரம் நடக்கும் நாடுகளிலும் கட்சித் தலைவன் மட்டுமே அதிகார வலிமையுடையவனாகத் திகழ்கின்றான். முசோலினி, ஹிட்லர், ஸ்டாலின், மா-சே-துங் போன்ற சர்வாதிகாரிகள் தமது அரசியல் கட்சிகளைத் தம் வலிமையை அதிகரிப்பதற்காகவும், தமது பதவியை உறுதிப்படுத்துவதற்கும் பயன்படுத்தினர். கட்சிகளைப் பயன்படுத்தி, கட்சிகளின் மூலமாகப் பதவிக்கு வந்தவர்கள் தான் இவர்கள்.

சர்வாதிகாரம் தோன்றுதவற்குக் காரணமென்ன? போர், பொருளாதார நலிவு, பன்னாட்டுக் குழப்பநிலை, பாதுகாப்பு இல்லை யென்ற எண்ணம் ஆகியவை சர்வாதிகாரம் தோன்ற வழி வகுக்கின்றன. நிலையற்ற தன்மையை அகற்றுவதற்கும் இன்னல்கள் அகற்றுவதற்கும் உகந்தது என்ற அடிப்படையில்தான் சர்வாதிகார ஆட்சி தோன்றுகின்றது. பாட்டாளி மக்களையும், சாதாரண மக்களையும் காப்பதற்கெனத் தோன்றியவர் எனக்கூறி கொண்டு தான் சர்வாதிகாரிகள் பதவிக்கு வந்துள்ளனர். இங்ஙனம் பதவிக்கு வந்தவர்கள்தான் ஹிட்லர், ஸ்டாலின், பெரான் (Peron) போன்ற சர்வாதிகாரிகள்.

சர்வாதிகாரத்தின் சிறப்புப் பண்புகள்

1. கொள்கை (Ideology)

சர்வாதிகாரத்தில் காணப்படும் கொள்கை என்பது அதிகார பூர்வமானது. மனித வாழ்க்கை முழுவதையும் சம்பந்தப்பட்ட இக்கொள்கையில் எல்லோரும் நம்பிக்கை கொண்டிருத்தல்

வேண்டும். எதிர்காலத்தில் சிறந்த சமுதாயம் ஒன்று எழுப்பப்படும் என்ற உறுதியைக் கொள்கை அளிக்கின்றது. சர்வாதிகாரக்கொள்கை புதுமையானது. புரட்சிகரமானது என்று பிரசாரம் செய்யப்படுகின்றது. சர்வாதிகாரத்தின் கொள்கை சர்வாதிகாரியால் உருவாக்கப்பட்டதாகத்தான் இருக்கும்.

2. தலைவன் (Leader)

தலைவன் என்பவன் சர்வாதிகாரத்தில் மிக முக்கியமானவன். அதிகாரம் இவனிடம் குவிக்கப்பட்டிருக்கும். மையப்படுத்தப்பட்ட கட்டுப்பாடு சர்வாதிகாரத்தில் காணப்படும். தலைவனின் உத்தரவுகளைச் செயல்படுத்துவதுதான் அவன்கீழ் காணப்படும் அமைப்புகளின் பணியாக இருக்கும். இத்தலைவன் மக்களினின்று மக்களுக்காகத் தோன்றியவர் என்று பிரசாரம் செய்து மக்களின் ஆதரவு தேடப்படும். ஜெர்மனியில் ஹிட்லரை ஃபியூரர் (Fuhrer) என்றும், இத்தாலியில் முசோலினியை டூஸ் (Duce) என்றும் அழைக்கப்பட்டனர்.

3. கட்சி (The Party)

சர்வாதிகாரத்தைப் பொறுத்தவரையில் கட்சி என்பது தலைவனையும், தலைவன் என்பது கட்சியையும் குறிப்பிடும். சர்வாதிகாரத்திற்குத் தேவைப்படுவது கட்சிக் கொள்கையில் தளராத நம்பிக்கையையும், பற்றும் உடைய உண்மைத் தொண்டர்கள். எல்லோரும் கட்சியில் அங்கத்துவம் பெறமுடியாது. கட்சியின் அமைப்பு படையின் அமைப்பிற்கு ஒத்ததாக இருக்கும். நாட்டுத் தலைவன் கட்சித் தலைவனாகவும் திகழ்வான். கட்சி என்பது அரசாங்கத்துடன் இணைந்ததாகவோ, அல்லது அரசாங்கத்தைவிட உயர்ந்ததாகவோ இருக்கும்.

4. அச்சுறுத்தலைப் பயன்படுத்துதல் (Use of Terror)

சர்வாதிகாரத்தில் மக்களைக் கட்டுப்படுத்துவதற்கு அச்சுறுத்தல் பெருமளவு பயன்படுத்தப்படுகின்றது. வன்முறை விரும்பி வரவேற்கப்படுகின்றது. ஒரு கோணியளவு நீதியை விட ஒரு கையளவு வலிமை மேலானது என்று நாசிக்கட்சியைச் சேர்ந்த அமைச்சரொருவர் கூறினார். சர்வாதிகாரத்தில் பிரசாரமும், அச்சுறுத்தலும் கலந்திருக்கும். மக்களைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்த பின் அச்சுறுத்தலின் பிரயோகம் குறைக்கப்படும். ஆனால் எப்பொழுது வேண்டுமெனினும் வன்முறை பயன்படுத்தப்படலாம் என்ற நிலை காணப்படும்.

5. செய்தித் தொடர்பு: பிரசாரம் ஆகியவற்றின் மீது கட்டுப்பாடு (Central Control of Communication and Propaganda)

மக்களது சிந்தனையையும், எண்ணங்களையும் கட்டுபடுத்துவதற்கான வழிமுறைகளைப் பண்டைய அரசர்களும் சர்வாதிகாரிகளும் அறிந்திருக்கவில்லை. ஆனால் தற்கால சர்வாதிகார ஆட்சியில் இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் பல உள்ளன. செய்தி நிறுவனங்கள் யாவும் அரசின் முழுக் கட்டுப்பாடிற்குள் கொண்டு வரப்படலாம். அரசாங்கம் விரும்பும் தகவல்கள் மட்டும் மக்களுக்கு அளிக்கப்படும். கல்வி முறையும் அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்படும். செய்தித்தாள், வானொலி ஆகிய பிரசாரக் கருவிகள் அனைத்தும் அரசாங்கக் கட்டுப்பாட்டில் இருக்கும்.

6. வன்முறையின் தனியுரிமை (Monopoly of force)

வலிமை என்பது சர்வாதிகாரத்தின் அடிப்படையாகும். இதன் உதவியினால் தான் இந்த ஆட்சி நீடிக்க முடிகின்றது. ஆட்சிக்கெதிராக குரலெழுப்புபவர்களை ஒடுக்க வலிமை நன்கு பயன்படுகின்றது. ஒற்றர் முறை (Spy System) இவ்வாட்சியின் ஒருதனிச் சிறப்பு.

7. மத்திய பொருளாதாரக் கட்டுப்பாடு (Centralised Economic Control)

தொழிற் புரட்சிக்குப்பின் பொருளாதாரம் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் அரசாங்கத்தின் பங்கு பன்மடங்கு அதிகரித்தது. மக்களாட்சி அரசாங்கம் பொருளாதார நடவடிக்கைகட்கு முக்கியத்துவம் அளித்துச் செயல்படுகின்றது. இதில் மக்களுக்கு சிறிதளவாவது பங்கிருக்கும். ஆனால் சர்வாதிகாரத்தில் பொருளாதாரம் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் அரசாங்கத்தின் ஏகபோக உரிமையாகத்திகழும். அரசாங்கம் பொருளாதாரத்துறையை முழுமையாகத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டிருக்கும்.

8. பகுத்தறிவாளர்கட்கும் சிந்தனையாளர்கட்கும் எதிரான நடவடிக்கைகள் (Anti-Intellectual Activities)

பகுத்தறிவாளர்கட்கும், சிந்தனையாளர்கட்கும் சர்வாதிகாரத்தில் இடமில்லை. பிரசாரத்தைப்புரிந்து கொள்ளும் அறிவுடைய மக்கள் மட்டுமே சர்வாதிகாரத்திற்குத் தேவை. சிந்திக்கும்திறன் படைத்தவர் தேவையில்லை. பயிற்சியும் தேர்ச்சியும் உடைய விஞ்ஞானிகளும் அலுவலரும் கட்சிப்பணியாளர்களும் சர்வாதிகாரத்திற்குத் தேவைப்படுவார்கள். ஆனால் சர்வாதிகாரத்தைத்

திறனாய்வு செய்யும் நபர்கள் தேவையல்ல. ஒத்துப்போகும் பாங்கு, நம்பிக்கை, கீழ்படிதல், அமைப்பினுடன் இணைதல் ஆகியவை சர்வாதிகாரம் தான் மக்களிடம் எதிர்பார்க்கும் பண்புகள். மக்கள் சிந்திக்க வேண்டிய அவசியம் இல்லை. மக்களுக்காகச் சிந்திக்கத் தலைவரும், கட்சியும் உண்டு.

திறனாய்வு

சர்வாதிகாரத்தில் மனிதாபிமானத்திற்கும், மனிதப் பண்பிற்கும் இடமில்லை. அரசிற்குத்தான் முக்கியத்துவமேயன்றித் தனிநபருக்கல்ல. இந்த ஆட்சிமுறை வன்முறைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றது. அயல்நாடுகளைத் தாக்குவதை ஒரு கொள்கையாகக் கொண்டது சர்வாதிகாரம். இந்தஆட்சி மக்களை ஆட்டுமந்தைகளாக மாற்றிவிடுகின்றது. பன்னாட்டு நல்லுறவை சர்வாதிகாரம் ஏற்கவில்லை. இதனால் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் ஆட்சி சர்வாதிகாரம். இது நிலையற்ற ஆட்சி. சர்வாதிகாரியின் மறைவிற்குப்பின் இந்த ஆட்சி மறைந்து விடும். தோல்வியை ஏற்றுக்கொள்ளும் வலிமை இந்த ஆட்சிக்குக் கிடையாது.

இந்த குறைபாடுகள் இருந்தபோதிலும் இந்த ஆட்சிமுறையில் சில நன்மைகள் இல்லாமலில்லை. இந்த ஆட்சிமுறையில் அரசாங்கம் திறமை வாய்ந்ததாக இருக்கும்; போர் போன்ற நெருக்கடி நிலைமைகளை சமாளிக்கவும், விரைவான பொருளாதார வளர்ச்சி பேணுவதற்கும் இது சிறந்தது.

13. வாக்குரிமையும் தேர்தலும்
(Franchise and Election)

[வாக்குரிமை—தேர்தல் முறைகள் – தொகுதிகள்—பிரதிநிதித் துவ முறைகள்.]

வாக்குரிமை
(Franchise or Suffrage)

தற்கால மக்களாட்சி மறைமுக மக்களாட்சியாகும். இதைப் பிரதிநிதித்துவ முறையிலான ஆட்சி என்றும் கூறலாம். பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கென மக்கள் கொண்டுள்ள உரிமை தான் வாக்குரிமை என்பது. ஒரு நாட்டில் வாழும் மக்கள் எல்லோருக்கும் இந்த உரிமை அளிக்கப்படுவதில்லை. குழந்தைகள், அயல் நாட்டவர், கைதிகள், மனநோயால் பாதிக்கப்பட்டவர் ஆகியோருக்கு இந்த உரிமைக் அளிக்கப்படுவதில்லை. சில நாடு களில் பெண்களுக்கு இவ்வுரிமை அளிக்கப்படவில்லை. இந்தக் கட்டுப்பாடு எல்லா நாடுகளிலும் காணப்படுகின்றது. வாக்குரி மையைப் பெறுவதற்குச் சில தகுதிகள் விதிக்கப்படுவது வழக்கம். குடியுரிமை, குறிப்பிட்ட வயது நிரம்புதல், நாட்டிலும் தொகுதி யிலும் வாழ்தல், வாக்காளராகப் பதிவு செய்திருத்தல் ஆகியவை இத் தகுதிகளாகும். இவை மட்டுமன்றி சில விசேடக்கட்டுப் பாடுகள் சில மக்களாட்சியில் விதிக்கப்படுகின்றன.

தேர்தல் முறைகள்
(Methods of Election)

தேர்தல் முறைகளை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று நேரடித் தேர்தல், மற்றொன்று மறைமுகத் தேர்தல்.

வாக்காளர்கள் தமது பிரதிநிதிகளை நேரடியாகத் தேர்ந் தெடுப்பது தான் நேரடித் தேர்தல் என்பது. இது மிக எளிய முறை. ஒரு தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களில் அதிக

வாக்குகள் பெற்ற வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்படுவார். இங்கிலாந்து, இந்தியா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், சோவியத் யூனியன் ஆகிய நாடுகளில் இந்த நேரடித் தேர்தல் முறை பயன்படுத்தப்படுகின்றது.

தமது பிரதிநிதிகளையோ அல்லது நாட்டுத் தலைவரையோ தேர்ந்தெடுப்பதற்கென வாக்காளர்கள் வேறொரு அமைப்பைத் தேர்ந்தெடுக்கும் முறைதான் மறைமுகத் தேர்தல் என்பது. இந்தியக் குடியரசுத் தலைவரும், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடியரசுத் தலைவரும் இந்த முறையில் தான் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்தியப் பாராளுமன்றத்தின் மேலவையின் உறுப்பினரும் இதே முறையில் தான் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

தொகுதிகள்
(Constituencies)

தேர்தலுக்கென நாடு பல பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றது. இப்பகுதிகள் தான் தேர்தல் தொகுதிகள் என்றழைக்கப்படுபவை. எல்லா நாடுகளும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு ஒரு விகிதத்தை நிர்ணயிப்பதுண்டு. அதாவது, ஒரு குறிப்பிட்ட மக்கட் தொகைக்கு ஒரு பிரதிநிதி என நிர்ணயிக்கப்படும். இதற்கேற்பத்தான் தொகுதிகளும் பிரிக்கப்படும். தேர்தல் தொகுதிகட்கும் நாட்டின் நிர்வாகப் பிரிவுகட்கும் தொடர்பு கிடையாது.

தொகுதிகள் இருவகைப்படும். ஒரு பிரதிநிதியை மட்டும் தேர்ந்தெடுக்கும் தொகுதிகளென்றும் (Single-Member Constituencies) ஒன்றிற்கதிகமான பிரதிநிதிகளைத் தேர்தெடுக்கும் தொகுதிகளென்றும் (Multi-Member Constituencies) இரு வகைகளாகத் தொகுதிகளைப் பிரிக்கலாம். ஒரு பிரதிநிதியை மட்டும் தேர்ந்தெடுக்கும் தொகுதிகள் தான் தற்பொழுது பிரபலமடைந்துள்ளவை.

பிரதிநிதித்துவ முறைகள்
(Methods of Representation)

சிறுபான்மையினருக்குப் பிரதிநிதித்துவம் அளித்தல் (Minority Representation)

பிரதிநிதித்துவ முறையைக் கொண்ட நாடுகளில் அதிக வாக்குகள் பெறும் வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். உதாரணமாக, ஒரு தொகுதியில் இரு வேட்பாளர்கள் போட்டி

யிடுகின்றார்கள் என்று வைத்துக்கொள்வோம். இவ்விருவர்களில் ஒருவருக்கு 10 000 வாக்குகள் மற்றவருக்கு 9,999 வாக்குகளும் கிடைக்கின்றன என்றால் 10,000 வாக்குகள் பெற்றவர் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். இதில் காணப்படும் குறைபாடு என்னவென்றால் 9,999 வாக்காளர்கட்குப் பிரதிநிதித்துவம் கிட்டாமல் போகின்றது. இக் குறைபாடு சிறுபான்மையினரையும் பாதிக்கின்றது.

ஒரு நாட்டில் இன அடிப்படையிலும், சமயத்தின் அடிப்படையிலும், மொழியின் அடிப்படையிலும், கலாசாரத்தின் அடிப்படையிலும், அரசியல் ரீதியாகவும் சிறுபான்மையினர் காணப்படலாம். இனம், சமயம், மொழி, கலாசாரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட சிறுபான்மையினருக்கு தனிப் பிரதிநிதித்துவம் அளிப்பது வரவேற்கத் தக்கதல்ல. சிறுபான்மையினருக்கு அவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டுமென ஜே. எஸ். மில் (J.S. Mill) போன்ற அறிஞர்கள் கூறியுள்ளனர்.

சிறுபான்மையினருக்குப் பிரதிநிதித்துவம் அளிப்பதற்கெனப் பின்வரும் முறைகளிலொன்று பின்பற்றப்படலாம்.

1. **மறுவாக்கெடுப்பு முறை (Second Ballot System)**

ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கவுள்ள தொகுதியொன்றில் இரண்டிற்கதிகமான பிரதிநிதிகள் போட்டியிடுகின்றார்கள் என வைத்துக்கொள்வோம். முதல் வாக்கெடுப்பில் இந்த வேட்பாளர்களில் யாருக்கும் இறுதிப் பெரும்பான்மை (absolute majority) கிடைக்காவிடில் மறுவாக்கெடுப்பு நடத்தப்படும். முதல் வாக்கெடுப்பில் அதிக வாக்குகள்பெற்ற இரண்டு வாக்காளர்கள் மட்டுமே மறுவாக்கெடுப்பில் போட்டியிடத் தகுதியுடையவராக இருப்பர். இவ்விரு வேட்பாளர்களில் எவருக்கு அதிக வாக்குகள் கிடைக்கின்றதோ அவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

2. **மாற்று வாக்குமுறை அல்லது விருப்ப வாக்குமுறை (Alternate Vote System or Preferential Vote System)**

இந்த முறையைப்பின் பற்றினால் வாக்காளர்கள் தமது வாக்குச் சீட்டுகளில் (Ballot papers) கொடுக்கப்பட்டுள்ள வேட்பாளர்களின் பெயர்களுக்கெதிராகத் தமது விருப்பத்தை 1,2,3,4,5 என்று எண்களால் அடையாளப்படுத்த வேண்டும். எந்த வேட்பாளருக்கும் இறுதிப் பெரும்பான்மை வாக்குகள் கிடைக்காவிடில் மிகக்குறைவான வாக்குகள் பெற்ற வேட்பாளரின் பெயர் நீக்கப்

பட்டு அவருக்கு அளிக்கப்பட்ட வாக்குகள் இரண்டாவது விருப்பம் குறிக்கப்பட்டுள்ள வேட்பாளர்கட்குப் பகிர்ந்தளிக்கப்படும். வேட்பாளர்களில் ஒருவர் இறுதிப் பெரும்பான்மை பெறும்வரை இந்த முறை பின்பற்றப்படும்.

3. குறைந்த வாக்குமுறை (Limited Vote System)

ஒரே தொகுதியினின்று குறைந்தது மூன்று வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தால் தான் இம்முறை பயன்படும். ஒரு வாக்காளருக்கு அளிக்கப்படும் வாக்குகளின் எண்ணிக்கை நிரப்பப்படவேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்குக் குறைவாக இருக்கும். ஒரு வாக்காளர் ஒரு வேட்பாளருக்கு ஒரு வாக்கு தான் அளிக்க முடியும். உதாரணமாக, ஒரு தொகுதியினின்று மூன்று வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமெனில் ஒரு வாக்காளருக்கு இரண்டு வாக்குகள்தான் அளிக்கப்படும். சிறுபான்மையினர் தமது வாக்குகளைத்தமது வேட்பாளருக்கு அளித்து அவரை வெற்றியடையச் செய்ய இம்முறை உதவும்.

4. மொத்த வாக்குமுறை (Cumulative Vote Plan)

ஒரு தொகுதியினின்று எத்தனை வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமோ அத்தனை வாக்குகள் ஒரு வாக்காளருக்கு அளிக்கப்படும். வாக்காளர் தமது வாக்குகள் அனைத்தையும் ஒரே வேட்பாளருக்கோ, அல்லது எல்லா வேட்பாளர்கட்குமோ அளிக்கலாம்.

5. ஒற்றை வாக்குமுறை (Single Vote System)

ஒரு தொகுதியினின்று ஒன்றிற்கதிகமான வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்க இம்முறையைப் பயன்படுத்தலாம். இம்முறையில் ஒரு வாக்காளருக்கு ஒரு வாக்குதான் அளிக்கப்படும். அதிக வாக்குகள் பெறும் வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். சிறுபான்மையினர் இவ்வாக்கு முறையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம்
(Proportional Representation)

விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம் பலவகைப்பட்டது. ஒரு தொகுதியினின்று ஒரு பிரதிநிதியை மட்டும் தேர்ந்தெடுப்பதற்கு இது உகந்ததல்ல. விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ முறைக்கு மூன்று அடிப்படைப் பண்புகள் காணப்படுகின்றன. முதலை

வதாக, தொகுதி பல பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்காகவுள்ளதாக இருக்க வேண்டும். இரண்டாவதாக, நிர்ணயிக்கப்பட்ட விதப்பங்கு (Quota) வாக்குகள் கிடைக்கும் வேட்பாளர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுவார். வேட்பாளர்கட்கு கிடைக்கப் பெற்ற மொத்த வாக்குகளை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கையால் வகுப்பதால் கிடைக்கப் பெறுவதுதான் விதப்பங்கு என்பது. பின்வரும் இரண்டு முறைகளும் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ முறையில் குறிப்பிடத்தக்கவையாகும்.

1. ஒற்றை மாற்று வாக்கு முறை (Single Transferable Vote System)

டென்மார்க் (Denmark) என்ற நாட்டின் அமைச்சராயிருந்த கார்ல் ஆன்ட்ரே (Carl Andrae) என்பவரால் 1793-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது இம்முறை. இதனைப் பிரபலப்படுத்தியவருள் குறிப்பிடத்தக்கவர் என்று இங்கிலாந்தைச் சேர்ந்த தாமஸ் ஹேர் (Thomas Hare), ஜே. எஸ். மில் (J. S. Mill) ஆகியோரைக் கூறலாம். இந்த முறையைப் பின்பற்றித் தான் இந்தியப் பாராளு மன்றத்தின் மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

ஒரு தொகுதியினின்று குறைந்தது மூன்று வேட்பாளர்களையாவது தேர்ந்தெடுக்க வேண்டுமென்றால்தான் இந்த வாக்களிப்பு முறை பயன்படுத்தப்பட முடியும். ஒரு வாக்காளருக்கு ஒரு வாக்குதான் அளிக்கப்படும். அவர் தமது விருப்பத்தை வாக்குச் சீட்டில் குறிப்பிட வேண்டும். முதல் விருப்பம் காட்டப்பட்ட வேட்பாளருக்கு நிர்ணயிக்கப்பட்ட விதப்பங்கு வாக்குகள் கிடைக்காவிடில் அவரது வாக்குகள் இரண்டாவது விருப்பம் காட்டப்பட்ட வாக்காளருக்கு மாற்றப்படும். தேர்ந்தெடுக்கப் படவேண்டிய பிரதிநிதிகள் அனைவரும் தேர்ந்தெடுக்கப்படும் வரை இந்தமுறை பின்பற்றப்படும்.

விதப்பங்கு நிர்ணயிக்கும் முறை

$$\frac{\text{இடப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை}}{\text{நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கை} + 1} + 1$$

வாக்குகளை மாற்றியளிக்கும் முறை

இதை விளக்கப் பின்வரும் எடுத்துக்காட்டு பயன்படும். ஒரு தொகுதியினின்று மூன்று பேர் தேர்ந்தெடுக்கப் பட வேண்டும் என வைத்துக்கொள்வோம். செல்லுபடியாகக் கூடிய

மொத்த வாக்குகள் 3,996. இதன் விதப்பங்கு 1,000 வாக்குகள். போட்டியிடும் வேட்பாளர்கள் ஐந்து பேர் (A, B, C, D, E). A என்பவருக்கு 2,000 வாக்குகளும், B என்பவருக்கு 800 வாக்குகளும், C என்பவருக்கு 750 வாக்குகளும், D என்பவருக்கு 246 வாக்குகளும், E என்பவருக்கு 200 வாக்குகளும் கிடைத்துள்ளன. A என்ற வேட்பாளருக்கு 1,000 வாக்குகள் அதிகப்படியாக உள்ளன. இவ்வாக்குகள் வீண் போகாது. Aயின் 2,000 வாக்குகளையும் பரிசீலிக்கும் பொழுது அவற்றில் 800 வாக்குகளில் B என்பவருக்கும், 450 வாக்குகளில் C என்பவருக்கும், 400 வாக்குகளில் D என்பவருக்கும், 350 வாக்குகளில், E என்பவருக்கும் இரண்டாவது விருப்பம் காட்டப்பட்டுள்ளது தெரிய வருகின்றது. A என்ற வேட்பாளருக்கு 1,000 வாக்குகள் மட்டுமே அதிகப்படியான வாக்குகளாகக் கிடைத்துள்ளபடியால் அவ்வாக்குகளிலிருந்து 400-ஐ B-க்கும், 225-ஐ Cக்கும், 200-ஐ Dக்கும், 175-ஐ Eக்கும் பிரித்தளிக்கின்றனர். இங்ஙனம் அளிக்கப்பட்டதினால் B-யும் வெற்றி பெறுகின்றார். தேர்ந்தெடுக்கப் படவேண்டிய யாவரும் தேர்ந்தெடுக்கப்படும் வரை வாக்குகள் மாற்றியளிக்கப்படுகின்றன.

2. பட்டியல் முறை (List System)

ஒரு தொகுதியினின்று பல அங்கத்தினரைத் தேர்ந்தெடுக்கும் முறையில்தான் இந்த வாக்கெடுப்பு முறையும் பின்பற்றப்பட முடியும். இந்த முறை பின்வருமாறு செயல்படுகின்றது. வேட்பாளர்கள் அவர்களுடைய கட்சிகளின் அடிப்படையில் பகுக்கப்படுகின்றனர். ஒவ்வொரு கட்சியும் ஒரு தொகுதியினின்று போட்டியிடும் அதன் வேட்பாளர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியலைச் சமர்ப்பிக்கின்றது. (ஒரு தொகுதியினின்று மூவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமெனில் அத்தொகுதியில் போட்டியிடும் கட்சிகள் மூவரின் பெயர்கள் அடங்கிய பட்டியலைச் சமர்ப்பிக்கின்றன.) வாக்காளர்கள் கட்சிகட்கு வாக்களிப்பார்களேயன்றி வேட்பாளர்கட்கல்ல. ஒரு வாக்காளர் ஒரு குறிப்பிட்ட கட்சியின் பட்டியலுக்கு வாக்களிக்கும்பொழுது அவர் அக்கட்சிக்கும் அதன் வேட்பாளர்கட்கும் வாக்களித்தார் எனக் கருதப்படும். பல கட்சிகளின் பட்டியல்களினின்றும் வாக்காளர்கள் தமது பிரதிநிதிகளைத் தேர்வு செய்யலாம் என்ற முறையும் பின்பற்றப்படுகின்றது.

இந்த வாக்குமுறையிலும் விதப்பங்கின் அடிப்படையில்தான் வெற்றி நிர்ணயிக்கப்படுகின்றது. செல்லுபடியாகும் வாக்குகளின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சமாகவும், நிரப்பப்பட வேண்டிய

இடங்களின் எண்ணிக்கை பத்தாகவும் இருப்பின் வீதப்பங்கு பத்தாயிரம் வாக்குகளாகும். A,B,C என்ற மூன்று கட்சிகள் போட்டியிடுகின்றன என வைத்துக் கொள்வோம். A என்ற கட்சிக்கு 52,000 வாக்குகளும், B என்ற கட்சிக்கு 40,000 வாக்குகளும், C என்ற கட்சிக்கு 8,000 வாக்குகளும் கிடைக்கின்றன. நிர்ணயிக்கப்பட்ட வீதப்பங்கைக்கொண்டு பார்க்கும்பொழுது A-க்கு 5 இடங்களும், B-க்கு 4 இடங்களும் கிடைக்கின்றன. எஞ்சியுள்ளது ஒரு இடம். இவ்விடத்தை நிரப்புவதற்கு இருவழிகளில் ஒன்றைப் பின்பற்றலாம். ஒன்று, வீதப்பங்கிற்கும் அதிகப்படியான வாக்குகள் பெற்ற கட்சியான A-க்கு அந்த இடத்தை அளிக்கலாம். அல்லது அண்டைத் தொகுதியொன்றினின்று அதிகப்படி வாக்குகளை C என்ற கட்சிக்கு மாற்றியளிக்கலாம். இங்ஙனம் அளிக்கக்கூடிய வாக்குகளின் எண்ணிக்கை 2,000 ஆக இருந்தால் ஏற்கெனவே 8,000 வாக்குகள் பெற்றுள்ள இக்கட்சி ஒரு இடத்தைப் பெறும்.

பட்டியல் முறை இத்தாலியிலும், ஆஸ்திரேலியாவின் சில பகுதிகளிலும், ஸ்விட்சர்லாந்திலும் பின்பற்றப்படுகின்றது.

பணி அடிப்படையிலான பிரதிநிதித்துவம்
(Functional Representation)

மக்கட் தொகையை அடிப்படையாகக் கொண்டு நாட்டைப் பல தொகுதிகளாகப் பிரித்துப் பிரதிநிதித்துவம் அளித்தல் மக்களாட்சிப் பண்பிற்குப் புறம்பானது என்ற கருத்து காணப்படுகின்றது. தமக்கென அரசியல் கட்சி அமைப்புக்களைக் கொண்ட சிறுபான்மையினருக்குத்தான் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ முறை பயன்படும் என்றும் கூறப்படுகின்றது. இதனால் பொருளாதாரம், சமுதாயம், பணிகள், தொழில்கள் போன்றவற்றிற்குப் பிரதிநிதித்துவம் கிட்டுவதில்லை. இதற்குப் பரிகாரமாகப் பணி அடிப்படையிலான பிரதிநிதித்துவ முறையைப் பல அறிஞர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

பணியின் அடிப்படையில் பிரதிநிதித்துவம் அளிக்கும் முறை சோவியத் யூனியனிலும், முசோலினியின் இத்தாலியிலும், 1919-ஆம் ஆண்டிற்குப் பின் ஜெர்மனியிலும், 1925-ஆம் ஆண்டிற்குப் பின் பிரான்சிலும், சில ஆண்டுகட்கு முன் வரையில் இங்கிலாந்திலும் பின்பற்றப்பட்டு வந்தது. தற்பொழுது பட்டதாரிகளுக்கும் ஆசிரியர்கட்கும் பிரதிநிதித்துவம் அளிக்கும் முறை இந்தியாவில் காணப்படுகின்றது.

14. அரசியற் கட்சிகள்
(Political Parties)

[அரசியல் கட்சிகள் — கட்சிகளின் பணிகள் — கட்சிகளின் வகைகள்—கட்சி முறை — தன்னலக் குழுக்கள்—பொதுமக்கட் கருத்து — செய்தி நிறுவனங்கள்.]

அரசியல் கட்சிகள்
(Political Parties)

அரசியல் கட்சிகள் இல்லாத அரசுகள் தற்காலத்தில் கிடையாது. எல்லா வகை அரசாங்கங்கட்கும் அரசியற் கட்சி இன்று தேவைப்படுகின்றது. குறிப்பாக, மக்களாட்சிக்கு உயிர் நாடி போன்றது அரசியற் கட்சி. அரசியற் கட்சிகள் இல்லாவிடில் பிரதி நிதித்துவ முறையிலான ஆட்சியை நிறுவ முடியாது.

அரசியற் கட்சி என்றால் என்ன ? பொதுப் பிரச்சினைகள் குறித்து ஒரே மாதிரியான கருத்துகளைக் கொண்ட மக்களின் அமைப்புத்தான் அரசியற் கட்சி என்பது. தேசீய நலனின் வளர்ச்சிக்காகப் பொதுவான அரசியற் கொள்கையைக் கொண்ட மனிதர் இணைந்து செயல்படும் அமைப்புத்தான் அரசியற்கட்சி என்று எட்மன்ட் பர்க் (Edmund Burke) கூறியுள்ளார். அரசியற் கட்சிக்கு அளிக்கப்பட்டுள்ள பல்வேறு விளக்கங்களை ஆராய்ந்தோமென்றால் அரசியற் கட்சி என்பது பல பண்புகளைக் கொண்டது என்பது புலப்படும்.

அரசியல் கட்சியின் அங்கத்தினரிடையேயும், ஆதரவாளர்களிடையேயும் கொள்கைகள் பற்றிய கருத்தொருமிப்பு காணப்பட வேண்டும். அரசியற் கட்சிக்கு ஒரு அமைப்பு இருக்கவேண்டும். அரசியற் கட்சி தனது குறிக்கோளை அரசியமைப்பின் வாயிலாக அடைய முயற்சிக்க வேண்டும். அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி தனது கொள்கைகளையும் திட்டங்களையும் செயல்படுத்துவதுதான் அரசியல் கட்சியின் முக்கிய குறிக்கோளாக இருக்கும்.

கட்சியின் பணிகள்

தேர்தலில் போட்டியிடுவது அரசியல் கட்சியின் முக்கிய பணியாகும். அரசாங்கத்தைக் கைப்பற்றுவதற்காகத்தான் அரசியல் கட்சி தேர்தலில் போட்டியிடுகின்றது. தேர்தலின் முடிவில் பெரும்பான்மை இடங்களைப் பெறும் அரசியற்கட்சி ஆட்சி அமைக்கின்றது. ஆட்சி அமைத்தபின் அக்கட்சி மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளையும், தனது கொள்கைகளையும், திட்டங்களையும் செயற்படுத்த முயல்கின்றது. சட்டமன்றத்தில் பெரும்பான்மை அங்கத்தினரைக் கொண்ட கட்சி ஆளும் கட்சியாகச் செயல்படும் பொழுது சிறுபான்மை அங்கத்தினரைக் கொண்ட கட்சி, அல்லது கட்சிகள் எதிர்கட்சியாகச் செயல்படுவது மரபு. ஆட்சி பீடத்தில் தொடர்ந்து அமர வேண்டும் என்ற எண்ணத்துடன் ஆளும் கட்சி செயல்படுகின்றது. ஆனால் எதிர்கட்சி ஆட்சி பீடத்தைக் கைப்பற்றுவதற்காக ஆளும் கட்சியின் குறைபாடுகளையும், அது இழைக்கும் தவறுகளையும் ஊன்றிக் கவனிக்கின்றது.

மக்களுக்கு அரசியல் ஆர்வமும், அரசியலறிவும் புகட்டுவது அரசியற் கட்சிகள் புரியும் பணி. இது மட்டுமன்றி அரசாங்கத்திற்கும், மக்களுக்கும் இடையே தொடர்பை உருவாக்குவது அரசியற் கட்சிகள் ஆகும்.

அரசியற் கட்சியின் வகைகள்

1. அனைத்து மக்கள் கட்சிகள் (Mass Parties)

அங்கத்தினரது எண்ணிக்கைக்கு முக்கியத்துவம் அளிப்பவை அனைத்து மக்கள் கட்சிகள். அனைத்து மக்கள் கட்சியில் உறுப்பினராவதற்கு எந்த நிபந்தனையும் காணப்படாது. யார் வேண்டுமென்றாலும் இக்கட்சியின் உறுப்பினராகலாம். அங்கத்தினர் செலுத்தும் சந்தா தொகைதான் இக்கட்சியின் முக்கிய வருவாய். மையப்படுத்தப்பட்ட நிர்வாக அமைப்பு இக்கட்சியில் காணப்படும். சாதாரணமாக, இடைத்தர மக்களும், எளியவரும் இவ்வகைக் கட்சியின் உறுப்பினராயிருப்பர்.

2. தகுதி அடிப்படைக் கட்சிகள் (Cadre Parties)

இந்த வகைக் கட்சிகளில் அங்கத்தினரது தரத்திற்கும் தகுதிக்கும்தான் முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றதேயன்றி எண்ணிக்கைக்கு அல்ல. குறிப்பிட்ட மக்கள்தான் இக்கட்சியின் உறுப்பினராக முடியும். தகுதியும், தேர்ச்சியும், அறிவாற்றலும், வசதியும் உடையவர் தான் இக்கட்சியின் உறுப்பினராக இருப்பர்.

நன்கொடைதான் இக் கட்சியின் முக்கிய வருவாய். அங்கத்தினரின் சந்தாத்தொகை முக்கியமன்று.

3. தேசியக் கட்சிகள் (National Parties)

ஒரு நாடு முழுவதற்குமான பரந்த அமைப்பையும், நாடு முழுவதிலும் ஆதரவும் உடைய அரசியல் கட்சி தேசியக் கட்சி எனப்படுகின்றது. நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் இக் கட்சிக்குப் பேராதரவு இருக்க வேண்டுமென்பதில்லை. இக் கட்சியின் கொள்கை விரிவானதாகவும், நாடு முழுவதற்கும் பொதுவான தாகவும் இருக்கும்.

4. பிராந்தியக் கட்சிகள் (Regional Parties)

நாட்டின் ஏதாவதொரு பகுதியிலோ அல்லது பகுதிகளிலோ இயங்கும் அரசியற் கட்சிதான் பிராந்தியக் கட்சி என்பது. இக் கட்சியின் கொள்கைகளும், திட்டங்களும் அது செயல்படும் பிராந்தியச் சார்புடையவையாகத்தான் இருக்கும். தேசிய அடிப்படையிலான கொள்கைகள் இந்தக் கட்சிகட்குக் காணப் படாது. அது செயல்படும் பிராந்தியத்தின் வளர்ச்சியிலும், முன்னேற்றத்திலும்தான் இக் கட்சி அக்கறை கொண்டிருக்கும்.

5. வகுப்புவாதக் கட்சிகள் (Communal Parties)

இனம், வகுப்பு, சமயம், மொழி ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு தோன்றியதுதான் வகுப்புவாதக் கட்சி என்பது. இக் கட்சிகள் மிகக் குறுகிய மனப்பான்மை கொண்டிருக்கும். நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு இத்தகைய கட்சிகள் உகந்தவை அல்ல.

கட்சி முறை
(Party System)

கட்சி முறை என்பது கட்சிகளின் எண்ணிக்கை சம்பந்தப் பட்டது. இன்று உலகில் மூன்று கட்சி முறைகள் காணப் படுகின்றன.

1. ஒருகட்சி முறை (One-party System)

ஒருகட்சி முறையில் ஓர் அரசியற் கட்சிதான் காணப்படும். பொதுவுடைமைக் கொள்கை பின்பற்றப்படும் நாடுகளில் இக்கட்சி முறை காணப்படுகின்றது. ஓர் அரசியல் கட்சியை மட்டும்

கொண்ட நாடுகளில் வேறு அரசியல் கட்சிகள் உருவெடுக்க முடியா. ஒரு கட்சி மட்டும் காணப்பட்டால் ஒரு கருத்தும், ஒரு கொள்கையும் தான் காணப்படும். பல கருத்துகளுக்கு இடமளிக்கும் மக்களாட்சிப் பண்பிற்குப் புறம்பானது ஒருகட்சி முறை.

ஓர் அரசியல் கட்சியை மட்டும் கொண்டுள்ள நாட்டின் அரசாங்கம் மக்களாட்சிப் பண்புகளைக் கொண்டிருந்தாலும் ஒரே அரசியல் கட்சிதான் செயல்படுகின்றது என்ற காரணத்தால் அது சர்வாதிகாரத் தன்மையுடையதாக இருக்கும். இத்தகைய கட்சி முறை செயல்படும் நாடுகட்குச் சிறந்த எடுத்துக்காட்டாகக் கிழக்கு ஐரோப்பிய நாடுகள், சோவியத் யூனியன், செஞ்சீனு ஆகியவற்றைக் கூறலாம்.

2. இருகட்சி முறை (Two-party System)

இருகட்சி முறை என்றுல் இரு அரசியல் கட்சிகள் மட்டுமே காணப்படும் என்று பொருளல்ல. பல கட்சிகள் காணப்பட்டாலும் இரண்டு கட்சிகள் மட்டுமே குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் உடையனவாக இருக்கும். உதாரணமாக இங்கிலாந்தில் பல அரசியல் கட்சிகள் காணப்பட்ட போதிலும், தொழிற் கட்சியும் (Labour Party), கன்சர்வேட்டிவ் கட்சியும் (Conservative) மட்டுமே முக்கியமானவை. ஆகவே, இங்கிலாந்தில் இருகட்சி முறை காணப்படுகின்றது எனலாம். பாராளுமன்ற ஆட்சி முறைக்குச் சிறந்தது இருகட்சி முறை. பொறுப்புள்ள அரசாங்கம் அமைய இம் முறை வழிவகுக்கும். அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் இருகட்சி முறைதான் காணப்படுகின்றது. கட்சிமுறைகளில் சிறந்தது இருகட்சி முறை என்று சில அறிஞர்கள் கூறுவர்.

3. பலகட்சி முறை (Multi-party System)

இரண்டிற்கதிகமான அரசியற் கட்சிகள் ஓரளவு சம வலிமையுடன் இருப்பதுதான் பலகட்சி முறை என்பது. பாராளுமன்ற முறைக்கு இக் கட்சிமுறை ஒத்ததன்று. ஏனெனில் எக்கட்சிக்கும் பெரும்பான்மை கிட்டாமல் அரசாங்கம் நிலையற்றதாக அமைவதற்கு இக்கட்சி முறை வழிவகுக்கும். பல கட்சிகளின் கூட்டுடன் கூட்டு அமைச்சரவை அமைக்கப்பட முடியுமென்றுலும் அது நிலைக்காது. ஆகவே, இக் கட்சிமுறை வரவேற்கத்தக்கதன்று. பிரான்ஸ் 1958 வரை இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தது.

அரசியல் கட்சிகள் பற்றிய மதிப்பீடு

மக்களாட்சி என்பது அரசியல் கட்சிகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அரசியல் கட்சி இல்லாவிடில் கருத்துகள் உருவாக வாய்ப்பு சரிவரக் கிட்டாது. பொதுமக்கள் கருத்தைப் பொதுக்கொள்கையாக மாற்றுவது அரசியல் கட்சி. மக்களுக்கும் அரசாங்கத்திற்குமிடையே நிரந்தரத் தொடர்பை உருவாக்குவது அரசியல் கட்சிகளாகும். மக்களுக்கு அரசியல் அறிவைப்புகட்டு பவை அரசியல் கட்சிகளாகும். அரசியல் கட்சி முறை அரசாங் கத்தை மக்களுக்கு பொறுப்புடையதாக்குகின்றது. பாராளு மன்றமுறை அரசாங்கம் செயல்பட இன்றியமையாதது அரசியல் கட்சிமுறை.

அரசியல் கட்சிமுறை வகுப்புவாத உணர்வையும் குறுகிய மனப்பான்மையையும் தோற்றுவிக்கின்றது என்று குறை கூறப் படுகின்றது. பிற்பட்ட சமுதாயங்களில் அரசியல் கட்சிகள் உண்மையாகச் செயல்படுவது கிடையாது. தேர்தலில் மட்டும் கவனத்தைக் கொண்டு அரசியல் கட்சிகள் செயல்படுகின்றன என்று குறை கூறப்படுகின்றது. அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்ற அரசுகளில் கட்சித்தொண்டர்கள் கைமாறு எதிர்பார்த்துச் செயல்படும்நிலை காணப்படுகின்றது. சில நாடுகளில் அரசியல் கட்சிகள் வசதியுடையவரை நாடிச் செயல்படுவது காணப் படுகின்றது. அரசியல் கட்சிகள் கொள்கைகளுக்கு முக்கியத் துவம் அளிக்காமல் தலைவர்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதும் உண்டு.

தன்னலக் குழுக்கள்
(Interest Groups)

சமுதாயம் என்பது பலவகைப்பட்ட மக்கட் குழுக்களைக் கொண்டது. இக் குழுக்கள் மாறுபட்ட அமைப்பையும், தன்மை யையும், குறிக்கோள்களையும் கொண்டிருக்கும். இக் குழுக்களில் ஒன்றுதான் அரசியற் கட்சி. எங்ஙனம் அரசியற் கட்சி சில குறிக் கோள்களைக் கொண்டு செயல்படுகின்றதோ அதேபோல் இதரக் குழுக்களும் அவற்றிற்கெனக் குறிக்கோள்களைக் கொண்டவை யாகும்.

தன்னலக் குழு என்பது குறுகிய குறிக்கோளைக் கொண்ட குழுவாகும். குறிப்பிட்ட தேவைகளின் அடிப்படையில் தோன்று வதுதான் தன்னலக் குழு. வெவ்வேறு தொழில்களிலும், பணி களிலும் ஈடுபட்டுள்ள மனிதர்கள் தமது தேவைகளைப் பெறு வதற்கென அமைத்துக் கொள்பவைதாம் தன்னலக் குழுக்கள்.

உற்பத்தியாளர்கள், வணிகர், நிதி உதவியளிப்போர், மருத்துவர்கள், தொழிலாளிகள், உழவர்கள், ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள் போன்றோர் தனித்தனி தன்னலக் குழுக்களைக் கொண்டுள்ளனர். உதாரணமாக, ஆசிரியர்களை உறுப்பினராகக் கொண்ட கழகம், அவர்கள் நலனுக்காகவும் அவர்கள் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் தேடவும்தான் செயல்படும்.

தன்னலக் குழுக்கள் முக்கியத்துவம் பெற்றுள்ள நாடு அமெரிக்க ஐக்கிய நாடுகளாகும். அங்குள்ள தன்னலக் குழுக்கள் நல்ல அமைப்பையும் வலிமையையும் உடையவை. தமக்குச் சாதகமான சட்டங்கள் இயற்றப்படுவதிலும் தமக்குப் பாதகமான சட்டங்களை இயற்ற முடியாமற் செய்வதிலும்தான் தன்னலக் குழுக்கள் கவனம் செலுத்துகின்றன. இவற்றிற்கென இவை ஏராளமான பணமும் செலவிடுகின்றன.

தன்னலக் குழுக்கள் கடைப் பிடிக்கும் வழிமுறைகள் மக்களாட்சிப் பண்புகட்கு உகந்தவை அல்ல. எனினும் இவை இன்று தவிர்க்க முடியாத அமைப்புகளாக மாறியுள்ளன. நுகர்வோரின் நலனைக் கவனிக்கத் தன்னலக் குழுக்கள் இல்லையென்பது குறிப்பிடத்தக்கது.

பொதுமக்கட் கருத்து
(Public Opinion)

பொதுமக்கட் கருத்திற்கு மதிப்பளிக்காத அரசாங்கம் வெற்றியடைய முடியாது என்ற நிலை தற்பொழுது காணப்படுகின்றது. அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பொதுமக்கட் கருத்திற்கேற்பத் தான் அமையவேண்டும்.

பொதுமக்கட் கருத்து என்பது தெளிவற்றது. பொதுப் பிரச்சினைகள் குறித்து பொதுமக்கள் கொண்டுள்ள கருத்து பொது மக்கட் கருத்து எனப்படுகின்றது. இந்த விளக்கம் சரியானதன்று. ஒரு நாட்டில் வாழும் மக்கள் எல்லோரையும் பொதுமக்கள் எனக் கருத முடியாது. கருத்து என்பது ஒரு பிரச்சினையைப்பற்றி நன்கறிந்த பின்னர் உருவாக்கப்படுவது. இதைக் கொண்டு ஆராயும்பொழுது கருத்தை உருவாக்கும் திறன் பொதுமக்களுக்கு உண்டா என ஆராய வேண்டியதாகின்றது. பொதுமக்கட் கருத்து என்பது பொது மக்களைக் குறிக்கவுமில்லை, கருத்தைக் குறிக்கவுமில்லை என்று ஓர் ஆசிரியர் கூறியதில் ஓரளவு உண்மை உண்டு.

தற்காலத்தில் பொதுமக்கட் கருத்து என்பது உருவாக்கப் படுகின்றதேயன்றித் தானாக உருவாகவில்லை. பிறரால் உரு வாக்கப்படும் கருத்தைப் பொதுமக்கள் ஏற்றுக் கொள்கின்றனர். அரசியல் கட்சிகளும், தலைவர்களும், செய்தித் தாள்களும், பத்திரிகைகளும், பொதுமக்கட் கருத்தை உருவாக்குகின்றன. சுருங்கச் சொன்னால் ஒரு சில நபர்களுடைய கருத்து பொதுமக்கட் கருத்தாகிவிடுகின்றது. செய்தித்தாள் மக்களாட்சியின் விவிலியம் (Bible) என்று வால்டர் லிப்மன் (Walter Lippmann) கூறுகின்றார். செய்திகளை வெளியிடும் முறை, அரசியலுக்கும் நிகழ்ச்சிகட்கும் அவை அளிக்கும் விளக்கங்கள் ஆகியவை மூலமாகச் செய்தித் தாள்கள் மக்களின் கவனத்தைக் கவர்கின்றன. பத்திரிகை களாலும் செய்தித்தாள்களாலும் அளிக்கப்படும் கருத்தை மக்கள் ஏற்கின்றனர். ஆகவே, பொதுமக்கட் கருத்து என்பது பொது மக்களின் கருத்தன்று என்று திட்டவட்டமாகக் கூறலாம்.

செய்தி நிறுவனங்கள்
(Information Media)

மக்களாட்சி வெற்றியடைய வேண்டுமெனில் மக்கள் ஓரள வாவது அரசியல் அறிவுடையவராக இருக்க வேண்டும். நாட்டு நடப்பும், அரசியல் பிரச்சினைகளும், அரசாங்கத்தின் கொள்கை களும், திட்டங்களும், நடவடிக்கைகளும் மக்களின் கவனத் திற்குக் கொண்டுவரப்படவேண்டும். இப் பணியைப் புரிபவை தாம் செய்தி நிறுவனங்கள். செய்தித்தாள்கள், பத்திரிகைகள், திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி ஆகியவைதாம் செய்தி நிறுவனங்கள் என்பவை.

மக்களுக்குச் செய்திகளை அளிப்பவற்றில் முக்கியமானவை செய்தித்தாள்களும் பத்திரிகைகளுமாகும். செய்தித்தாள்கள் உடனுக்குடன் செய்திகளை அளிக்கின்றன. செய்தித்தாள்களும் பத்திரிகைகளும் பல வகைப்படும். கட்சிச் சார்புடையவை, நடுநிலைமையுடையவை, அரசாங்கச் சார்புடையவை என்று இவற்றை வகைப்படுத்தலாம். அரசாங்கத்தின் கட்டுப்பாட் டிற்குள் இருக்கும் செய்தித்தாள்களிலும் பத்திரிகைகளிலும் வெளி யாகும் செய்திகள் அரசு சார்புடையவையாகத்தான் இருக்கும். பத்திரிகைச் சுதந்திரம் என்பது மக்களாட்சிக்கு அச்சாணி போன்றது. கலப்படமற்ற செய்திகள் மக்களுக்குக் கிடைக்கப் பெற்றால்தான் அவர்கள் பயனடைவர்.

15. இந்திய அரசியல் அமைப்பு

(Indian Constitution)

இந்திய அரசியலமைப்பின் சிறப்புப் பண்புகள்

[மத்திய அரசாங்கத்தின் அமைப்பு—மாநில அரசாங்கங்களின் அமைப்பு—ஸ்தலஸ்தாபன ஆட்சி.]

இந்திய அரசியல் அமைப்பு

அரசியல் நிர்ணய சபையால் (Constituent Assembly) 1949 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் தேதி நிறைவேற்றப்பட்ட இந்திய அரசியலமைப்பு 1950 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் தேதி நடைமுறைக்கு வந்தது.

இந்திய அரசியல் அமைப்பு மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய அரசியல் நிர்ணயசபையால் உருவாக்கப்பட்டதாகும். அரசியலமைப்பின் அடிப்படையிலான அதிகாரம் யாவும் மக்களிடையேயிருந்து கிடைக்கப்பெற்றவை என்று அரசியலமைப்பின் முன்னுரை பறைசாற்றுகிறது. இந்த அரசியல் அமைப்பு நடைமுறைக்கு வந்த நாளிலிருந்து இந்தியாவின்மீது இங்கிலாந்து அரசாங்கம் கொண்டிருந்த அதிகாரம் யாவும் அகற்றப்பட்டு, இந்தியா இறைமையுடைய அரசாக மாறியது.

உலகில் அமைதியைக் காக்க இந்தியா முயற்சியெடுக்கும் என்ற வாக்குறுதி அரசியல் அமைப்பில் இடம் பெற்றுள்ளது. நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவை அடங்கிய ஜனநாயக சமுதாயத்தையும் அரசியல் அமைப்பையும் உருவாக்குவதைத் தனது அரசியல் அமைப்பு அடிப்படைத் தத்துவமாகக் கொண்டுள்ளது.

சமயச் சுதந்திரமுடைய, ஆனால் சமயச் சார்பற்ற அரசை நமது அரசியல் அமைப்பு உருவாக்கியுள்ளது.

முன் கூறியவை நமது அரசியலமைப்பின் அடிப்படைத் தத்துவங்களாகும்.

அரசியல் அமைப்பின் சிறப்புப் பண்புகள்
(Characteristics of the Constitution)

1. உலகின் பல்வேறு அரலசியமைப்புகளின் விதிகள் பலவற்றையும் ஆராய்ந்த பின் நமக்குகந்தவற்றை மட்டும் எடுத்து, நமது சூழ்நிலைகட்கேற்ற புதிய விதிகளை உருவாக்கி இவையிரண்டையும் இணைத்து உருவாக்கப்பட்ட ஒரு புதுமைப் படைப்பு நமது அரசியலமைப்பு. பாராளுமன்றமுறை அரசாங்கத்தின் பண்புகளை இங்கிலாந்தின் அரசியலமைப்பினின்றும், நீதிப்புனராய்வு, அடிப்படை உரிமைகள் போன்றவற்றை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பினின்றும் நமது அரசியலமைப்பு மேற்கொண்டுள்ளது.

2. உலகில் உள்ள அரசியலமைப்புகளில் மிக நீளமானது நமது அரசியலமைப்பாகும். 1950 ஆம் ஆண்டு நமது அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தபொழுது அதில் 395 விதிகாரமும் 8 அட்டவகரமும் காணப்பட்டன. இதன் பின்பு அரசியலமைப்பில் செய்யப்பட்ட திருத்தங்கள் காரணமாக இதன் அளவு மாறுபட்டுள்ளது. பல்வேறு அரசியலமைப்புகளினின்றும் தேவையானவற்றை எடுத்துச் சேர்த்ததாலும், விரிவான ஆட்சிமுறை விதிகள் சேர்க்கப்பட்டதாலும், விசேடப் பிரச்சினைகட்குப் பரிகாரங்கள் அளிக்கவேண்டியிருந்ததாலும், மாநிலங்களின் அரசியலமைப்புகளும் இணைக்கப்பட்டிருப்பதாலும், கூட்டாட்சி உறவுகள் விரிவாக விளக்கப்பட்டிருப்பதாலும், மிக விரிவான அடிப்படை உரிமைகளின் பட்டியலும், அரசு நெறிமுறைக் கோட்பாடுகளும் சேர்க்கப்பட்டிருப்பதாலும் நமது அரசியலமைப்பு மிக விரிவானதாக மாறிவிட்டது.

3. நமது அரசியலமைப்பு நெகிழும் தன்மையையும் நெகிழாத் தன்மையையும் கொண்டது. ஆனால், அதில் நெகிழாத் தன்மையைவிட நெகிழும் தன்மைகள்தாம் அதிகம் காணப்படுகின்றன. பிற கூட்டாட்சி அரசியலமைப்புகளுடன் ஒப்பிடும் பொழுது நமது அரசியலமைப்பு நெகிழும் தன்மையுடையதாகத் தான் விளங்குகின்றது.

4. எழுதப்பட்ட அரசியல் அமைப்புடன் பாராளுமன்றத்தின் இறைமையை நமது அரசியலமைப்பு இணைத்துள்ளது. எழுதப்பட்ட அரசியலமைப்பு நாட்டின் அடிப்படைச் சட்டமாகும் என்ற

கருத்து அமெரிக்க ஐக்கிய நாடுகளில் காணப்படுகின்றது. பாராளுமன்றத்தின் இறைமை முதன்மையான து என்ற நிலை இங்கிலாந்தில் உள்ளது. இவ்விரு பண்புகளையும் நமது அரசிய லமைப்புக் கொண்டுள்ளது.

5. எழுதப்பட்ட அரசியலமைப்பு விதிகளுடன், சில மரபு களும் தோன்ற நமது அரசியலமைப்பு இடமளிக்கிறது.

6. நமது அரசியலமைப்பின் மூன்றும் பகுதியில் அடிப்படை உரிமைகளும் அவற்றைக் காத்துக் கொள்வதற்கான வழிமுறை களும் கொடுக்கப்பட்டுள்ளன. மக்கள் தமது உரிமைகளைப் பாது காத்துக்கொள்ள நான்கு நீதிப் பேராணைகளில் (Writs) உசித மானவற்றைப் பேணிப் பெற்றுக்கொள்ளலாம். இப் பேராணைகளைப் பிறப்பிக்க உயர்நீதி மன்றங்களுக்கும் (High Courts) உச்சநீதி மன்றத்திற்கும் (Supreme Court) அரசியலமைப்பு அதிகாரம் வழங்கியுள்ளது. நீதிப் புனராய்வு (Judicial Review) என்னும் அதிகாரமும் இந் நீதி மன்றங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

7. அண்மையில் அரசியலமைப்பில் செய்யப்பட்ட திருத்தத் திற்கேற்ப நமது அரசியலமைப்பு மக்களின் பத்து அடிப்படைக் கடமைகளையும் குறிப்பிடுகின்றது. மக்களின் கடமைகளைக் குறிப் பிடும் அரசியல் அமைப்புகளின் எண்ணிக்கைகள் குறைவு. அப்படிப்பட்ட அரசியலமைப்புகளில் நமதும் ஒன்றாகும்.

8. விசேடத் தகுதியேதும் நிர்ணயிக்காமல் நமது அரசிய லமைப்பு வயது வந்தோருக்கு வாக்குரிமை அளிக்கின்றது. முன்னேறிய சில நாடுகளில் அளிக்கப்பட்டுள்ளதை விட மிகப் பரந்த அளவில் நமது நாட்டில் வாக்குரிமை அளிக்கப்பட்டுள்ளது.

9. நமது அரசியலமைப்பு பாராளுமன்ற முறை அரசாங் கத்தை ஏற்படுத்தியுள்ளது. பாராளுமன்ற முறையில் குடியரசு தலைவருக்கு இடமளித்துள்ளது. அயர்லாந்தின் அரசிய லமைப்பைப் பின் பற்றிச் செய்யப்பட்ட ஏற்பாடு இது.

10. கூட்டாட்சி முறையும் ஒற்றை ஆட்சி முறையும் ஒருங்கே அமைந்திருப்பது நமது அரசியலமைப்பின் சிறப்பம்சங் களுள் முக்கியமானதாகும். இந்தியா கூட்டாட்சி அமைப்பை கொண்டுள்ள போதிலும் தேவைப்படும் போது ஒற்றை ஆட்சி யாக மாற வழியுண்டு.

மேற்கூறியவை நமது அரசியலமைப்பில் காணப்படும் சிறப்புப் பண்புகளாகும்.

மத்திய அரசாங்கம்
(Central Government)

பிரிட்டிஷ் ஆதிக்கம் நமது இந்தியத் துணைக் கண்டத்தில் செயல்பட்டபொழுது காணப்பட்ட ஒன்பது மாநிலங்களையும் மன்னர்கள் ஆட்சி புரிந்துவந்த 552 சமஸ்தான அரசுகளையும் ஒன்றாக இணைத்து உருவாக்கப்பட்டதுதான் நாம் இன்று காணும் இந்தியா. பல கட்டங்களைக் கடந்துதான் அஃது இன்றைய அமைப்பைப் பெற்றது. தற்பொழுது இந்தியாவில் 22 மாநிலங்களும், மத்திய அரசாங்கத்தின் நேரடி ஆட்சிக்குட்பட்ட 9 பகுதிகளும் உள்ளன.

கூட்டாட்சி முறையை அடிப்படையாகக் கொண்டுதான் நமது இந்திய அரசாங்கம் நிறுவப்பட்டுள்ளது. மத்தியிலும், மாநிலங்களிலும் பாராளுமன்ற முறை அரசாங்கம் செயல்படுகின்றது. மத்திய அரசாங்கத்தின் அமைப்பிலும், மாநில அரசாங்கங்களின் அமைப்பிலும் அவைகளுக்குள்ள அதிகாரங்களிலும் சில வேற்றுமைகள் உள்ளன. 97 அதிகாரங்களைக் கொண்ட மத்தியப் பட்டியலும், 66 அதிகாரங்களைக் கொண்ட மாநிலப் பட்டியலும், 47 அதிகாரங்களைக் கொண்ட பொதுப் பட்டியலும் முறையே மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களையும், மாநில அரசாங்கங்களின் அதிகாரங்களையும், இரு அரசாங்கங்கட்கும் பொதுவான அதிகாரங்களையும் குறிப்பிடுகின்றன. எஞ்சியுள்ள அதிகாரங்கள் மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. இவ்வதிகாரங்களைப் பயன்படுத்தக் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைக் கொண்டு ஆராய்ந்தோமானால் மாநில அரசாங்கங்களை விட மத்திய அரசாங்கம்தான் வலிமை மிக்கது என்பது புலப்படும்.

இனி நாம் இவ் வலிமை மிக்க மத்திய அரசாங்கத்தின் அமைப்பை ஆராய்வோம்.

ஆட்சித்துறை
(Executive)

இந்தியாவின் ஆட்சித்துறைத் தலைவராகத் திகழ்பவர் குடியரசு தலைவர்.

இந்தியக் குடியரசு தலைவர் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப் படுகின்றார். இவரைத் தேர்ந்தெடுக்க விகிதாசாரப் பிரதி

நிதித்துவ முறையும் ஒற்றை மாற்று வாக்கும் பயன்படுத்தப் படுகின்றன. பாராளுமன்றத்தின் இரு அவைகளிலுமுள்ள தேர்ந் தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களும் மாநிலச் சட்ட மன்றங்களி லுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களும் குடியரசு தலைவரைத் தேர்ந்தெடுக்கின்றார்கள். பாராளுமன்றத்தின் மக்கள் அவைக்குத் தேர்ந்தெடுக்கப்படத் தகுதிவாய்ந்த முப்பத்தைந்து வயது நிரம்பிய இந்தியக் குடிமகனுசவும், மத்திய, மாநில அரசாங்கத்தின்கீழ் ஊதியம் பெறக் கூடிய பதவி வகிக்காத வராகவும் உள்ள இந்தியக் குடிமகன் குடியரசு தலைவர் பதவிக்குப் போட்டியிடலாம்.

இந்தியக் குடியரசு தலைவர் ஐந்தாண்டுகட்குப் பதவி வகிப்பார். ஒருவர் எத்தனை முறை வேண்டுமென்றாலும் குடியரசு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படலாம். பாராளுமன்றத்தால் ⅔ பெரும்பான்மையுடன் குற்ற விசாரணை(Impeachment) நடத்தித் தான் இவரைப் பதவியின்று அகற்ற முடியும்.

குடியரசு தலைவர் பாராளுமன்றத்தின் உறுப்பினராகவோ மாநிலச் சட்டமன்ற உறுப்பினராகவோ இருக்கக் கூடாது.

குடியரசு தலைவருக்குப் பாராளுமன்றத்தால் நிர்ணயம் செய்யப்படும் ஊதியமும் சலுகைகளும் அளிக்கப்படுகின்றன. தற்பொழுது இவர் மாதமொன்றிற்குப் பத்தாயிரம் ரூபாய் ஊதிய மாகப் பெறுகிறார். குடியரசு பதவி துறந்த நபருக்கு ஆண்டொன் றிற்கு 24 ஆயிரம் ரூபாய் ஓய்வு ஊதியமாக வழங்கப்படுகின்றது.

குடியரசு தலைவரின் பதவிக் காலம் முடிவதற்குமுன் அப் பதவி காலியாக நேரிட்டால், துணைக்குடியரசு தலைவர் தாற்காலிகக் குடியரசு தலைவராகச் செயல்படுவார். ஆறு மாத காலத்திற்குள் அடுத்த குடியரசு தலைவரைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

அதிகாரங்களும் கடமைகளும்

மத்திய அரசாங்கத்தின் ஆட்சித்துறை அதிகாரங்களின் இருப்பிடம் குடியரசு தலைவர். குடியரசு தலைவர் மத்திய அமைச்சர் குழுவின் ஆலோசனைக்குக் கட்டுப்பட்டுத்தான் செயல் படவேண்டும் என்று தற்போது விதிக்கப்பட்டுள்ளது. மேலும், அரசியலமைப்பிற்கேற்பத்தான் இவர் தமது அதிகாரங்களைப் பயன்படுத்தவேண்டும்.

குடியரசு தலைவருக்கு பலவகைப்பட்ட அதிகாரங்கள் உள்ளன.

1. நிர்வாகம் சம்பந்தப்பட்ட அதிகாரம் : சட்டங்களை செயல் படுத்துவதும் அரசாங்கத்தின் இலாகாக்களை நிர்வகிப்பதும் இவ் வதிகாரத்தில் உட்படும். குடியரசு தலைவர் பெயரளவில் மட்டுமே நிர்வாகத் தலைவராக இருந்த போதிலும் அரசாங்கத்தின் நட வடிக்கை யாவும் இவர் பெயரில்தான் எடுக்கப்பட வேண்டும். தலைமை அமைச்சர், இதர அமைச்சர்கள், நீதிபதிகள், மாநில ஆளுநர்கள், குழுக்களின் அங்கத்தினர் போன்ற உயர் அதிகாரி களைக்கூடக் குடியரசு தலைவர்தாம் நியமிக்கிறார். உயர் அதிகாரி களைப் பதவிகளிலிருந்து விலக்குவதற்குக் குடியரசு தலைவருக்கான அதிகாரம் சில நிபந்தனைகட்குட்பட்டது.

2. படைத்துறை சம்பந்தப்பட்ட அதிகாரம்: —முப்படைகளின் தலைவர் குடியரசு தலைவர் ஆவார். படைத்துறை சம்பந்தப்பட்ட அதிகாரங்களை, சட்டத்திற்கேற்பத்தான் இவர் பயன்படுத்த முடியும்.

3. அயல்நாட்டு உறவு சம்பந்தப்பட்ட அதிகாரம் : அயல் நாடுகளுடன் ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் போன்றவை செய்வதற்கு நடவடிக்கை உத்தரவு வழங்குபவர் குடியரசு தலைவர். வெளிநாடுகளுக்குத் தூதர்களை நியமிப்பதும், அன்னிய தூதர்களை வரவேற்பதும் குடியரசு தலைவரின் பணியாகும். பன்னாட்டு அரங்கில் இந்தியாவின் பிரதிநிதியாகக் கலந்து கொள்கிறார்.

4. சட்டமியற்றல் சம்பந்தப்பட்ட அதிகாரங்கள்: இங்கி லாந்தின் அரசில் போல் இந்தியக் குடியரசு தலைவரும் பாராளுமன்றத்தின் ஒரு பகுதியாகத் திகழ்கின்றார். பாராளு மன்றத்தைக் கூட்டுவதும் தாற்காலிகமாகக் கலைத்தலும், நிரந்தர மாகக் கலைத்தலும் குடியரசு தலைவரின் பணியாகும். புதிய பாராளு மன்றத்தின் முதற் கூட்டத்திலும் ஒவ்வோர் ஆண்டின் முதல் கூட்டத்திலும் உரை நிகழ்த்திப் பாராளுமன்றக் கூட்ட தொடரைத் தொடக்கிவைப்பவர் குடியரசு தலைவர் ஆவார். பாராளு மன்றத்தில் அவைகள் ஒவ்வொன்றிலுமோ இரு அவைகளும் சேர்ந்த கூட்டுக் கூட்டத்திலே குடியரசு தலைவர் எப்போது வேண்டுமெனிலும் உரை நிகழ்த்தலாம். இவற்றிற்குச் செய்திகள் அனுப்பும் அதிகாரமும் பாராளுமன்றத்தின் மேலவைக்கு 12 உறுப்பினர்களையும், கீழ் அவைக்கு இரு உறுப்பினர்களையும்

நியமனம் செய்யும் அதிகாரமும் குடியரசு தலைவருக்கு உள்ளது. பாராளுமன்றத்திற்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கும் அதிகாரமும் இவருக்கு உண்டு. சில மசோதாக்கள் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னால் குடியரசு தலைவரின் அனுமதி பெறவேண்டும். மசோதாக்களை ஆமோதிக்கவும் அவற்றிற்கு மறுப்புத் தெரிவிக்கவும் இவருக்கு அதிகாரம் உண்டு.

5. மன்னிப்பளிக்கும் அதிகாரம் : குற்றங்கட்கென நீதி மன்றங்களால் தண்டனையளிக்கப்பட்டவருக்கு மன்னிப்பளிக்கவும், தண்டனையைக் குறைக்கவும், தண்டனையை ரத்து செய்யவும் குடியரசு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

மேற்கூறிய அதிகாரங்களனைத்தையும் குடியரசு தலைவர் அமைச்சர் குழுவின் ஆலோசனைப்படிதான் செய்ய வேண்டும்.

அமைச்சரவை

(Council of Ministers)

ஆட்சித்துறை சம்பந்தப்பட்ட அதிகாரங்களைப் பெயரளவில் மட்டும் கொண்டுள்ளவர் குடியரசு தலைவர். நடைமுறையில் இவ்வதிகாரங்களைத் தலைமை அமைச்சரின் கீழுள்ள அமைச்சர் குழுவின் ஆலோசனைக்கேற்பத்தான் பயன்படுத்த வேண்டும் என்று அரசியலமைப்புக் கூறுகின்றது.

பாராளுமன்றத்தின் மக்கள் அவையிலுள்ள பெரும்பான்மைக் கட்சியின் தலைவரைக் குடியரசு தலைவர் தலைமை அமைச்சராக நியமிக்கின்றார். தலைமை அமைச்சரின் ஆலோசனைக்கேற்ப இதர அமைச்சர்கள் குடியரசு தலைவரால் நியமிக்கப்படுகின்றனர். அமைச்சரவை எத்தனை அங்கத்தினரையுடையதாக இருக்க வேண்டும் என்று அரசியலமைப்பு நிர்ணயிக்கவில்லை. மத்திய அமைச்சரவையில் மூவகைப்பட்ட அமைச்சர்கள் உள்ளனர். அமைச்சர் குழுவின் அங்கத்தினராக அமைச்சர், இராஜாங்க அமைச்சர், துணைஅமைச்சர் ஆகிய மூவகை அமைச்சர்கள் உள்ளனர். அமைச்சர் ஒவ்வொருவரின் நிலைக்கும், அவர்களது இலாகாக்களுக்கும் தலைமை அமைச்சர் குழு என்பதற்கும் வேற்றுமையுண்டு. அமைச்சரவை என்பது மூவகை அமைச்சர்களையும் கொண்ட அமைப்பு. ஆனால் அமைச்சர் குழுவில் எல்லா அமைச்சர்களும் அங்கத்தினரல்லர். அடிக்கடி சாதா

ரணமாகக் கூடுவது கிடையாது. அடிக்கடி முடிவுகள் எடுப்பது அமைச்சர் குழுவாகும். அமைச்சர்கள் பாராளுமன்றத்தின் இரு அவைகளினின்றும் நியமிக்கப்படுவார்கள் பாராளுமன்றத்தின் உறுப்பினரல்லாதவரும் அமைச்சராக நியமிக்கப்படலாம். ஆனால், அவர் ஆறுமாத காலத்திற்குள் தேர்ந்தெடுக்கப்பட்டோ அல்லது நியமிக்கப்பட்ட பாராளுமன்றத்தின் உறுப்பினராகவோ இருக்க வேண்டும். அமைச்சரவை கூட்டாக மக்கள் அவைக்கு பொறுப்புடையது. அமைச்சர்கள் எல்லோரும் குடியரசு தலைவருக்குப் பொறுப்புடையவர்கள்.

அமைச்சரவையைப் பொறுத்தவரையில் மிக முக்கியமானவர் தலைமை அமைச்சர். பாராளுமன்ற முறை அரசாங்கத்தின் அமைச்சர் இவர்தாம். இவருக்கு ஏராளமான அதிகாரங்கள் உள்ளன. இவரது விருப்பத்திற்கு மாறாக அமைச்சர் குழு எந்த முடிவையும் எடுக்கமுடியாது. இவர் பிற அமைச்சர்களின் கருத்துக்கு ஒத்துப் போக வேண்டியதில்லை. இவருடன் கருத்தொருமிப்பு அற்ற அமைச்சர்கள் பதவியைத் துறந்து வெளியேற வேண்டும். இவரது ஆலோசனைக்கேற்பத்தான் ஓர் அமைச்சரைக் குடியரசு தலைவர் பதவியினின்று விலக்க முடியும்.

தற்பொழுது பாராளுமன்ற முறை அரசாங்கம் செயல்படும்? நாடுகளில் மிக முக்கியத்துவம் உடையது. பெரும்பான்மை அங்கத்தினரின் ஆதரவுடைய தலைமை அமைச்சரின் வலிமைக்கு அளவு கிடையாது. தமது கொள்கைகளையும் திட்டங்களையும் நடவடிக்கைகளையும் மக்கள் ஆமோதிக்க வேண்டும் என்ற எண்ணம் மட்டும் தலைமை அமைச்சரின் மனத்தில் காணப்பட வேண்டும்.

தற்கால அமைச்சரவை அரசாங்கத்தின் மூன்று துறைகள் சம்பந்தப்பட்ட அதிகாரங்களையும் கொண்டுள்ளது. உண்மையான ஆட்சித் துறை என்பது அமைச்சரவை ஆதலால் சட்டங்களைச் செயற்படுத்தும் பணிகளையும் நிர்வாகம் சம்பந்தப்பட்ட பணிகளையும் இது புரிகின்றது. பாராளுமன்றத்தின் உறுப்பினரான அமைச்சர்கள் தாம் பெரும்பான்மையான மசோதாக்களைத் தயாரித்துத் தாக்கல் செய்கின்றனர். அரசாங்கத்தின் வருவாய் செலவினங்கள் ஆகியவற்றைக் கண்காணிக்கும் பணி பாராளுமன்றத்தினுடையதாயினும் நடைமுறையில் அமைச்சரவையின் கருத்துப்படிதான் செயல்படும். நிர்வாகப்பணிகள் பலவற்

றையும் புரியும் அமைச்சர்கள் அரசாங்கத்தில் பல்வேறு இலாகாக் களின் தலைவர்களாவர். நீதித்துறையைச் சார்ந்த பணிகளையும் தற்கால அமைச்சர்கள் புரிகின்றனர். பாராளுமன்ற முறை அரசாங்கத்தின் முக்கியமான பகுதி அமைச்சரவை என்றால் மிகையாகாது.

5. மத்திய பாராளுமன்றம்
(Central Parliament)

குடியரசு தலைவரையும், இரு அவைகளையும் கொண்டது இந்தியப் பாராளுமன்றம். இரு அவைகளில் கீழவை லோக் சபா (Lok-Sabha), என்றும் மேலவை ராஜ்ய சபை (Rajya Sabha) என்றும் அழைக்கப்படுகின்றன.

இராஜ்ய சபையில் மொத்த அங்கத்தினரது எண்ணிக்கை 250-க்கு மேற்படக் கூடாது. இவர்களில் 12 பேர் குடியரசு தலைவரால் நியமிக்கப்படுகிறார்கள். இதர அங்கத்தினர்கள் மாநிலச் சட்ட மன்றங்களால் மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மாநிலங்கட்கு இராஜ்ய சபையில் சம பிரதிநிதித்துவம் கிடையாது.

லோக் சபையின் அங்கத்தினரது மொத்த எண்ணிக்கை தற்பொழுது 542 ஆக உள்ளது. இவர்களில் இருவர் தவிர மற்றெல்லோரும் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆங்கிலோ இந்தியர்கட்குப் பிரதிநிதித்துவம் அளிப்பதற்காக இருவரைக் குடியரசு தலைவர் இவ்வவையின் உறுப்பினர்களாக நியமிக்கின்றார்.

தற்பொழுது பாராளுமன்றத்தின் இரு அவைகளும் ஒரே அளவு பதவிக் (6ஆண்டு) காலத்தைக் கொண்டுள்ளன. இராஜ்ய சபையின் அங்கத்தினரில் மூன்றில் ஒரு பகுதியினர் 2 ஆண்டுகட்கு ஒரு முறை பதவி இழக்கின்றனர். இராஜ்ய சபையை கலைக்க முடியாது. 6 ஆண்டுகட்கெனத் தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் அவையைக் கலைக்கலாம்.

பாராளுமன்றத்தின் கூட்டங்களைக் கூட்டுவதும், தாற்காலிகமாக ஒத்தி வைப்பதும், கலைத்து விடுவதும் குடியரசு தலைவருக்குரிய பணிகளாகும். இவர் இப் பணிகளை அமைச்சர் குழுவின் ஆலோசனைக்கேற்பச் செய்கிறார்.

இராஜ்ய சபையின் உறுப்பினராக விரும்புபவர் 30 வயது நிரம்பிய இந்தியக் குடிமகனாகவும், மக்கள் அவையின் உறுப்

பினராக விரும்புபவர் 25 வயது நிரம்பிய இந்தியக் குடிமகனுகவும் இருக்க வேண்டும்.

சட்டம் இயற்றுவதும், அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துவதும், அதன் பணிகளைக் கண்காணிப்பதும் பாராளுமன்றத்தின் பணிகள். தற்பொழுது சட்டமியற்றுவதில் அமைச்சர் குழு முக்கியப் பங்கு வகித்த போதிலும் பாராளுமன்றம் அதன் முக்கியத்துவத்தை இழந்துவிடவில்லை. மக்கட்கருத்து (பாராளுமன்ற உறுப்பினர்) வாயிலாக அரசாங்கத்தின் கருத்திற்குக் கொண்டுவரப்படுகிறது.

மாநில அரசாங்கங்கள்

(State Governments)

அரசாங்கத்தின் அமைப்பு, அதிகாரங்கள் ஆகியவற்றை பொறுத்தவரையில் மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்கட்கும் வேற்றுமை அதிகம் இல்லை. பெயரளவில் சில வேற்றுமைகள் காணப்படுகின்றன.

ஆளுநர் (Governor)

மாநில அரசாங்கத்தின் ஆட்சித் துறைத் தலைவர் ஆளுநர் ஆவார். ஒன்றுக் கதிகமான மாநிலங்கட்குத் தலைவராக ஓர் ஆளுநர் நியமிக்கப்படலாம். குடியரசு தலைவரால் நியமிக்கப் படும் ஆளுநர் அவருடைய விருப்ப காலத்தில் பதவி வகிக்கின்றார். சாதாரணமாக 5 ஆண்டுகட்குப் பதவி வகிப்பார். இவருக்கு ஆட்சித் துறை, சட்டம் இயற்றல், நீதித்துறை, நெருக்கடிநிலை ஆகியவை சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் உள்ளன. மாநில அமைச்சரவையையும், மாநில அட்வகேட் ஜெனரலையும், மாநிலப் பணியாளர் தேர்வு ஆணைக்குழுவின் உறுப்பினரையும் ஆளுநர் நியமிக்கின்றார். ஆங்கிலோ இந்திய வகுப்பினர் இருவரை மாநிலச் சட்ட மன்றத்திற்கு நியமனம் செய்யும் அதிகாரம் இவருக்கு உள்ளது.

குடியரசு தலைவர் பாராளுமன்றத்தின் ஒரு பகுதியாகக் கருதப் படுவது போல ஆளுநரும் மாநில சட்டமன்றத்தின் ஒரு பகுதி யாகக் கருதப்படுகிறார். தண்டனை பெற்றவர்கட்கு மன்னிப்பு அளிக்கும் அதிகாரம் ஆளுநருக்கு உண்டு. அரசியலமைப்பின் விதிகட்கு ஏற்றவாறு மாநில அரசாங்கம் செயல்படமுடியாத சூழ்

நிலை உருவாகியுள்ளது என்று இவர்கருதினால் அம் மாநிலத்தின் ஆட்சியை ஏற்றுக்கொள்ளுமாறு குடியரசு தலைவருக்குச் சிபாரிசு செய்யலாம்.

அமைச்சரவை
(Council of Ministers)

சில விஷயங்களில் அமைச்சரவையின் ஆலோசனைக்கேற்ப தான் ஆளுநர் செயல்பட வேண்டும் என்ற விதி உள்ளது. மாநில அமைச்சரவையின் தலைவரான முதலமைச்சர் ஆளுநரால் நியமிக்கப்படுகிறார். இதர அமைச்சர்கள் இவருடைய ஆலோசனைக்கேற்ப ஆளுநரால் நியமிக்கப்படுகிறார்கள். மத்திய அமைச்சரவைக்குள்ள பண்புகளும், பொறுப்புகளும், பணிகளும் மாநில அமைச்சரவைக்கும் உள்ளன.

மாநில சட்ட மன்றம்
(State Legislature)

மாநிலச் சட்ட மன்றம் இரண்டு வகைப்பட்டது. ஏழு மாநிலங்களில் அது 2 அவைகளைக் கொண்டதாகவும் மீதியுள்ள மாநிலங்களில் ஓர் அவையைக் கொண்டதாகவும் இருக்கிறது.

மேலவை உறுப்பினர்களின் எண்ணிக்கை, கீழவை உறுப்பினரது எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்குக்கு மிகைப்படாமலும் 40-க்குக் குறையாமலும் இருக்க வேண்டும். இந்த அவையில் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தினரும் நியமிக்கப்பட்ட அங்கத்தினரும் உண்டு. கீழவையின் உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இரு அவைகளும் ஒரே விதமாக 6 ஆண்டுப் பதவி காலத்தை கொண்டவை. ஆனால் கீழவை கலைக்கப்படக் கூடியது.

சட்ட மன்றத்தின் சட்டம் இயற்றும் அதிகாரம் இறுதியானது அன்று சில பண மசோதாக்கள் தாக்கல் செய்வதற்கு ஆளுநரின் அனுமதி தேவை.இவர் மசோதாக்களுக்கு மறுப்புத் தெரிவிக்கலாம் அல்லது அவற்றைக் குடியரசு தலைவரின் கவனத்திற்கு அனுப்பலாம்.

இந்திய நீதித்துறை
(Indian Judiciary)

இந்தியா கூட்டாட்சி அமைப்பைக் கொண்டுள்ள போதிலும் இந்திய நீதித்துறை அமெரிக்க நீதித்துறையைப் போல

2 பிரிவுகளை கொண்டதல்ல. ஒருங்கிணைக்கப்பட்ட நீதித்துறை அமைப்பு இந்தியாவில் காணப்படுகிறது. இந்திய நீதித்துறை மாநில, மத்திய சட்டங்கட்கு விளக்கமளிக்கின்றது. இந்திய நீதித்துறை அமைப்பின் உயர் மட்டத்தில் காணப்படுவது உச்ச நீதிமன்றம் (Supreme Court) இதற்கு கீழே மாநில தலைமை நீதி மன்றங்கள்: மாநில தலைமை நீதி மன்றங்கட்கு கீழ் பல கீழ்நிலை நீதி மன்றங்கள் காணப்படுகின்றன.

உச்ச நீதிமன்றம்
(Supreme Court)

இந் நீதிமன்றத்தின் அமைப்பு அதிகாரங்கள், அதிகார வரம்பு ஆகியவற்றை நிர்ணயிக்கும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.

இந்நீதி மன்றத்தில் 1 தலைமை நீதிபதியும் 13 சாதாரண நீதிபதிகளும் உள்ளனர். குடியரசு தலைவரால் நியமிக்கப்படும் இவர்கள் 65 வயது நிரம்பும் வரையிலும் பதவி வகிப்பர். பாராளுமன்றத்தின் இரு அவைகளிடமிருந்தும் கிடைக்கப் பெற்ற விண்ணப்பத்தின் அடிப்படையில்தான் நீதிபதியை குடியரசுத் தலைவர் பதவியினின்று விலக்க முடியும்.

மத்திய மாநில அரசாங்கங்கட்கு இடையே எழும் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் இந்நீதி மன்றத்திற்கு உள்ளது. இது மட்டுமன்றி மேல் முறையீட்டின் அடிப்படையில் வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரமும் இதற்குண்டு. எல்லா வழக்குகளையும் இந்நீதி மன்றம் விசாரணை செய்வதில்லை. நீதிப் பேராணைகளைப் பிறப்பிக்கும் அதிகாரம் இந்நீதி மன்றத்திற்கு உண்டு. குடியரசுத் தலைவர் கோரினால் சட்ட சம்பந்தமான ஆலோசனை வழங்கும் அதிகாரம் இதற்கு உண்டு.

உயர்நீதி மன்றம்
(High Court)

ஒரு மாநிலத்திற்கு ஒரு உயர்நீதி மன்றம் என்றிருப்பினும் பல மாநிலங்களுக்குப் பொதுவாக ஒரு உயர்நீதி மன்றம் இருப்பதும் உண்டு.

ஒவ்வொரு உயர்நீதி மன்றத்திலும் ஒரு தலைமை நீதிபதியும், சாதாரண நீதிபதிகளும் இருப்பர். சாதாரண நீதிபதிகளின்

எண்ணிக்கை குடியரசுத் தலைவரால் நிர்ணயிக்கப்படும். இந்நீதி பதிகள் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகின்றனர். ஒரு உயர்நீதி மன்றத்தில் பணிபுரியும் நீதிபதிகள் மற்றொரு உயர்நீதி மன்றத்திற்கு மாற்றப்படலாம்.

சில வகைப்பட்ட வழக்குகளை முதலில் விசாரிக்கும் அதிகாரமும், மேல் முறையீட்டிற்கேற்ப வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரமும், கீழ்நிலை நீதிமன்றங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரமும் உயர்நீதிமன்றத்திற்குண்டு.

ஸ்தலஸ்தாபன ஆட்சி
(Local Administration)

ஸ்தலஸ்தாபன ஆட்சி என்பது மாநிலங்களின் உட்கூறுகளான மாவட்டங்கள், தாலுகாக்கள், கிராமப் பஞ்சாயத்துக்கள், நகர சபைகள் போன்றவற்றில் புரியப்படும் ஆட்சியைக் குறிப்பிடுகின்றது. பன்முகப்படுத்தப்பட்ட ஆட்சிதான் திறம்படச் செயற்பட முடியும். ஆட்சிப் பொறுப்பு யாவும் ஒரு அரசாங்கத்திடம் சூழ்ப்படைக்கப்பட்டிருப்பின் ஆட்சி திறனுடையதாக அமையாது. மக்களாட்சி உணர்வைத் தோற்றுவிக்கவும் இத்தகைய ஆட்சி இன்றியமையாதது.

இந்தியாவின் ஆட்சிப் பகுதிகளை மாநிலங்களாகவும், மத்திய ஆட்சிப் பகுதிகளாகவும் பிரிக்கலாம். ஒவ்வொரு மாநிலத்தினுள்ளும் பல மாவட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு மாவட்டமும் பல தாலுக்காக்களாகவும், ஒவ்வொரு தாலுகாவினுள்ளும் பல கிராமப் பஞ்சாயத்துக்களும், நகரசபைகளும் காணப்படுகின்றன. இனி நாம் ஸ்தலஸ்தாபன ஆட்சிப்பகுதிகள் ஒவ்வொன்றிலும் காணப்படும் ஆட்சி அமைப்பை ஆராய்வோம்.

மாவட்டம் (District)

ஒவ்வொரு மாநிலமும் பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒரு மாவட்டத்தின் ஆட்சிப் பொறுப்பை வகிப்பவர் மாவட்ட ஆட்சியாளர் (District Collector) என்பவர். அரசாங்கம் இவர் மூலமாகத்தான் மாவட்டத்தின் மீது தனது கட்டுப்பாட்டைச் செலுத்துகின்றது. பல்வேறு இலாகாக்களிடையே ஒத்துழைப்பு கிடைக்கச் செய்வதும், அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்துவதும் மாவட்ட ஆட்சியாளரின் பொறுப்பாகும்.

மாவட்டத்தில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவது மாவட்ட ஆட்சியாளரின் பொறுப்பாகும். மாவட்டத்தின் முக்கிய

ஆட்சிப் பொறுப்பை வகிப்பவர் மாவட்ட ஆட்சியாளர். மாவட்ட ஆட்சிப்பொறுப்பு இவருடையது. மாவட்ட வருவாய் சம்பந்தப் பட்ட பணிகட்கு இவர் பொறுப்புடையவர். மாவட்டத்திலுள்ள காவல் துறை இவருக்குப் பொறுப்புடையது. மாவட்டத்தில் செயல்படும் இலாக்காகளை மேற்பார்வை செய்வதும், கட்டுப் படுத்துவதும் இவரது பணிகளாகும். மாவட்ட வன அலுவல கமும், பொதுப்பணி இலாகாவும் இவரது கட்டுப்பாட்டிற்குட் பட்டவையாகும்.

போர், உணவு பற்றுக்குறை, தொற்று நோய், வெள்ளம் ஆகியவற்றின் காரணமாக நெருக்கடி நிலை எழும் பொழுது மாவட்ட ஆட்சியாளர் சிறப்புப் பணிகளைப் புரிகின்றார். நெருக்கடி நிலை சம்பந்தப்பட்ட பணிகள் யாவற்றையும் இவர்தான் புரிகின்றார். ஐந்தாண்டுத் திட்டங்கள் சார்ந்த அபிவிருத்திப் பணி களைச் செயற்படுத்துவதும் மாவட்ட ஆட்சியாளரின் பொறுப்பாகும்.

கிராமப் பஞ்சாயத்து நிறுவனங்களையும் இவர் மேற்பார்வை செய்கின்றார். மாவட்ட ஆட்சியாளரின் பொறுப்பு அளவிட முடியாதது. ஒரு மாவட்டம் சம்பந்தப்பட்ட எல்லா பணிகளையும் மேற்பார்வை செய்து, கட்டுப்படுத்தும் பெரும் பொறுப்பு மாவட்ட ஆட்சியாளருடையதாகும்.

கிராமப் பஞ்சாயத்துக்கள் (Village Panchayats)

மக்களாட்சி முறையின் அடிப்படையாக நமது நாட்டில் திகழ்பவை கிராமப் பஞ்சாயத்துக்களாகும். பின் வருபவை கிராமப் பஞ்சாயத்துக்கள் புரியும் பணிகளாகும்.

கிராமப் பஞ்சாயத்துக்கள் பல அபிவிருத்திப் பணிகளில் ஈடு படுகின்றன. வேளாண்மை உற்பத்தித் திட்டங்களைத் தயாரித்துச் செயற்படுத்தல், பொது உபயோகத்திற்கென வேளாண்மைக் கருவிகளை வாங்குதல், தரிசு நிலங்களைச் சாகுபடிக்கேற்றவையாக மாற்றுதல், கூட்டுறவுகள், குடிசைத் தொழில்கள், சிறு சேமிப்பு போன்றவற்றை வளர்த்தல் ஆகியவை கிராமப் பஞ்சாயத்துக்கள் புரியும் அபிவிருத்திப் பணிகளாகும்.

குடி தண்ணீர் வழங்குதல், சாலைகள், வாய்க்கால்கள், ஓடைகள் போன்றவற்றைச் சுத்தம் செய்து பராமரித்தல், சாலைகள், பாலங்கள் ஆகியவற்றை உருவாக்குதல், சுகாதார வசதிகளைக் கவனித்தல், பொதுக் கட்டிடங்களைப் பராமரித்தல், பொதுச்சாலைகளில் விளக்கு வசதிகள் அளித்தல், கல்வி நிலையங்

களைக் கண்காணித்தல், பிறப்பு, இறப்பு, திருமணம் போன்றவற்றைப் பதிவுசெய்தல் ஆகிய பணிகளையும் கிராமப் பஞ்சாயத்துக்கள் புரிகின்றன.

கிராமத்தில் சட்டத்தையும், ஒழுங்கையும் காத்தல் கிராமப் பஞ்சாயத்தின் பொறுப்பாகும். இவை மட்டுமன்றி மக்கள் நலனுக்குத் தேவையான பல பணிகளையும் கிராமப் பஞ்சாயத்துக்கள் புரிகின்றன.

கிராமப் பஞ்சாயத்துக்களுக்குத் தேவையான நிதி அவை விதிக்கும் வரிகளினின்றும், மாநில அரசாங்கத்தினின்று அவற்றிற்குக் கிடைக்கப்பெறும் மானியத்தினின்றும், பொது மக்களின் நன்கொடையினின்றும் கிடைக்கின்றது.

கிராமப் பஞ்சாயத்தின் அங்கத்தினர் கிராம மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். கிராமத்தின் நிர்வாகப் பொறுப்பை வகிப்பது கிராமப் பஞ்சாயத்தாகும். கிராமப் பஞ்சாயத்துக்களின் மீது மாவட்ட ஆட்சியாளர் மேற்பார்வை செய்யும் அதிகாரத்தைப் பெற்றுள்ளார்.

16. பன்னாட்டு நிறுவனங்கள்
(International Organizations)

[சர்வதேச சங்கம் (League of Nations)—ஐக்கிய நாடுகள் நிறுவனம் (United Nations Organization.)]

சர்வதேச சங்கம்
(League of Nations)

அமெரிக்கக் குடியரசுத் தலைவராக இருந்த உட்ரோ வில்சன் (Woodrow Wilson) என்பவரின் முயற்சிகளின் பயனாகவும், அமைதியை நாடிய அறிஞர்களும், இயக்கங்களும் எடுத்த முயற்சியின் பயனாகவும் தோன்றியதுதான் சர்வதேச சங்கம்.

முதல் உலகப் போர் மக்களுக்கும், உலகுக்கும் இழைத்த தீங்குகள் மனிதரை விழிப்படையச் செய்தன. கொடிய போர் எழாமல் தடுப்பதற்கென சர்வதேச சங்கம் உருவாக்கப்பட்டது. முதல் உலகப் போரின் முடிவில் பாரிஸ் (Paris) மாநகரத்திற்கு பக்கத்திலுள்ள வெர்செயில்ஸ் அரண்மனையில் நடைபெற்ற சமாதானப் பேச்சு வார்த்தைகளின் இறுதியில் சர்வதேச சங்கத்தை உருவாக்குவதற்கான ஒப்பந்தமும் (Covenant) தயாரிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தம் 1919-ஆம் ஆண்டு ஏப்ரல் 28-ஆம் நாள் வெர்செயில்ஸ் சமாதான மாநாட்டில் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தம் பல உடன்படிக்கைகளில் இடம் பெற்றது. 1920-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10-ஆம் நாள் சர்வதேச சங்கம் அதிகார பூர்வமாகச் செயல்படத் தொடங்கியது. ஸ்விட்சர்லாந்திலுள்ள ஜெனிவா நகரத்தில் இச்சங்கத்தின் தலைமையகம் அமைக்கப்பட்டது.

சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட்ட அரசுகள் துவக்கத்திலிருந்தே இச்சங்கத்தில் உறுப்பினராயினர். உறுப்பினர்களைச் சேர்க்கும் அதிகாரம் பேரவைக்கு அளிக்கப்பட்டது. சர்வதேச சங்கத்தின் உறுப்பினரான ஒரு அரசு தானே அச்சங்கத்திலிருந்து விலகலாமென்று விதி கொடுக்கப்பட்டிருந்தது.

சங்கத்தினின்று ஒரு அரசைப் புறம் தள்ளவும் வழி காணப் பட்டது.

பின்வருபவை சர்வதேச சங்கத்தின் முக்கிய உறுப்புக் களாகும்.

1. பேரவை (Assembly)

சர்வதேச சங்கத்தின் உறுப்பினரான அரசு ஒவ்வொன்றும் பேரவையின் உறுப்பினராகவும் இருந்தன. பேரவை ஆண்டிற் கொருமுறையாவது கூடவேண்டும். தேவைப்படும் பொழுது கூடுவதற்கும் இதற்கு அதிகாரம் இருந்தது. உலக அமைதி சம்பந்தப்பட்ட எக்காரியத்தையும் பேரவை பரிசீலிக்கலாம். பன்னாட்டு அரசியலைப்பற்றியும், பொருளாதாரத்தைப் பற்றியும் இப்பேரவை விவாதித்தது. அங்க நாடுகளனைத்தையும் சம இறைமை படைத்தவைகளாக பாவிக்கப்பட்டது. பேரவையில் தீர்மானங்கள் ஏகமனதாகத்தான் நிறைவேற்றப்படவேண்டும்.

2. குழு (Council)

சர்வதேச சங்கத்தின் ஆட்சித் துறையாகச் செயல்பட்டது அதன் குழு. துவக்கத்தில் இக்குழுவில் ஐந்து நிரந்தர அங்கத்தினரும், நான்கு தற்காலிக அங்கத்தினரும் காணப்பட்டனர். அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான் ஆகிய வல்லரசுகள் நிரந்தர அங்கத்தினராக இருந்தன. இக்குழு ஆண்டிற்கு நான்குமுறையேனும் கூடவேண்டும் என்று விதிக்கப் பட்டிருந்தது. உலக அமைதியைக் காப்பது சம்பந்தப்பட்ட எப்பிரச்சினையையும் பரிசீலிக்க இக்குழுவிற்கு அதிகாரம் இருந்தது.

3. செயலகம் (Secretariat)

தலைமைச் செயலாளரின் தலைமையின் கீழும் மேற்பார்வையின் கீழும் தலைமைச் செயலகம் பணி புரிந்தது. இதன் பணியாளர்கள் சங்கத்தின் அங்க நாடுகளினின்று நியமிக்கப்பட்டனர்.

4. நிரந்தரப் பன்னாட்டு நீதிமன்றம் (Permanent Court of International Justice)

பன்னாட்டு நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிப்பதற்கென இந்நீதிமன்றம் உருவாக்கப்பட்டது. இதன் நீதிபதிகள் பேரவையாலும், குழுவாலும், 9 ஆண்டுகட்கு தேர்ந் தெடுக்கப்பட்டனர். ஆலோசனை வழங்கும் அதிகாரம் இந்நீதி மன்றத்திற்கிருந்தது. இந்நீதிமன்றம் நெதர்லாந்தின் தலை

நகரான திஹேக் என்னும் நகரத்தை தலைமையகமாக கொண்டுள்ளது.

பன்னாட்டு ஒத்துழைப்பை வளர்ப்பதும், உலக அமைதியைக் காப்பதும்தான் சர்வதேச சங்கத்தின் முக்கிய பணிகள். அமைதி காக்கும் பணியில் இச்சங்கம் தோல்வியுற்றது. இத் தோல்வியின் விளைவாகத்தான் இரண்டாம் உலகப்போர் ஆரம்பித்தது.

ஐக்கிய நாடுகள் நிறுவனம்

(United Nations Organization)

இரண்டாவது உலகப்போர் மிகக் கடுமையாக இருந்தது. இதன் விளைவுகள் மிகப் பயங்கரமாக இருந்தன. மனிதனின் அழிக்கும் சக்திக்கு அளவில்லை என்பதை இப்போர் நிரூபித்தது. இப்போரின் கொடுமையைத் தாங்கமுடியாத மக்களும், தலைவர்களும் எடுத்த முயற்சியின் பயனாக 1945 ஆம் ஆண்டு ஜூன் மாதம், 50 நாடுகளின் பிரதிநிதிகள் அமெரிக்காவிலுள்ள சான் பிரான்சிஸ்கோ நகரத்தில் கூடி, ஐக்கியநாடு சாசனத்தில் கையெழுத்திட்டனர். அதே ஆண்டு அக்டோபர் மாதம் 24 ஆம் நாள் ஐ. நா. அதிகாரப் பூர்வமாகச் செயல்படத் துவங்கியது. இதன் இருப்பிடம் நியூயார்க் நகரமாகும்.

பன்னாட்டு அமைதியையும், பாதுகாப்பையும் காப்பாற்றுவது, நாடுகளிடையே நல்லுறவை வளர்ப்பது அரசுகளிடையே எழக் கூடிய அரசியல் பொருளாதார, சமூக பிரச்சினைகட்கு பன்னாட்டு ஒத்துழைப்பின் அடிப்படையில் பரிகாரம் காண்பது எப்பாகுபாடுமின்றி மனித உரிமைகளை வளர்ப்பது ஆகியவைகள் ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் அடிப்படைக் குறிக்கோள்கள் ஆகும்.

இந்நிறுவனம் தோன்றிய நாளிலிருந்த 50 நாடுகளுடன் காலப் போக்கில் அங்கத்துவம் பெற்ற நாடுகளும் சேர்ந்து இன்று 147 நாடுகள் ஐக்கிய நாடுகள் நிறுவனத்தில் அங்க நாடுகளாக இருக்கின்றன.

பொதுப் பேரவை (General Assembly), பாதுகாப்புக் குழு (Security Council), பொருளாதார, சமூகக் குழு (Economic and Social Council), பொறுப்பாண்மைக் குழு (Trusteeship Council) பன்னாட்டு நீதி மன்றம்(International Court of Justice), செயலகம் (Secretariat) ஆகிய ஆறு முக்கிய உறுப்புக்களைக் கொண்டது ஐக்கிய நாடுகள் நிறுவனம்.

1. பொதுப் பேரவை (General Assembly)

ஐக்கிய நாடுகள் நிறுவனத்தில் உறுப்பினரான நாடுகள் யாவும் இப்பேரவையின் உறுப்பினராவர். ஆண்டிற்கொரு முறை யாவது இப்பேரவை கூடவேண்டும். விசேடக் கூட்டங்களும் அழைக்கப்படலாம். ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் பணிகள் யாவற்றையும் பற்றி விவாதிக்கவும், பரிசீலனை நடத்தவும், மேற் பார்வை செய்யவும், திறனாய்வு செய்யவும் இப்பேரவைக்கு அதிகாரமுண்டு. பன்னாட்டுப் பாதுகாப்பையும், உலக அமைதி யையும் நிலை நாட்டத் தேவையான வழி முறைகளை இப்பேரவை சிபாரிசு செய்யலாம். ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் நிதி இப் பேரவையின் கட்டுப்பாட்டிற்குட்பட்டது. பாதுகாப்புக் குழுவிற்கு நிரந்தரமல்லாத அங்கத்தினர்களை தேர்ந்தெடுக்கவும், பாது காப்புக்குழுவின் பரிந்துரையின் மீது ஐ. நா. செயலரை நியமனம் செய்யவும் இதற்கு அதிகாரம் உண்டு. அங்கத்தினரைச் சேர்த்துக் கொள்ளவும், தற்காலிகமாகப் புறம் தள்ளவும், நிரந்தர மாக நீக்கவும் இப்பேரவைக்கு அதிகாரமுண்டு. பன்னாட்டு மரபுகளை அங்கீகரிப்பது இப்பேரவையின் பணி பன்னாட்டுச் சட்டத்தின் வளர்ச்சிக்குத் தேவையான வழிமுறைகளை இது சிபாரிசு செய்கின்றது. ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் பல்வேறு உறுப்புகட்கு அங்கத்தினரை இப்பேரவை நியமனம் செய்கின்றது. இப்பேரவை முக்கியப் பிரச்சினைகளைப் பற்றிய தீர்மானங்களை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் இயற்றுகிறது.

2. பாதுகாப்பு குழு (Security Council)

ஐந்து நிரந்தர அங்கத்தினரையும் இரண்டாண்டுகட்கொரு முறை தேர்ந்தெடுக்கப்படும் சாதாரண அங்கத்தினரையும் சேர்த்து 15 பேர் கொண்டது இக்குழு. நிரந்தர அங்கத்தினரின் ஏகோபித்த விருப்பத்திற்கு மாறாக எப்பணியையும் இக்குழு வால் புரியமுடியாது. நிரந்தர அங்கத்துவம் உடைய இங்கி லாந்து, அமெரிக்க ஐக்கியநாடுகள், பிரான்ஸ், சோவியத் யூனியன், செஞ்சீனா ஆகிய ஒவ்வொன்றிற்கும் மறுப்பாணை (Veto) அதிகாரம் உள்ளது.

உலக அமைதியையும், பாதுகாப்பையும் நிலை நாட்டுவது இக்குழுவின் தலையாய பணியாகும். ஆயுதத்தளவாடங்களின் குறைப்பு பற்றிய திட்டங்களை இக்குழு சிபாரிசு செய்யலாம். பேச்சு வார்த்தை, விசாரணை, சமரசம், கலந்துரையாடல், நீதி மன்றத்தீர்ப்பு ஆகிய முறைகளை பின்பற்றித் தகராறுகட்குப்

பரிகாரம் காணுமாறு சம்பந்தப்பட்ட அரசுகட்கு இக் குழு சிபாரிசு விடுக்கலாம்.

ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் மிக முக்கிய உறுப்பான இக் குழு அடிக்கடி கூடுகின்றது. உலக அமைதியைக் காப்பாற்ற ராணுவ நடவடிக்கை மேற்கொள்ளக் கூடிய அதிகாரம் இக் குழு விற்கு உண்டு. முக்கியப் பிரச்சினைகளைப் பற்றிய தீர்மானங்கள் அனைத்திற்கும், 5 வல்லரசுகள் உட்பட, 9 அங்கத்தினர்களின் ஒப்புதலும் தேவை.

3. பொருளாதார, சமூகக் குழு (Economic and Social Council)

பொதுப் பேரவையால் மூன்று வருடங்கட்கென தேர்ந்தெடுக் கப்படும் 54 அங்கத்தினரைக் கொண்டது இக் குழு. இக் குழுவின் மொத்த அங்கத்தினரில் மூன்றில் ஒரு பகுதியினர் ஒவ்வோர் ஆண்டும் பதவியிழப்பர். பன்னாட்டுப் பொருளாதாரம், சமூகப் பணிகள், கலாசாரப் பணிகள், கல்வி, உடல் நலன் போன்ற வற்றைக் குறித்து ஆய்வுகள் நடத்தி பொதுப் பேரவைக்கு அறிக்கைகள் சமர்ப்பிப்பது இக் குழுவின் பணி.

4. பொறுப்பாண்மைக் குழு (Trusteeship Council)

சர்வதேச சங்கம் கொண்டிருந்த ஆட்சியுரிமை முறையை (Mandate System) அபிவிருத்தி செய்துதான் பொறுப்பாண்மை முறை உருவாக்கப்பட்டுள்ளது. பொறுப்பாண்மை முறைக் குட்பட்ட ஆட்சிப் பகுதிகளைக் கண்காணிப்பது இக் குழுவின் பணி.

5. பன்னாட்டு நீதி மன்றம் (International Court of Justice)

உலகின் எல்லா பகுதிகட்கும் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென்ற அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் 15 நீதிபதி களைக் கொண்டது இந்த நீதி மன்றம். பொதுப் பேரவையும் பாதுகாப்புக் குழுவும் இவர்களைத் தேர்ந்தெடுக்கின்றன. ஒன்பது ஆண்டுகட்கெனத் தேர்ந்தெடுக்கப்படும் இந் நீதிபதிகள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படலாம். அரசுகள் சம்பந்தப்பட்ட வழக்குகள் மட்டுமே இந் நீதிமன்றத்தின்முன் விசாரணைக்கு கொண்டு வரப்பட முடியும். ஆலோசனை வழங்கும் அதிகாரம் இந் நீதி மன்றத்திற்குண்டு.

6. செயலகம் (Secretariat)

பாதுகாப்புக் குழுவின் பரிந்துரையின் பேரில் பொதுப் பேரவையினால் 5 ஆண்டுக்கு நியமனம் செய்யப்பட்ட பொதுச்

செயலாளரின் கீழ் இச் செயலகம் செயல்படுகின்றது. ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் அன்றாட அலுவல்களை இச் செயலகம் புரிகின்றது. இதில் பணிபுரிவோர் உலகின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்தவராவர்.

ஐக்கிய நாட்டு நிறுவனத்தின் தனி ஸ்தாபனங்கள்
(Specialised Agencies of the U.N.)

பின் வருபவை ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் தனி ஸ்தாபனங்களாகும். பசியையும் பிணியையும் அகற்றுவதற்கும், கல்வி வசதிகள் எல்லோருக்கும் கிடைப்பதற்கெனவும், தொழிலாளர் நலன் பேணப்படுவதற்கெனவும், பொதுவாக மக்களிடையே நல்லுறவை வளர்ப்பதற்கெனவும் இவை உருவாக்கப் பட்டன. இந்த ஸ்தாபனங்கள் ஒவ்வொன்றும் தனித்தியங்கு பவையாகும். ஒவ்வொரு ஸ்தாபனமும் அதற்கெனத் தனி விதிகளையும், நிதியையும், அலுவலகத்தையும் கொண்டுள்ளது. ஐக்கிய நாடுகள் நிறுவனத்தில் அங்கத்தினரான நாடுகள் யாவும் இந்த ஸ்தாபனங்களில் அங்கத்தினரல்ல. ஐக்கிய நாடுகள் நிறுவனத்தில் அங்கத்துவம் இல்லாத நாடுகளும் இந்த ஸ்தாபனங்களில் அங்கத்துவம் கொண்டிருப்பதுண்டு. உலக மக்களுக்கு சிறந்த சேவையை இந்த ஸ்தாபனங்கள் புரிகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

1. ஐக்கிய நாடுகள் கல்வி-விஞ்ஞான-பண்பாட்டு நிறுவனம் (United Nations Educational, Scientific and Cultural Organization—UNESCO)

உலகிலுள்ள குழந்தைகள் எல்லோருக்கும் கல்வியறிவு கிட்டச் செய்வதுதான் இந்த ஸ்தாபனத்தின் முக்கிய குறிக்கோள். கல்வியறிவை எல்லா நாடுகளும் பகிர்ந்து கொள்ள இந்த ஸ்தாபனம் வழி வகுக்கின்றது. பண்டைய கலாசாரத்தின் சின்னங்கள் அழிந்து விடாமல் பாதுகாப்பதற்கும் இது தகுந்த நடவடிக்கைகள் எடுக்கின்றது. கல்வி புகட்டுவதற்குத் தேவையான திட்டங்களையும், நிபுணர்களையும் உருவாக்க இந்த ஸ்தாபனம் உதவுகின்றது. பொது நூலகங்கட்கும் இது உதவி அளிக்கின்றது. விஞ்ஞானம் சம்பந்தப்பட்ட தகவல்கள் எல்லா நாடுகட்கும் கிட்டுவதற்கும் இந்த ஸ்தாபனம் வழி வகுக்கின்றது. மக்கள் அமைதியாக வாழ்வதற்குத் தேவையான திட்டங்களையும் இந்த ஸ்தாபனம் உருவாக்குகின்றது. மிகச் சிறப்பான பணி புரியும் ஸ்தாபனம் இது என்றால் மிகையாகாது.

2. உலக நல்வாழ்வு நிறுவனம் (World Health Organization-WHO)

பல லட்சம் மக்களின் உயிரைக் குடித்த மலேரியா போன்ற கொடிய நோய்கள் பரவாமல் தடுப்பதற்கு உலக நல்வாழ்வு நிறுவனம் எடுத்துக் கொண்ட முயற்சிகள் போற்றற்குரியவை யாகும். தாய்-சேய் நலனுக்காகவும் இந்த நிறுவனம் பல திட்டங்களைச் செயற்படுத்தியுள்ளது. பின் தங்கிய நாடுகளிலுள்ள சிறுவர் சிறுமியருக்கு ஊட்ட சக்தி மிக்க உணவு கிடைக்கச் செய்வதற்கும் இந்த நிறுவனம் முயற்சிகள் எடுக்கின்றது. நோய் களைக் கட்டுப்படுத்துவதற்கும், நல்வாழ்வுத் துறைகளைப் புனரமைப்பதற்கும் தேவையான உதவிகளை இந்நிறுவனம் அளிக் கின்றது. செவிலியர் (Nurses) போன்றோருக்குப் பயற்சி அளிக் கவும் இந்நிறுவனம் உதவுகின்றது.

3. பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனம் (International Labour Organization—ILO)

இந் நிறுவனம் தொழிலாளர் நலனுக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. தொழிலாளரின் வேலை நேரத்தை நிர்ணயித்தல், பணிக்கொத்த ஊதியமளித்தல் நோய் வாய்படும் பொழுதும், ஓய்வுக் காலத்திலும் ஊதியம்கிட்ட வழி வகுத்தல் போன்றவற்றில் அக்கறை காட்டி இந்நிறுவனம் செயல் படுகின்றது.

4. உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம் (Food and Agri- culture Organization—FAO)

உலகின் நிலவளத்தையும், நீர் வளத்தையும் சரிவரப்பயன் படுத்த மக்களுக்கு உதவுவதுதான் இந்நிறுவனத்தின் குறிக் கோள். உலகின் உணவுப் பிரச்சினையை இந்நிறுவனம் ஆராய் கின்றது. வேளாண்மையில் ஏற்படும் முன்னேற்றங்கள் குறித்தும், உணவு உற்பத்தி பற்றியும் இந்நிறுவனம் அறிக்கைகள் வெளியிடு கின்றது. சிறப்பறிஞர்களின் உதவி கிட்டுவதற்கும் இந்நிறுவனம் வழி வகுக்கின்றது. பயிர்களை நாசம் செய்யும் பூச்சிகளை அழிப் பதில் பல நாடுகள் இணைந்து செயல்பட இந்நிறுவனம் வழி வகுக்கின்றது.

5. உலகப் புனரமைப்பு மற்றும் முன்னேற்ற வங்கி (International Bank for Reconstruction and Development—IBRD)

அரசாங்கங்களைப் பங்குதாரர்களாகக் கொண்ட இந்த வங்கி 1946-ஆம் ஆண்டு செயல்படத் தொடங்கியது. புதிய தொழில் நிறுவனங்களை உருவாக்குவதற்கும், இரண்டாம் உலகப்போரால்

அழிக்கப்பட்ட தொழில் நிறுவனங்களைப் புனரமைப்பதற்கும் தேவைப்பட்ட முதலீடு அளிப்பதற்கென இந்த வங்கி உருவாக்கப்பட்டது. தொழில் நிறுவனங்கள் அமைப்பதற்குத் தேவையான ஆலோசனையையும் இந்த வங்கி அளிக்கின்றது. மின் விசை அபிவிருத்தி, ரெயில் பாதை அமைப்பு, சாலை அமைப்பு, துறைமுகங்கள் உருவாக்குதல், விமான நிலையங்கள், எழுப்புதல், தொலைபேசி முறை அமைத்தல், வானொலி வசதி உருவாக்குதல், மரம் நடுதல், வேளாண்மை, வெள்ளத் தடுப்புப் பணிகள், தொழிற்சாலைகள் அமைத்தல் ஆகிய பணிகட்கு இந்த வங்கி கடனுதவி அளிக்கின்றது. பொருளாதாரம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகட்குப் பரிகாரம் காண்பதற்கும் இந்த வங்கி உதவி யளிக்கின்றது.

6. உலக நாணய முறை நிதி (International Monetary Fund—IMF)

உலகிலுள்ள நாடுகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு நாணய முறைகளைக் கொண்டுள்ளன. நாடுகளிடையே நாணய மாற்ற முறையைச் சுலபப்படுத்துவதற்காகவும், பன்னாட்டு வாணிபத்தில் எழக்கூடிய பிரச்சினைகட்குப் பரிகாரம் காண்பதற்கெனவும் உலக நாணய முறை நிதி உருவாக்கப்பட்டது. அங்கத்துவ நாடுகள் இந்நிதியில் செலுத்தும் தொகை இதன் மூலதனமாகும். தேவை எழும் பொழுது அங்கத்துவ நாடுகள் இந் நிதியினின்று கடனுதவி பெறலாம். நாடுகட்குக் கடனுதவி அளிப்பது மட்டுமன்றிப் பொருளாதாரம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகட்குப் பரிகாரம் காண ஆலோசனையையும் இந் நிதி அளிக்கின்றது.

7. அனைத்துலகத் தபால் சங்கம் (Universal Postal Union—UPU)

நாடுகளிடையே தபால் அனுப்புவதற்கான வழி முறைகளை இச்சங்கம் எளிதாக்குகின்றது. தபால் சம்பந்தமாக எழும் பிரச்சினைகட்குப்பரிகாரம் காண்பதற்கும்இச் சங்கம் உதவுகின்றது. ஐக்கிய நாட்டு நிறுவனத்தின் சார்பில் தபால் சம்பந்தப்பட்ட பணிகளை இச் சங்கம் மேற்கொள்கின்றது.

8. பன்னாட்டுத் தந்திச் செய்திச் சங்கம் (International Telecommunication Union—ITU)

உலகிலுள்ள வானொலி நிலையங்களுக்கு வெவ்வேறு அலை வரிசைகளை அளிப்பது இந்நிறுவனமாகும். பன்னாட்டு வானொலித் தொடர்பு, தந்தித் தொடர்பு ஆகியவற்றிற்கும் இந்நிறுவனம் உதவி அளிக்கின்றது. வானொலி, தந்தி போன்றவை சம்பந்தப்பட்ட தொழிற் நுட்பப் பயிற்சியளிக்கவும் இந்நிறுவனம் உதவுகின்றது.

9. உலக வானிலை ஆராய்ச்சி நிறுவனம் (World Meteorological Organization -WMO)

உலகின் எல்லா பகுதிகளின் வானிலை பற்றிய தகவல்களை அளிக்க வல்லது இந்நிறுவனம். கப்பல்கள், வானிலை ஆராய்ச்சி நிலையங்கள் ஆகியவற்றினின்று நாள்தோறும் இந்நிறுவனத்திற்கு வானிலை அறிக்கைகள் கிடைக்கப்பெறுகின்றன. இங்ஙனம் கிடைக்கப் பெறும் அறிக்கைகளை இந்நிறுவனம் உலக நாடுகளுக்கும், விமானங்கட்கும், கப்பல்கட்கும் அளிக்கின்றது. இந்நிறுவனத்திடமுள்ள வானிலை சம்பந்தப்பட்ட தகவல்கள் வேளாண்மைக்கும் பயன்படுகின்றன.

10. பன்னாட்டு விமானப் போக்குவரத்து நிறுவனம் (International Civil Aviation Organization—ICAO)

பன்னாட்டு விமானப் போக்குவரத்து சம்பந்தமாகப் பொதுவான திட்டங்களும், உடன் படிக்கைகளும் இல்லாவிடில் பல பிரச்சினைகள் உருவாகும். இப்பிரச்சினைகள் எழாமலிருப்பதற்கும், பிரச்சினைகள் எழுந்தால் அவற்றிற்கு பரிகாரம் காண்பதற்கெனவும் தோற்றுவிக்கப்பட்டதுதான் இந் நிறுவனம். இந் நிறுவனத்திற்குச் சொந்தமான வானிலை அறிக்கைக்கப்பல்களும் நிலையங்களும் விமானப் போக்குவரத்தின் பாதுகாப்பிற்கு உதவுகின்றன. விமானிகட்குப் பயிற்சி அளிக்கவும், விமானங்களைப் பழுது பார்க்கப் பயிற்சி அளிக்கவும், விமான நிலையங்கள் அமைக்கவும் இந்நிறுவனம் உதவுகின்றது.

11. அரசாங்கங்களுக்கிடையிலான கடல் அலுவல் ஆலோசனை நிறுவனம் (Inter-Governmental Maritime Consultative Organization—IMCO)

கப்பற் போக்குவரத்தின் பாதுகாப்பை அதிகரிப்பதும், உலக நாடுகள் பெருங்கடலைப் பயன்படுத்தும் பொழுது எழக்கூடிய பிரச்சினைகட்குப் பரிகாரம் காண்பதும் தான் இந்நிறுவனத்தின் குறிக்கோள்கள். இதற்கான விதிகளையும் இந்நிறுவனம் உருவாக்கியுள்ளது. கப்பல்கள் சம்பந்தப்பட்ட ஆலோசனைகளையும் இந்நிறுவனம் வழங்குகின்றது.

12. பன்னாட்டு அணுசக்தி நிறுவனம் (International Atomic Energy Agency—IAEA)

அணுசக்தியை உலக மக்களின் நலனுக்கெனப் பயன்படுத்த உதவும் நிறுவனம் இது. சில நோய்களைக் கண்டுப் பிடிப்பதற்கும், வேளாண்மையிலும், மின் விசை உற்பத்தி செய்வதிலும், அணு

சக்தி பயன்படுகின்றது. இப்பயன்களை உலகின் எல்லா நாடு கட்கும் கிடைக்கச் செய்வதுதான் பன்னாட்டு அணுசக்தி நிறுவனத்தின் பணி.

ஐக்கியநாடுகள் நிறுவனம் பற்றி மதிப்பீடு

பன்னாட்டு அமைதியையும், பாதுகாப்பையும் நிலைநாட்டுவது தான் ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் முக்கியக் குறிக்கோள். இதில் ஓரளவு வெற்றியை இந்நிறுவனம் கண்டுள்ளது எனலாம். உலகின் பல்வேறு பகுதிகளிலும் போர் எழாமல் தடுப்பதற்கும், மூண்ட போரை நிறுத்துவதற்கும் பெரும் போர் மூளாமல் தடுப்பதற்கும் இந்நிறுவனம் முயற்சி எடுத்துள்ளது குறிப்பிடத் தக்கது. இந்நிறுவனம் எடுத்துக் கொண்ட ஆயுதக் குறைப்பு முயற்சி முற்றிலும் வெற்றியடையவில்லையெனினும் இம் முயற்சிப் போற்றத்தக்கதாகும். அணு ஆயுத உற்பத்தியைத் தடுப்ப தற்கென சோவியத் யூனியனும் அமெரிக்க ஐக்கிய நாடு களும் செய்துக் கொண்ட உடன்படிக்கை ஐக்கிய நாட்டு நிறுவனத்தின் முயற்சியின் பயன் எனலாம். வல்லரசுகளின் ஏதேச்சதிகாரத்தின் கீழிருந்த நாடுகள் சுதந்திரமடைவ தற்கும் இந்நிறுவனம் முயற்சி எடுத்துள்ளது. உலகெங்கிலும் மனித உரிமைகள் மதிக்கப்படுவதற்கு இந்நிறுவனம் வழி வகுத் துள்ளது குறிப்பிடத்தக்கது. உலக நாடுகள் பலவற்றிலும் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட இந்நிறுவனம் உதவியுள்ளது. சமுதாய முன்னேற்றத்திற்கும் இந்நிறுவனம் பெரிதும் உதவி யுள்ளது.

ஐக்கிய நாடுகள் நிறுவனம் கண்டுள்ள தோல்விகள் பல. பல பிரச்னைகட்குப் பரிகாரம் காண இந்நிறுவனத்திற்கு இயலவில்லை. காஷ்மீர், கொரியா, இந்தோசீனா, ஜெர்மனி, பாலஸ்தீனம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. சில குறிப்பிட்ட பிரச்சினைகட்குப் பரிகாரம் காண இந்நிறுவனத்தால் இயலவில்லை. 1956-ஆம் ஆண்டு சோவியத் யூனியன் ஹங்கேரியைத் தாக்கியபொழுது ஐக்கிய நாடுகள் நிறுவனத்தால் ஹங்கேரிக்கு எப்பாதுகாப்பும் அளிக்க இயலவில்லை. தென்னாப்பிரிக்கா பின்பற்றும் வர்க்க பேதக் கொள்கையை முறியடிக்க இந் நிறுவனத்திற்கு இயல வில்லை.

ஐக்கிய நாடுகள் நிறுவனத்தில் ஒற்றுமை காண்பதற்கில்லை. நாடுகள் பல பிரிவுகளாகச் செயற்படுவது வரவேற்கத்தக்கதல்ல. பாதுகாப்புக் குழுவில் பின்பற்றப்படும் வாக்கெடுப்பு முறை சரியானதல்ல. இந்நிறுவனத்தில் பல குறைபாடுகள் காணப்

பட்ட போதிலும் இத்தகைய நிறுவனம் இன்றியமையாதது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

ஓர் உலகக் கருத்து
(One World Concept)

உலகம் தோன்றிய காலத்திலிருந்து இன்று வரையிலும் அது பல நாடுகளாக இருந்து வந்திருக்கிறது. ஒவ்வொரு நாட்டிற்கும் அரசியல் விஞ்ஞானத்தில் நாட்டிற்குச் சொல்லப்படுகின்ற இலக்கணங்கள்படி வரையறுக்கப்பட்ட எல்லைகளும், குடி மக்களும் அரசாங்கமும், இறைமையும் இருந்து வந்திருக் கின்றன. இந்நாடுகள் ஒவ்வொன்றும் அதனுடைய தேவைக்கும், திறமைக்கும் தகுந்தாற் போல சில சட்ட திட்டங்களை வகுத்துக் கொண்டு தம் முன்னேற்றத்திற்கு ஏற்ற திட்டங்களை மேற் கொண்டு முன்னேறுவதற்கு முயற்சி செய்து வந்திருக்கின்றது. இந்த நாடுகளின் தோற்றம், வளர்ச்சி, போக்கு ஆகியவை எல்லாம் ஒரே மாதிரியாக இருந்ததாகவோ, இருந்து வருவ தாகவோ சொல்ல முடியாது. அதேபோல அவற்றின் சாதனைகள் ஒரே மாதிரியாகவும் இருந்தன என்றும் சொல்ல முடியாது. இந்த நாடுகள் ஒவ்வொன்றும் தத்தமைக்கே உரிய முறையில் வளர்ந்து வந்திருக்கின்றன அல்லது சில சமயங்களில் அழிந்தும் இருக் கின்றன. இவைகளின் தோற்றம், வளர்ச்சி, வீழ்ச்சி ஆகிய வைகளை இவ்விடத்தில் ஆராய்வதற்கு இயலாது. ஆரம்பத்தில் இவை நகர அரசுகள் என்றும், பிறகு சமய அரசுகள், தேசிய இன அரசுகள் என்றும் பல பெயர்களில் இருந்தன. இத்தகைய அரசுகள் எல்லாம் ஒன்றுக இணைந்து உலகம் முழுவதிலும் ஒரே ஒரு அரசு தான் இருக்க வேண்டும் என்று சொல்லப்படுவதுதான் 'ஓர் உலகக் கருத்து' எனக்கூறலாம்.

இந்த ஓர் உலகக் கருத்து இருபதாம் நூற்றுண்டில் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் பதவிக்கு உட்ரோ வில்சன் (Woodrow Wilson) என்பவரை எதிர்த்துப் போட்டியிட்டுத் தோல்வியுற்ற வெண்டல் வில்கி (Wendel Wilkie) என்பவரால் வலியுறுத்திக் கூறப்பட்டது. அவரைத் தொடர்ந்து பல அறிஞர் பெருமக்கள் இக்கருத்தை பல சமயங்களில் அழுத்தம் திருத்தமாக எடுத்துக் கூறியிருக்கின்றுர்கள். அவர்களில் இங்கிலாந்து நாட்டின் இரண் டாம் உலகப் போருக்குப் பிறகு தொழிற்கட்சி அரசாங்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்ற கிளமன்ட் அட்லி [1](Clement Attlee)

[1] பின்னர் இவர் அட்லி பிரபு (Lord Attlee) என்று அழைக்கப்பட்டார்.

என்பவர் சிறப்பானவராவார். இவர் 'ஓர் உலகம்' (One World), 'ஓர் அரசாங்கம்' (One Government) என்ற கருத்துகளை எடுத்துக்கூறினார். இதன் பொருள் உலகம் முழுவதும் ஒரே நாடாக இருக்க வேண்டுமென்பதும், அதற்கு ஒரே ஓர் அரசாங்கம்தான் இருக்கவேண்டுமென்பதும் ஆகும். அதாவது, பல தேசிய நாடுகளாக இருப்பவைகள் எல்லாம் தங்களுடைய இறைமையை விட்டு ஒரே நாடாக ஆக வேண்டும்; அதற்கு ஓர் அரசாங்கம் இருக்க வேண்டும். அந்த அரசாங்கம் அரசாங்கத்தின் மூன்று பிரிவுகளைக் கொண்டதாக இருக்க வேண்டும். ஒவ்வொன்றும் ஒன்றாக இணைக்கப்பட்ட உலக அரசாங்கத்திற்குப் பொறுப்பேற்க வேண்டும். இந்த அரசாங்கத்திற்கு ஒரே பாராளுமன்றம் ஏற்படுத்தப்பட்டு, அந்தப் பாராளுமன்றம் சட்டமியற்றும் பொறுப்பை ஏற்க வேண்டும் என்று அவர் விளக்கிக் கூறினார்.

இந்த ஓர் உலகக் கருத்து இந்த நூற்றாண்டில்தான் எழுந்தது என்ற முடிவுக்கு அவசரப்பட்டு வந்து விடக் கூடாது. இக் கருத்துக்கு ஏற்புடைய முன் மாதிரிக் கருத்து ஆதிகாலத்திலும், இடைக்காலத்திலும் கூட இருந்தது எனலாம். ஆதி காலத்தில் (ரோமானியர்கள் கலத்தில்) குறிப்பாக ஆக்டேவியஸ் சீசர் (Octavius Caesar) ஏற்படுத்திய ரோமானியப் பேரரசைச் சொல்லலாம். இடைக்காலத்தில் ஒன்பது, பத்து, பதினோராம் நூற்றாண்டுகளில் அரசு, சமயத்தின் உந்துதலுக்கு ஆளாகியிருந்த பொழுது ஐரோப்பாவில் ஏற்பட்டது என்று கருதுவதற்கு இடமிருக்கிறது. அதாவது கிறிஸ்துவ சமயக் கோட்பாடுகளில் ஓர் உலகம், ஓர் அரசாங்கம் என்ற கருத்துகள் பொதிந்து கிடந்தன என்பது அரசியல் ரீதியாக ஐரோப்பியக் கண்டம் முழுவதும் இணைந்து அதற்கு ஓர் அரசன் இருக்கவேண்டும். சமய அடிப்படையில் இந்த அரசு போப்பாண்டவருக்குச் கட்டுப்பட்டு இயக்க வேண்டும் என்று வற்புறுத்தப் பட்டதிலிருந்து தெளிவாகின்றது.

ஓர் உலகம், ஓர் அரசாங்கம் என்ற கருத்துகளை ஒட்டிய பல நூல்கள் அவ்வப்பொழுது பல அறிஞர்களால் வெளியிடப்பட்டிருக்கின்றன. அவைகளில் 1973 ஆம் ஆண்டு L. R. பிரௌன் (L. R. Brown) என்பவரால் வெளியிடப்பட்ட 'எல்லைகளற்ற உலகம்'[1] என்ற நூல் குறிப்பிடத்தகுந்ததாகும். இந்நூலில் அவர் உலகில் காணப்படும் பலவகைப்பட்ட பிரச்சினைகளை எடுத்துக்

[1] Lester R. Brown—World without Borders (1973)—Affiliated East-West Press (P) Ltd., New Delhi.

கொண்டு அவைகளுக்குத்தீர்வு காண முயன்றிருக்கின்றார். அவர் தம்முடைய பரிசீலனைக்காக எடுத்துக்கொண்ட பிரச்சினைகளில் ஏழ்மை, வேலையில்லாதத் திண்டாட்டம், கிராமப்புறத்திலிருந்து நகர் புறங்களுக்கு குடியேறுதல், பசி, மக்கள் தொகை, பொருளா தாரத்துறையில் பல நாடுகளுக்கிடையே ஏற்பட்டு வரும் ஒன்றை யொன்று சார்ந்திருக்கின்ற தன்மை, உலகப் பொருளாதா ரத்தைத் திருத்தியமைத்தல், செய்திப் போக்குவரத்து முறை ஆகியவைகள் இடம் பெறுகின்றன.

இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல நூலின் இறுதிப் பகுதியில் 'புதியதொரு உலக அமைப்பு' (A New World Order) என்ற ஒரு பகுதியையும் சேர்த்திருக்கின்றார். இப்பகுதி ஓர் உலகக் கருத்தையும், அரசாங்கத்தையும் வற்புறுத்துவதோடு, அதன் இன்றியமையாத தன்மையையும் எவரும் ஏற்றுக் கொள் கின்ற வகையில் எடுத்துக் கூறுகின்றது. பொதுவாகவே நூலின் பல பகுதிகளிலும் ஆசிரியர், குறுகிய, இன, சமய, தேச மாறு பாடுகளையெல்லாம் விட்டு விட்டு மக்கள் அனைவரும் ஒன்று பட வேண்டும் என்ற சீரிய கருத்தைக் கூறுகின்றார். அவ்வாறே இயற்கை வளங்களைப் பயன்படுத்திக் கொள்வதிலும், பகிர்ந்து கொள்வதிலும், செய்தி போக்குவரத்துச் சாதனங்களை ஏற் படுத்திக் கொள்வதிலும், இவைகளை அடைவதற்கு ஏற்படுத்தப் படும் நிலையங்களை உருவாக்குவதிலும், உலகம் முழுவதும் ஒன்று என்ற கண்ணோட்டத்தோடு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும் என்று தெளிதாகக் கூறுகின்றார்.

ஓர் உலகம், ஓர் அரசாங்கம் என்பதில் சில நிறைகளும், சில குறைகளும் உண்டு. அவைகளைப்பற்றி இங்கு சுருக்கமாகக் காணலாம்:

நிறைகள் என்று எடுத்துக் கொள்கின்ற பொழுது மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் பொழுது இக்கருத்துகள் மிக உயர்வானவை யாகவும், சிறப்பானவையாகவும் தோன்றும். இக்கருத்துகள் 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற தமிழ் புலவர் ஒருவரின் கூற்றுக்கு இயைந்ததாக இருக்கின்றன. எல்லோரும் ஓரினம், எல்லோரும் ஓர் நிறை என்பவை நடைமுறை சாத்தியமானால் மக்களுக்கு பயன் தரும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இத்தகைய அமைப்பு ஏற்படுமானால் தொழில் துறையிலும், பொருளாதாரத் துறையிலும், இதர துறைகளிலும் முன்னேற்ற மடைந்துள்ள பகுதிகளும் (Regions) மக்களும் இத்துறைகளில் பின்தங்கியிருக்கின்ற பகுதிகட்கும், மக்களுக்கும் உதவி செய்து

ஒருவருக்கொருவர் முன்னேறுவதற்கான வாய்ப்பிருக்கின்றது. அதேபோல, இப்பொழுதுள்ள அமைப்பில் நாடுகளுக்கிடையே ஏற்படுகின்ற போட்டிகளும் பொறாமைகளும் குறையவும் சச்சரவுகளும் சண்டைகளும் மறையவும் வாய்ப்புண்டு. ஒவ்வொரு நாடும் இதர நாடுகளை விட தான் மேம்பட்டது, அல்லது சிறந்தது என்று கருதுவதற்கு இடமிருக்காது. அவ்வாறே ஒவ்வொரு நாடும் தன்னுடையத் தனித் தன்மையையும், சிறப்பையும் பாதுகாத்துக் கொள்வதற்காக, அல்லது இதர நாடுகளை அச்சுறுத்தி இலாபம் பெறுவதற்காக, அல்லது தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவருவதற்காகப் படை பலத்தை வலுப்படுத்த வேண்டிய அவசியமில்லை. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் பாதுகாப்பு என்ற பிரச்சினைக்கும், படை என்ற அமைப்புக்கும் மேற்கூறப்பட்ட உலக அமைப்பொன்றில் இடம் பெற வேண்டியதில்லை. எனவே, படைச் சாதனங்கள் குறைப்பு, அல்லது ஒழிப்பு (Disarmament) என்ற ஒன்று இருப்பதற்கு முடியாது. இவ்வமைப்பிலுள்ள மக்கள் ஒரே குடிமையுடையவர்களாகக் கருதப்படுவார்களாதலால் பல தேசிய இனங்கள் என்பவை மறையும். எல்லோரும் ஒரே அமைப்பைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுவதற்கும், அவ்வாறு நடந்து கொள்வதற்கும் வாய்ப்புகள் பல உண்டு. பொருளாதாரத் துறையிலும், இதர துறைகளிலும் தடை, அல்லது தளை இல்லாத முன்னேற்றம் காணவும் கூடும். இவ்வாறு தொழில், செய்திப் போக்குவரத்து, படை, அரசியல் அமைப்பு, சட்டதிட்டங்கள் என்று சொல்லப் படுகின்ற பல துறைகளிலும் ஒருங்கிணைந்த, ஒற்றுமையான, சிறந்த முன்னேற்றம் காண்பதற்கு வழிவகைகள் ஏற்படக் கூடும்.

குறைகளைப் பொறுத்த வரையில் இந்தக் கருத்துகள் நடைமுறை சாத்தியமானவையா என்பது முதலில் எவருக்கும் தோன்றுவது இயற்கை. உண்மையைச் சொல்ல வேண்டுமானால் இப்பொழுது மட்டுமல்லாமல் எப்பொழுதுமே இத்தகைய அமைப்புகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் ஏற்பட முடியாது என்று சொல்ல முடியாவிட்டாலும் அவைகளின் சாத்தியக் கூறுகள் குறைவேயாகும். எவ்வாறு சமயத்துறையில், சமூக அமைப்புக்களில் சீர்திருத்தங்களைக் காண விழைந்தவர்கள் முழு அளவுக்கு வெற்றி பெற முடியவில்லையோ, அவ்வாறே உலகம் அனைத்தும் ஒன்று, அதற்கு ஒரே ஓர் அரசாங்கம் என்று எடுத்துக் கூறி வாதிடுபவர்களும் பரிபூரண வெற்றி பெறுவார்கள் என்று சொல்ல இயலாது. ஏனெனில், தனி மனிதன் என்று எடுத்துக் கொள்வோமானால் ஒவ்வொருவனும் 'நான்', 'எனது' என்று தற்பெருமை

வற்புறுத்துபவனாக இருக்கின்றான், அங்ஙனமே வழக்கில் இருந்து வருகின்ற ஒவ்வொரு நாடும், இனமும் தத்தம் பெருமைகளையும் சாதனைகளையும் வற்புறுத்துபவைகளாக இருக்கின்றன. அதனால் இவைகள் அனைத்தும் இணைந்து ஏற்படக் கூடிய அமைப்பு நிரந்தரமானதாக இருக்க முடியாது. எல்லாம் ஒன்றாக இருக்குமானால் அங்கு சொந்தக் கற்பனைக்கு, சொந்த முயற்சிக்கு வாய்ப்பில்லாமல் போகும். எல்லாம் ஒரே மாதிரியானதாக இருக்கும். இதனால் மனித சமுதாயத்தின் ஆக்க சக்தியும், முன்னேற்றமும் பாதிக்கப்படக்கூடும். அச்சமுதாயத்தின் அரசியல், சமூக, பொருளாதார நிலையங்கள் வலுவிழந்து காலப்போக்கில் அழிந்து விடவும் கூடும். இவ்விடத்தில் ரோமப் பேரரசுக்கும், ஐரோப்பாவில் இடைக் காலத்தில் திருச்சபைக்கும் ஏற்பட்ட சோதனைகளையும், அவற்றின் வீழ்ச்சியையும் நினைவில் கொள்ளுதல் நல்லதாகும். அதாவது, எங்கு ஒரே ஓர் அமைப்பு ஏற்பட்டு இயங்குகின்றதோ அங்கு கற்பனை மறைந்து, ஊக்கம் குறைந்து அழிவு ஏற்படுகின்றது. எனவே ஓர் உலகம், ஓர் அரசாங்கம் என்ற கருத்துகள் கற்பனை என்ற அளவில் சிறந்தவைகளாகத் தோன்றினாலும் நடைமுறையில் அவை ஏற்படக்கூடியவை என்றோ நிறைவைத் தரக்கூடியவையென்றோ கூறமுடியாது. இத்தகைய அமைப்புகளிலும் குடும்பம் ஒன்றில் அதன் உறுப்பினர்களிடையே சச்சரவுகள் ஏற்படுவது போல் குழப்பங்களும், சண்டைகளும் ஏற்படக்கூடும் என்பதை மறுக்க முடியாது. குடும்பம் சிதறி பல குடும்பங்களாகப் பிரிவது போல உலக அமைப்பொன்று ஏற்படுவதாக வைத்துக் கொண்டாலும் அந்த அமைப்பு சிதறிப் போவதற்கான சந்தர்ப்பங்கள் பல இருப்பதை மறந்து விடமுடியாது. மனிதர்களிடையே காணப்படுகின்ற பொதுவான இயல்புகள் காரணமாக உலக அமைப்புகளில் கூடி வாழ வேண்டும் என்று விருப்பத்திற்கு மாறாகப் பிரிந்து போக வேண்டும் என்ற எண்ணம் வலுத்து உலக அமைப்பு கட்டுக்கோப்பான அமைப்பாக இல்லாமல், தளர்ந்த, பலம் குன்றிய அமைப்பாக மாறி விடவும் கூடும். இந்நிலைமை ஏற்படுமானால் மக்களினுடைய வளர்ச்சி தடைப்படக்கூடும்.

இது வரையிலும் கூறப்பட்ட கருத்துகளினின்று ஓர் உலகம், ஓர் அரசாங்கம் என்ற கருத்துகள் உன்னதமானவை என்றும், ஆனால் அக்கருத்துகள் அடிப்படையில் அமைப்புகள் ஏற்படுவது சாத்தியமானவை அல்ல என்றும் தெரியவரும். இவை தனி மனிதர்கள், தனி அமைப்புகள் ஆகியவற்றின் தன்னம்பிக்கையிலும், முன்னேற்றத்திலும் அதிகமான நம்பிக்கை வைத்திராத, ஆனால் அதே சமயத்தில் அறிஞர்கள் என்று கூறப்

படுகின்ற ஒரு சில அரசியல் மேதைகளால் தரப்பட்ட லட்சியக் கோட்பாடுகளாகும். இக்கருத்துகள் அடிப்படையில் ஏற்படக் கூடிய அமைப்புகள் முடிவானவைகளாக இல்லாமல் அவற்றிற்கு ஆதாரமானவைகளாக கொள்ளப்பட வேண்டும்.

மேற்கோள் நூற்பட்டியல்

(BIBLIOGRAPHY)

1. Rodee, Anderson and Christol, 'Introduction to Political Science' (Mc Graw-Hill).
2. Peter B. Harris, 'Foundation of Political Science'(B. I.).
3. Dillon, Leiden and Stewart, 'Introduction to Political Science' (A.E.W.P.).
4. Stephen L. Wasby, 'Introduction to Political Science' (S.B.A).
5. C. F. Strong, 'Modern Political Constitutions' (E.L.B.S).
6. D. D. Basu, 'Introduction to the Constitution of India.' (P.H.).
7. F.W. Coker, 'Recent Political Thought' (World Press).
8. McKenzine, 'Soialism' (Methuen).
9. A. Appadorai, 'The Substance of Politics (Latest Edition)' (Oxord).
10. L.R. Brown 'World without Borders' (A.E.W.P.).
11. R. Bhaskaran, 'அரசியல்',

கலைச்சொற்கள்

A

Administrative Law ... ஆட்சி முறைச் சட்டம்
Alternative Vote ... மாற்று வாக்கு
Anarchism ... அரசு வேண்டாக் கொள்கை
Anthropology ... மனிதவியல்
Aristocracy ... உயர்குடி ஆட்சி
Association ... சங்கம்
Authority ... அதிகார வலிமை

B

Ballot Paper ... வாக்குச் சீட்டு
Behavioural Method ... நடத்தை சார்ந்த முறை
Biological Method ... உயிரியல் முறை
Biological Science ... உயிரியல்

C

Cabinet ... அமைச்சர் குழு
Cadre Party ... தகுதி அடிப்படைக் கட்சி
Case-law ... வழக்கினின்று உருவாகும் சட்டம்
Caste ... சாதி
Citizenship ... குடியுரிமை
City-State ... நகர அரசு
Coalition Government ... கூட்டு அரசாங்கம்
Collectivism ... கூட்டுடைமைத் தத்துவம்
Communication ... செய்தித் தொடர்பு
Communism ... பொதுவுடைமைத் தத்துவம்
Community ... சமுதாயம்
Comparative Government ... ஒப்பீட்டு அரசாங்கம்
Comparative Method ... ஒப்பீட்டு முறை
Comparative Politics ... ஒப்பீட்டு அரசியல்
Constituency ... தொகுதி
Constitution ... அரசியலமைப்பு
Conventions ... மரபுகள்

Council of Ministers ... அமைச்சரவை
Cumulative Vote ... மொத்த வாக்கு
Customs ... பழக்க வழக்கங்கள்

D

De facto Sovereign ... நடை முறை இறை
De jure Sovereign ... சட்ட முறை இறை
Democracy ... மக்களாட்சி
Dictatorship ... சர்வாதிகாரம்
Divine Origin Theory ... இறைவழித் தோற்றக் கோட்பாடு
Division of Powers ... அதிகாரப் பங்கீடு

E

Election ... தேர்தல்
Equality ... சமத்துவம்
Equity ... இயற்கை நீதி ஒப்புரவு
Ethics ... ஒழுக்க வியல்
Evolution ... பரிணமம்
Executive ... ஆட்சித் துறை
Experimental Method ... பரிசோதனை முறை

F

Federation ... கூட்டாட்சி
Feudalism ... நிலமானிய முறை
Force Theory ... வலிமைக் கோட்பாடு
Franchise ... வாக்குரிமை

G

Geography ... புவியியல்
Government ... அரசாங்கம்

H

High Court ... உயர்நீதி மன்றம்

I

Idealism ... கற்பனைநோக்கத் தத்துவம்
Ideology ... கொள்கை
Individualism ... தனியுரிமைத் தத்துவம்
Interest Group ... தன்னலக்குழு

J

Judicial Review நீதிப்புனராய்வு

K

King ... அரசன்; இறை
Kinship ... குருதித் தொடர்பு

L

League of Nations ... சர்வதேச சங்கம்
Legal ... சட்டபூர்வமான
Liberty ... சுதந்திரம்
List System ... பட்டியல் முறை
Local Government ... உள்ளூர் அரசாங்கம்

M

Mass Party ... அனைத்து மக்கள் கட்சி
Matriarchal Theory ... தாய்வழிக் கோட்பாடு
Middle Ages ... இடைக்காலம்
Migration ... இடப்பெயர்ச்சி
Monarchy ... மன்னராட்சி
Monistic Sovereignty ... ஒருமை இறைமை
Morality ... ஒழுக்கப்பண்பு

N

Nation ... நாடு
Nationalism ... நாட்டின உணர்வு
Nationality ... நாட்டினப் பண்பு

O

Oligarchy ... சிறுகுழு ஆட்சி
Ordinance ... ஆணை
Oriental Empire ... கீழ்த்திசைப் பேரரசு

P

Patriarchal Theory ... தந்தைவழிக் கோட்பாடு
Philosophy ... தத்துவம்
Pluralistic Sovereignty. ... பன்மை இறைமை
Political Consciousness ... அரசியல் விழிப்புணர்வு
Political Science ... அரசியல்
Politics ... அரசியல்
Preferential Vote ... விருப்ப வாக்கு
President ... குடியரசு தலைவர்
Pressure Group ... தன்னலக்குழு
Propaganda ... பிரசாரம்

Property ... உடைமை
Proportional Representation ... விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம்
Public Administration ... பொதுத்துறை ஆட்சி இயல்
Public Opinion ... பொதுமக்கட் கருத்து

Q

Quorum ... குறைவெண் வரம்பு
Quota ... வீதப்பங்கு

R

Rule of Law ... சட்டத்தின் ஆட்சி

S

Separation of Powers ... அதிகாரப் பிரிவினை
Single Transferable Vote ... ஒற்றை மாற்று வாக்கு
Social Contract Theory ... சமுதாய ஒப்பந்தக் கோட்பாடு
Social Science ... சமூக இயல்
Socialism ... பொதுநலத் தத்துவம்
Society ... சமுதாயம்
Sociology ... சமூக இயல்
Sovereign ... இறை
Sovereignty ... இறைமை
State ... அரசு
State of Nature ... இயற்கை நிலை
Statute Law ... படிவச் சட்டம்
Surplus Value ... மிகை மதிப்பு
Syndicalism ... தொழிற்குழுவாட்சிக்கொள்கை

T

Territory ... நிலப்பரப்பு
Theocracy ... சமயச்சார்புடைய அரசு
Theory ... கோட்பாடு
Titular ... பெயரளவிலான
Tribal State ... மரபு அரசு
Tribe ... மரபு

U

Unitary State ... ஒற்றை ஆட்சி அரசு
United Nations Organization ... ஐக்கிய நாடுகள் நிறுவனம்
Utilitarianism ... பயன் கருது கோட்பாடு

V

Veto ... மறுப்பாணை
Vote ... வாக்கு

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

புகுமுக வகுப்பிற்குரிய நூல்கள்
(Books for the P. U. C.)

1.	புகுமுக வகுப்பு உலக வரலாறு		— N. பக்தவச்சலு
2.	பொருளியல்		— S. சபாநாயகம்
3.	வணிகவியலுக்கு ஓர் அறிமுகம்	I	— K. ஆளுடைய பிள்ளை
4.	,,	II	— ,,
5.	பௌதிகம்		— டாக்டர் P. திருஞான சம்பந்தம், இரா. நாகராசன்
6.	புகுமுக பௌதிகம்		— டாக்டர் M. A. தங்கராஜ்
7.	பௌதிகம்—ஓர் அறிமுகம்		— S. சம்பத்
8.	வேதியியல்		— P. T. முனியப்பா, R. முத்துலட்சுமி
9.	புகுமுக வேதியியல்		— T. V. கிருஷ்ணமூர்த்தி
10.	புகுமுக வகுப்புக் கணிதம்-I		— K. இராஜகோபாலன்
11.	,,	II	— ,,
12.	,,	III	— ,,
13.	புகுமுக வகுப்புக் கணித நூல்	I	— T. கோவிந்தராசன், K. முத்துசாமி
14.	,,	II	— ,,
15.	,,	III	— ,,
16.	கணிதம்—ஓர் அறிமுகம்-I		— R. மகாதேவன்
17.	,,	II	— ,,
18.	,,	III	— ,,
19.	விலங்கியல்		— S. ஆப்ரகாம்
20.	புகுமுக வகுப்பு விலங்கியல்		— P. M. அண்ணாமலை
21.	புகுமுக வகுப்புத் தாவரவியல்		— S. சுந்தரம்
22.	புகுமுக வகுப்பு அளவை இயல்		— P. C. தாயுமானவர்
23.	புகுமுக வகுப்புப் புவியியல்		— S. இராதாகிருஷ்ணன்